எங்கள் நாட்டுப்புறம்

(வெ. சி. வெ. நினைவு மலர்)

கோவை கிழார்

கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட்

எங்கள் நாட்டுப்புறம்

★ ★

வெ. சி. வெள்ளியங்கிரி கவுண்டர்
நினைவு மலர்.

★

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

கோவைக்கிழார்.

★

இளைஞர் தமிழ்ச் சங்கம்
பாகனேரி.

கோவை நிலையப்பதிப்பகம் லிமிடெட்.

கோயமுத்தூர்
வேளாண அச்சுக்கூடம்.

1951

விலை ரூ. 1—8—0

எங்கள் நாட்டுப்புறம்

வெ. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்
நினைவு மலர்.

வெள்ளைக்கிணறு சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள்.

தோற்றம்	மறைவு
25—11—1880	7—11—1948.
விக்கிரம ஐப்பசி 12-உ	சர்வதாரி ஐப்பசி 22-உ

இளைஞர் தமிழ்ச் சங்கம்,
பாகனேரி

அன்பளிப்பு

முன்னுரை.

இந்நூல் வெகு ஆண்டுகளாக நெருங்கிய குடும்ப அன்பராக இருந்து எதிர்பாராத வகையில் ஆண்டவன் திருவடியை அடைந்த அன்புமிகு வெள்ளைக்கிணறு சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களின் நினைவு மலராக அவர்கள் பெயரால் அளிக்கப்படுகின்றது. அந்தவகையில் தரப்படும் அன்பளிப்பு முன்னுரை ஈதாகும்.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே — **ஔவையார்.**

பெரிய தனக்காரர்

எந்த நாடு சிறந்தது? பரப்பினால், பொருளீட்டினால், இயற்கை அற்புதங்களால் பெருமை உடையதுவோ? அன்று; உயர்ந்த மக்கள் குடிகொண்டுள்ளது எதுவோ, அதுவே சிறந்தது என்றார் எமது மூதாட்டியார். நாடு என்பது பல ஊர்களைக் கொண்டது. ஊரைப் பொருத்தே நாடும் இருக்கும். எந்த ஊர் சிறந்தது? ஊரின் பெயரைக் கூறின அளவில் ஊர்ப் பெரியவர்கள் நினைவிற்கு வந்தால் அவ்வூரே சிறந்தது. இது மட்டுமா, உலகமெங்கும் ஒரு ஊர்ப்பெயர் புகழப்படும் என்றால் அதில் அப்புகழுக்கு யார் காரணரோ அவரே அவ்வூருக்குப் பெருமை தருகிறார். அது உண்மை என்றால் அப்படிப்பட்ட ஊரில் ஒன்று வெள்ளைக்கிணறு ஆகும். அதனைப் போய்ப்பார்த்தால் ஊரில் ஒரு சிறப்பும் இல்லை. ஆனால் அதனை இந்

தியா முழுதும் அறியும். அதன் பெயரை அவ்வாறு பரப்பினவர் யார். அவ்வூர் வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களே. அவர் முழுப்பெயர் சொல்லிப் பொதுவாய் நாட்டுப்புறத்தார் அறிவிப்பதில்லை. வெள்ளைக்கிணற்றுக் கவுண்டர் என்றே கூறுவார்கள். மற்றும் சுருக்கமாக கூறுவோர் பெரிய கவுண்டர் என்பார்கள்.

அவர் அவ்வூர்ப் பெரியதனக்காரர். அப்படிச் சொல்லில் ஒரு சிறப்பும் இல்லை. மக்கள் நினைவில் சென்ற அரை நூற்றுண்டாக ஒரு சிறந்த குணவந்தர் என்று அவர் பெயர் சொன்ன அளவில் 'தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளர்' என்ற எண்ணம் உதிக்குமாஞல் அவர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்? மற்றும் என்ன, கோவைச் சரகத்திலே கவுண்டர் என்ருல் அவர் ஒருவரையே குறிக்குமாஞல் அவற்றைப்பற்றி வேறு என்ன சொல்லவேண்டும்.

நாட்டுப்புற வாழ்வினர்.

தற்கால வாழ்க்கையிலே நாட்டுப்புறம் என்ருல் படித்தவர்கள் நினைவில் வெறுப்பே கொள்ளுவார்கள். நகர வாழ்விலும் நாட்டுப்புற வாழ்வே சிறந்தது என்ற கொள்கை பள்ளிக்கூடங்களில் கட்டுரை எழுதும் மாணவர்களிடம் செல்லுமே அன்றி வயது வந்த மக்களிடம் செல்லாது. படிப்பு, ஆடல், பாடல், ஒலி, ஒளி, உல்லாசம், நல்லுணவு இவைகள் நாட்டுப்புறங்களில் கிட்டுமா? நகரங்களில் கிட்டுமா?

இவைகள் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா என்று சொல்லித் தற்கால மக்கள் நகையாடுவார்கள். ஆஞல் கவுண்டரோ நகரங்களில் எத்தனை மாளிகைகள் வைத்திருந்தபோதிலும் மாலை நேரமானவுடன் தம் சொந்

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

தக்கிராமத்திற்குச் சென்றுவிடுவார். கிராமத்திலும் சிறப்பாகத் தோட்டச்சாலையிலே வசிப்பார். இந்த எளிமைத்தனம் எந்த பண்ணையாரிடம் இருக்கிறது? தான் நாட்டுப்புறத்தான்; தான் அவன் வாழ்க்கையிலே ஈடுபட்டால்தான் மற்ற குடியானவர்களும் ஈடுபடுவார்கள் என்ற பண்பாட்டில் பெருமை பாராட்டுபவர். இந்த வகையில் நாட்டுப்புற மக்களுக்கே அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினர். இந்நாளில் ஏழை மக்களும் நாட்டுப்புறங்களைப் புறக்கணித்து இன்பவாழ்வு ஏற்பதற்காக நகரங்களுக்கு 'கூட்டோடு கைலாசம்' என்பது போல் சென்று கொண்டிருக்கிறார்கள். நகரங்கள் பெருகப் பெருக வருத்தப் பிழைப்பு மிகுதி ஆகிவிடும். நாட்டுப்புறம் வெளியிடமாகவும் பாழிடமாகவும் ஆகிவிடும். இதனை எண்ணியே கவுண்டர் நகர வாழ்வை மதிக்காமல் நாட்டுப்புறத்திலே வசித்துவந்தார்.

உழவர்க் குறவினர்.

கவுண்டருக்கு உழவு என்றால் உயிர். குடியானவர்கள் என்றால் அவருக்கு உறவினர். இந்த எண்ணத்தில் வள்ளுவப் பெருந்தகையாரின் கொள்கை முழுதும் நடத்திக்காட்டினர். உழவியலை அப்பெருந்தகையாரைவிட ஒரு படி உயர்வாகவே கையாண்டு வாழ்ந்தவர். வள்ளுவர் சொன்ன உழவிற்கு அவரே இலக்கியம் ஆவர். தம் வாழ்நாள் முழுவதுமே உழவுக்குப் பாடுபட்டார். உழவினால் பிறஉதவியின்றி மக்கள் பெருமையுடன் வாழமுடியும் என்று அவர் நிரூபித்துக் காட்டினர். அவர் ஒருவரே உழவராகவும் உழுவித்துண்போராகவும் இருந்தவர். புது நிலங்களைப் பண்படுத்திப் பண்ணைகளாக ஆக்குவதில் வல்லவர். உழவன் ஏழையாக இருந்தால் அவனுக்குச்

செய்யவேண்டிய உதவிபுரிந்து கைதூக்கிவிடுவதில் சிறந்தவர். ஆகவே அவர் உழவிற்கு உறவினர் என்றால் அது மிகை அல்ல.

ஊருக் கூழியர்.

காடுகரைகள்மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. ஊர்களில் வீடுகளும் செவ்வையாய்க் காற்றோட்டம் உள்ளனவாய் சீக்காடு, ஈ முதலியன இல்லாதனவாய் எருக்குப்பைகள் தெருக்களில் குவியாதனவாய் இருக்கவேண்டும் அல்லவா? அந்த நிலைமையை அறிந்து தமது ஊரிலும் தமது வட்டத்தில் உள்ள ஊர்களிலும் பாடுபட்டுச் சீர்திருத்தம் செய்தார். கோவை வட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்த காலத்தில் கிராமங்கள் தோறும் சென்று பாதைகள் போட்டுவித்தும், பாடசாலைகள் கட்டியும், சுகாதாரத் திட்டங்கள் ஏற்படுத்தியும் பல ஆண்டுகள் பாடுபட்டார். உணவுப் பொருள்கள் கட்டுப்பாடு ஏற்பட்ட நாள்களில் அதற்கேற்பட்ட கழகத்தில் அங்கத்தினராகி மக்களுக்கு உணவு கிடைக்கும் வழிகளில் ஈடுபட்டார். ஆகவே ஊருக்கு ஊழியம்செய்யும் அக்கறை மிகுதியும் கொண்டவர் என்க.

வழக்குகளில் நடுவர்.

தற்காலத்தில் கிராமத்தில் குடியானவர்கள் கெட்டு அழிவதற்கு முக்கிய காரணம் கட்சிப் பிரதிகட்சிகளும் அவைகளால் ஏற்படும் வழக்குகளே ஆகும். பண்டை நாளிலோ ஊர்ச்சபைகளே அவ்வித வழக்குகளைத் தீர்த்து ஊர்களில் அமைதி ஏற்படுத்திவந்தன. அரசியல் மாறுதல்களிலே ஊர்ச்சபைகள் அழிந்தன. கிராம அதிகாரிகள் ஏற்பட்டனர். அவர்கள் பிழைப்பிற்காக வேலை செய்யத் தொடங்கினார்கள். முடிவில் கட்சிகளும் வழக்கு

களும் நீதிமன்றச் செலவுகளும் நிரம்பின. கட்சிகள் பலக்கத் தொடங்கின. அந்தக் கேடுகளைக் கவுண்டர் கண்டார். பெரிய வழக்கு ஏற்படுகிறது என்றால் அதனை முளையிலேயே நசுக்கிவிடுவார். முதிர்ந்தாலும் வெகு எளிதில் சமாதானம் செய்துவிடுவார். அவர் பேச்சுக்குக் கட்சியாளர்கள் மரியாதை தருவார்கள். இப்படித் தீர்த்த வழக்குகள் பல. கிராமங்களில் அழிவுறாமல் தப்பின குடும்பங்கள் பல. இவைகளுக்கு எல்லாம் அவருடைய நடுநிலைமையும் முன்யோசனையுமே காரணம். வழக்குகளை ஒழுங்குசெய்து சமரசப்படுத்திவிடுவதில் எத்தனை நேரம் சென்றாலும் பொறுமையுடன் இருப்பார். முடிவுக்கு வரு மட்டும் தன் காரியங்கள் பல இருப்பினும் அவைகளைச் சட்டைசெய்யாது பொதுக்காரியமே கண்ணுயிருப்பார். இப்படிப்பட்ட நடுவர்கள் இப்போது எங்கே?

கைத்தொழிற் சுன்பர்.

உழவியலிலே முழு ஆர்வமும் கொண்டவர்கள் கைத்தொழிலிலே கவனம் செலுத்துவது அரிது. ஆனால் கவுண்டரோ கைத்தொழிலிலும் ஆர்வம் கொண்டவர். மேலும் உழவுமட்டும் இருந்தால் அதில் விளைந்த பொருளுக்கு வேலை வேண்டாமா? தொடக்கத்தில் வெள்ளைக் கிணற்றிலே பருத்தி அறைக்கும் சாலையும், கோவையிலே ஒரு சீமை ஓடு செய்யும் ஆலையும், பிறகு எண்ணெய் இறக்கும் ஆலையும் வைத்தார். பின்னாலே உருமாண்டம் பாளையத்தில் பஞ்சு நூற்கும் பஞ்சாலை வைத்தார். இந்த வகைகளில் கைத்தொழிலுக்கும் மிகுந்த சலுகை தந்தார். இவருடைய உடன்பிறந்தார்களை இத்தொழில் களில் ஈடுபடச்செய்தார். சென்ற போர்க்காலங்களில் முன்னும் பின்னும் தொழிலாளிகளின் ஒத்துழையாமைச்

சச்சரவுகள் நாட்டில் எங்கும் ஏற்பட்டன. கோவையில் மிகுதியும் தோன்றின. ஆனால் இவருடைய பஞ்சாலையில் ஒருவிதமான சச்சரவாவது சங்கடமாவது நடைபெற இல்லை. தொழிலாளிகள் சுகத்தோடு வாழவேண்டும் என்ற விருப்பத்துடன் அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அவர்கள் கேட்பதற்கு முந்தியே செய்துவந்தார். ஆகவே அவர்கள் யாதொரு தொந்திரவும் செய்யவில்லை. இந்தப் பரோபகாரப் பெருமை கவுண்டருக்கே உண்டு.

புது முறைகளுக்குத் தகுந்தவாறு அமைந்துகொண்டவர்.

நாட்டுப்புறங்களில் உள்ள பெரியவர்கள் பழைய வழக்கங்களிலே நாடுவார்களே ஒழிய புதுமுறைகளை அனுசரிப்பது இல்லை. ஆனால் கவுண்டரோ காலத்திற்கேற்றபடி புதுமுறைகளை நன்கு அறிந்து உபயோகித்து நன்மைகளை விளைவிப்பார். மின்சாரப் பணிகள் மிகுதியாக வராத நாளிலேயே மின்சார வசதிகளை ஏற்படுத்தினார். ஓர் இடத்தில் இன்ஜினை வைத்து டைனமோவை ஓட்டி அதன்மூலம் மின்சாரம் உண்டாக்கி மின்விளக்குகள் வைத்தார், தூரத்திலுள்ள இடங்களுக்கு டெலிபோன், மோட்டார் பம்புகள், இயந்திரங்களினால் நீர் இறைத்தல், வெட்டு யந்திரங்கள் முதலியவைகளை மற்ற குடியானவர்கள் ஏற்படுத்துவதற்கு முன்னரே தான் ஏற்படுத்தி மிகுதியான உணவு உற்பத்திக்கு வழி காட்டினார். உரம் விருத்திசெய்வதில் மிகுந்த அக்கறை காட்டினார். கால்நடைகளுக்குத் தீனி வேண்டியதற்காகக் குறைகள் என்ற புல்லாந்தரைகளை வளர்த்தினார். விவசாயச் சங்கத்தின் செயலாளராக இருந்து விவசாயக் காட்சிகளைத் திருப்பூரில் ஆண்டுதோறும் ஏற்படுத்திப் பொலிக்காளை

களை அங்கங்கே வைத்துக் கால்நடைகளை பெருக்கியும், குதிரைப்பந்தயங்களை நடத்தியும்வந்தார். இந்த வகைப் புது இயக்கங்கள் பலவற்றில் ஈடுபட்டார். சென்ற 1947-ம் வருஷம் உணவுக் கட்டுப்பாட்டை நிறுத்துவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல.

அரசியலிலும் பணியாளர்.

கோவை வட்டச்சபைத் தலைமை, சென்னைச் சட்டசபை அங்கம், அரசாங்கசபை அங்கம், மத்திய சட்டசபை அங்கம் இவைகளில் தேர்தல்களில் வெற்றிபெற்றுப் பலவாறு தொண்டுகள் புரிந்தார். அந்தச் சபைகளில் கேள்விகள் கேட்டும் தீர்மானங்களை கொண்டுவந்தும் நாட்டிற்கு பலவகைகளில் பாடுபட்டார். அரசியலார் நடத்தின பல குழுக்களிலும் அங்கத்தினராக இருந்தார். விவசாய சங்கம் மட்டுமேயன்றி கூட்டுறவுச்சங்க இயக்கத்திலும் பாடுபட்டார். தேசிய இயக்கத்திலும் பாடுபட்டுப் பல தேசீயபணிகளைச் செய்திருக்கிறார்.

அவைகளுக்கு அஞ்சாதவர்.

பெரிய பெரிய கூட்டங்களில் பங்கு எடுத்துக் கொண்டு வெகு திறமையுடன் அஞ்சா நெஞ்சத்துடன் பேசி எடுத்துக்கொண்ட கட்சியில் வெற்றியடைந்திருக்கிறார். அவையச்சம் சிறிதும் இல்லாதவர். இந்தமுறையில் நாட்டுப்புறத்துப் பெரியார்களில் முன்னணியில் விளங்கினவர் கவுண்டர். அவருடைய உரைகள் ஊக்கமும் நன்மையும் உள்ளனவாக இருந்தன. வீண் படாடோபம் இன்றி அமைதியுடன் எதையும் பேசி வெல்வார். திருவிதாங்கூர் நாகர்கோயிலில் நடந்த உழவு மாநாட்டில் தலைமை வகித்து வெகு சிறப்பாக அதனை நடத்தினர். அவ்வாறு நடத்தின மாநாடுகள் பல.

வாழ்வில் எளியர்.

இத்தனை அருமைப் பண்புகளைக்கொண்ட கவுண்டர் தமது நடையுடைபாவனைகளில் மிகவும் எளிய தோற்றம் உடையவர். ஆனால் கம்பீரமான பார்வையும் உருவமும் கொண்டவர். தெய்வ அன்பு மிகுதியும் வாய்ந்தவர். காலையில் குளித்துக் கடவுளைத் தொழுதுவிட்டுத்தான் மற்றச் செயல்களில் ஈடுபடுவார். உடை உணவு எல்லாம் எளியவை. யார் வந்தாலும் கண்டு பேசி மகிழ்ச்சியுடன் அனுப்பும் தாராளத்தன்மை உள்ளவர். கடுஞ்சொல் எப்பொழுதும் அவர் வாயிலிருந்து வந்தது இல்லை. அப்படிப்பட்ட நற்குணங்கள் முழுதும் ஒரு மாந்தரிடம் இருப்பதே வியப்பு அன்றோ.

நாட்டுப்புறத்து நன்மையிலே மிகுந்த வாஞ்சைவைத்திருந்த அப்படிப்பட்ட ஒரு பெரியாருக்கு அன்றோ 'நாட்டுப்புறத்தின் பெருமைகளை' க்கூறும் இந்நூல் அன்பளிப்பாக அமையவேண்டியது பொருத்தம். அந்தவகையில் அப்பெரியார் நினைவுக்கு அன்பளிப்பாக இந்நூல் அளிக்கப்படுகின்றது.

கோவை கிழார்.

எங்கள் நாட்டுப்புறம்

பொருளடக்கம்

I	எனது நினைவுகள்	 1
II	எங்கள் ஊர்க்கட்டு	 20
III	எங்கள் நிலக்கட்டு	 38
IV	எங்கள் தலைவர்கள்	 56
V	எங்கள் குடிகள்	 74
VI	எங்கள் குடும்பங்கள்	 90
VII	எங்கள் குழந்தைகள்	 107
VIII	எங்கள் இளவலர்கள்	 125
IX	எங்கள் பெரியவர்கள் பொழுது போக்கு	 142
X	எங்கள் நாட்டுப்பாடல்கள்	 160
XI	எங்கள் பண்டிகைகள்	 188
XII	எங்கள் பழக்கங்கள்	 204
XIII	எங்கள் வழக்கங்கள்	 219
XIV	எங்கள் மக்கள் வழக்கு	 232
XV	எங்கள் சமய நிலை	 246
XVI	எங்கள் புதிர்களும் பழமொழிகளும்	 260

எங்கள் நாட்டுப்புறம்

I. எனது நினைவுகள்.

நாட்டுப்புறமோ நகர்ப்புறமோ?

சின்னஞ் சிறு வயதிலேயே நான் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படிக்கையிலே எனது வாத்தியார் எனக்கு வெகு அருமையான செய்திகளைக் கற்றுக் கொடுத்தார். அவைகளை ஒரு நாளும் மறக்காமல் நினைவிலே வைத்துக் கொண்டே இருப்பேன். நானும் என்னோடு வாசித்த என் இணைப்பிள்ளைகளும் வாத்தியாரைப் போன்ற அறிவாளி உலகத்திலேயே இல்லை என்று மிகப் பெருமையுடன் பேசிக்கொள்ளுவோம். எங்கள் வாத்தியார் கையில் பிரம்பு இருந்தாலும் அவர் எங்களை அடித்ததில்லை. ஆகவே பிரம்பைக் கண்டால் சிறிது பயப்பட்டாலும் வாத்தியார் மீது எங்களுக்கு அன்புதான். வாத்தியார் அடிக்கடி எங்களிடம் நகர வாழ்க்கையைக் காட்டிலும் நாட்டு வாழ்க்கையே சிறந்தது என்று சொல்லுவார். அந்தப் படிப்பு எங்கள் நெஞ்சில் நன்ருய் ஊன்றிவிட்டது. 'நகரங்களிலே அசுத்த வாயு, நாட்டுப்புறத்தே சுத்த வாயு. நகரத்திலே தொத்துநோய், நாட்டுப்புறத்திலே நோயே இல்லை. நகரத்திலே சாக்கடையும், குப்பையும் சந்தடியும், நாட்டுப்புறத்திலே அழகிய புலங்கள், இனிய செடி

கள், நிசப்தம்' இந்தக் காரணங்களை வாத்தியார் சொல்ல நாங்கள் கேட்டவுடனே எங்கள் மனதிலே நகர வாழ்வு நரக வாழ்வு என்றும், நாட்டு வாழ்வு சொர்க்க வாழ்வு என்றும் எண்ணிவிட்டோம்.

இப்படி இருக்க ஒருமுறை கட்டுரைப் போட்டி ஒன்று வந்தது. 'நகர வாழ்வும், நாட்டுப்புற வாழ்வும்' என்பதைப் பற்றி எழுதச் சொன்னார்கள். பல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் கட்டுரைகளை எழுதினார்கள். நானும் எங்கள் பாடசாலைக்காக எழுதினேன். எங்கள் வாத்தியார் சொன்னதை ஒன்றுவிடாமல் எழுதி நரகத்தையும் சொர்க்கத்தையும் உவமைப்படுத்தி எழுதிவிட்டேன். எனக்கு நல்ல பரிசும் எங்கள் வாத்தியாருக்கு நல்ல பேரும் கிடைக்கும் என்று வெகு ஆவலுடன் இருந்தேன். பரிசு நாள் வந்தது. எனக்குப் பரிசு கிடைக்கவில்லை. வேறொரு பள்ளி மாணவனுக்குக் கிடைத்தது. அதன் காரணம் எங்களுக்கு விளங்கவே இல்லை. பரீட்சகர் பட்சபாதத்துடன் முடிவு செய்தார் என்று எங்கள் மாணவர்கள் சொன்னார்கள். நானும் நம்பினேன். வெகு ஆண்டுகள் கழித்துப் பெரியவனானபிறகு நேரில் நாட்டுப்புறத்தைக் கண்ட பிறகுதான் உண்மை எனக்குத் தெரிந்தது. நகரத்திலும் நன்மை தீமை உண்டு, நாட்டுப்புறத்தை சொர்க்கம் என்று சொல்லுவதைக் காட்டிலும் நரகம் என்றே சொல்லலாம் என்றும் தோன்றிற்று. ஆனால் எங்கள் வாத்தியார் பொய் சொல்லுவாரா? அவருடைய விசால நெற்றி, கூரிய அறிவு, அன்பான பார்வை இவைகள் எல்லாம் அவரை எதிலும் சொர்க்கத்தைக் காணச் செய்யும் என்று நினைத்தேன். அவர் நாட்டுப்புறங்களில் வாழ்ந்த காலங்களில் பணத்திற்கு ஒரு பக்கா விற்ற

காலம் அல்லவா! காய்கறிகள் இலவசமாய் கிடைத்த நாளல்லவா, அப்போது நாட்டுப்புறங்களில் சுவர்க்க போகம்தான் இருந்திருக்கும், கலிபுருடன் தாண்டவம் ஆடத்தொடங்கின பிறகு எல்லாம் கெட்டுவிட்டது என்று நினைத்தேன். இதுவே முதன்முதலில் நாட்டுப்புறத்தின் அருமை பெருமைகளை நானறிந்தது.

சேவையிலும் மோகம்.

இளமையிலே படிப்பில் ஆர்வம் உள்ளவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து வாசித்து அவைகளிலும் தேர்ந்தால் சென்னைக்குச் செல்லுவார்கள். அவர்களிலே சில மாணவர்கள் படிப்பு ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு பின்னால் ஒரு அரசியல் அலுவலில் அமரும் நோக்கத்துடன் படிப்பார்கள். சில மாணவர்கள் படிப்புமட்டும் அல்ல பிறப்பின் பயன் சேவையே என்று பொதுமக்கட் சேவையில் மோகம் கொள்ளுவார்கள். சென்னையிலே அக்காலங்களிலும் கிறிஸ்துசமயப் பாதிரிமார்கள் சேவையைப் பெரிதாக எடுத்துரைப்பார்கள். இந்து சமூகம் மிகக் கெட்டு இருப்பதாகவும் தாழ்ந்த வகுப்பார்களை மேலேற்றுவதற்கு இலவசப் படிப்பும் மதுபான விலக்கும் அவசியம் என்றும் மக்களுக்கு தம் சொற்களினாலும் உபதேசத்தாலும் காட்டினார்கள். மாணவர்களில் சிலர் இச்சேவையில் மோகம்கொண்டு ஒழிவு நேரங்களில் சேரிகளுக்குச் சென்று பணி செய்வார்கள். அம் மோகத்துள் அகப்பட்டவருள் நானும் ஒருவன். ஆகவே அலுவல், பொருள் சேகரிப்பு, இவைகளில் ஆர்வம் ஏற்படவில்லை சென்னையில் சமூகசேவை செய்யத் தொடங்கினது பின்னாலே பிழைப்பிற்கு வந்தபோதும் வழிகோலிற்று. சேரி

களிலே ஏழை மக்களை ஈடேற்றுவதே படித்த மகனுடைய கடமை என்ற எண்ணம் ஊன்றியது. பிறகு வழக்கறிஞர் தொழிலை ஏற்றுப் பிழைப்பு ஒன்றை நடத்திய நாளிலும் பள்ளிக்கூடச் சேவை, சேவாசங்க அங்கம், வாலிபசங்க இயக்கம் இவைகளிலே ஈடுபடவேண்டி வந்தது. நல்லதோ கெட்டதோ ஒன்றில் இளமையிலேயே ஆர்வம் தோன்றிவிட்டால் பின்னர் அந்த ஆர்வம் மோகமாய் மாறி ஒருவனை அதிலேயே அமிழ்த்துத் தன் வசப்படுத்திவிடும் அல்லவா? அந்தச் செயலைப் பொதுமக்கட் சேவை செய்துவிடும். கோவையில் சேவாசங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் பணியை இளைய வழக்கறிஞர்களே செய்தார்கள். மக்களிடம் சிறப்பாக நாட்டுப்புறத்து ஏழை அறிவில்லாத மக்களிடம், வழக்குகளை மிகுதிப்படுத்தி அவர்களிடம் அதற்குத் தகுந்தாற்போல பணத்தைக் கறந்து உல்லாச வாழ்க்கையை நடத்தும் வழக்கறிஞர்களா இந்த சமூக சேவை நடத்தமுடியும் என்று கேட்கவேண்டாம். எங்கள் சேவா சங்கத்தில் சேர்ந்து உழைத்தவர்களிலே இரண்டு மூன்று பேர்களே உண்மையான ஆர்வம் கொண்டவர்கள். சேவையையும் பொருள் ஈட்டத்திற்கு ஒரு கருவியாகக்கொண்ட பேர்களும் உண்டு. இந்த வகையில் இளமையிலே நாட்டுப்புறத்து வாசனையை மோந்து பார்க்கும் வசதி கிடைத்தது. இருக்க இருக்க உண்மை தெரிந்தது. எங்கள் நாட்டுப்புறங்களுக்குப் பெரிய பாதைகள் இல்லை. சிறு இட்டேரிகளே வழிகள். அவைகளில் இரு புறங்களிலும் உயர்ந்த சப்பாத்தி முள்வேலிகள். குறுகிய வழியாகையால் இட்டேரிகள் என்று பெயர் ஊன்றியது. இந்த வழிகளிலே செல்லுகையில் ஊர் அணுகிறது என்பதற்கு மலநாற்றமே காட்டிவிடும். அப்படிப்பட்ட நாற்றமே

எனக்கு முதல்முதலில் நாட்டுப்புறத்தை வெளிப்படுத்திக் காட்டியது. அம் மலநாற்றம் இல்லாமற் செய்யமுடியுமா என்று எண்ணவும் இந்நாட்டில் முடியுமா ?

நரகமோ சொர்க்கமோ ?

நாட்டுச் சேவை இரண்டு விதம். தனித்தோ பிறருடன் கலந்தோ பொதுச் சங்கங்களில் சேர்ந்து சேவை செய்தல். மற்றொன்று அரசியலாரால் நிர்ணயிக்கப் பட்ட சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலை செய்தல். முதற் சேவையில் ஒருவனுடைய ஆர்வத்தைப் பொருத்து அச்சேவையின் நீடிப்பு இருக்கும். பொருள் செலவும் அதனைப் பொருத்தே இருக்கிறது. இரண்டாவதில் மக்களால் தெரிந்தெடுக்கப்படல் வேண்டும். அதன் பின் சேவை எளிது. இதில் பொருள் செலவு கையைப் பிடிக்காது. கௌரவமும் பதவியும் உண்டு. இதில் இந்த இரண்டு வெகுமதிகளுக்காகவே கைப்பொருள் செலவழித்துப் பதவி பெறுகிறவர்களே மிகுதி. உண்மையாகப் பாடுபடுகிறவர்கள் குறைவு. இதிலும் மோகம் மக்களைப் பிடித்து ஆட்டும். நானும் பல தடவை இந்த வலையில் சிக்கி அலைந்தது உண்டு. ஊர்ச்சங்கம், உள் வட்டச் சங்கம், வட்டச் சங்கம், கல்விச் சங்கம் முதலிய பலவற்றிலும் இருந்து சேவை செய்தது உண்டு- இவ்வாறு சேவை செய்ததில் பாதை, கல்வி, சுகாதாரம் முதலியவைகளில் அக்கரை எடுத்துக்கொண்டதுண்டு. இட்டேரிப் பிரபாபத்தைக் கூறவேண்டியதில்லை. தோன்றிய காலத்தில் இருபது அடியிருந்த பாதை நாளாவட்டத்தில் கால் மடங்குக்குக் குறுகிவிடும். அடுத்த காலைக் காரர்கள் "இட்டேரி என்ற பதத்தின் பொருளுக்கு ஏற்ற

படி அத்தனை அகலம்தான் இருக்கவேண்டும். பாம்பும், கீரியும் வாழ்வதற்காகவா வழி அகலமாயிருக்கவேண்டும். 'இடம்பட இட்டேரிவிடேல்' என்று ஔவையார் சொல்லவில்லையே'' என்பர். நாளுக்கு நாள் இருபுறத்து வேலிகளும் பெருக்கமாக இட்டேரி இரு வேலியின் மருவு என்று சொல்லும் விபரிதப் பொருளுக்கும் வந்துவிடும். வண்டி போய்கொண்டிருந்த வழி ஆள் போகவும் முடியாதபடி தாரைகள் விழுந்துவிடும். இட்டேரிப் பிரபாபத்தைச் சொல்லி ஊர் மக்களுக்கு அறிவுறுத்தினல் அரசியலாளர் தனிப்பாதை போடட்டுமே என்பார்கள். ஒரு அடி நிலமும் பொதுச் சேவைக்குத் தரமாட்டார்கள். புதுப்பாதை ஒன்று ஏற்படுத்தினல் ஆயிரத்தெட்டு தடைகள் வந்துவிடும். இந்த நிலையில் கிராமப் பாதைகள் என்பவை எப்படி நல்நிலைக்கு வரப்போகின்றன. கல்விச்சாலைகள் என்ருல் நாட்டுப்புறத்தார்க்கு பெருங் கசப்பு. கல்வி ஏன் குடியானவர்களுக்கு வேண்டும் என்பார்கள். வேலையாட்களுக்கோ கல்வி கொடுத்துவிட்டால் கழனிகளில் வேலை செய்யமாட்டார்கள் என்பதே எதிர்ப்பு. பள்ளிக்கு இடம் கிடைக்காது. பொதுஇடத்தில் சங்கத்தார் கட்டிவிட்டால் அதை அழித்துவிடப் பக்குவங்கள் பண்ணுவது. ஆசிரியர்களுக்கு வீடு கிடையாது. கிடைத்த இடத்தில் குடியானவனுக்கு பத்திரம் எழுதுவது கடிதம் எழுதுவது இவை போக பாக்கி நேரத்தில்தான் பாடம் கற்பிக்க முடியும். எங்கே கல்வி பரவப் போகிறது. இனி சுகாதாரமோ சொல்ல முடியாது. ஊரைச் சுற்றிலும் எருக்குழிகளே நிறைந்திருந்தால் காற்று எங்கே. தெருக்களிலோ குப்பைகளும் சலதாரைகளும் நடுவில்தான் இருக்கவேண்டும். அவைகளை வெறுங் காலில் மிதித்துக்கொண்டுதான் ஊரார் நடக்கவேண்டும். வீடுகளில் ஜன்னல் இருந்

தால் திருட்டுப்பயம். ஆகவே இருட்டறையில்தான் வசிக்கவேண்டும். இவைகளைச் சீர்திருத்தம் செய்தல் சாத்தியமா. இதனைக் கண்டுகொண்டதுதான் சங்கத்தில் சேர்ந்ததின் பலன் என்று அறிந்தேன்.

அரிய வாய்ப்பு ஏற்படுத்தியது.

சேற்றிலேயே இருக்கும் புழுவுக்கு சேற்று நாற்றம் தெரியாது. நாட்டுப்புறத்திலேயே வாழும் மக்களுக்கு அதன் இழிவுத்தன்மை தெரியாது. நானும் பல நாட்டுப்புறத்துக் குடியானவர்களைக் கண்டு பேசியிருக்கிறேன். அவர்களிடம் எதையும் அறியமுடியவில்லை. அவர்கள் மனதில் புதிதாக ஏதாவதுபட்டால் தானே சொல்லுவார்கள். சேற்றின் நாற்றம் புழுவிற்கு தெரியாவிட்டாலும் வெளியே இருந்து மோந்து பார்க்கும் நமக்கு அதன் நாற்றம் நனகு தெரியும். அதுபோல நாட்டுப்புறங்களில் வாழும் குடிகளுக்கு அதன் அருமை பெருமைகள் கண்ணுக்கு தோன்ருவிட்டாலும் நகரங்களிலிருந்து நாம் அங்கே செல்லும் காலத்தில் அவைகள் நமது கண்ணுக்குத் எளிதாகவும் தெளிவாகவும்படும். ஆனல் அப்படிப்பட்ட அனுபவங்கள் நகரவாசிகளாகிய நமக்கு அடிக்கடி நேருவதில்லை. எப்போதாவது அலுவல் ஏற்பட்டால் அப்போது போவோம். ஆனல் அங்கே வெகு நேரம் இருக்க முடிகிறதில்லை. நமது வேலைத் தொந்தரவுகளில் நம் வேலைகளைத் தவிர வேறு செய்திகளை நாம் கண்டுபிடிக்கவும் சமயம் வாய்ப்பதில்லை. அப்படியாயின் எவ்வாறு உண்மைகளை அறியமுடியும்? ஆனலும் எனக்கோ நாட்டுப்புறங்களின் உண்மைப் பண்புக்களை அறிய வேண்டும் என்ற ஆவல் மிகுதியும் உண்டு. அதற்கு

என்ன செய்யலாம் என்று அடிக்கடி திட்டங்கள் போடுவதும் உண்டு. பெரும்பாலும் பலிப்பதில்லை. இப்படி இருக்க ஒருமுறை நல்ல வாய்ப்பு கிடைத்தது. அதனை நன்கு பயன்படுத்திக்கொண்டேன். எனது வட்டக்கல்வி சங்கத்தின் தலைமை கிடைத்தது. அந்த வகையில் நாட்டுப்புறங்களில் இருந்த ஆயிரத்து ஐநூறு சிறு பள்ளிகளையும் பார்வையிடக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது. அதனை பெரிதும் பயன்படுத்திப் பார்த்தேன். ஒரு மணி நேரம் ஒரு பாடசாலையைப் பார்வையிட்டால் என்ன தெரியப் போகிறது. நாட்டுப்புற ஆசிரியர்களைக் கேட்டால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. சேற்றுப் புழுவுக்கு சேற்றைப்பற்றி எத்தனை தெரியுமோ அதுவும் தெரியாது. அப்போது எனக்கு என்ன சொல்லப் போகிருர்கள். தெரிந்த அறிவாளி ஆசிரியர்களும் வெறுமனே கேட்டால் சொல்லவும் மாட்டார்கள். மயிலே மயிலே இறகு கொடு என்ருல் கொடுக்குமா? அதற்காக ஒரு திட்டம் செய்தேன். நாட்டுச்சரிதம், பாடல், கதை, பழமொழி, புதிர், விளையாடல் முதலியவைகளைப்பற்றிக் கட்டுரைகள் எழுதச் சொல்லி அவைகளுக்குத் தக்க பரிசுகள் ஏற்படுத்தினேன். கல்வியதிகாரியைக் கொண்டு பரிசுகளும் தாள்களும் வழங்கினேன். உடனே வந்தன நூற்றுக்கணக்கில் கட்டுரைகள். அவைகளைப் பொறுக்கிப் பாகுபடுத்தி முறையாக எழுதினேன். உடனே கிடைத்தது ஒரு புதையல். அதனுலேதான் சிறப்பாக நாட்டுப்புறச் செய்திகள் அறியமுடிந்தன. என் தந்திரமும் மிகுந்த செலவில்லாமல் வெற்றியடைந்தது.

அவைகள் போதுமா ?

ஒரு பொருள் அறியவேண்டுமானால் மூன்று விதங்களில் அறியலாம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர். அப்பொருளைக் கண்ணால் நேரில் கண்டு அறியலாம் அல்லது பிறர் சொல்லுகிற சான்றுகளால் அறியலாம். அல்லது பிறர் எழுதி வைத்திருக்கும் நூல்களைப் படித்து அறியலாம். இவற்றில் நேரில் அறிவதே சிறந்தது. அடுப்பில் நெருப்பு எரிவதை நேரில் காண்கிறோம். மலையில் புகை படருவதைக் கண்டு நெருப்பு அங்கு உண்டு என்று ஊகிக்கிறோம். வயிற்றில் நெருப்பு உண்டு என்று உடல் கூறு நூல் கூற அறிகிறோம். இம்மூன்று விதங்களை நமது அறிஞர்கள் தருக்க இயல் என்று பெயரிட்டு அவைகளை மூன்று அளவைகள் என்பார்கள். நாட்டுப்புறத்தை அறிவதற்கு இம்மூன்று உபாயங்களும் உதவியாக இருந்தன. நேரில் அறிந்தது மிகக்குறைவு. பிறர் சொல்லி அறிந்தது மிகுதி. பிறர் எழுதிக் கட்டுரையாகத் தந்தது பெரும்பான்மையானது. ஆகவே இம்மூன்று அளவைகளும் பயன்பட்டன. காட்சி அளவை சிறந்தது என்றால் அதற்கேற்ற அனுபவம் வாய்க்கவில்லை. ஆயினும் மற்ற இரண்டும் கிடைத்ததினால் நூலாக்குவதற்கு போதுமான ஆதாரம் கிடைத்துள்ளது அல்லவா. ஆனாலும் எனக்கு போதிய திருப்தி இல்லை. எழுதாமல் இருக்கலாமோ என்றால் அதிலும் அமைதியில்லை. இத்தனையும் அறியாதவர்கள் இருப்பார்களே அவர்களுக்காவது பயன்படவேண்டாமா என்று மனதில் ஒரு கேள்வி புறப்படுகிறது. நமக்கு தெரிந்தவற்றை பிறருக்கு அறிவுறுத்துவதே ஒருவர் கடமை என்று அறிவு நூல் கூறுகிறது.

அவ்வாறு அறிவிக்காமல் உயிர் துறந்தால் அதனால் பெரும் பாவம் ஏற்பட்டு இறந்தபிறகு ஓணாகப் பிறப்பான் என்று புராணம் கூறுகிறது. புராணக்கூற்று உண்மையோ, பொய்யோ, அந்தப் பழிக்கு நாம் ஏன் ஆளாகவேண்டும். தெரிந்தவற்றைக் கேட்டவற்றைப் படித்தவற்றை ஒரு நூலாக எழுதி வெளியிட்டால் அதில் பிசகோ, எழுத்துக் குற்றமோ, கருத்துக் குற்றமோ இருந்துவிட்டால் அதனை செவ்வைப்படுத்த பிற அறிஞர்கள் எப்போதும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தெரிந்தவற்றை எழுதுவதற்கு என்ன எதிர்ப்பு இருக்கப் போகிறது; பின்னால் திருத்தங்களை வெளியிடலாம் என்று எண்ணி நான் சேகரித்ததை எழுதத் துணிந்தேன்.

ஒரு எடுத்துக் காட்டு.

தமக்காக ஆராய்ச்சியோ முதன்மையோ இல்லாவிட்டால் கிடக்கட்டும். பிறர் போன வழியே போவது எளிது அல்லவா? எனக்குப் பின்பற்றுவதற்கு ஒரு எடுத்துக் காட்டு கிடைத்தது. படித்துப் பட்டம் பெற்ற ஒருவர் படிப்புத்துறையில் அமர்ந்தார். அவர் எங்கள் வட்டத்திற்குச் சேர்ந்தவர். தாய்மொழி தேனினுமினிய தெலுங்கு ஆனாலும், தேர்ந்தெடுத்துக் கற்ற மொழியோ தமிழ் ஆகும். பாடசாலைகளைச் சோதிக்கும் அறவழியில் அமர்ந்திருந்தார். திங்கள் ஒன்றிற்கு இத்தனை பள்ளிகளை மேய்க்கவேண்டும் என்பது அவருடைய கடமை. ஆகவே நாட்டுப்புறங்களிலே சுற்றி நாட்டு மக்களுடன் அளவளாவி இருத்தல் அவருக்கு ஏற்பட்ட பொழுது போக்கு. பகல் எல்லாம் பிள்ளைகள் வாத்தியார்களுடன்

மார்படித்துக்கொள்ளுதல், இரவில் பட்டிக்காட்டுத் திண்ணையில் பொழுது போக்குவது. நிலா தோன்றி மனதை வசீகரப்படுத்தும் நாட்களே அவரைத் தம் வலையில் சிக்கவைத்து மகிழ்ச்சி ஊட்டுவன. ஏனெனில் அப்போதுதான் ஊர்ப்பெரியவர்களும், தாய்மார்கள் தெருத் திண்ணைகளில் கதை கேட்பது வழக்கம். சிறுவர் சிறுமிகளோ உல்லாசப் பாடல்கள், கும்மி, கோலாட்டம் இவைகளை நடிப்பது. இந்த விளையாடல்களையும் அவற்றோடு ஊடுருவிப்பாயும் பாடல்களையும் அவர் கண்டும் கேட்டும் ஆனந்தமய கோசத்தில் ஆழ்ந்துகொண்டிருப்பார். இவ்வாறு தாம் அனுபவித்தும் தெரிந்துகொண்டும் இருந்த பொழுது போக்குத் திரவியங்களைச் சேகரித்து வைத்துகொள்ளுவார். அவைகளை சிறந்த உணவுப்பொருள்களாகவே எண்ணியிருந்தார். அவைகளை எல்லாம் ஒழுங்குபடத் திரட்டி "எங்கள் ஊர்" என்ற தலைப்பில் ஒரு அருமையான நூல் ஒன்றை வெளியிட்டார். நாட்டுப் பாடல்களில் அவருக்கு மிக ஆர்வம். அவைகளை சேகரித்தார். கள்ளழகர் அம்மானையில் உள்ள அண்ணன்மார் கதை, குன்றுடையான் கதை முதலியவைகளை நன்கு ஆராய்ந்து ஒரு நூல் இனிய நடையில் எழுதத் தொடங்கினார். அதன் பகுதிகளை எனக்கு காட்டினார். நானும் அவரோடு உழைத்தேன். கொங்குநாட்டு வேளாளர்களுக்கும் வேட்டுவர்களுக்கும் இடையே நிகழ்ந்த பகையும், போரும் பாடல்களாகப் பாடப்படுவன. அந்த இடங்களை நேரில் அறிந்துகொள்ளுவதற்கு நாங்கள் இருவரும் சென்றோம். அரசண்ணாமலை, திங்களூர், அப்பிச்சிமார் மடம், வெள்ளோடு முதலிய இடங்களில் கண்ட சின்னங்களைக் குறித்துக்கொண்டோம். மேலும் அவர் தோகைமலை, வீரமலை முதலிய இடங்களுக்கும் சென்றார். இந்த

வகையில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. பாதி நூல் வெளி யிடப்பட்டது. ஆனால் அந்தோ, அவலம்! திடீரென்று அப்பெரியார் மறைந்தார். நூலும் அரைகுறையாக நின் றுவிட்டது. அதனை முற்றுவிக்கவேண்டும் என்பது எனது நெடுநாளைய அவா. நாட்டுப்புறத்துப் பழக்க வழக்கங்களை ஆராய்ந்து குறிப்பதில் எனக்கு ஏற்ற தூண்டுகோலாக அவர் இருந்ததில் பல செய்திகளை நானும் வெகு காலமாகக் குறித்து வைத்திருக்கிறேன். அவைகளைப் பலமுறைகளில் பயன்படுத்திக்கொண்டும் இருக்கிறேன். அவ்வப்போது எழுதிவைத்த கட்டுரை களிலும், பேசிய பேச்சுகளிலும், கற்பித்த கதைகளிலும் நுழைத்து வைத்திருக்கிறேன். ஆனால் அவைகளைக் கோவைப்படுத்தி ஒரு நூலளவில் அடக்கிவைக்க முயல வில்லை. அவ்வாறு முயலவேண்டும் என்பது என்னு டைய நெடுநாளைய நோக்கம்.

வானொலியின் தூண்டுதல்.

என்னைப்போல் ஒரு ஆள் இந்த உலகத்தில் உள் ளான் என்று எப்படியோ வானொலி நிலையத் தலைவர்கள் அறிந்துகொண்டார்கள். அது எனக்குப் புரியவில்லை. முதலில் திருச்சி நிலையத்தார்கள் அழைக்கத் தொடங் கினார்கள். பிறகு சென்னைக்குச் சென்றபிறகு அங்கேயும் என்னை அழைத்தார்கள். மறுபடி ஓய்வு பெற்று எங் கள் ஊருக்கு திரும்பினபிறகு மீண்டும் திருச்சியாளர்கள் அடிக்கடி அழைக்கத் தொடங்கினார்கள். இப்போதும் அழைத்துக்கொண்டே இருக்கிறார்கள். அதில் யாதொரு சிறப்பும் இல்லை. தமிழில் எழுதத் தெரிந்தாலும், பேசத் தெரிந்தாலும் வானொலியார் அழைப்பது இயற்கை

தானே. அப்படியாயின் எதனைப்பற்றிப் பேசச் சொல்லு வார்கள். தமிழ்ப்பெருமை, நூல் பெருமை, கருத்துப் பெருமை, புலவர் பெருமை, இவைகளைப்பற்றியல்லவோ பேசச் சொல்லுவார்கள். என்னைப் பொருத்தமட்டிலோ அவ்வாறு என்னைப் பேசச் சொல்லவில்லை. எப்படியோ என்னை ஒரு நாட்டுப்புறத்தானாகக் கருதினார்கள்போலும். ஏனெனில் என்னை நாட்டுப்புறச் செய்திகளையே பேசச் சொன்னார்கள். 'இவன் பட்டிக்காட்டு ஆசாமி. இவனை பட்டிக்காட்டுச் செய்திகளைப் பேசச் சொன்னால்தான் சரி யாய் பேசுவான்' என்று எப்படியோ அவர்கள் எண்ணிக் கொண்டு அதற்கேற்ற தலைப்புக்களையே எனக்குக் கொ டுத்தார்கள். அது எனக்குப் புரியவில்லை. எதுவானா லும் என்ன? எனக்குப் பெயரும், கூலியும், பொதுமக்கட் குப் படிப்பு கற்பிக்கும் வாய்ப்பும் கிடைத்தால் போது மானது என்று எண்ணி மறுக்காமல் ஒத்துக்கொண் டேன். நான் ஒரு நகரத்து ஆள். நகரத்திலேயே பிறந்து வளர்ந்து தொண்டுசெய்து வந்திருக்கிறேன் என்ற செய்தியை வானொலி நிலயத்தார் ஒருவேளை அறிந் திருந்தால் இவ்விதமான தலைப்புகளைக்கொண்ட பேச்சு களை எனக்கு தந்திருக்கமாட்டார்கள். என்னமோ, உதா ரணமாக எனக்கு கொடுத்த சில தலைப்புக்களை எடுத்துக் கூறுகிறேன். நாட்டு வனப்பு (கோயிலும் குளமும்), மக்கள் அரங்கு (நாடக மேடை), நாட்டுப் பாடல்கள் (கொங்கு) முதலியன. இந்த தலைப்புக்களைச் சற்று ஆராய்ந்து பாருங்கள். நாட்டுப்புறத்துப் பழக்க வழக் கங்களை நான் நன்கு அறிந்து எடுத்துக்கூறும் ஆற்றல் உடையவன் என்ற எண்ணத்தினால்தான் இவைகளை கொடுத்தார்கள் போலும். என் பேச்சுக்களை கேட்டபிறகு அவைகள் பொருத்தமாக உள்ளன எனப்பலபேர் என்

ளைப் பாராட்டினதாகச் சொன்னார்கள். இந்த புகழ் மாலைகளைக் கேட்டபிறகு என் மனம் பொங்கிவழியும் அல்லவா? ஆகையாலே இவ்விதப் பேச்சுக்களை கோவைப்பகுதி வெளியிட்டால் பயன் தராதோ என்ற ஒரு மன எழுச்சியும் தோன்றுதல் இயல்பு அல்லவா? ஆகவே வானொலியின் தூண்டுதலும் இந்நூலுக்கு உண்டெனக.

எழுத்தாளர் தூண்டுதல்.

பேசினால் கேட்பவர்கள், எழுதினால் படிப்பவர்கள், இவர்களே மீண்டும் பேசவும் எழுதவும் உற்சாகப்படுத்துவார்கள். ஆனால் பிற எழுத்தாளர்கள் உற்சாகப்படுவது உண்டோ என்று ஐயுறலாம். ஒருவேளை மதிப்புரைகள் கொடுத்து உற்சாகப்படுத்த முடியும் என்று நினைப்பார்கள். நூல் எழுதாததற்கு முந்தி மதிப்புரை எப்படி வரக்கூடும்? ஆகவே எழுத்தாளர்கள் மதிப்புரை இங்கே யாதொரு உதவியையும் புரியமுடியாது என்க. பின் எவ்வாறு எழுத்தாளர்கள் இந்நூலை எழுதக் காரணமாய் நிற்பார்கள் என்று கேளுங்கள். நம்நாட்டு எழுத்தாளர்கள் அல்லர். அவர்கள் இன்னமும் எழுத்து வேலையில் புகழ் பெறவில்லை. பயனுள்ள எழுத்துக்களை இன்னமும் எழுதத் தொடங்கவில்லை. அதிலும் அத்தகைய நூல் கருத்துக்களை இன்னமும் மனதில் இருத்திக்கொள்ளவும் தகுந்த பயிற்சி பெறவில்லை. ஆகவே இந்நாட்டு எழுத்தாளர்கள் இந்நூலுக்கு யாதொரு ஊக்கமும் தரவில்லை என்று அவர்களை விட்டுவிடுவோம்.

இனி எந்த நாட்டு எழுத்தாளர்கள் ஆர்வ விதையை ஊன்றி இந்நூலாகிய கனியை விளைவித்தார்கள் என்று கேட்பீரேல் அவர்கள் ஆங்கிலர் என்று சொன்னால் நீங்

கள் வியப்பு அடையமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். சில நாட்களுக்கு முந்தி எங்கள் உல்லாச விடுதியில் இருக்கும் நூல் நிலையத்தைத் தேடினேன். இரண்டு அரு மையான நூல்கள் என் கண்ணிற்பட்டன, ஒன்று 'ஆங் கில நாட்டு இடப்பெயர்கள்', மற்ருென்று 'நாட்டுப்புறத்து ஆங்கில நாடு' என்பவைகள். இடப்பெயர் நூலில் ஆங்கிலர் குடியிருக்கும் ஒவ்வொரு ஊரின் வரலாறும், அவ்வூர் அப்பெயரை எவ்வாறு பெற்றதென்பதும், தெளி வான முறையில் விளக்கியிருந்தன. இடப்பெயர் ஆராய் ச்சி என்ருல் எனக்கு மிகவும் ஆவல். தென்நாட்டு இடப்பெயர்களைப்பற்றியே முந்தி பத்துப் பன்னிரண்டு கட்டுரைகளை யான் வெளியிட்டதுண்டு. வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் கிடைத்தால் விடுவாஞ. உடனே அந்நூல் முழுதும் உருவேற்றினேன். பின்னர் 'நாட்டுப்புற இங்கிலாந்தை' வாசித்தேன். ஊர்க்கட்டு, நிலக்கட்டு, வேலிக்கட்டு, வாயிற்கட்டு, இடப்பெயர்ப் பொருத்தம், கடைப்பெயர்ப் பொருத்தம், கல், செடி, கொடி, மரம், தெரு, கட்டடம், நீர் நிலை, மலை, மேடு, பள் ளத்தாக்கு முதலிய பற்பல செய்திகளையும் விளக்கப் படங்களுடன் அந்நூல் விவரித்தன. படிக்கப்படிக்க வெகு உற்சாகம் ஏற்பட்டது. இயந்திரப்புகை உட்கொள் ளும் வெள்ளையர் நாட்டுப்புறத்திற்குத் தூய்மை தரவேண் டும் என்ற நோக்கத்துடன் அந்நூல் எழுதப் பெற்றதாம். அவர்களுக்கு ஊக்கம் தந்ததோ இல்லையோ நான் அறி யேன். எனக்கு அந்நூல் ஊக்கம் தந்தது. அதைப் போல் எனது நாட்டிற்கும் எழுதக்கூடாதா என்று என் நெஞ்சு கேட்டது. அதுதான் அதன் பலன்.

தலைப்பு வேண்டுமே.

பெயரில் என்ன உண்டு என்று சிலர் கேட்பார்கள். அதற்கு நேர் எதிரான விடைகள் கிடைக்கலாம். பெயரில் எல்லாம் உண்டு என்று சிலரும், பெயரில் எதுவும் இல்லை பொருளில்தான் உண்டு என்று சிலரும் சொல்லுவார்கள். முந்திய கட்சியார் பெயரை எத்தனை மட்டும் சிறப்பாககொள்ளுகிருேமோ அதனைமட்டும் அதற்கு மக்கள் பெருமை கொடுப்பார்கள்; பெயரில் எடுப்போ, துடிப்போ இல்லாவிட்டால் அதற்குள் எத்தனை பொருள் இருந்தும் பயனில்லை என்பர். குப்பையில் கிடக்கும் மணிக்கும் அணியில் பொதிந்திருக்கும் மணிக்கும் உள்ள பேதம் தான், பொருள் இருந்தும் கவர்ச்சி இல்லாத தலைப்பில் உள்ள நூலுக்காகும் என்பர். தற்கால விளம்பரப்போக்கை அறியுங்கள். மிகப்பகட்டான விளம்பரத்தில் பெரிய வாணிபம் நடக்கிறது. பகட்டில்லாது சிறுகடையில் உள்ள அரிய பொருளுக்கு விலை இல்லை. இந்தத் தத்துவம்தான் நூலின் தலைப்பிலும் விளங்குகிறது. கண்காட்சிச்சாலைகளும் ஒளித்திரைப்பட விளம்பரங்களும் மலிந்துவரும் இந்நாளில் பொருத்தமான தலைப்புக்கள் இல்லாவிடில் இந்த நூலுக்கு மதிப்பு இல்லை, செல்வாக்கும் செலவாணியும் இல்லை என்பர்.

'நாட்டுப்புற விளக்கம்' என்று பழைய முறையில் பெயர் வைத்தால் நீதிநெறி விளக்கம்போன்ற ஒரு நீதி நூலோ என்று மக்கள் உதறிவிட்டுச் செல்லுவார்கள். ஆனுல் 'எங்கள் நாட்டுப்புறம்' என்ருல் இது ஒரு புதிதான நாட்டுப்புறம்போல் இருக்கிறது என்று கருதி இதைப் படித்தால் நலம் தரலாம் என்று ஆசைப்படத் தொடங்குவார்கள். அவ்வித ஆசையை உண்டுபண்ணு

வதற்காகவே இந்தத் தலைப்பைத் தேடினது ஆகும். எல்லோருக்கும் சேர்ந்த கோவையை "எங்கள் கோவை" என்று எழுதினபோதே பலர் இதன் நோக்கம் என்னவோ என்று வியந்து படித்தார்கள். அதுபோலவே இந்த நாட்டுப்புறம் எல்லோருக்கும் சேர்ந்ததெனினும் 'எங்கள்' என்ற சிறப்பு அடைமொழியால் கூறப்படுகிறது. கிரீன் என்ற ஆங்கிலச் சரித்திராசிரியன் கிரேக்கச் சரித்திரத்தை எழுதின காலத்தில் "இச்செயலை எங்கள் கிரேக்கர்களோ செய்யமாட்டார்கள்" என்று ஒரு இடத்தில் எழுதினார். அவ்வறிஞனே கிரேக்கன் அல்ல. அப்படியிருந்தும் அபிமானத்தினாலே அத்தனை அன்புவைக்கத் தொடங்கினான். இந்த ஆசிரியன் அதுபோலவே நாட்டுப்புறத்தான் அல்லன். எனினும் நாட்டுப்புறத்தைப்பற்றி அறியத் தொடங்கி எழுதினவுடனே அதன் பேரில் அளவிடமுடியாத ஆர்வம் பிறந்துவிட்டது இயற்கையல்லவா! ஆகவே 'எங்கள் நாட்டுப்புறம்' என்பதில் என்ன தடை இருக்கிறது. மேலும் பிறநாட்டாருடைய நாட்டுப்புறங்களைப்பற்றிக் கூறாமல் எங்கள் நாட்டுப்புறங்களைப்பற்றிக் கூறுதலில் ஒரு சிறப்பு தோன்றுகிறது அல்லவா.

பொருளும் உண்டோ ?

> "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்கு
> இவ்வுலக மில்லாகி யாங்கு"

என்று கூறும் தமிழ்மறை, அரசனுக்குமட்டும் அன்று இல்லறத்தானுக்கும் பொருள் வேண்டும். அதுபோல் அருளும் துறவிக்கும் மற்றவர்க்கும் வேண்டும் என்று பொருள்படக் கூறுகிறது. ஆனால் அதன்

கருத்து அதனேடு நிற்கவில்லை. எதை எடுத்தபோதி லும் பயன் தரத்தக்க பொருள் வாய்த்ததாக இருக்கவேண் டும் என்பதாம். ஆகவே நூலுக்கும் அது பொருந்தும். நூலுக்குத் தலைப்புமட்டும் ஆடம்பரமாக இருந்தால் போ தாது. தொடக்கத்தில் அந்நூல் விலையாகிவிடும். பிறகு நாள் செல்லச் செல்ல அது இருக்குமிடம் தெரியாமல் அது மறைந்து போகும். ஆனல் தலைப்புக்கேற்றபடி பொருள் நிரம்பி இருக்கும் பட்சத்தில் அந்நூல் நாளா வட்டத்தில் நிலைநின்று மக்களுக்குப் பயன்படும். நாட் டுப்புறங்களில் நாம் அறியக்கூடிய செய்திகள் எத்தனை யோ உண்டு. அவைகளை அறிய அறியச் சிலருக்கு இயல் பாகத் தோன்றும். ஆனல் மக்களுடைய உண்மையான இயல்பு அவைகளே தோற்றுவிக்கும். நகரங்களிலே வெளிப்பகட்டு மக்கள் உண்மையை மறைத்துவிடுகின் றனர். நாட்டுப்புறங்களில் இருக்கும் எளிய வாழ்க்கையும் பொழுதுபோக்கும், விளையாட்டும், கொச்சைப் பேச்சும், வெள்ளைப்பாட்டும், ஆழ்ந்த பழமொழியும், விடுகதைப் புதிரும், கேளிக்கூத்தும், மகளிர் வம்பும், முதியோர் முது மொழியும் ஒன்று சேர்த்துப் பாகுபடுத்தி எழுதின் ஒப் பற்ற தனிமையான பண்பாட்டை அவை எடுத்துக்கூறு வன ஆகும். இவைகளை நாடோறும் காணுங்கால் அவை களின் அருமை பெருமைகளை நாம் அறியமாட்டோம். ஆனல் பல நாளாய் பலவாறாய்ச் சிதறிக்கிடக்கும் பல பகுதிகளையும் ஒருங்கு சேர்த்தின் ஒரு அருமையான சித் திரமாக அவை தோன்றும். காட்டில் பல மலர்கள் தனித் தனியாய்ப் பூக்கின்றன. தனித்தனி மணங்களுடன் மலரு கின்றன. ஆனல் சோபை தருவதில்லை. அப்பூச்செடி களைக் கொணர்ந்து ஒரு பூங்காவில் ஒழுங்குபட வைத்து வளர்த்தினல் நாளாவட்டத்தில் அவைகள் மலர்ந்து பூக்

கள் விரியும்போது ஒப்பற்ற அழகான காட்சி தரும் அல்லவா. அவற்றின் மணமும் அக்காட்சிக்கு ஏற்றவாறு வெகு நறுமையுடன் ஒளிபெறும் அல்லவா? அது போலவே நாட்டுப்புறத்தும் பல செய்திகளை ஒரே இடத்தில் ஒழுங்காகக் கூறும்போது அவைகளிலிருந்து நல்லதொரு பண்பாட்டை அறியமுடியும். அந்த வகையில் இந்த முயற்சி எடுத்தாளப்படுகிறது. இதனால் மக்கள் அறிவு ஒரு சிறிது மிகுமாயினும் இதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி பலனடைந்தது என நான் கருதுவேன்.

II. எங்கள் ஊர்க்கட்டு.

எங்கள் ஊர்.

எங்கள் ஊர் மிகவும் பெருமை பெற்றது என்று நாங்கள் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். எங்களுக்கு இருக்கும் பெருமை முற்றும் எங்கள் ஊருக்கும் உண்டு. என்றால் உங்களுக்குப் பெருமை உண்டோ என்று கேட்பீர்கள். அது வேண்டாம். அப்படிகேட்டு விட்டாலோ சரியான சான்றுகள் கூறி நிரூபிப்போம். நிரூபிக்கவிட்டாலோ எங்கள் பேச்சை நீங்கள் நம்பப்போவதில்லை. ஆகவே, எங்கள் ஊரின் பெருமைகளை கூடிய மட்டிலும் நிரூபிக்க முயல்கிறோம். மேலும் ஒரு பெரியவருக்கு ஏதோ காரணத்தை முன்னிட்டு வாழ்த்து கூறுவோமே ஆனால் 'என்றும் வற்றாத உயிர் ஓவிய ஆறாகிய எங்கள் நொய்யலின் வெண்மை மணலினும் பல்லாண்டுகள் வாழ்வீர்கள்' என்று புலவர் பெருமக்கள் ஆண்டு வந்த சொற்களைக் கொண்டே உவமித்துக்கூறுவோம். • நொய்யலாற்றின் வெண்மணல் எண்ணுதற்கு அரியதன்றோ? அவ்வெண் மணலில் ஒவ்வொரு மணலும் ஒவ்வொரு ஆண்டானால் மொத்தம் ஆண்டுகள் எத்தனை என்று எண்ணமுடியுமோ. ஆனால் நாம் அறிந்தது ஒரு மணல் அளவில் உள்ள ஒரு ஆண்டுதான். இதுபோலவே நமதுநாட்டில் எத்தனை ஊர்கள் இருக்கின்றன. கணக்கிட முடியாத ஊர்கள் உண்டு. கணக்காயர்கள் ஆறு ஏழு லட்சம் ஊர்கள்தான் உண்டு என்பர். அந்த ஏழு லட்சம் கிராமங்களிலே எங்கள் ஊரும் ஒன்று, வெண்மணற் கரையில் ஒரு துளி மணலைக்காட்டுவது போல் ஏழு லட்சம் ஊர்களில் எங்கள் ஊரும் ஒன்று என்றுபெருமையுடன் பேசிக்கொள்வோம். இலட்சக்கண

க்கிற் பேசப்படும் ஒரு மகத்தான தொகையில் எங்கள் ஊருக்கும் ஒரு பங்கு உண்டு என்றால் அதைவிடப் பெருமை வேறு என்ன எங்கள் ஊருக்கு வேண்டும். மற்ற ஆறு லட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது ஊர்களின் நின்றும் எங்கள் ஊரைப் பிரித்துக்காட்டும் சிறந்த பண்புகள் சிலவேனும் எங்கள் ஊருக்கு இருந்தால், எங்கள் ஊர் தனித்து நிற்கும் நிலைமையில் ஏழு லட்சத்தில் ஒரு பங்குப் பெருமைதான் அதற்கு இருக்கும். அப்படி அல்லாமல் மற்ற எல்லா ஊர்களைப்போலவே ஒவ்வொரு ஊரிலும் எங்கள் ஊர் வேறுபாடின்றி சமானக இருப்பதனால் அந்த ஏழு லட்சம் ஊர்களுக்கும் உள்ள கூட்டுப்பெருமை எங்கள் ஊருக்கும் உண்டு என்று பெருமையுடனும், செருக்குடனும் நாங்கள் பேசிக் கொள்வோம். இந்தப் புகழ் மாலைகளை எங்கள் ஊருக்கு நாங்களும் எங்கள் கற்றோர்களும் புலவர் பெரு மக்களும் சூட்டின காலத்தில் எவரேனும் ஒரு சிறிதேனும் தடை சொல்லவில்லை. ஆகவே நாங்கள் பெருமிதம் அடைந்து எப்போதும் எங்கள் ஊரை நன்கு பாராட்டிக் கொண்டே வந்திருக்கிறோம். படிப்பவர்களில் எவராகிலும் ஒரு சிறிது ஐயப்பட்டாலும் எங்கள் ஊருக்கு வந்து அதன் பெருமையை நேரில் அளந்து பார்க்கலாம். அந்தப்படி அளவு எடுப்பதற்குச் சகல சௌரியங்களும் நாங்கள் புரிய ஆயத்தம் ஆக இருக்கிறோம். இந்த வகையில் எங்கள் ஊர்ப்பெருமை வெகு நன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது,

ஊர்ப் பழமை.

எங்கள் ஊர் பெருமை பெற்றது மட்டுமன்று. மிகப் பழமையும் பெற்றது. அந்தப்பழமை எப்போது தொடங்

யது என்று எவராலும் கூறமுடியாது. அதனைச் சொல்லப்பள்ளிக்கூடத்துத் தமிழாசிரியரும் திருக்கோயில்குருக்களுமே கூறமுடியும் என்று வயதிற் சிறந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். இவர்களிடமிருந்து செய்திகளைப் பெறுவதென்றால் வெகுகடினம். அதனை கேட்டு அறிந்துபோற்றக்கூடிய பெரு மக்களுக்கே அத்தனை இரகசியங்களைச் சொல்ல முடியும் என்று அவ்விரு அறிஞர்களும் அறிவிப்பார்கள். ஆசிரியருக்குத் தகுந்த சம்பளமும், குருக்களுக்குத் தகுந்த காணிக்கையும் கொடாதவரை இத்தனை பரம இரகசியத்தை வெளியிடத் துணியார்கள். அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்த அளவில் அவ்விரு அறிஞர்களும் அதனை ஆலயத் திருவிழாவிலே நடைபெறும் சொற்பொழிவுகளிலே வெளியிடச் சம்மதித்தார்கள். எங்களூர்ப் புராணத்தின்படி இப்புனிதஊர்ப் பெருமை ஸ்கந்தபுராணத்தில் சிவ ரகசிய கண்டத்தில் 1298-ம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதாம். அதனை வேதவியாசர் ஆயிரம் வடமொழி சுலோகங்களில் அருளியிருக்கிறாராம். சூத புராணிகர் சௌனகாதி சித்தர்களுக்குக் கூறியபடியே அக்கிரந்தம் ஆக்கப்பட்டதாம். அதனை மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தி இத்திரு நகரில் அவதரித்த ஒரு பெரும் புலவர் செந்தமிழிலே நாற்கவிகளிலும் பாடியுள்ளாராம். அதன்படி கிருத யுகத்தில் இது வச்சிர நகரம் என்றும் திரேதா யுகத்தில் மரகதபுரி என்றும் துவாபர யுகத்தில் இரசிதபுரம் என்றும் கலி யுகத்தில் இரும்பூர் என்றும் திருநாமங்களால் வழங்கப்பட்டதாம்.

அத்தனைப் பழமை பெருந்திய இவ்வூரில் கோட்டை மதில்கள் ஆகாயத்தைத் துளைத்துக்கொண்டு நிற்க மாட மாளிகைகூட கோபுரங்கள் இந்திர லோகத்தை எட்டிப் பார்த்து விளங்கியபோது தேவேந்திரனும் அவைகளின்

அழகுகளைக்கண்டு பொருமைப்பட்டானும். இந்தப்படி எங்கள் ஊரின் சிறப்புகளைக் குருக்கள் சில சுலோகங்களை எடுத்துக்கூறி அவைகளுக்கு சரியான மொழி பெயர்ப் பாகச்சில செய்யுட்களைக் கூறி நன்கு நிரூபித்தார். தமிழ்ப்பண்டிதரோ குருக்களுக்கு சற்றேனும் இளைத் தவர் அல்லர். இவ்வூர் பழைமை எடுத்துக்கூற முடியாத பெருமையில் தொடங்கியுள்ளது. திருவாரூரின் பெருமை யை அப்பர் சுவாமிகள் அருளின காலத்தில்

"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவம் ஆன நாளோ—
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

என்றார் அல்லவா. அதாவது சிருட்டிக்கு முன்னாலேயே அது ஏற்பட்டது என்ற ஒரே பெருமையில் நின்றது. ஆனால் எங்கள் ஊர்ப்பழமை என்னவகையில் ஏற்பட்ட தென்றால் ஒரு சிருட்டி, அல்ல பல ஆயிரக்கணக்கான சிருட்டிகளுக்கு முன்னரே தோன்றியது, அந்தச் சிறப்பு இந்த ஊருக்கே உண்டு, என்று சொல்லி தமிழ்த்தல புரா ணத்திலிருந்து சில அருமையான செய்யுட்களைக் கூறித் தாபித்தார். சில வில்லை வீடுகளும் நூற்றுக்கணக்கான கூறை வீடுகளும் உள்ள எங்கள் ஊரிலே இந்திரலோகம் தொடும்படியான மாடமாளிகைகள் இந்தக்கலியுகத்தில் எப்படி மறைந்தனவோ என்று எளிய மூளையுள்ள எங் களுக்குப் புரியவில்லை. ஆனால் குருக்கள் பொய் சொல்லு வாரா என்று கூறி நாங்கள் சமாதானம் அடைந்தோம்.

எங்கள் ஊர் அமைப்பு

எங்கள் ஊர் அமைப்பே எங்கள் ஊரின் பழைமையை நிரூபிக்கும். தல புராணத்தின்படி நடுவில் திருக்கோயில்

அமைந்திருக்க நாற்புறங்களிலும் மாட வீதிகள் சதுரம் சதுரமாக ஒரே அமைதியில் விளங்கினவாம், மன்னர் மாளிகைகள், அந்தணர் இல்லங்கள், வணிகர் வீடுகள், வேளாளர் தெருக்கள், ஒன்றன் பின் ஒன்ருக வரிசைகளாக இருந்தனவாம். தெருக்களோ வெகு அகலமாகவும் நால்வகைச் சேனைகளும் எளிதில் செல்லும் பரப்பை உடையவனவாகவும் இருந்தனவாம்.

பூங்காவனங்கள், தாமரைத் தடாகங்கள், தெளிய நீர் வரவிகள், பூஞ்சோலைகள், நாடகசாலைகள், உல்லாச விடுதிகள், பந்தாடும் பவனங்கள், முதலியவைகள் புறநகர்களிலே சிறப்பு செய்தனவாம். இந்த நிலையில் கிருத யுகத்தில் இருந்த ஊரானது இப்போது கலி யுகத்தில் வில்லை வீடுகளும், கூறைச்சாலைகளும் வளைந்து வளைந்து செல்லும் சிறு சந்துக்களாக மாறினல் அதன் படிப்பினை என்ன என்று கூறுவோம். எங்களிடம் அறிவிற் சிறந்த கலைஞர்கள் அம்மாறுதல் பழமையின் முதிர்ச்சியை காட்டுகிறது என்று தெள்ளத் தெளிய நிரூபிப்பார்கள். நேர் கோடாக அமைந்த ஒரு தெரு கோணலாவதற்கு பல ஆண்டுகள் பிடிக்கும். தெருவில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தெருவை அழகு படுத்துவதற்காக சிறிது சிறிதாகத் தெருவின் ஓரங்களை சேர்த்திக்கட்டுவார்கள். வெகு கூரிய கண்கள் அமைந்த நகரசபை அலுவலாளர்கள் பார்வையிலேயே தெரு ஆக்கிரமிப்பு எல்லாப் பெரிய ஊர்களிலும் நடைபெறுமானல், எங்கள் நாட்டுபுறத்து ஊருக்கு சொல்லமுடியுமா? வீட்டு அதிபன் வல்லவனுக இருந்தால் தெருவின் நேர்கோடு வெகுவிரைவில் கோணலாகிவிடும். இந்தவகையில் ஒரு முழுத்தெருவும் இருபது கோணல் ஆகிவிடுமாளுல் அதற்கு எத்தனை காலம் பிடிக்கும் என்று ஊகிக்கலாம். மாளிகைகள் அழிந்து

கூறைவீடுகள் ஆவதற்கு எத்தனை காலம் பிடிக்கும் என்று கணக்கிடலாம். இந்தவகையில் எங்கள் ஊர் புராணத்தில் கூறப்பட்ட பெருமையில் இருந்தது, இப்போது குக்கிராமம் ஆய்விட்டால் அது எங்கள் தப்பல்ல, ஊர் செய்த தப்பும் அல்ல, அது காலத்தின் பழமை என்றே கூறவேண்டும். இவ்வாறு மாறுதல் அடைவதற்குக் குறைந்தபட்சம் நான்கு யுகங்களாவது பிடித்திருக்கும் என்று எங்கள் பெரியோர்கள் கூறி மகிழ்வார்கள்.

ஒரு நாள் எங்கள் வீட்டில் பெரிய பிள்ளை எழுதிக் கொண்டிருந்தான். அதைக்கண்ட நான்கு வயதுப்பெண் கற் பலகையை எடுத்து அதில் எழுது கோலால் தானும் எழுதத் தொடங்கியது, சிறிது நேரத்தில் பல நேர் கோடுகளும், வளைவு கோடுகளும் போட்ட உருவம் அந்தப் பலகையில் தோன்றியது. அந்த வடிவத்திலே காலம் என்ற குழந்தை எழுத்தாளன் எங்கள் ஊரின் வடிவத்தை ஆக்கிவிட்டான்போலும். நானும் கூடியமட்டிலும் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். ஒரு நேர்வீதி ஒரு நேர் சதுரம் இருக்குமா என்று ஆராய்ந்தேன். அவைகள் புராணத்தில்மட்டும் உண்டு என்று கண்டேன். மக்களுக்கு உள்ள மூன்று ஆசைகளில் மண் ஆசை எங்கள் ஊரை இப்போதிருக்கும் நிலைக்குகொண்டு வந்துவிட்டது என்று எண்ணினது பிசகோ? கூறுங்கள்.

ஊர் வடிவு

கரும்புத் தோட்டத்திற்கு ஒரு நாள் சென்றேன் அங்கே ஆலை ஆடிக்கொண்டிருந்தது. கருப்பங்கழிகளை ஆலையில் கொடுத்துப் பிழிந்து சாற்றை உலையில் ஏற்றிக் காய்ச்சிக்கொண்டிருந்தார்கள் ஒருபுறம். பிறகு

காய்ச்சின சாற்றை அச்சுப்பலகைகளில் ஊற்றினார்கள். அது ஆறின உடனே வெல்ல அச்சுகள் ஆயின. வெல்லத்தை வாயில் வைத்தேன் தித்தித்தது. வெகுஇனிமையாக இருந்தது. ஆனால் அதனை வார்த்துக் கொட்டின அச்சுப்பலகையைப் பார்த்தேன். எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அதனைப் பார்க்கப்பார்க்க அதன் வடிவத்தில் எனக்கு வெறுப்பே தோன்றிற்று. ஏன்என்று கேட்பீரோ. அதை நீங்களும் ஒரு முறை பார்த்தால் தெரியும்.

வெல்லம் செய்யும் அச்சுப்பலகை கருங்காலி மரத்தால் ஆகியது. பதினைந்து அடி நீளமும், ஒன்றரை அடி அகலமும், அரை அடி கனமும் கொண்டது. மேல்புறம் சமமானது. மற்றபுறம் கரடுமுரடாக இருக்கும். சமமாக உள்ள மேற்புறத்தில் $\frac{3}{4}$ அங்குலம் சதுரக்குழிகள் நேர் நேராக் வெட்டப்பட்டிருக்கும், அக்குழிகள் ஒரு அங்குல ஆழம் இருக்கும். அடியிலே $\frac{1}{2}$ அங்குலம்தான் இருக்கும். இப்படிப்பட்ட குழிகளிலே கருப்பஞ்சாறு நிரம்பி இறுகினால் அதிலிருந்து வெளியே எடுத்த வெல்லம் அச்சுகள் ஆகும். இந்த அச்சுப்பலகை வெறுமனே இருக்கையில் நேர் நிரல் கோடுகள் இருப்பதினால் கண்ணுக்கு இனிமை தருவதே இல்லை. சிறிது நேரம் பார்த்துக்கொண்டே இருந்தால் வெறுப்பே தோன்றும்.

அந்த அச்சுப்பலகை போல ஒரு ஊரின் தெருக்கள் இருந்தால் அந்த ஊரின் வடிவு கவர்ச்சி கொள்ளுமா! ஒருக்காலமும் கொள்ளாது. முதல்தடவை நான் இரங்கூன் நகரத்துப்படத்தைப் பார்த்தபோது இந்த அச்சுப் பலகையின் நினைவுதான் எனக்கு வந்தது. கராச்சிப் புது நகரமும் இதைப்போலத்தான் இருந்தது. வெறும் சதுரத் தெருக்கள்கொண்ட ஊர்கள் எல்லாம் இந்தவகையில்

தான் இருக்கும். ஊர் அமைப்பிற்கு தென்னுட்டிலே புதுச் சேரியை சிலாகித்து கூறுவார்கள். ஆகவே அதனைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி நான் அதற்குச் சென்றேன்.

ஒரே மாதிரியான சதுர மூலைகளைக் கண்டதில் எனக்கு வெறுப்பு தான் உண்டாயிற்று. தற்கால நாகரிகம் இதனைச் சிருட்டித்தது. வீதிகளின் பெயர்களையும் மாற்றிவிட்டு எண்களை கொள்ளத் தொடங்கியது. 99-வது தெரு என்ருல் என்ன பண்பாடோ தெரியவில்லை. அப்பர்சுவாமித் தெரு என்ருல் அழகாக இல்லையா, திருவள்ளுவர் தெரு என்ருல் தெவிட்டா போகிறது. எந்த நிலைமையில் பிரஞ்சும், அமெரிக்காவும் நடந்து கொண்டு செல்லுகிறது. பிலடல்பியா, சான்பிரான்சிஸ்கோ இவைகளின் படங்களைக் கண்டதும் எனக்கு உண்டான அருவருப்புகலில்லை. ஊர் முழுதும் நேர்க்கோடுகளாகவே ஆக்கப்படவேண்டும் போல் இருந்தது. மக்களையும் சதுரமாகக் கன அளவைகளில் உண்டாக்கிஞல் அழகாக இருப்பார்களோ?

இந்த நேர் நிரைகளுக்கு எங்கள் ஊர் எதிரிடையானது. ஒரு தெருவும் நேராக இருக்காது. ஒரு வீடும் நேர்க்கோணமாக கட்டியிராது. ஆகவே எங்கள் ஊரை யார் பார்த்தாலும் கண்கள் தெவிட்டுப் போகும் காட்சியை அனுபவிக்க மாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லுவோம்.

அழகு என்பது என்ன.

பெயர்போன ஒரு ஆங்கிலப் பத்திராசிரியன் தன் பத்திரிகையில் ஒரு சுவை பொருந்திய கேள்வியை விடுத்

தான். உலகத்திலேயே மிக்க அழகினைப் பெற்ற ஊர்கள் எவை? அவைகளில் முதற் பத்தை எழுதுக என அக் கேள்வியை விடுத்தான். உலக சஞ்சாரம் செய்து வந்த பல அறிஞர்களுக்குக் கேள்வித்தாள் அனுப்பப்பட்டது. சிறந்த அறிஞர்கள் விடைகளை அனுப்பினார்கள். வந்த விடைகளின் கணக்கை எண்ணி அதிக வாக்குகளைப் பெற்ற ஊர்களின் பெயர்களை அப்பத்திரிக்கை வெளி யிட்டது. முடிவு மிக வியப்பாக இருந்தது. மிகப் பெரிய ஊர்களாகிய லண்டன், பாரிசு, பெர்லின், கான்ஸ்டாண்டி நோபில், நேபில்ஸ், ரோம், நியூயார்க், சிகாகோ, பம்பாய், டெல்லி, டோக்கியோ, முதலிய பெயர்கள் அந்தப் பத்து அழகிய ஊர்ப் பெயர்களுக்குள் வரவேயில்லை. பரப்பிலோ. மக்கள் தொகுதியிலோ, வாணிபத்திலோ, செல்வத்தி லோ, கல்வியிலோ, பெருங்கட்டடங்களிலோ பெருமை பெற்ற ஊர்கள் விலக்கப்பட்டன. சிறிய ஊரே ஆனு லும் உண்மையான அழகுத்தத்துவத்தை கொண்டிருந் தால், அதுவே தேர்ந்தெடுக்கப்பட்டது. ஜெர்மனியில் இருந்த ஒரு சிறு ஊர்தான் முதன்மை இடம் பெற்றது. இந்தியாவிலே பெரிய ஊர்கள் இந்தக் கணக்கில் வர வில்லை. ஆனால் காசியில் கங்கைக் கரை இவைகளில் ஒன்ருகத் தேர்ச்சி பெற்றது. ஏன் என்று கேட்கலாம். காசியிலே கங்கை வளைந்து செல்லுகிறது. நேர்கோடாக இல்லை. கரை முழுவதும் 64 கட்டிடங்கள் உண்டு. ஒவ் வொன்றிலும் வெவ்வேறு விதமான படிக்கட்டுகள்; அவைகளுக்கு மேலே பல நிறங்களும், பல அடுக்குகளும் கொண்ட மாளிகைகள், ஆலயங்கள் முதலியனவும் தோன் றும்; பரந்த நீர்நிலைக்கு மேலே அவை எழும்பும்; இக் காட்சி ஒரு அருமையான இயற்கை அழகைச் செயற்கை யிலே காட்டுகிறது. இதனைக் கங்கையிலே ஒரு தோணி

யின்மீது ஏறிக்கொண்டு சென்றால் அறிந்து மகிழலாம். இந்தக் காரணத்தினால் காசிக்கு ஒரு இடம் கிடைத்தது. நியூயார்க் எம்பயர்பவனம் போன்ற தீப்பெட்டிமாளிகை களுக்கு இடம்இல்லை. பம்பாய் தெருவில் அடுக்கடுக்காக இருக்கும் வீடுகள் அழகோ, ஒத்தக்கல் மந்தில் சோலை களுக்கு இடையில் தோன்றும் சின்னஞ்சிறு தோட்ட வீடுகள் அழகோ? அதே தத்துவம்தான் எங்கள் ஊருக் கும் அமையும். தெருக்களும், வீடுகளும் நெருப்புப்பெட்டி யைப்போல் இராமல் கோணலாகவும், கோணங்களாகவும், பல தினுசுகளாகவும் பல ரகங்களாகவும் இருப்பதினால் எங்கள் ஊரே அழகில் சிறந்தது என்று நாங்கள் பெருமை யுடன் கூறிக்கொள்ளுவோம். முன்னாளிலே வீட்டுப்புறங் களிலும், வெளிப்புறம் போக்குகளிலும் பெரிய மரங்கள் இருந்தன. அவைகள் எங்கள் ஊரை ஒரு தோட்ட நகர் ஆக்கியிருந்தது. நகர அமைப்பு நிபுணரான கெட்டிசு துரை மகனார் இதனைப் பார்த்திருந்தால், எங்கள் ஊருக்கே முதல் பரிசு தந்திருப்பார். ஆனால் தற்போது குடிப் பெருக்கத்தினால் அம்மரங்கள் வெட்டுண்டு போக அவை கள் இருந்த இடங்களில் சிறு குடிசைகள் தோன்றிவிட் டன. இருந்தாலும் எங்கள் ஊர்தான் அழகான ஊர் என்று நாங்கள் கூறுவோம்.

வீடுகளின் அமைதி.

நம் நாட்டுச் சோதிட நூலின்படி கோள் ஒன்பது ஆகும். அவைகள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது, என்பன. இவை கள் ஒன்றற்கொன்று நட்பு பாராட்டாது. எதிர்த்து நிற் கும். அந்தவகையில் பரா முகமாய் இருத்தலை வக்கிரம் என்ற சொல்லால் குறிப்பார்கள். இதை அறிய வேண்டு

மாயின் கோயில்களில் மூலத்தானத்திற்கு வடகிழக்கில் ஒரு மேடையின்மீது அமர்ந்துள்ள ஒன்பது உருவங்களைக் காணலாம். அவ்வொன்பதும் வெவ்வேறு திக்குகளை நோக்கிக் கொண்டு வீற்றிருக்கும். இரண்டு கூட ஒரே திக்கில் இருக்கா. இந்தக்கோணல் இலக்கணத்தில் தான் எங்கள் ஊர் வீடுகளின் அமைதியும் இருக்கும். இரண்டொரு வீடுகளும்கூட ஒரே சமமாகக் கட்டப்பட்டிருக்கா. சிருட்டியில் மக்களுடைய உருவங்கள் எவ்வாறு பேதப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறே எங்கள் கிராம வீடுகளும் பேதப்பட்டிருக்கும். எத்தனை குடும்பங்கள் உண்டோ அத்தனை வீடுகள் உண்டு. ஒவ்வொரு குடும்பமும் வெவ்வேருனது. அது போல் வீட்டு அமைப்பும் வெவ்வேருனது. வீட்டு அமைப்புமட்டும் அன்று. அதன் வாசலும் கோள்களைப்போலவே வெவ்வேறு திக்குகளை நோக்கிக் கொண்டிருக்கும்.

இவ்வேறுபாடே அழகு என்க. நம் கண்களை அவைகள் தெவிட்டு வைக்காது. இக்காலத்தில் கட்டப்படும் சிறைச்சாலைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், கூட்டுறவு வீடுகள், அரசியலார் புறநகர்கள், இரயிலடி விடுதிகள் இவைகளைப்போல இனிமையில்லாத காட்சி எங்கள் ஊரில் கிடையாது. வீடுகள் வெவ்வேறு அமைப்பு வெவ்வேறு முற்றம், வெவ்வேறு அளவு இவைகளைக் கொண்டிருப்பன. வில்லை வீடுகள்மட்டும் அன்று, கூறைக் குடிசைகளும் வேறு வேறு வடிவங்களைக் கொண்டிருக்கும். புதிய கூட்டுறவுக் கட்டடங்களை எங்கள் ஊரார் வெறுப்பார்கள். நாங்கள் இராணுவ ஒய்வுச் சிப்பாய்களோ என்று ஏளனமாகப் பேசுவார்கள். இந்த முறையில் வீடு வாசல்கள் அமைவு பெற்றிருக்கும். நாட்டாண்மைக்காரர் வீடு ஒன்றுதான் தொட்டிக்கட்டு வீடு. மற்றைய வீடுகள்

இரட்டைச்சாய்ப்பு வீடுகளே. சில வீடுகள் ஒற்றைச்சாய்ப்பிலே நிற்கும். சில வீட்டு முற்றங்களிலே, ஆடு, மாடு, எருமைகளுக்கும் வாய்ப்பான இடங்களும் சாளைகளும் ஏற்பட்டிருக்கும். வீடுகளைச் சுற்றி எருக் குவியல்களும், குப்பை மேடுகளும், கோயில் புறம்போக்குகளும், கள்ளி மேடுகளும், இருக்கும். ஒன்றிரண்டு அரசு மேடைகளும் நடைக்கிணறுகளும் உண்டு. இந்த முறையில் எங்கள் ஊர் வீடுகளின் அமைதி இருக்கும். முன்னால் பிறவடைகளில் இருந்த மரம், செடி, கொடி முதலியவைகள் மறைந்துபோக இக்காலத்தில் ஓடும் கீற்றுமே எங்கும் முகடுகளாக அழகு செய்து கொண்டு இருக்கும். இக்காட்சி எப்படிப்பட்டது! சிறிது ஆராயுங்கள்.

தெருக்களின் தூய்மை.

சின்னஞ்சிறு நாளில் திண்ணைப் பள்ளியின் ஆசிரியர் நாட்டுப் புறங்களின் தூய்மையைப் பற்றிக் கற்பித்த பாடம் எனது நெஞ்சில் பசிய மரத்தில் ஆணி அறைந்தாற்போல பதிந்திருக்கிறது. நான் நாட்டுப்புறத்துக்குப் போகும் போதெல்லாம் அந்த தூய்மையைத் தேடிப் பார்ப்பதுண்டு. எருக்குப்பை மேட்டில் இரத்தினத்தைத் தேடினாற்போல அது இருந்தது. ஆனால் ஆசிரியர்மீது குற்றம் சுமத்திப் பயனென்ன. அவர் படித்த காலத்தில் நாட்டுப்புறம் அவ்வாறு இருந்திருக்கலாம். பாவம்செய்து கொண்டிருக்கும் நமக்கு அது தோன்றுமா? மேலும் ஆசிரியர் தலபுராணத்தைச் செய்யுளில் படித்திருக்கலாம். முன் யுகங்களில் நமது ஊர் அவ்விதமாகத்தான் இருந்திருக்கவேண்டும். தற்போது காலனின் கொடிய ஆட்சியால் அந்த நிலைமை மாறியிருக்க வேண்டும். தெருக்கள் ஒழுங்

காக இல்லாமல் கோணலாக இருப்பதே ஒரு அழகு என்று அல்லவோ கூறினோம். அந்தத் தெருக்களின் கோலத்தைக் கூறுதுவிடின் குறையாகும் அன்றோ. சிறிது காலத்திற்கு முந்தி வீடுகளில் சிந்தும் கழிநீர் பிறவடைகளில் இருந்த செடி, கொடிகளுக்குப் பாய்ந்து கொண்டிருந்தது. தற்போதோ பிறவடைகளும் கூறைக் குடிசில்கள் ஆக அந்தக் கழிநீர் தெருக்களுக்கு விடப்பட்டது. தெருவோ இருபுறக் குடிகளின் வாஞ்சையினாலே குறுக்கப்பட்டுப் போய் இரு மனிதர்மட்டும் நடக்கக்கூடிய அளவில் வந்துவிட்டது. அவ்வவ் வீட்டார் தங்கள் வீட்டுச் சாக்கடையை எதிர் வீட்டுப்புறத்திலே வெகு அக்கரையோடு வெட்டிவிடுவார்கள். இந்த முறையிலே இரு வீட்டாருக்கும் சாக்கடை உரிமையைப்பற்றி வாய்ப்பேச்சோடு நில்லாமல் கைக்கலப்பும் ஏற்பட்டுவிடும். இந்த வாதம் நாட்டாண்மை வரைக்கும் சென்று இருவர் சுவரோரமும் செலுத்தாமல் சாக்கடையைத் தெரு நடுவில் செல்லும்படி விட்டார்கள். அச்சாக்கடை நாளாவட்டத்தில் செல்லும் கோணலை படத்தில் வரைய ஒரு ஓவிய நிபுணன் தான் வேண்டும். கழிநீர் அதில் ஓடும்போது மேடு, பள்ளம், சுழி, குழி இவைகள் எல்லாம் செய்துகொண்டு விளங்கும். மழை வந்தாலோ தெருவின் கோலம் வருணிக்கமுடியாது. பல வீடுகளின் சாக்கடைகளோடு தூய மழை நீர் கலந்து ஆறுகப் பெருகி அடுத்துள்ள பள்ள வீடுகளில் புகுந்து அவைகளையும் தூய்மை ஆக்கி ஊருக்கு வெளியே தோன்றும் தீர்த்த வாவியாக மாறிவிடும். இதனைப் பண்டைக்காலத்துப் புலவர் வெகு அழகாகக் கங்கையிலும் சிறந்த நதியாக வருணித்துள்ளார். இது மட்டும் அல்ல. ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு குப்பையை எதிர்ப்புறத்து

வீட்டின் ஓரமாகத்தான் போடுவார்கள். தங்கள் வீட்டுக் குழந்தைகள் மலசலம் கழிக்கநேர்ந்தால் அதுவும் எதிர்ப் புறமாகத்தான் உட்காரக் கற்பிக்கப்படுவார்கள். தெரு வழியே வீடுகளில் சன்னல்கள் இல்லாத காரணம் வெகு நாளளவில் எனக்குத் தெரியவில்லை. மலசலங்களின் நாற்றம் தம் அறைகளில் புகாதவண்ணம் சன்னல்களை அடைத்துவிட்டார்கள் என்று எண்ணுகிறேன். இந்த முறையில் தெருக்களின் தூய்மை இருக்குமானால் என்னைப் போன்றவர்கள் பொல்லாத வேளையில் ஊர்த் தெருவில் நடக்கும்போது படும் துன்பங்களை எடுத்து கூறவும் வேண்டுமா. சிறிது மேல் நோக்கிச் சென்றுவிட்டால் கால்கள் எவைகளின்மீது பட்டுவிடும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆகவே ஒருவரும் இராக்காலங்களில் விளக்கின்றி தெரு வழியாக நடக்கமுடியாது என்று அறிக.

இப்போதும் அரண்.

ஊரில் வீடுகளுக்கு சன்னல்கள் இல்லை என்று சொன்னோம். அது இருக்கும் திசையில் ஒரு தாழ்வாரமும் திண்ணையும் உண்டு. அதற்கு முன்னால் தெருவிலிருந்து உள்ளே செல்லக்கூடிய பாதையும் முற்றமும் உண்டு. இதுதான் ஊரில் எந்த வீட்டிற்கும் உள்ள உறுப்பாகும். முன்னாளிலே வெறும் கூரையாக இருந்தவைகளில் சில இன்று நாட்டு ஓடு போர்த்தப் பெற்றிருக்கும். தற்காலத்தில் நாட்டு ஓடுகளுக்கு மாறாக சீமை ஓடு மேயப்பெற்றிருக்கின்றன. அறையின் சுவர்கள் அடியிலே மூன்றடி கனமாக இருக்கும். வலுவான களிமண்ணினாலும், சல்லி மண்ணினாலும் ஆக்கப் பெற்றிருக்கும். இத்தனை கனமுள்ள சுவரில் எவ்வாறு சன்னல் வைக்கப்பட்

டிருக்கும். முன்னுளில் சன்னல் இல்லாத குறையினுலே அதற்கு தமிழ்ப் பெயரே இல்லை போலும். சாளரம் வட மொழி. சன்னல் வேறு எந்த மொழிப்பெயரோ ஆராய்ந்து சொல்லுங்கள். சன்னல் போனுல் போகட்டும். வாயில் எங்கே இருக்கிறது. சிறு சிறு சந்துவழிகள் உள்புகுந்து சென்ருல் ஒரு சந்தில்தான் அவ்வழி இருக்கும். வீடு பெரிதாகவும் ஊர் வெளியிடத்தை ஒட்டியும் இருக்கலாம். ஆனுல் வாயிலோ அதனை ஒட்டி இருக்காது. சந்து பொந்துக்களில்தான் இருக்கும். இதற்கு காரணம் என்ன? கேட்கில் அது ஐதர் காலம் முதற் கொண்டே அவ்வாறு கட்டப் பழகிவிட்டோம் என்பார்கள். இதற்கு பொருள் என்ன? ஐதர் காலம் என்ருல் 'ஐதர் என்ற மைசூர் மன்னன் காலத்தில் அடிக்கடி படையெடுப்புக்கள் நடைபெறும். சிப்பாய்கள் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை அடிப்பார்கள். அதனைச் செய்யாமல் இருப்பதற்காகவே சுவர்களை 3 அடி கனமாகவும், சன்னல்கள் வைக்காமலும், கதவுகளைச் சந்துகளின் உட்புறமாகவும் வைத்தனர்' என்பதே பெரியோர்கள் சொல்லக் கேள்வி. அந்த மனப்பான்மை ஆங்கிலர் வந்து 150 ஆண்டுகள் ஆகியும் நாட்டில் கொள்ளை நின்று வெகுகாலமாகியும் இன்னமும் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கின்றது. அச்சமே மக்களை ஒன்றுகூட்டும் பெருமைபெற்றது. பகலில் எல்லாம் வெளியே சுற்றி இரை தேடும் கோழிக் கூட்டம் இரவில் கூண்டுக்குள் அடைக்கப்பெற ஓடுவது போல், நாட்டுப்புற மக்கள் எல்லாரும் பகலெல்லாம் புலங்களில் வேலை செய்துவிட்டு மாலைகளில் வீட்டில் புகுந்து அடைந்து கிடப்பார்கள். மலைநாட்டு மலையாளிகளைப் போல தொழுவங்களிலும் பண்ணைகளிலும் வீடுகள் கட்டிக்கொண்டு குடியானவர்கள் வாழ்வதில்லை. நிலங்

களில் பயிரோ தானியமோ கால்நடையோ எப்படிப் போனால் என்ன, பண்ணையாளிடம் ஒப்படைத்துவிட்டு ஊர்ப் புறங்களுள் புகுந்துகொள்ளுவார்கள். இது முற்காலத்தில் இருந்த அச்சத்தின் காரணம். ஊரில் முள்வேலி அரண்கள் போயும், இப்போதும் அச்சம் ஏன் நிலை நிற்கின்றதோ?

மக்களின் மனப்பான்மை.

அச்சம் இருந்தால் கூடிவாழும் தன்மைதானே வரும் என்போம். ஒரு ஆங்கிலக்விதை வாசித்தேன், பொறுக்க முடியாத குளிர். பனி இடைவிடாமல் பெய்தது. எங்கும் பாறைகளும், செடிகளும். வழி தெரியவில்லை. அந்த இடத்தில் ஒரு தனி ஆள் போகும்போது இருண்டு விட்டது. அங்கே ஒரு பாறை குகைபோல வளைந்திருந்தது. அதன் அடியிற் பதுங்கிக்கொண்டான். அவன் உடலோ கம்பளியில் படுத்தாற்போல மெத்தென்று பட்டது. இருட்டில் எந்தப்பொருள் என்று தெரியவில்லை. சிறிது ஆராய, அது ஒரு விலங்கு என்று கண்டான். மூச்சுவிடும் ஒலியும் கேட்டது. அந்த விலங்கும் இவன் உடலோடு உராய்வதால் சூடு உண்டாகவே நிம்மதியாகப் படுத்திருந்தது. அந்த விலங்கு அந்த பயங்கரமான குளிர்ப்பனிக்கே அஞ்சி அவ்விடத்தில் ஒடுங்கினது என்று அவன் அறிந்தான். அது என்ன செய்யுமோ? அச்சம் ஒரு புறம், வெளியில் அடி எடுத்து வைக்க முடியாத பனி மற்றொருபுறம் இவைகளின் இடையில் உறக்கமின்றி விடியும்மட்டும் விழித்திருந்தான். கிழக்கு வெளுத்ததும் கண் திறந்து பார்க்க அந்த விலங்கு ஒரு பயங்கரமான பெரிய ஓநாய் என்று தெரிந்தது. ஓநாயும் இவன் யாரோ தன்னிடம் உராய்கிறான் என்று எண்ணி அச்சத்

தினல் அமைதியாக இருந்தது. கிழக்கு வெளுத்ததும் யாதொரு சந்தடியும் செய்யாமல் எழுந்து போயிற்று. மனிதனும் மற்றொரு புறம் சென்றான். இந்த விபரீதச் செய்கை அச்சத்தால் ஏற்பட்டது என்று வெகு உருக்க மாகக் கவி பாடியிருக்கிறார்.

நாட்டுப்புறத்து மக்களோ அந்த அச்சத்தின் காரண மாகத்தான் சிற்றூர்களில் அரண்களைக் கட்டிக்கொண்டு சின்னஞ் சிறு வீடுகளை அடுத்தடுத்துக் கட்டிக்கொண்டு நாட்டுப் புறங்களில் வாழ்ந்தார்கள். அச்சம் போயிற்று, இருந்தாலும், கூடிவாழ்தல் போகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் அல்லவா? ஏன் பரம்பரை யாகவும் உண்டு எனலாம். அச்சம் போயிற்று, கூடி வாழ்தல் போகவில்லை. ஆனால் மற்றொன்று விளைந்து விட்டது. பொறாமையும், அதனால் பகைமையும். எந்த ஊர் சென்று பார்த்தாலும், மக்களைப் பிடித்து ஆட்டும் ஆறு பெரும் பேய்களும், பதின்மூன்று சிறு பேய்களும் அவர்களை நல்லவர்கள் ஆக்குவதில்லை. அப்பேய்களில் அழுக்காறு அல்லது பொறாமை மிகவும் கெட்டபேய். இது ஊர்களில் புகுந்து மக்களை ஆட்டுகிறபடியால் கிரா மத்துப் பெரிய மனிதர்களும், சிறியவர்களும் என்றைக் கும் வேறு பட்ட மனப்பான்மையிலேயே இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் வாக்குரிமை கிடைத்தது. தேர்தல்கள் வரவே இவைகள் தேள் போலவும், பாம்பு போலவும் அப் பேய்களைக் கடித்துவிடம் ஏற்றி விடுகின்றன. விடம் ஏறின பேய்களோ மக்களை விலங்குகள் ஆக்கி ஒருவருக் கொருவர் கடும் பூசல் புரியச் செய்கின்றன. இப்போது வயது வந்தவனுக்கெல்லாம் வாக்குரிமை கிடைத்துவிட் டாலோ ஊரில் மட்டும் அல்ல, ஒவ்வொரு வீட்டிலும் பூசல்

உண்டாகி மற்றொரு பாரதப் போருக்கு அடிகோலியாய் விடும் என்றே கூறவேண்டும். அச்சம் போயிற்று அழுக்காறு வந்தது. இதுதான் தற்கால மக்கள் மனப் பான்மை.

III. எங்கள் நிலக்கட்டு.

நிலக்கட்டு எது.

எங்கள் ஊரில் ஊர்க்கட்டைச் சுற்றி நிலங்கள் உண்டு. அந்நிலங்கள் எங்கள் ஊருக்குச் சேர்ந்தவை. முன்காலத்தில் அந்நிலங்கள் எல்லாம் எங்கள் ஊரில் குடியிருக்கும் குடிமக்களுக்கே சேர்ந்திருந்தன. தற்போது பிற ஊரார்களும் சில நிலங்களை வாங்கி உரிமைக்காரர்களாகி விட்டார்கள். எங்கள் நிலங்களை குறிக்கும்போது முன்காலத்தில் நாற்புறத்து எல்லைகளையும் குறித்துப்பின் அந்நிலத்தின் பெயரைக் குறிப்பார்கள். வேலாமரத்துக்காடு, இருளவளவுத் தோப்பு, ஆற்றுக் கராய் வயல் முதலான பெயர்கள் குறிக்கப்படும். இப்போதும் அவ்விதமான பண்டைப் பெயர்கள் வழக்கத்தில் உண்டு. ஆனல் ஆங்கில ஆட்சி வந்தபிறகு ஊர்ப் பெயர் குறித்து நிலங்களைக் காலைகளாக வகுத்து ஒவ்வொரு காலைக்கும் தனித்தனி எண் கொடுத்துள்ளார்கள். உதாரணமாக 'வேடப்பட்டி கிராமத்தில் 218-ம் (எண் கொண்ட) நெம்பர் காலை புன்செய் ஏகரா 4-35' என்று ஒரு நிலப்பகுதியைக் குறிப்பார்கள். முன்காலத்தில் ஊர் என்று இருந்தது, இப்போது கிராமம் என்ற பிரிவில் அடங்கியுள்ளது. அதில் ஊர்க்கட்டு, புறம்போக்கு, நத்தம், சேரி (தாழ்த்தப்பட்டோர் இருப்பிடம்), மேய்ச்சல் காடு, வாய்க்கால், குளம் முதலிய நீர் நிலைகள், பலவகை நிலங்கள் முதலியன சேர்ந்திருக்கின்றன. இதனைப் பண்டைக்காலச் சாசன பத்ததியில் வெகு அழகாக விவரித்திருக்கிறார்கள். அதில் எடுத்துக்காட்டாக "அதிராஜ ராஜமண்டலத்து வெங்கால நாட்டு நெல்வாய்ப் பள்ளிக்கு

கீழ்ப்பால் எல்லை ஆந்தனூர் எல்லைக்கு மேற்கும், தென் பால் எல்லை கருங்கல் கரட்டுக்கு வடக்கும், மேல்பால் எல்லை பாய்படுத்தான் கல்லுக்குக் கிழக்கும், வடபால் எல்லை ஆற்றுக்குத் தெற்கும், இந் நான்கெல்லைக்குட் பட்ட நன்செய், புன்செய்....................உடும்போடி, ஆமை தவழ், புற்று எழுந்த இடம், மேனோக்கிய மரமும். கீழ்நோக்கிய கிணறும், கற்றுப்புல், பேரகர முற்றூட்டும், இறைவரி, சிற்றாயம், எலவை, உகவை, மன்றுபாடு, தெண்ட குற்றம் மற்றும் எப்பேர்ப்பட்டனவும் இருப்ப தாக திருவானிலை மகாதேவர்க்குத் திருநாமத்துக் காணி யாக நம் ஓலை கொடுத்தோம்" (கருவூர்ச் சாசனம்) என் னும் பகுதியை எடுத்துக்கொள்வோம். இந்த அழகிய சொல்லடுக்கை நமது நாட்டுக் கல்வெட்டுகளிலும் செப் பேடுகளிலும் காணலாம். இந்தக் காலத்தில் அவ்விதச் செம்பாகமான செய்யுள் நடை சாசனம் எழுதுவோர் களுக்கு வராது. பாமர மக்கள் கிராமம் என்றால், ஊர்க் கட்டு என்ற பொருளிலே கூறுவார்கள். ஆனால் பண் டைக்காலம் முதற்கொண்டு இந்தக் காலம்வரையில் கிரா மம் என்றால் அதில் நிலங்களும் அடங்கியிருக்கின்றன என அறியவேண்டும். தமிழ்நாட்டை முன்னாளில் சேர. சோழ, பாண்டிய, கொங்கு, நடு, தொண்டை என்ற மண் டலங்களாகப் பிரித்தார்கள். அக்காலத்தில் ஊர்கள் பல திறப்படும். சோழர் காலத்தில் சதுர்வேதிமங்கலம், நல் லூர், எனப் பிரித்திருந்தார்கள். முந்தியது அந்தணர் குடியிருப்பு; பிந்தியது மற்றையோர் குடியிருப்பு ஆகும், ஆலயங்களுக்குக் கொடுத்தவை தேவதாயம் எனவும், மறையவர்களுக்குக் கொடுத்தவை பிரமதாயம் எனவும் வழங்கினார்கள். இக்காலத்தில் அயன் இனும் என்ற சொற்களே ஆளப்படுகின்றன. இந்த வகையில் ஊரைச்

சுற்றி இருக்கும் நிலங்கள் பிரிவினை செய்யப்படுகின்றன. இவைகள் அரசாட்சியாரால் வகுக்கப்பட்டவைகள்.

நிலவடிவு

கொங்கு நாட்டிலே முருகக்கடவுள் குன்றுதோருடல் தலமாகிய மருதமலையை அறியாதார் எவரும் இருக்க மாட்டார்கள். மிகவும் அழகான மலை. மேலே சிறிய ஆலயத்தைக் கொண்டது. அருமையான சுனைநீர் ஊற்று உள்ளது. ஆலயத்திற்குத் தெற்கே பெயர்போன அரச மரமேடை ஒன்று உண்டு. நடுப்பகலில் இதன்மீது உட்கார்ந்தால் இனிமையான தென்றல் வீசும். எப்படிப் பட்ட ஆயாசமும் ஓடி மறையும். இந்த மேடைமீது அமர்ந்து கிழக்கே கோவைநகர்ப் புறமாகப் பார்ப்போம். என்ன தெரிகிறது? கோவைப் பாதை வளைந்து வளைந்து செல்லும். காட்டாறுகள் வேறு திசைகளில் வளைந்து செல்லுவன. அவைகளின் இரு புறங்களிலும் சதுரம் சதுரமாகவும் பலவித நீளச் சதுரங்களாகவும் முக்கோணங்களாகவும் நிலங்கள் அமைந்திருக்கக் காண்போம். நிலங்களில் விளைந்திருக்கும் பயிர்களின் நிறங்களுக்குத் தக்கபடி அக்காலைகள் பலவிதமான வண்ணப்பரப்புக்களை ஒரு மண்டபத் தளத்தில் விரித்தாற்போலப் படிந்திருக்கும். கச்சேரிகளில் விற்கும் கிராமப் படங்களுக்கு வண்ணங்கள் பூசினாற்போல அவைக்ள் தோன்றும். அருகில் சென்றால் இக்காட்சி காணமுடியாது. ஆனால் மலையிலிருந்து பார்த்தால் அது வெகு வடிவாகத் தோன்றும். இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற பழமொழியின் பொருள் இந்தக் காட்சியைக் கண்டால்தான் விளங்கும் நம்முடைய கிராமங்களின் நிலக்கட்டும் இத்தனை அழகாக நிலக்கணிதப் படம்போல (க்ஷேத்திர கணிதம்) இருக்

கிறதே என்பதை அப்போதுதான் அறிவோம். இந்த அழகிய காட்சியை மற்றும் பலமுறை நான் கண்டிருக்கிறேன். பழனிமலை மேலேறி ஆண்டவர் கோயில் சுற்றுப்பிரகாரத்திலிருந்து நாற்புறமும் காணுவதில் இதே காட்சித்தான் காண்பேன். வையாபுரிக் குளத்தின் அழகு மிகவும் திவ்வியமாகத் தெரிந்தது. திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயிலிருந்து சீரங்கம் பார்த்தபோதும் காவிரியும் கொள்ளிடமும் செல்லும் பாதைகளும் இடையில் அமைந்த புலங்களின் வடிவமும் இதே அழகைச் சிந்திக்கொட்டின. திரு ஈங்கோய்மலை, திருச்செங்கோடு இவைகளில் ஏறிப்பார்க்கையிலும் திருக்கழுக்குன்றம் ஏறிப்பார்க்கையிலும் இதே காட்சி தெரிந்தது. சென்னை நீதிமன்றத்தின் முகட்டில் அமைந்துள்ள கலங்கரை விளக்கத்தின் மீது ஏறிப்பார்க்கையில் பட்டினத்துத் தெருக்கள் செவ்விய தோற்றத்தைத் தந்தன. இவ்விதமாக அருகில் சென்ருல் காணுத அரிய காட்சி உயரத்திலிருந்து பார்த்தால் தெரியும். இறுதியில் ஒருமுறை ஆகாயவிமானத்திலிருந்து பார்க்கவும் இதே தோற்றம்தான் தெரிந்தது. ஆகவே நமது நிலக்கட்டின் வடிவு நமக்குச் சுட்டிக்காட்டும் அழகை வெறும் மனேபீதி என்று கொள்ளவேண்டியதில்லை.

நிலப் பிரிவினை.

எங்கள் ஊரைச் சுற்றிலுமுள்ள நிலங்களைப் பொதுவாக இரண்டுபிரிவாக மக்களும், அதிகாரிகளும், பிரிவினை செய்திருக்கிருர்கள். ஒன்று நன்செய் மற்ருென்று புன்செய் என்பன. இச் சொற்களின் பொருளை அறியாமல் அவைகளை நஞ்சை, புஞ்சை என்று படித்த மக்களும் எழுதுகிருர்கள். தமிழ் மொழியின் துரதிட்ட நிலை

என்னவெனில் இக்காலத்து அறிவாளிகள் இலக்கணப் பிசகுகள் செய்தால் குற்றமல்ல என்பதும் அதுவே உலகப்போக்கு என்பதும் அதையே கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள். இதனை எத்தனை மட்டும் நாகரிக உலகம் ஒத்துக்கொள்ளுமோ அறியோம். நன்செய் என்பது நன்மையான செய், புன்செய் என்பது புன்மை யான செய்என்பதாம், நன்மை, புன்மை நீர்வளத்தைப் பொருத்து இருக்கின்றன. செய் என்றால் நிலம் என்பது பொருள், ஆகவே நன்செய் நிறைவான நீர்ப்பாய்ச்சல் கொண்டது, அதாவது ஆறு, குளம், இவைகளால் பாய்ச்சப் பெறுவது. புன்செய் குறைவான நீர் கொண்டது, அது மழை நீரால் விளைவது. வானவாரி, அல்லது மான வாரி, என்பார்கள். நன்செயில் நெல் விளையும், வயல் வாழை, தென்னை, கமுகு விளையும் தோப்புகள் அடங்கும். புன்செயில் கிணற்று நீரால் விளையும் கருந்தானியங்கள் புகையிலை, மிளகாய்த்தோட்டங்கள், சோளம், நிலக்கடலை விளையும் மானவாரி புலங்கள் அடங்கும். இந்தப்பிரிவினை யேயன்றி வயல், தோட்டம், தோப்பு, தொழுவம், காடு, மேய்ச்சல் நிலம், (புற்றரை) வனாந்திரம் (கானல்) முதலிய பிரிவினைகளும் உண்டு. இவைகளின் பொருள்களை விவ ரிக்க வேண்டியதில்லை. நன்செய் நிலங்கள் புன்செய், தோட்டத்தைவிட இரண்டு மடங்கு விலையும் புன்செய் காட்டைவிடப்பத்து மடங்கு விலையும் கொண்டவை. ஊர்க்கட்டுகள் பெரும்பாலும் புன்செய் மேடுகளில்தான் கட்டுவார்கள். அல்லது நன்செய்களுக்கு சிறிது தூரத் தில் கட்டுவார்கள். இந்தமுறை நோய் அணுகாமல் இருக் கும் பொருட்டேயாம். மலைகளிலே பண்டைக் குடிகள் தங்கள் சிற்றூர்களை குன்றுகளின் உச்சியில் கட்டுவார் களே யன்றிப் பள்ளத்தாக்குகளில் கட்டமாட்டார்கள்.

இதற்கும் அதுவே காரணம் என்க. இனிப் பண்டைக் காலத் தமிழ் மக்கள் நிலத்தை வேறு விதமாகப் பிரித்திருந்தார்கள். மலையும் மலையடுத்த நிலமும், மேடும் மேடு அடுத்த புற்றரையும், ஆறும் ஆற்றை அடுத்த வயற்கரையும், மணலும் கடல் மணற்றிடலும், சுரமும் எதும் விளையாத கல்லாந்தரையும் என ஐந்தாகப் பிரித்தார்கள். அவைகளுக்கு முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெயரிட்டார்கள்.

அந்த நிலங்களில் சிறப்பாக விளையும் மலர்களைப் பெயர்களாக கொண்டார்கள். இப்பிரிவினை எத்துணைச் சிறந்தது என்று கூறவும் வேண்டுமா. அவர்கள் இயற்கையே அடிப்படையாக வைத்துக் கொண்டு பார்த்தார்கள் என்பது தெளிவாகும். இந்த மனப்பான்மை இப்போது வருமா?

மண்ணுரம்

பாய்ச்சலை முன்னிட்டு நிலங்களை நன்செய், புன்செய்கள் என்றும் விளைவை முன்னிட்டு வயல், தோப்பு, காடு, என்றும் பிரிப்பது இக்கால வழக்கம் என்று கூறப்பட்டது. நிலத்தின் தன்மையை ஒட்டி முன்னுள் தமிழர் ஐந்திணைகளாக வகுத்தார்கள் என்றும் கூறப்பட்டது. இக்காலத்து நில நூலார் முன்னுள் மக்கள் கொண்ட பிரிவினையைச் சிறப்பாக எடுத்துப்பாராட்டமுடியும். ஆனல் உழவியல் நூலார் மண்ணின் உரத்தை முன்னிட்டு நிலங்களைப் பாகு படுத்துவார்கள். விளைவும் இதனை உத்தேசித்துத்தான் இருக்கும். அரசியலாரும் வரி விதிக்கும் விஷயத்தில் மண்ணினுடைய உரத்தை அனுசரித்தே காலைகளைப் பிரிவினை செய்கிருர்கள். நாட்டுப் புறத்து

மக்களுக்கு இதன் மர்மம் தெரிகிறதில்லை. ஏன் என் நிலத்திற்கு வரி பளுவு அயலான் நிலத்திற்கு ஏன் வரி குறைவு என்று அவன் சிந்திக்கிறதே இல்லை. தெரிந்தால் அல்லவோ சிந்திக்க முடியும். வரி ஏன் கொடுக்கப்படுகிறது என்றும் அவன் அறியமாட்டான். ஊர்த்தலைவன் கேட்கிறான், நான் தரவேண்டியதுதான் என்ற எண்ணம்தான் அவன் மனதில் உண்டு. சென்னையில் வாசிக்கும்போது ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தேன். வீட்டுக்குரிய அம்மாள் வரிக்காரன் வந்தவுடன் என் கையில் பணம் தந்து அவனிடம் கட்டிச்சீட்டு வாங்கச் சொன்னாள். நானும் சீட்டில் உள்ள பணம் கொடுத்து விட்டு இரசீது வாங்கிக் கொடுத்தேன். ஒரு அணா மிகுதியாக இருந்தது. அம்மாள் என்னைப் பார்த்து 'ஏன் ஒரு அணா குறைவாகக் கொடுத்தீர்கள்' என்றாள். அத்தனை தான் வரி என்றேன். இல்லை, அந்த ஒரு அணாவும் கொடுத்துவிடுங்கள், அது மாமூல் என்றாள். இந்தமுறையில் முன்பின் காரணம் கேட்காமலே வரிக்காரன் கேட்கிற துகையைக் கொடுப்பது நம் குடியானவர்களின் வழக்கம் ஆகும். மண்ணின் தரத்திற்குத்தக்கபடி வரி விதிக்கப்படுகிறது என்றும் அறியார்கள். மணற்பாங்கு, செவ்வல், கரிசல், கல்லாங்காடு முதலிய பிரிவினைகள் இந்தவகைப்படும், எங்கள் ஊரில் வடபுறம் கரிசல் தென்புறம் செவ்வல் மணல் பாங்கு. கரிசலில் பருத்தி வெகு நன்றாய் விளையும். செவ்வல் மணலில் நிலக்கடலை விளையும். சில ஆண்டுகளுக்கு முந்தி இப்புன்செய் நிலங்கள் தகுந்த வருமானம் தரவில்லை. இப்போது இயந்திர ஆலைகள் தோன்றின பிறகு பருத்தியும், நிலக்கடலையும் பத்து மடங்கு விலை ஏறிவிட்டன. ஆனால் தகுந்த எரு போடுவதற்குப் போதுமான மனப்பான்மை வருவதில்லை. காரணம் முதலில் எருக்களை

எருமுட்டை தட்டி எரிப்பார்களே ஒழிய நிலத்திற்கு இட்டு வருமானத்தைப் பெருக்குவது கிடையாது. அரசியலாரும் இதைப்பற்றி மிகப்பேசுகிறார்களே ஒழியக் குடியானவர்களுக்கு வழிகாட்டுவதில்லை. இந்த நிலையில் எங்கள் உழவியல் பண்பாடு ஒடுங்கி நிற்கின்றது.

நீர் நிலைகள்

எங்கள் ஊருக்கு அருகில் ஒரு காட்டாறு ஓடுகிறது. அதனால் எங்கள் ஊர்மிகச் செழிப்பு பெறுகிறது. பள்ளத் தாக்கில் தென்னந்தோப்பு இருப்பதற்கு அந்த ஆறே காரணம் "கான் யாற்று அடைகரை ஊர் இனிது" என்றார் சங்கப்புலவர். ஆகவே அப்புலவர் கூற்றின்படி எங்கள் ஊர் ஒரு இனிய ஊர். உண்மையிலேயே அது வெய்யில் காலத்திலும் குளிர்ந்த தென்றல் வீசும் தன்மை பொருந்தியது. அதற்குக்காரணம் அந்த காட்டாறுதான். அதில் பாயும் வெள்ளம் உரத்தை எடுத்து வரும். இரு கரையிலும் தென்னை, மா, பலா, உண்டாகி எப்போதும் குளிர் நிழலைத்தரும். எங்கள் ஆறு காட்டாறே ஆனாலும் எப்போதும் ஒரு சிறிதாகிலும் ஊற்று நீர் ஊறிக் கீழே ஓடிக்கொண்டே இருக்கும். மழைக்காலங்களில் இரு கரைகளும் புரள வெள்ளம் ஓடும். அப்போது மண்ணணைகளைக்கட்டி நீரைத் தேக்கித் தங்கள் தங்கள் நிலங்களுக்கு அந்நீரை பாய்த்துக்கொள்ளுவார்கள். சமயத்தில் பாய்த்துக்கொள்ளாவிட்டால் வெள்ளம் ஓடிப்போகும். பின்னால் கிடைப்பதரிது, இதனை அறிந்த குடியானவர்கள் மழை பெய்யப் பெய்ய பாரா இருந்து நீர் கட்டிக்கொண்டு போவார்கள். சிற்சில சமயங்களில் உரிமைகளுக்குக் குத்து சண்டையும் ஏற்படும். கச்சேரியும் ஏறிப் பெரும்பணம் இழப்பார்கள். வெள்ள நீரில் உரம் மிகுதி. ஆகவே அதற்கு

மதிப்பும் மிகுதி அதனுல்தான் மக்கள் முந்திக்கொள்ளு வது வழக்கம். பெரு மழை பெய்தால் சில சமயங்களில் சேதமும் விளையும். எங்கள் நாட்டில் ஒரு காட்டாற்றில் ஒரு ஆண்டில் அடை மழை பெய்து வெள்ளம் பெருகி எழு எருமைகளை அடித்துக் கொண்டு போயிற்று, அது முதல் அதற்கு ஏழெருமைப் பள்ளம் என்று பெயர் ஏற் பட்டது. இக்காட்டாறு ஒரு முறை இரயில் தண்டவாளத் தையும் புரட்டிக்கொண்டுபோய் விட்டது. பின் வந்த வண்டி விழுந்து பலபேர் இறந்தார்கள். ஆகவே காட் டாறுஎன்ருல் எவருக்கும் அச்சம். ஆற்றில் அணைக்கட்டு வதற்கு கோடிக்கணக்கான பணம் செலவு ஆகும். ஆனுல் காட்டாற்றிலே மண்ணணைக் கட்டி நீர் கொண்டே குவதற்கு சிறிது தொகைஇருந்தாலும் போதும். எங்கள் ஆற்றிற்கு ஒரு பர்லாங்குக்கு ஒரு அணை இருக்கும். ஆகவே இதன் மகிமை கூறவும்வேண்டுமா? குளங்கள் குட்டைகள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. இவைகளால் நீர்ப் பாய்ச்சல் வசதிகள் மிகச் சுலபமாக ஏற்படும்.

பேராறு

எங்கள் ஊருக்கு அருகில் பேராறு எதுவும் இல்லாமற் போனபோதிலும் எங்கள் நாட்டில் ஒன்று உண்டு. ஆனுல் அதனுல் எங்கள் நாட்டிற்கு ஒரு பயனும் இல்லை. எங்கள் நாட்டின் எல்லை முடிய அது ஓடி அடுத்த நாட்டில் புகுந்து அங்கே அது பாய்கிறது. எங்கள் நாட்டின் வழி யாகப் போகும் போது மிகுந்த ஆழத்தில் அது செல்லு கிறது. அதனுல் எங்கள் நாட்டு நிலங்களுக்கு அதன் நீர் பாய்வதில்லை. ஆனுல் எங்கள் நாட்டிலிருந்து வடியும் நீர் முழுவதையும் சிற்ருறுகள், காளுறுகள் மூலமாக அது பெற்று மிகப் பெரிதாகி அடுத்த வட்டத்தில் புகுந்து

அங்கு இருக்கும் நிலங்களுக்கு தான் பெற்றுக்கொண்டு சென்ற உரத்தோடு அது பாய்ச்சல் தருகிறது. ஆகவே இவ்வாற்றை ஒரு உலுத்தன் என்று நாம் கூறுவோம். அது எங்கள் இடையில் ஓடுகிற காலம் எல்லாம் எங்களிடமிருந்து உதவிகள் பெற்றுக்கொண்டு அதனால் பெருத்துப் பிறகு எங்களை விட்டு நீங்கினவுடனே பிறருக்குத்தன் வளமை முழுதும் கொடுத்துவிடுகிறது. ஆகவே இதனை ஒரு பெரிய உலுத்தன் அல்லது கஞ்சன் என்று கூறுவோம். பொதுப் பணத்திலிருந்து பேராற்றிற்கு பெரிய அணை கட்டினபிறகு அதில் ஒரு துளி நீர் கூட எங்கட்குத் தராமல் கீழே வெகு தொலைவு போய் வேறு நாட்டு மக்களுக்கு அது பயன்தர ஓடிப்போகிறது. இதைக் கேட்டவுடனே எங்கள் நெஞ்சு எவ்வாறு துடிக்கும்! கூறவும் வேண்டுமா.

இப்பேராற்றிற்கு உப நதியாக இருக்கும் பல ஆறுகளும் எங்களுக்கு மிகுதியும் பயன் தருவதில்லை. ஆற்று நீர்ப்பாய்ச்சலையே பெருஞ் சிறப்போடு எதிர்பார்த்து நிற்கும் குடியானவர்களுக்கும் அவ்வியக்கம் போதுமான ஆதரவு தரவில்லை. இந்த நிலையில் ஆறுகள் இருக்கப் பெருங்குளங்களும் எங்கள் நாட்டில் அக்காலத்து அரசியலார் கட்டவில்லை. நாட்டு மக்களே சிறிது சிறிதாகத் தேக்கிவைத்துக் கொண்ட சிறு குளங்களும் குட்டைகளுமே மிகுதியாக உண்டு. மழைக் காலங்களில் இவைகளில் இவ்வெள்ளம் தங்கினால் அடுத்துள்ள கிணறுகளுக்கு ஊற்றுக்கால் ஏற்படும். நில நீர் இல்லாமற் போனபோதிலும் குடி நீராவது கிடைக்கும்.

உண்மையிலே இலஞ்சப்பேய் நாட்டில் புகுந்து இக்குட்டைகளை எல்லாம் தூற்றிவிட்டுப் பேராசைக் குடி

நீர்க்கிணறுகளை வற்றச்செய்து குடிமக்களுக்கு நாவறட்சி தந்துவிட்டது. இச்செய்தி அரசியலார் கண்ணில் விழுவதில்லை. சொன்னாலும் காது கேட்பதில்லை.

பாய்ச்சல் வசதி.

தொண்டை நாட்டிலே உத்தர மேரூர் என்ற சிறிய ஊர் இருக்கிறது. இந்த ஊரிலே ஒரு அழகிய கோயில் இருக்கிறது. மற்ற கோயில்களைப்போலவே இதிலும் நித்திய நைமித்திகங்கள் அர்ச்சகர்களின் திருவுள்ளப்படி நடைபெறும். ஆகவே இக்கோயிலில் என்ன சிறப்பு இருக்கப்போகிறது என்பீர்களோ? அப்படித்தான் இதுவரை இருந்தது. அதற்குத் திடீரென்று ஒரு பெருமை ஏற்பட்டுவிட்டது. புதிய அற்புதம் எதுவும் ஏற்படவில்லை. பெரும் புதையலும் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு எழுத்து நிபுணர் இக்கோயில் சுவரில் தீட்டப்பட்டிருந்த எழுத்துக்களை வாசித்துவிட்டார். அதில் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் எவ்வாறு கிராமங்களில் ஆட்சிகளை நடத்தினார்கள் என்று அதில் விவரமாகச் சொல்லப்பட்டிருந்தது. இந்தச் செய்தி உலகெங்கும் பரவிற்று. தமிழர்களுடைய குடியாட்சி முறைமையின் சிறப்பு கொண்டாடப்பட்டது. தமிழர்கள் ஆட்சித்திறத்தில் மிகவும் மேம்பட்டவர்கள் என்று ஒப்பில்லாப் பெருமை தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இது பணப்புதையல் அல்லாமற் போனபோதிலும் ஒரு கலைப் புதையல் என்று மக்கள் அறியவேண்டும். எவ்வாறு கிராம சபையினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அச்சபையின் கடமை உரிமை என்ன, எத்தனை ஆட்சி முறைகளைத் தழுவி நடத்தினார்கள், சிறப்பாகக் கிராமத்தின்

பாய்ச்சல் வசதி எவ்வாறு கையாளப்பட்டது, என்று அது கூறுகின்றது.

இப்போதோ கிராமத்தின் நிலங்களுக்குப் பாய்ச்சல் பிரித்துவிட்டு ஒவ்வொரு நிலமும் ஒழுங்காகப் பெறுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வதிகாரிகளுக்கு முறை எடுத்துக்காட்ட ஒரு பஞ்சாயத்துசபை நியமிக்கப்பட்டுள்ளது. விடிந்தவுடன் இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களும் குடியானவர்கள் அவர்கள்மீது சுமத்தும் குற்றங்களும் கணக்கு இல்லை. இவைகளை எவரும் காதில் போட்டுகொள்ளுவதில்லை. ஆனால் சோழர் சாம்ராச்சியத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இப்படிப்பட்ட பாய்ச்சல் வசதிகளை கிராமத்துச் சபையார்களே நடத்திவந்தார்கள். கிராமத்துப் பெரியவர்கள் எல்லாச் செய்திகளையும் நேரில் அறிந்தவர்கள். ஆனதினாலே நன்மை தீமை முழுதும் அறிந்திருப்பார்கள். தக்கபடி நீர் அளவை அறிந்து கொடுப்பார்கள். இந்தவிதமாக நீர்ப்பாய்ச்சல் நன்செய் நிலப்பாசனங்களிலே் முன்னாளில் செய்யப்பட்டது. அச்சபையும் போயிற்று. சம்பள ஆட்கள் வந்தார்கள். அவர்களுக்கு முறைகூறுவதற்கு பெரும் பணக்காரர்கள் வந்தார்கள். ஆகவே எங்ஙனம் முறை வழுவாமல் நடைபெறும்- 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பழமொழியும் நாட்டில் வழங்கிவிட்டது. இப்படி ஒரு மொழியைத் தாயுமான சுவாமிகள் எடுத்து ஆண்டிருப்பதால் நாயக்க மன்னர்களின் காலத்திலிருந்தே இந்தச் சீர்கேடு நமது நாட்டில் புகுந்துவிட்டது போலும் என்று எங்கள் ஊர் ஆசிரியர் வெகு சிறந்த ஆராய்ச்சி முறையில் வெளிப்படுத்தினார். இதில் என்ன பிசகு?

மேய்ச்சல் வசதி.

பொதுநல உணர்ச்சிகொண்ட ஒரு பெரியவர் சில ஆண்டுகளுக்கு முந்தி அடிக்கடி தினத்தாள்களில் கட்டுரைகளை எழுதிக்கொண்டு வந்தார். அவர் ஓய்வு பெற்ற உயர்ந்த அலுவலாளர். அவர் சிறப்பாக நாட்டுப்புறங்களில் மேய்ச்சல்காடுகள் வேண்டும்என்றும் அவைகளைக் குடிகளுக்கு தர்க்காஸ்தின் பேரில் கொடுக்கக்கூடாதென்றும் அவைகளைக் குடிகளுக்குப் பொதுவாக வைக்க வேண்டும் என்றும் வாதாடுவார். அக்காலங்களில் நிலமில்லாக் குடியானவர்களுக்கு நிலம் கொடுக்கும் சட்டம் இருந்தது. ஊர்ப்புறங்களில் இருந்த வெற்றிடங்களை நிலம் இல்லாத மக்கள் விண்ணப்பம் போட்டால் அதிகாரிகள் அதனைப் பரிசீலனை செய்து வரிவிதித்துத் தானம் செய்வார்கள். உணவு அபிவிருத்தி, சர்க்காருக்கு வருமானம், இவைகளை உத்தேசித்து இந்த விதி ஏற்பட்டது. ஆனால் இதனால் பயன் அடைந்தவர்கள் கிராம அதிகாரிகளேயாவர். ஒவ்வொரு அங்குல நிலத்திற்கும் ஒரு பணமாவது அவர்கள் கைக்குச் சேராவிட்டால் நிலம் கிடைப்பதரிது. விண்ணப்பித்தவனும் நிலம் பெறுவதற்குள் ஏழையாகி வேறொருவனுக்கு விற்கவேண்டி வரும். இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் சொல்லக் கூடும். இந்த நிலைமையில் பசு மாடுகளுக்காக விட்டிருந்த மேய்ச்சல் காடு முழுதும் பயிர்செய் காடாகிவிட்டது. இதனால் பசுமாடுகளுக்குத் தீவனம் குறைந்துபோய்க் குடியானவர்கள் வருந்தத் தொடங்கினார்கள். இதனைக் கண்டித்தே அந்த ஓய்வு பெற்ற அதிகாரி அடிக்கடி தினத்தாள்களில் எழுதிக்கொண்டு வந்தார். அந்தக் காலத்தில் நான் பள்ளி மாணவனாக இருந்தேன். அப்

போது அவருடைய வற்புறுத்தல் எனக்குப் புரியவில்லை. நாள்தோறும் எங்கள் ஊர் பசுக்களை எங்கள் இடையன் மேய்ச்சலுக்கு கொண்டு போவான். முற்பகல் 8, 9 மணிக்குச் செல்லும் மந்தை பிற்பகல் 2, 3 மணிக்குத் தான் வீடு திரும்பும். அந்த மேய்ச்சல் நிலத்தைப் பல தடவை பார்த்திருக்கிறேன். ஒரு குளத்திற்கு அருகிலே ஒரு வெற்றிடம். அங்கே சில புளியமரங்கள் உண்டு. இவைகளின் நிழலில் அவைகள் படுத்துக்கிடக்கும். ஒரு புல்கூடக் கண்டதில்லை. சப்பாத்திக்கள்ளி அந்த நிலத்தைப்பேணத் தொடங்கிற்று. விடியலில் ஊர்ப்பெரியார்கள் கழித்துவிட்டுச் சென்ற மலமும், தெரு ஓரங்களில் விழுந்துகிடக்கும் குப்பையும் இந்த பசுக்கோஷ்டிகளுக்குக் கிடைக்கும் மேய்ச்சல் இரை ஆகும். ஆகவே இந்த இடங்களைக் குடிகளுக்குக் கொடுத்துவிட்டால் என்ன கெடுதி என்று நான் நினைத்ததுண்டு. ஒருவேளை நாட்டுப்புறங்களிலோ வேறுக இருக்கலாம் என்று எண்ணினேன். அங்கே மலசலம், கழிவுநீர், சாக்கடை நீர் இவைகளுடனே செல்வவான்கள் கொட்டிவைக்கும் எருக்கூளங்கள் இந்த இடங்களை ஆக்கிரமிக்கும். சாசனங்களில் கண்ட புற்றரை, கற்றுப்புல், இவைகளை நமது நாட்டுப்புறங்கள் இழந்துவிட்டன. மீண்டும் அவைகளை வாங்கிப் புற்றரைகளாகச் சேமித்துவைத்தால், திருத்தொண்டர்களான சண்டீசனுர், ஆனயனுர், நன்னுட்களைப்போல நமது கால்நடைகளும் அமுதம் சுரந்து நாட்டை உயிர்ப்பிக்கும் அல்லவா?

கானல்.

சமநிலங்களில் மேய்ச்சல் நிலங்கள் அற்றுப்போகக் கால்நடைகளைக் கானல்களுக்கு மேய்ச்சலுக்காகச் செலுத்

திக்கொண்டிருந்த நாள் இருந்தது. சில நாடுகளில் சம நிலக் கானல்களும் உண்டு. மற்ற நாடுகளில் மலைக் கானல்கள் இருந்தன. இவைகளிலே நிரம்பப் புல் விளையும். கால்நடைகளின் மேய்ச்சலுக்கு அது வசதியாக இருந்தது. கால்நடைகளோ காலையில் புறப்பட்டுக் கானலில் புகுந்தால் மாலையில்தான் வீடு திரும்பும். வயிறு நிறையப் புல் தின்றுவிட்டு அடுத்து இருக்கும் குட்டைகளிலும், சுனைகளிலும் நீர் அருந்திவிட்டு ஊர் திரும்பும். மலை ஓரங்களில் இருக்கும் ஊர்களில் வளரும் கறவைகள் மிகச் செழிப்பானவை. எருதுகளும் மிக பலசாலிகள். எங்கள் நாட்டில் காங்கயம், பருகூர், உட்டுவளிகள் மிகப் பெயர்போனவை. ஆனால் முன்நாளில் இருந்த மேய்ச்சல் முறைக்கு ஒரு பெரிய தடை தற்போது ஏற்படுத்தியுள்ளார்கள். ஒருவன் தன் இச்சைப்படிக் கன்றுகாலிகளைவனங்களில் மேய்க்கக்கூடாது. மேய்க்கிறவன் பணம் கொடுத்து அனுமதிச் சீட்டு பெறவேண்டும். இதனால் நாட்டில் கிடைத்துக்கொண்டிருந்த புல்லும் கிடைப்பதரிதாகிவிட்டது. சில பெரிய குடியானவர்கள் தங்கள் நிலங்களில் சிலவற்றை மேய்ச்சலுக்காகவென்றே விட்டுவிட்டிருக்கிறார்கள். அவைகளுக்குக் குறைகள் என்ற பெயர் வழங்குகிறது.

தற்போது கானல்களினாலே அரசியற்கு மிகுந்த வருமானம் உண்டு. சீவக்காய், தேன், மெழுகு முதலிய சிறு கானற் பொருள்களும், மரம் விறகு முதலிய பெரிய கானற் சாமான்களும் கிடைக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முந்தி வெறுமனே கிடைத்துவந்த விறகுக்கு இப்போது கிராக்கி ஆகிவிட்டது. இதனால் கடற்கரை ஓரமாக இருக்கும் மணற்பாங்குகளில் சவுக்கு மரத்தைப்

பயிர்செய்து விறகாக விற்கிறார்கள். ஆகவே கானல் களின் விறகு வசதி போதாமல் பிறவகைகளிலும் விறகு உற்பத்தியும் தேடவேண்டி வருகிறது.

கானல்களிலே பெரிய மரங்கள் முளைத்தன. பெருஞ் சோலைகளாக அவைகள் திகழ்ந்தன. மழை பெய்வதற்கு அவைகள் உதவிபுரிந்தன. இப்போதோ ஊர் பெருகப் பெருக மரங்கள் அழிக்கப்படுகின்றன. தேக்கு, வேங்கை, ஈட்டி, மருது முதலிய பெரிய மரங்கள் குறையக் குறைய கானல்கள் பொட்டையாகி மழை குறையத் தொடங்கி யது. மழை குறையக் கானமயில் தன் ஆட்டத்தை நிறுத்திவிட்டது. அது கண்டு வான்கோழியும் ஆட வில்லை. மக்களே அந்த ஆட்டத்தை ஆடத்தொடங்கி விட்டார்கள். கானத்தில் மயில் ஆட்டம் நின்றுபோய் திரைப்படத்தில் போலிமயில்கள் ஆடுகின்றன. இயற்கை அழியச் செயற்கையைக் காணப் பணத்தைக் கொட்டு கின்றோம் அன்றோ !

காப்பு.

ஒருவன் வேலை செய்து ஒரு பொருளை உண்டு செய் வான். மற்றொருவன் வேலை செய்யாமல் இருந்தும் அப் பொருளை அடைய விரும்புவான். ஆகவே உடல் வருந்தி வேலை செய்தவன் தன் பொருளுக்கு ஒரு காப்பு தேடு வான். இது இயற்கை. இது எந்த நாட்டிலும் உண்டு எங்கள்நாட்டுக் குடியானவர்கள் மிகவும் வருந்தி நிலத்தை உழுது விதை விதைத்து நீர்ப்பாய்ச்சி விளைவை எடுப் பார்கள். அந்தச் செயல் மிகக்கடினம் ஆனது இருந் தாலும் ஒவ்வொரு நிலையிலும் அதனைத் தடுத்து அந்த உழைப்பின் பலனை அடையப் பல உயிர்கள் தோன்றும்.

பயிரை அழிக்கக் கால்நடைகள், யானை, பன்றி தோன்றும். ஆகவே நிலங்களுக்குக் பாதுகாப்பு வேண்டும். தோப்புக்கள், கொடிக்கால்கள், கரும்பு முதலியவைகளுக்கு மிகுதியும் வேண்டும். முள்வேலி படலை முதலிய காப்புக்கள் நடுவது வழக்கம். நிலங்களுக்குச் செல்லவும் வெளியே வரவும் வாயில்களுக்குக் கதவுகளும் வேண்டும். இவ்வித வேலிகளைச் செவ்வையாக ஏற்படுத்தாத குடியானவர்கள் மிகுந்த கெடுதிகளை வரவழைத்துக் கொள்ளுவார்கள். வேலிகள் பலவிதங்களாக இருக்கும். செடிவேலி, கள்ளி வேலி, முள்வேலி, முதலியனவாகப் பலவகைகள் உண்டு. வேலியைக்கொண்டுள்ள நிலங்களின் தோற்றம் வெகு அழகாக இருக்கும். மலைமேல் இருந்து பார்த்தால் வெகு வடிவமாக அவை தோன்றும். வேலிகளுக்காகச் செல வழிக்கும் உழைப்பும், பணமும் வீண் என எண்ணக் கூடாது. ஆங்கில நாட்டில் உள்ள வேலிகளைக் குறித்து ஒரு ஆசிரியர் மிகப் பெருமையாக வரைந்திருக்கிறார். ஆங்கிலனுக்கு தன் சொத்து ஒரு அரண் என்ற கொள்கையைப் பலவகைக்களாகக் காப்பாற்றப்படும் வேலிகளே நிரூபிக்கின்றனவாம். நாமோ வேலிகளைப்பற்றி அத்தனை சிறப்பாக எண்ணுவதில்லை. வேலியைக்காட்டிலும் வேலிகளில் வைத்து உள்ள கதவுகள் மிகச் சிறப்புடையன வாம். அக்கதவுகளின் வெவ்வேறு அமைப்புக்களை அவ்வாசிரியர் படங்களுடன் வருணித்திருக்கிறார். எனக்கோ வெகு நாள்வரைக்கும் நமது நாட்டுப் பழமொழி ஒன்றின் பொருள் விளங்கவில்லை. 'வேலியே பயிரை மேய்ந்து விட்டால் பின் என்ன?' என்ற பழமொழி மிகுதியும் வழங்குகிறது. இதன் கருத்தோ வெளிப்படை. நாம் ஒருவனிடம் ஒரு பொருளை ஒப்படைவித்தால் அவனே அப்பொருளை அபகரித்தால் பின்னென்ன செய்வது

என்பதே ஆகும். ஆனால், ஒரு உவமானம் சொன்னால் அது உண்மையில் நடைபெறும் செய்கையாக இருக்க வேண்டாமா? வேலி ஒரு தாவரச்செடி அல்லது ஒரு சாமான். அது பயிரை எப்படி மேயும் அல்லது தின்னும். இது பொய் அல்லவா என்று வெகு நாள் நான் சிந்தித்ததுண்டு. ஒருமுறை ஒரு தோட்டத்தைக் காணச் சென்றேன். அதற்கு சுற்றிலும் வேலியாக வைத்திருந்த சப்பாத்தி ஒரு வருடத்தில் அந்த தோட்டத்தையே விழுங்கினதுபோலப் படர்ந்துவிட்டது. இந்த சப்பாத்திக்கள்ளியைக் கண்டுதான் இவ்விதமாக அப்பழமொழியும் ஏற்பட்டதோ என்று வியந்தேன். ஆகவே, எங்கள் நிலக்கட்டில் வேலிக்கு வெகு மதிப்பு உண்டு என்று அறியவேண்டும். இவ்விதமான நிலங்கட்கு நாங்கள் பெருமைகொள்ள வேண்டாமா?

IV. எங்கள் தலைவர்கள்.

தலைமையாது

தமிழ்ப்பெரும் மூதாட்டியார் ஒரு நாள் ஒரு குறு நிலமன்னரின் அவைக்குச் சென்றூர்கள். மன்னனும் மிகுந்த அன்புடனே வரவேற்று அவர்களுடைய நல்வரவிற்கு நன்றி கூறினன். பல செய்திகளைப்பற்றியும் பேசினபிறகு மன்னன் தன் நாட்டின் செழிப்பினை எடுத்துக் காட்டும் பொருட்டு அங்குள்ள மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் காண்பித்தான். மூதாட்டியாரும் அவைகளை எல்லாம் வெகுநேரம் பார்த்து அவைகளின் பெருமையைக் கேட்டுச் சலிப்படைந்து மன்னனை விளித்து அடியிற்கண்ட செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டார்கள்.

"நாடோ கோன்றே காடா கோன்றே
அவலா கோன்றே மிசையா கோன்றே
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்பதைக் கேட்டவுடன் மன்னன் வெட்கித் தலை குனிந்தான். அதுமுதல் நாட்டின் செழிப்பைக்காட்டிலும் தன் குடிகளின் செழிப்பே சிறந்ததென்று அவர்கள் நல்ல பண்பாடுடையவர்கள் ஆக்கும்முயற்சியில் ஈடுபட்டானும்.

இந்த சரிதத்தில் நம் தமிழ்நாடு சங்கத்தார் காலத்தில் இருந்த தன்மை தெரிகிறது. நாடு என்பது மலையும், காடும், ஆறும், குளமும், ஊரும், பேரும் உள்ளது அல்ல அதில் குடிசையில் பிறந்தோனுயினும் அவன் கற்றோனுகில் மதிக்கப்படுவான். அவனே நாட்டில் பெரியவன் என்று ஏற்றுக்கொண்ட காலம். சமயவழிபாட்டில் ஈடு

பட்ட சில குடும்பத்தார்கள் மட்டும் சான்றோர் அல்ல. வேளாளரும், வணிகரும் தொழிலாளர்களும் நன்றாகப் படித்து கவிபாடத்தக்க மேன்மை உற்றார்கள். பண்டைத் தமிழ்நாட்டின் சிறப்பையும், மெச்சத்தக்க வீரத்தையும் எடுத்துக்காட்டிப் பின்வருபவர்களுக்கு 'இதோ பாருங்கள் எங்கள் மேன்மக்கள்' என்று ஆழ்ந்த கருத்துக்களைப் புனைந்து அழகிய இயற்கைக் கவிகளை வைத்துவிட்டுச் சென்றார்களே தமிழ் நாட்டுத் தலைவர்கள் அன்னார்கள் பெயர்கள் வெகு சிறப்பாகத் தமிழ் நூல்களில் வரையப் பட்டுள்ளன. பெயர்கள் வரையப்படாமல் அருமையான கொள்கைகளை மட்டும் வைத்துவிட்டுச் சென்ற 'தனக் கெனவாழாப் பிறர்க்குறியாளர்' பலபேர். இவர்கள் குண மோ ஒரு கை செய்தது மறு கை அறியாச் சீலம் பெற் றது. அவர்கள் அருமையான செயலைக் கல்லிலும் கட்டி டத்திலும் காட்டிச் சென்றிருக்கிறார்கள். ஆலயங்களி லுள்ள அருமையான வேலைப்பாடுகளைச் செய்த சிற்பி களும் ஓவியக்காரர்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவர் களே. நாடு முழுதும் கட்டியிருக்கும் அணைகள் தோண் டியிருக்கும் வாய்க்கால்கள் தொட்டியிருக்கும் குளங்கள் இவைகளைச் செய்தவர்கள் அப்படிப்பட்ட சீலர்களே. நாடு இப்போதிருக்கும் செழிப்புக்கு இவர்களே காரணர் கள். கலைகளை ஆய்ந்தவர்கள் ஒருபுறம், மக்கள் வாழ் விக்கு உகந்த பொருளாதாரச் செய்பணிகளைச் செய்த வர்கள் மறுபுறம், ஆக இவ்விருவகையிலும் இந்த நாட் டைச் சீர்திருத்தியவர்களே நாட்டின் தலைவர்கள். செல் வம் தலைமை தராது. கருத்தும் செயலுமே தலைமை தரும். அந்த தலைமையே ஒரு நாடு விரும்பும். அதனையே நாம் பாராட்டவேண்டும். அத்தகைய தலைவர்களையே நாமும் விரும்பவேண்டும்.

எங்கள் தலைவர்கள் யார்?

'குருவிக்குத் தகுந்த இராமேசுவரம்'. என்பது எங்கள் நாட்டுப்புறத்துப் பழமொழி. அது இராமேசுவரமோ இராமசுரமோ என்ற வாதத்தை வேலையில்லாத் தார்க்கிகர்களுக்கு விட்டுவிடுவோம். அதற்கு 'விரலுக்குத் தகுந்த வீக்கம்' என்ற பொருளில் நாம் கொண்டால் போதும். தமிழ்நாட்டின் பண்டைக்காலத்தில் தலைமை என்பது என்ன பொருளில் கையாண்டார்கள் என்று முன்னமே சொன்னோம். அப்படிப்பட்ட தலைவர்கள் யார் என்றும் குறிப்பிட்டோம். அவர்களுடைய அரிய பெரிய செயலைப் பொருத்துத்தான் தமிழ்நாட்டின் பண்டைப் புகழும் இருந்தது. இக்காலத்திலோ அல்லது சென்ற சில நூற்றுண்டுகளாகவோ அப்படிப்பட்ட புகழ் தமிழ்நாடு பெறவில்லை என்ருல் நம்நாட்டில் தலைவர்கள் தோன்ருக் குறைவிஞல்தான் எனல் வேண்டும். தமிழ்நாட்டில் தோன்றியவர்கள் ஐந்தாவது, ஆருவது தரத்தினராக இருந்தால் அது நம் நாடு செய்த தவக் குறைவே என்று கருத வேண்டும். அதனுல் இங்கே வந்த விருந்தினருக்கும், இரவலருக்கும், வணிகர்களுக்கும், ஆறலைப்பவர்க்கும் நாம் அடிமைப்பட்டு உரிமை இழந்தோம். இனி என்ன ஆகுமோ, எது வருமோ, அதன் முடிவை அறிய வேண்டுமாஞல் நமது மக்களின் தலைவர்கள் தோன்றுவார்களா என்ற கேள்வியில் விடை நிற்கிறது. தமிழ்நாடு கிடக்கட்டும். அது பெரிய கேள்வி. எங்கள் நாட்டுப்புறத்தில் எங்கள் ஊரில் தலைவர்கள் உண்டா என்பதுதான் இங்கே எழும்பும் கேள்வி. அதற்குத்தான் விரலுக்கேற்ற வீக்கம் என்றும் கூறிஞேம். எங்கள் ஊரிலும் தலைவர்கள் உண்டு, அவர்கள் மனப்பான்மைக்கு எதிராக நடந்தால் அந்த ஊரிலே இருக்க முடியாது, பிழைக்க முடியாது,

சாகவும் முடியாது. என்ன அப்படிப்பட்ட வல்லமை அவர்களிடம் உண்டு என்று கேட்டு விடாதீர்கள். உள்ளது சொன்னேம். காரணம் எப்படிக் கூற முடியும், அல்லது காண முடியும். பண்டைக்காலத்தில் எங்கள் ஊரில் கோயில் கட்டினவர்களும், அணை கட்டினவர்களும் கால்வாய் வகுத்தவர்களும் தலைவர்களாக இருக்கலாம். பெரும்பான்மையாக அவர்கள் புகழைக் கல்லிலும் செம்பிலும் வெட்டி வைத்துச் செல்லவில்லை. அத்தனைப் பரோபகார சீலர்களாக இருந்தார்கள் ஒரு வேளை ஊர்ப் பொதுச் சபையார் அச்சீரிய செய்கைகளைச் செய்திருக்கலாம். ஆகவே பேர்கள் வெளிவர முடியாது. ஆனால் இக்காலத்திலே குடியரசுபோய்த் தலைமையரசு ஏற்பட்ட பிறகு தலைவர்கள் யார் என்று கூறவேண்டுமா? பரம்பரை பாத்தியங்கள் ஏற்பட்டு அரசாங்கத்தாரால் தங்கள் பிரதிநிதிகள் என்று அங்கீகரிக்கப்பட்டுக் கிராமத்தலைவர்கள் என்ற விருதுகள் பெற்ற செல்வச் சீமான்களே தலைவர்கள் ஆவார்கள் அவர்களே மேலே காட்டிய பழமொழிக்கு ஏற்றபடி நடந்து கொள்ளுகிறவர்கள். அவர்களைப்பற்றி சிறிது தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா.

ஊர்த் தலைவர்கள்.

எங்கள் ஊர்த்தலைவனை நாங்கள் மணியகாரர் என்று சொல்லுவோம். மணியம் என்ருல் ஊர்த்தலைமை என்ற அலுவல் அல்லது உத்தியோகம். அதனைக்கொண்டவன் மணியகாரன். மணியம் என்ற தொழில் பரம்பரையாக வருவது. ஊரில் குடிகளிடம் அரசியலுக்குச் சேர்ந்த வரிகளை வசூல்செய்து உள்வட்டம் என்ற தாலூக்காவின் தலைவனுன தாசில்தாரிடம் சேர்ப்பிப்பது அவன் கடமை.

இதைத்தவிர ஊரில் குற்றங்கள் நேர்ந்தாலும் அவைகளை அறிக்கை செய்வது, சிறு குற்றங்கள் விசாரிப்பது, முதலியவைகள் அவனுக்குச் சேர்ந்தவை. பெரிய அதிகாரிகள் வந்தால் அவர்களை வரவேற்பது அவன் உரிமை ஆகும். இத்தொழில் மிக்வும் கவுரவமானது என்று கருதப்படுகிறது. நிலம் சொந்தமாகவுள்ள குடும்பத்திலேதான் மணியம் இருக்கும். இந்த அலுவலுக்கு உள்ள ஊதியம் மிகக்குறைவு. மாதம் ஒன்றுக்கு ஆறு ரூபாய்தான் முன்னுளில் இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் அதனைப் பதினுன்கு ரூபாய் ஆக்கினுர்கள். எந்தக் கிராம அதிகாரியும் இந்த ஊதியத்தை நம்பி வேலை செய்வதில்லை. அலுவலின் பெருந்தன்மையை உத்தேசித்துத் தான் வேலையை ஒத்துக்கொள்ளுவான். இது முகமதியர் காலத்திலிருந்தே மாமூலாக வந்துவிட்டது. ஆனுல் இந்நாளில் இந்த உத்தியோகத்தின் தாழ்மையை எண்ணிப் பல மணியகாரர்கள் தங்கள் கீழ் ஒரு குமாஸ்தாவை ஏற்படுத்தி அவர்கள் மூலம் வேலை செய்வித்தோ அல்லது அவர்களுக்கே வேலையை கொடுத்தோ விலகிக் கொள்ளுகிருர்கள். மணியகாரன் என்ற பெயர் முகமதியர் காலத்திலிருந்தே தோன்றியதானுலும், பொதுமக்களிடை வழங்கும் சொல் எங்கள் நாட்டில் 'பண்ணுடி' என்பதே ஆகும். பண்ணுடி என்பதின் பொருள் ஒரு பண்ணையின் தலைவன் என்பது. தென் நாட்டில் இதனைப் 'பண்ணையார்' என்பார்கள். கொங்கு நாட்டிலும் சேர நாட்டிலும் ஆடி என்ற விகுதி மிகுதியாக வழங்குகிறது. மன்ருடி (மண்ணுடி), நெடுங்காடி, ஏராடி, முதலிய சொற்களை ஆராய்க. அவைகளைப்போலவே ஊர் தலைவனை பண்ணுடி என்று நாங்கள் அழைப்போம். ஊரில் திருவிழா தொடங்குவதோ அதற்காகப் புது வரி போடுவதோ பண்

ணுடியின்றி செய்வது கிடையாது. எந்தப் பொதுகாரியத்திற்கும் பண்ணுடி உதவி வேண்டியிருக்கும் ஆனல் தற்போது நாட்டில் சுதந்திர வாஞ்சை வந்தபிறகு பண்ணுடிகளை கவனிப்பார் இல்லை. தேசியத் தொண்டர்களுக்கு இருக்கும் கௌரவமும் மரியாதையும் பண்ணுடிகளுக்கு இல்லையென்ருல் அது வியப்பு அல்ல. ஆனுலும் பெருங்காயம் இட்ட சட்டியைப்போல ஊர்ப்பண்ணுடியின் வாசனை இன்னமும் போகவில்லை

கணக்கன்.

ஊர்ப்பண்ணுடிக்குக் கணக்கன்தான் அமைச்சன். பண்ணுடி பணத்திற்குப் பொறுப்பாளி. ஆனல் கணக்கன் அந்த பணத்தின் கணக்குக்குப் பொருப்பாளி. ஊரில் உள்ள நிலங்களின் வரிக்கணக்கு மட்டிலும் அல்ல. யார் யார் என்ன என்ன சாகுவளி செய்கிருர்களோ அதையும் விடாமல் எழுதிவைப்பான். அவ்வப்போது வட்டத் தலைவனுகிய தாசில்தாரனிடம் கணக்குகளைச் சரிப்படுத்தி அனுப்புவான். நிலங்களின் எல்லைக்கல் முதலியவைகளைச் சரிபார்த்து அவ்வப்போது அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவான். பிசகுகள் இருந்தால் கணக்கனுக்கு கொண்டாட்டம்தான். நிலங்களின் வேலி தானேவளர விட்டாலும் வேண்டுமென்று தள்ளிப்போட்டாலும் அவனுடைய கண்ணுக்கு உடனே பட்டுவிடும். அவனுடைய கண் கருடன் கண்ணைவிடக் கூர்மையானது என்று ஊர் மக்கள் பேசிக்கொள்ளுவார்கள். உண்மையாகவோ பொய்யாகவோ அவன் ஒரு ஆக்கிரமிப்பு அறிக்கையை மேலே அனுப்பிவிட்டால் பிறகு குடியானவன் கரடி கத்திலுைம் பயனில்லை. கணக்கன் சொன்னதே தெய்வவாக்கு. அதனையே உண்மை என்று அதிகாரிகள் நம்பி சிவாஜிநாமா

போட்டுவிடுவார்கள். இந்தவகையில் சர்க்காருக்கு ஒரு புறம் வரும்படி கற்பித்துக் கொடுக்கவும் தனது அடங்காப் பசியுள்ளவயிற்றை நிரப்புவதற்கும் வழி வெகு எளிதில் தேடிக்கொள்ளுவான். ஆனல் யாரிடம் வால்காட்டுவது என்று அவனுக்கு நன்ருகத் தெரியும். ஊரில் படித்தவனே கசடனே போக்கிரியோ இருந்தால் அவர்களிடம் அவன் சாகசம் பலிக்காது ஆகையால் அவர்களிடம் ஒரு சிறிதும் அணுகமாட்டான். இடம் கிடைத்தால் அவர்களிடமும் கொடுக்குக் காட்டுவான் ஏழைப் பாமரர்களிடம் அவன் சித்திரகுப்தனுவான். ஆகவே பண்டிகையோ பம்பலோ வந்தால் கணக்கனுக்கு கொண்டாட்டம் தான். வீட்டில் திருமணம் ஏற்பட்டால் ஒரு காசும் இல்லாமல் அது வெகுவிமரிசையாக நடக்கும். உத்தியோகத்தில் மட்டும் அவன் பண்ணுடிக்கு மந்திரி அல்ல. மற்ற எச்செய்கைகளிலும் சிறப்பாக மாமூல் வகைகளிலே அவனே அமைச்சன் ஆவான். பண்ணுடி நேரில் பொதுமக்களிடம் செல்ல முடியாது. சபைகளில்தான் சமூகம் காட்டமுடியும். ஆகவே அவனுக்காக மாமூல் பங்கு வாங்கி அளிக்கக்கூடியவன் கணக்கன் தான். ஆகவே அவனுடைய மதிப்பைப்பற்றிக் கூறவும் வேண்டுமா! பண்ணுடியைவிட கணக்கனுக்கு ஒரு ரூபாய் சம்பளம் அதிகம். இது என்ன விசித்திரமோ இந்தக் காரணத்தினுல் அவன் தன் பெயரைக் கர்ணம் என்றும், கணக்குப்பிள்ளை என்றும், சொல்லிக்கொள்ளுவான். இந்தக் கணக்கனும் எங்கள் ஊர்த்தலைவர்களில் ஒருவன்.

வாத்தியார்.

எங்கள் ஊர் வாத்தியார் (உபாத்தியாயர்) பெயர் போனவர். நெடுங் கணக்கு முதல் கொண்டு கம்பராமாய

ணம் வரைக்கும் கற்றுக் கொடுக்கும் திறமை பெற்றவர் அவருடைய வீட்டுத் திண்ணையில் தான் பாடசாலை வைத்திருப்பார். பிள்ளைகள் கீழேதான் உட்காரவேண்டும். திண்ணையில் ஒருபுறம் கீழ்வகுப்புப் பிள்ளைகளும், மறுபுறம் மேல் வகுப்புப் பிள்ளைகளும் சப்பளாம் போட்டு உட்காருவார்கள். கீழ் வகுப்புப் பகுதியில்மணல் கொட்டியிருக்கும். அதை அவர்கள் நிலத்தில் பரப்பி விரலால் எழுதுவார்கள். பாவம் பிள்ளைகள் இராகம் போட்டுக்கொண்டு எழுத எழுத விரலும் தேய்ந்துபோகும். இசை போடுவதில் ஒரே சப்தம் உண்டாகும். இந்த சப்தம் ஒருபுறம் இருக்க, மறுபுறத்திண்ணையில் பெரிய பிள்ளைகள் ஏட்டுச்சுவடிகளை வைத்துக்கொண்டு இராகத்துடன் படிப்பார்கள். நாளடைவில், ஏடுபோய் காகிதப் புத்தகங்கள் வந்தன இருந்தாலும் வாத்தியார் தன் ஏடுகளை மிகவும் புனிதப் பொருளாக வைத்துப் போற்றுவார். பத்துத் தலைமுறைகளுக்கு முந்தியிருந்து பரம்பரையாக வந்த ஏடுகள் அவரிடம் உண்டு. ஒருதடவை வயிற்றுக்கொடுமைக்காக சில ஏடுகளை சென்னையிலிருந்து வந்த ஏடுதேடும்பித்தன் (அரக்கன் எனலாமோ) ஒருவனுக்குச் சில வெள்ளிகளுக்கு விற்றுவிட்டார். ஆனால் அவைகள் போனது அவரை என்றைக்கும் மறவாத்துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. அதையே அடிக்கடி நினைத்து புலம்புவார். அதில் பண்டைப் புலவர் பாடிய ஒரு கோவை இருந்ததென்றால் அவரது துக்கத்தின் எல்லையைஅளவிட முடியுமா? அறப்பளீச்சுர சதகமும் குமரேசர் சதகமும் போனால் போகட்டும். திருப்பேரூர்க் கோவை போயிற்று என்றால் ஏன் துக்கம் வராது என்பார். வாத்தியார் வீடு மிக எளிய கூறை வீடுதான். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கூறைமாற்றுவதற்கு அவர் படும்பாடு ஆண்டவன் தான் அறியவேண்

டும். பண்ணுடிமார்களிடம் நடந்து நடந்து கால் தேய்ந்த பிறகு தான் சில மூங்கில் கழிகளும் தென்னங் கீற்றுகளும் கிடைக்கும். இந்தவகையில் அவர் குசேல முனிவருடைய இல்லறவாழ்க்கையை ஒத்துத்தனது இல்லறத்தையும் நடத்தினர் என்றாலும், பிள்ளைகளுக்கோ அவருடைய பிரம்பு என்றால் பயம். பெரியவர்களுக்கோ அவரைக்கண்டால் ஏளனம். ஆனால் விவகாரத்தில் திளைத்த சில குடியானவர்களுக்கோ அவரைக்கண்டால் வெகுமரியாதை. எந்தப்பத்திரமும் எழுதினது அவர் தான். ஆகவே அவரது சாட்சியத்திற்கு மிகுந்த மதிப்பு இருக்கும் அல்லவா? அதனாலே அவர் மிகுந்த உலகீய நன்மையை அடைந்ததாகத் தெரியவில்லை.

குருக்கள்.

எங்கள் ஊர்க்கோயில் மிகப் பண்டைக் கோயில். அதில் கல்வெட்டுச் சாதனமும் உண்டு என்றால் அதன் பழமையை எடுத்துக் கூறவும் வேண்டுமா. குருக்களோ அதனை வெகு பெருமையாக எடுத்துக் கூறுவார். அக்கோயில் அனேக யுகங்களுக்கு முன் அசுரேந்திரனால் கட்டப்பட்டதென்றும், அப்போது என்றும் அழியாமல் இருக்கும்பொருட்டுப் பைசாச பாஷையில் அக்கல்வெட்டுக்களைத் தீட்டிவைத்தான் என்றும் பிரம லிபியையாவது வாசிக்கமுடியும். இதனை வாசித்துப் பொருள் சொல்ல எவராலும் முடியாது என்றும் பிரசங்கம் செய்வார். ஆனால் ஒருமுறை அரசியலார் கல்வெட்டுப் பரிசோதகர் வந்து இது தமிழ் எழுத்து என்றும் கொங்கு சோழர் காலத்தது என்றும், பின் சீர்ணோத்தாரணம் செய்த புண்ணியவான்கள் கற்களைத் தலைகீழாகப் பிரித்துக் கட்டிவிட்டார்கள் என்றும், பிரதி எழுத்துப் பயனில்லை

என்றும் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டுச் சென்ருர். இதனை அறிந்த குருக்களோ இந்த உத்தியோகஸ்தனுலும் அறியக்கூடாத அத்தனைச் சிறந்த பழமைகொண்டது என்று கூறி தம் சித்தாந்தத்தை நிரூபித்தார். குருக்களுக்கோ முன் இருந்த மானியங்கள் எப்படிப் போயிற்ருே தெரியவில்லை. இப்போது ஊர்ப்பண்ணுடிகள் கொடுக்கும் பம்பல்காலத் தானியம் நைவேத்தியத்திற்கே போதாது. ஆகையால் வயிற்றுக்கு எப்படிப் போதுமோ? ஏதோ அமாவாசை கிருத்திகை நாள்களில் ஒருவரிருவர் அர்ச்சனை செய்ய வருவார்கள். பழக்கம் விட்டுப்போனபடியால் அதையும் சொல்லமுடியாமல் திகைப்பார். ஆனுலும் தைரியம் குறையாமல் சில திருப்பெயர்களாவது கூறி ஓம்.........நம: என்று கூறி ஒப்புவிப்பார். அதன் பொருள் அவ்வூரில் இருப்பவர்கள் யாருக்குத் தெரியும்? ஆனல் வயிற்றுக்குப் போதாவிட்டாலும் கோயிலை விடாமல் கட்டிக்கொண்டு இருப்பார். விட்டுவிட்டால் இந்தக் கலிகாலத்தில் வேருெருவன் புகுந்துகொண்டால் என்ன பண்ணுவது என்று சங்கடப்படுவார். வேறு தொழிலும் இல்லை. செய்யவும் தெரியாது. எழுத்து வாசனையும் பூச்சியம். இந்த வகையில் எங்கள் குருக்கள் திகழ்வார். ஆனல் பண்ணுடிகள் முன்னிலையில் பரம்பரையாக வந்த கதைகளையும் சில பாடல்களை எடுத்துக்கூறி ஒரு கிழிந்த பஞ்சாங்கத்தைக் கையில் ஏந்திக்கொண்டு நல்ல நாள் கணித்துக் கொடுப்பதில் மிகவும் வல்லவர். மனைவி சுரத்தில் படுத்துக்கொண்டால், தானே நீர் மொண்டு கஞ்சி காய்ச்சியேனும் குடிப்பாரே ஒழிய பிறர் தொட்ட நீரும் உணவும் தொடவே மாட்டார். இந்தப்படி இருக்கும் குருக்களின் வீட்டு நிலையை நான் ஏன் குறிக்கவேண்டும்.

வைத்தியர்

வைத்தியர் எங்கள் ஊரில் ஒரு பெரிய பண்டிதர். வைத்தியர் இல்லா ஊரில் குடியிருக்க முடியுமா. அவர் இல்லாமல் போனால் நோயாளிகள் என்ன செய்வார்கள்? நோய்தான் என்ன செய்யும்! எப்போது கடவுள் நோயை உண்டாக்கினாரோ அப்போதே அதை தீர்ப்பதற்கும் வைத்தியனைச் சிருட்டித்திருக்க மாட்டாரா? கடவுளே ஒரு பெரிய வைத்தியர். அவர் பெயர் வைத்தியநாதன் அல்லவா? ஆகவே தன்னுடைய தொழிலைச் சிருட்டித்து வைத்தார் என்று எங்கள் ஊர் வைத்தியர் தன் தொழிலை மிகவும் பாராட்டி பேசுவார். அவரிடம் அட்டாலியின் மேல் கணக்கற்ற ஏடுகள் உண்டு. பாலவாகடம் முதற் கொண்டு தேரையர்நச்சு நூல் வரையில் அங்கு உண்டு. அவர் ஒரு கையைப் பார்த்து அதில் தான் கண்ட குறி களை எடுத்து வைத்து, அகத்தியர் 1700-லிருந்து "ஆமப்பா, நானொன்று அறைந்திடுவேன் கேளு" என்று சொல்லத் தொடங்கினால் இவர் எத்தனை ஞானமும் அனுபவமும் பெற்றவரோ என்று நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் வியப்படைய வேண்டும். அவரிடம் வைத்திருந்த பெருமையினாலும் நம்பிக்கையினாலுமே பல பேர் சொஸ்தமாவார்கள். இவர் கொடுக்கும் மாத்திரைகளின் அளவு நாளுக்குநாள் குறுகிக்கொண்டே வரும். ஏனெனில் பதார்த்தங்களின் கிராக்கி நாளுக்கு நாள் அதிகம் ஆகிக்கொண்டு வருகின்றதல்லவா? ஆனால் வைத்தியர் அதனை ஒப்புக்கொள்ள மாட்டார். மாத்திரையின் அளவில் குணம் இல்லை. பௌருஷத்தில் தான் குணம் இருக்கிறது என்பார். தன்னால் ஆகாத சிகிச்சை உலகில் இல்லை என்பார். எந்த நோயாளியாவது இவரு

டைய சிகிச்சையை மீறி மறுலோகத்திற்குச் சென்று விட்டால், விதியை எவரால் வெல்லமுடியும், ஈசுவர வரங்கள் பெற்ற அசுரர்களாலும் முடியவில்லை என்ருல் மனிதனால் முடியுமோ என்பார். நகரங்களில் வைத்தியம் செய்யும் ஆங்கில டாக்டர்களைக் கண்டாலும் கேட்டாலும் அடங்காத சினம்கொள்வார். இந்த நீச வித்தை நமது நாட்டைக் கெடுக்க வந்திருக்கிறது, இவர்களிடம் வைத்தியம் செய்துகொண்டு ஊசி போட்டுக்கொண்டால், நச்சு உடலில் புகுந்து உடலின் தூய்மை கெட்டுவிடும், பிறகு உலகில் வாழ்ந்து என்ன பயன்? கடவுள் கொடுத்த உடலில் விஷத்தை ஏற்றுவதும் உயிருடன் அறுப்பதும் அசுர வைத்தியம் ஆகும், அதனை நாம் பரிபாலிக்கக் கூடாது. நாம் நீசர்கள் ஆவதைக் காட்டிலும் உயிர்விடுவதே மானம் ஆகும் என்று ஆத்திரத்துடன் பேசுவார். நான்கணு காணிக்கை பெற்று ஒரு மாத்திரை அறைத்துக் கொடுக்கும் வைத்தியர், வெறும் தண்ணீர் கலந்த மருந்துக்குப் பத்து ரூபாய் தருகிருர்கள் என்ருல் ஏன் துடிக்கமாட்டார்?

சோதிடர்.

வைத்தியத்திற்கு உறவு சோதிடம் அல்லவா? பெருமை பொருந்தியதாய் இருந்தாலும், ஆயுளும் வலிமை பொருந்தியிருந்தால் அல்லவா அது கேட்கும். ஆகவே, வைத்தியர் இருக்கும் ஊர்களில் எல்லாம் சோதிடரும் இருப்பார். வைத்தியனே நோய்க்கு மருந்து கொடுப்பதற்கு முந்தி நல்ல நாளும் நேரமும் பார்த்தே மருந்து தருவான். நோயாளி பிராணன் போகிற சமயத்தில் இருந்தாலும் நேரம் வந்த பிறகுதான் வைத்தியர் மருந்து தருவான். இதில் எல்லோருக்கும் நம்பிக்கை

உண்டு. ஊரில் எவரும் இதற்கு தடையே சொல்ல மாட்டார்கள். சில ஊர்களிலே வைத்தியனே சோதிடனுகவும் இருப்பான். சில ஊர்களிலே சோதிடன் வைத்தியனுடைய சகோதரனுக இருப்பான். மற்றும் சில ஊர்களிலே வாத்தியாருக்கே வைத்தியமும், சோதிடமும் தெரியும். எங்கள் ஊர் சிறிது பேர் போன ஊராகையால், இம் மூன்று சாஸ்திரங்களும் வெவ்வேறு பண்டிதர்கள் கையாண்டுகொண்டு மிகச் சிறப்புடன் வாழ்க்கை நடத்திஞர்கள். சோதிடருக்கு எப்போதும் வேலையிருந்தது. பண்ணுடிகளின் வீடுகளில் நலம் பொலம் ஆகும் போதெல்லாம் சோதிடர் இல்லாமல் முடியாது. நல்ல முகூர்த்தம் பார்க்கவேண்டும். கோயிலுக்கு தலை முடி வாங்கச் செல்லவேண்டும். ஊரில் திருவிழா நாட்டவேண்டும். யாருக்காவது சுரம் கண்டு விட்டால் சாதகம் பார்த்துச் சொல்லவேண்டும். மற்றும் குழந்தை பிறந்துவிட்டால் சாதகம் கணித்துக் குறிப்பு எழுதவேண்டும். அதற்கு பெயரிடுதல், முடிவாங்கல், பள்ளிக்கூடம் அனுப்புதல், காவடி எடுத்தல், திருமணம் செய்தல், பின்னும் பிள்ளை பிறத்தல், முதலிய காரியங்களுக்கு எல்லாம் சோதிடர் இல்லாமல் முடியுமா. சிலர் வியாபாரம் தொடங்கவும், பயிர் நடவும், புதுத்தொழில் ஆரம்பிக்கவும் சோதிடம் கேட்பார்கள். இந்த முறையில் எங்கள் ஊர் சோதிடருக்கு மிகுந்த வேலை உண்டு. ஆனுல் இவருக்கு கொடுக்கும் காணிக்கையோ அளவானதுதான். ஒவ்வொரு முறையும் நான்கணுவை வெற்றிலைபாக்கோடு வைத்துக்கொடுப்பார்கள். அப்படியானுல் அவருடைய வறுமை எப்படி நீங்கும். பம்பல் காலத்தில் கொடுக்கும் தானியம் வருடம் முழுதுக்கும் செல்லுமாகையால் அவர் குடும்பம் நடத்துவதில் குறைவில்லை. ஆனுலும் தற்கால

விளம்பரச் சோதிடர்களைக் கண்டால் அவருக்கு பிடிக்கவே பிடிக்காது. பண்டைய ஏட்டுப்பிரதிகளைப படிக்காமல் ஆங்கில நூல்களைப் புரட்டிவிட்டு காசுக்காக உளரும் இந்த அண்ணுத்தைகளை நம்புகிருர்களே அவர்களுக்குச் சொல்லவேண்டும் புத்திமதி, என்று ஒரு போடு போட்டு விட்டு நகைப்பார். பண்டைகால அரசர் குழுவில் சோதிடனும் ஒருவன் என்ருல் எங்கள் ஊருக்கு ஒரு சோதிடர் வேண்டாமா?

எங்கள் தலையாரி.

எங்கள் ஊரிலே தலையாரியும் ஒரு தலைவன் என்ருல் நீங்கள் நம்பமாட்டீர்கள். தலையாரி வேலைக்காரன் அல்லவா? ஆகவே அவன் எப்படி தலைவன் என்று சொல்லுகிறீர்கள், என்று நீங்கள் கேட்கலாம். உண்மையில் தலையாரி ஒரு சேகவன்தான். மணியகாரனுக்கு வரி வசூல் முதலிய வேலைகளிலும் புது உத்தரவுகளைக் குடிகளிடம் சேர்ப்பிக்கும் வேலையிலும் அவன் ஒரு சேவகன் தான். அவன் தாழ்ந்த வகுப்பில் சேர்ந்தவன். குடியானவர்களின் வீட்டிற்குள்ளும் அவன் செல்லமுடியாது. வீட்டு வாயலில் நின்றுகொண்டே தன் காரியத்தை வெளியிடுவான், என்ருலும் ஒவ்வொரு குடும்பத்தினுடைய உள் அந்தரங்கம் முழுவதும் அவனுக்கு தெரியும் மணியகாரனுக்கும் கணக்கனுக்கும் அவனே வேவுகாரன். அரசனுக்கு ஒற்றன் இருக்கிருற் போல் இந்தத் தலை அதிகாரிகளுக்குத் தலையாரியே ஒற்றன் ஆவான். ஆகவே ஏழை குடியானவர்கள் இவனைக் கண்டால் அஞ்சுவார்கள். அவன் 'சுவாமி' என்று கூப்பிட்டால் அது 'அடே' என்றதற்கும் கடினமான சொல்லாக காதில் விழும். இப்படிப்பட்ட ஆள் தலைவனு, சேவகனு

சற்று யோசியுங்கள். தலையாரி என்ற சொல்லில் தலை என்ற பகுதி இருக்கும் மட்டும் அவனும் ஒரு தலைவன் தான். ஐதர் நாளில் அவன் ஊர்ச்சேவகனாக இருந்தான். ஆங்கிலர் நாளில் அவன் ஊர்த்தலைவன் ஆகிவிட்டான். ஒவ்வொருவனும் படிப்படியாக மேலே ஏறவேண்டியது தானே பிழைப்பதற்கு அழகு, தலையாரி, தண்டல்காரனாகிக் கிஸ்து இரசீது எடுத்துக்கொண்டு, ஏழை குடியானவன் வாசலில் நின்றால் போதும், குடியானவன் நடுங்கிக் கொண்டு கெடுச்சொல்ல முடியாமல், எமன் வந்து நிற்கிறானே இவனுக்கு தவணை கூற முடியுமா என்று அழுது கொண்டு, ஊர் கந்து வட்டிக்காரனிடம் சென்று தன் மனைவி தாலியை வைத்தாவது கடன் வாங்கித் தலையாரி கையில் ஒப்புவிப்பான். அப்போது அவன் மனநிலை எவ்விதமாக இருக்கும். 'சுவாமி என்னுடைய மாமூல் எங்கே' என்று கேட்கும்போது தவணை சொல்ல வழி இருக்காது. இந்த முறையில் தலையாரிகளின் ஆணை ஆங்கிலர் நாளில் சென்றுகொண்டிருந்தது. தலையாரியின் பித்தளை வளையம் போட்ட தடிக்கொம்பை கொடுங்கோலாகப் பாவித்துக் குடிமக்கள் நடுங்குவார்கள் என்றால் தலையாரியின் பெருமைக்கு அளவு கூறமுடியுமா. ஆகவே எங்கள் ஊர்த்தலையாரியும் இந்த மகத்துவத்தில் சிறிதும் குறைந்தவன் அல்லன்.

இடைத் தலைவர்கள்

இதுவரை சொன்ன தலைவர்கள் மாமூலாகவந்த தலைவர்கள். இவர்களுடைய ஆணை இதுவரையில் வெகு நன்றாகச் சென்று கொண்டிருந்தது. ஆனால் காலம் மாறினால் கோலமும் மாறும் அல்லவா? கிராமத்திற்குள் புகுந்து மேல் பார்வை பார்க்கும் தலைவர்க்ள் புது புதிதாக

நியமிக்கப்பட்டார்கள். இவர்களுடைய ஆதிக்கம் மிகவும் பெருகிற்று. ஆனால் இவர்கள் நிரந்தர வாசிகள் அல்லர். கண்காணிக்கும் வகையில் ஒவ்வொரு காலத்தில் வந்து ஆர்ப்பாட்டம் செய்துவிட்டுச் செல்லுவார்கள். ஆகவே அப்போது அன்னார்களுடைய பாணங்கள் எங்கள் ஊரில் வெடித்து பல உபாதிகளைச் செய்துவந்தன. "தூமகேதுக்களோ இவர்கள்?" என்று எங்கள் ஊரார் நடுங்குவதும் உண்டு. அவர்களிலே முதன்மையானவர் எங்கள் சுகாதார அதிகாரி. இவனுக்குச் சம்பளம் மிகவும் குறைவு. ஆனால் சட்டையும் பாதரட்சையும் கண்டு பயப்படாதார் இல்லை. பாடசாலை புகுந்தால் பிள்ளைகள் எல்லாரும் மிரண்டு ஓடுவார்கள். 'அம்மை குத்துகிறவன் வாரானும் ஓடிப்போவோம், என்று பிள்ளைகள் ஓட்டம் பிடிப்பார்கள். வாத்தியார் ஓடிப்போன பிள்ளைகளை ஒருங்கு சேர்த்தி அம்மை குத்த வைப்பது மிகவும் அரிய பெரிய காரியம். இவ்வாறு அம்மை குத்தல் என்ற ஒரு அற்புதச் செயல் ஒன்றைத் தவிர வேறு எந்தச் சுகாதாரக் காரியத்தையும் இந்த அதிகாரி செய்ததாகத் தெரியவில்லை. குப்பை, கூளம், கஃசு இவைகளின் நறுமணம் ஒரு சிறிதும் தொலையவில்லை. ஊரில் சாக்கடைகள், மறையவேயில்லை. இவருக்கு சுகாதாரப் பார்வையாளர் என்று யார் பெயர் தந்தார்களோ என்று எங்கள் வாத்தியார் ஒருமுறை தைரியமாகவும் கேட்டுவிட்டார். மற்றொரு தூமகேது, பாடசாலைப் பரிசோதகர். 'இவர் வருகிறார்' என்று கேட்டவுடன் வாத்தியாருக்குச் சுரம் வந்துவிடும். பிள்ளைகளின் தேர்ச்சிக் குறைவினால் அல்ல. அதைப்பற்றி எவருக்கும் ஒரு சிறிதும் கவலை இல்லை. 'பரிசோதகருக்கு உபசாரங்கள் நடக்கவேணுமே, கையில் காசு இல்லையே' என்பதுதான் வாத்தியாரின் ஏக்கம்

ஒரு பூமாலே, ஒரு எலுமிச்சை, பிற்காலத்தில் காப்பி, இட்டலி இவைகளுக்கு வாத்தியார் எங்கு போவார்? பண்ணுடிகளைப் பிடித்துக்கெஞ்சிக் கூத்தாடி இவைகளைச் சமர்ப்பிப்பார். மூன்ருது தலைவர் கூட்டுறவுப் பரிசோதகர். இவருடைய ஆர்ப்பாட்டம் இன்னமும் நன்ருகப் புரியவில்லே. இப்போதுதான் வரத்தொடங்கியுள்ளார். நாளாவட்டத்தில் இவருடைய தொழில் எம்மட்டும் ஓங்குகிறது என்று தெரியக்கூடும்.

புதுத் தலைவர்கள்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே"

என்பது இலக்கணம். பத்துத் தலைமுறைகளுக்கு முந்தி எந்த மாமரத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு நியாயம் பேசினர்களோ, அதே மாமரத்தின் கீழ் அமர்ந்து இப்போதும் பேச இச்சிக்கும் நமது நாட்டுப்புறத்துப் பெரியார்கள் இந்தச் சூத்திரத்தின் பொருளை அறிவார்களோ. அறிந்தாலும் நம்புவார்களோ. ஆனல் காலம் மாறி வருகிறது அல்லவா. அவர்கள் நம்பினலும் நம்பாவிட்டாலும் இதுவரை இருந்த தலைவர்கள் தங்கள் தலைமைத்தானம் சிறிது சிறிதாக விலகிக்கொண்டு செல்வதை அறிகிருர்கள். புதுத் தலைவர்கள் தோன்றிக்கொண்டு வாழ வருகிருர்கள் என்று உணருகிருர்கள். யார் அப்படிப்பட்ட புதுத்தலைவர்கள்? காந்திமகான் தோன்றிய உடனே காந்தி முள்ளும் தோன்றிற்று. தேசிய இயக்கம் நாட்டு இளைஞர்களிடம் தோன்றிற்று. எங்கள் ஊரிலும் ஒரு வீட்டில் தேசிய சங்கம் என்ற ஒரு பலகை தொங்கிற்று. அதனுள்ளே சில இளைஞர்கள் செய்தித் தாள்

களை வைத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினார்கள். பழைய அதிகாரிகளுக்கு 'இது என்ன செய்யும்' என்று நினைவு இருந்தது. நாளாவட்டத்தில் நகரத்திலிருந்து பல இளைஞர்கள் அடிக்கடி இவ்வூருக்கு வந்து தேசிய விஷயங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள். இங்கு வாலிபர்களும் நகரங்களுக்குச் சென்றார்கள். சிலர் சிறைக்கும் சென்றார்கள். அச்சமாவது நாணமாவது அடையவில்லை. தேர்தல் வந்தது. நம் ஊர்ச் சிறுவர்களும் தேசியச் சங்கங்களில் இடம் பெற்றார்கள். தியாகிகள் என்ற புதுப்பட்டமும் தோன்றிற்று. என்றுமில்லாத அதிசயம் ஒன்று. சிறை சென்றவர்களுக்கு நிலமும் தர்க்காஸ்தில் கொடுக்கப்பட்டது. பழைய தலைவர்களுக்கு இதனால் லாபமும் இல்லை, மாமூலும் இல்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இப்புது ஆட்களைக் கண்டு சகல வல்லமை பொருந்திய போலீசும் கச்சேரி அலுவலாளர்களும் வணங்குகிறார்கள். இப்புதுமையைக் கண்ட பழைய ஊர்த்தலைவர்கள் தங்கள் தலைகளைக் குனியவைக்கவேண்டியிருக்கிறது. இவர்கள்மீது எந்த ஆணையும் செல்வதில்லை. தாங்கள் தெரியாமலும் மாமூலாகவும் செய்யும் சிறு தப்புக்களையும் மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிறார்கள். ஆகவே ஊரில் தங்கள் அதிகாரமும் மானமும் போகிறதைக் கண்டார்கள். என்ன செய்வார்கள். தங்கள் கௌரவத்தைவிட்டுக் கொடுத்தாவது இவர்களை மதிக்கத்தொடங்குகிறார்கள். இந்தப் புதுத்தலைவர்கள் யார் என்றால் தேசிய சங்கத்து வாலிபத் தலைவர், கூட்டுத் தலைவர், செயலாளர், உதவி செயலாளர், பொக்கிஷதாரர், என்ற ஐங்குழுவாளர்கள். பழைய பஞ்சாயத்து போய்ப் புது ஐங்குழு, ஊரின்கண் நிலைபெறத் தொடங்கியது. இவர்களே எங்கள் புதுத்தலைவர்கள்.

V. எங்கள் குடிகள்.

குடிகளின் பொது நிலைமை.

எங்கள் நாட்டுப்புறக் குடிகள் மிகவும் நல்லவர்கள். பண்டை நாட்டு பழக்க வழக்கங்களுக்கு அடங்கி ஒடுங்கி வாழ்வார்கள். நாட்டு அரசியல் சட்டத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. ஊர்த்தலைவர்கள் சிலவற்றை அறிவார்கள். ஊர்க்கணக்கன் ஏதாவது சந்தேகம் இருந்தால் சொல்லிக் கொடுப்பான். பத்திரம் எழுதுவதாய் இருந்தால் வாத்தியார் இருப்பார். மற்றப்படி ஊர்ச்சட்ட திட்டங்களை அவர்கள் அறியவேண்டிய பிரமேயமே இல்லை. ஆனால் நாட்டு மக்களின் பரம்பரை வழக்கங்கள் முற்றும் எல்லோரும் அறிவார்கள். அவைகளை நடப்பிப்பதில் பிசகே செய்யமாட்டார்கள். ஊர் நடுவிலோ அல்லது ஓரத்திலோ ஒரு அரசமேடை இருக்கும். அதின் பேரில் வேலையற்ற காலத்தில் பெரியவர்கள் உட்கார்ந்துகொண்டு ஊர்வம்புகளைப் பேசுவார்கள். ஏதாவது பழக்க வழக்கப்பிசகுகள் நேர்ந்துவிட்டால் அவைகளைப் பற்றிப் பேசி முடிவு செய்துவிடுவார்கள். அதனை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். இல்லாவிட்டாலோ குற்றம் ஏற்படுத்தப்படும். அக்குற்றம் ஒரு குறித்த தொகையாக இருக்கும். அதனைக் கொடாதவரை வண்ணான், நாவிதன், கட்டுப்பாடு ஏற்படும். மற்றும் பிசகு அதிகரித்தால் ஊர்க்கிணற்றில் நீர் எடுக்கக்கூடாது. இவ்விதப் பொதுத்தண்டனைகளால் எப்படிப்பட்ட மனிதனும் அடக்கப்படுவான். இந்த வகையில் பழக்க வழக்க மாமூல் நடைபெறும். பொதுவாக, ஊர்கள் எல்லாம் குடியானவர்களாலே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும். எல்லாக்

கிராமங்களும் விவசாயக் கிராமங்கள் தான். சிற்சில கிராமங்கள் மட்டும் கைத்தொழில் கிராமங்களாக இருக்கும். கைத்தொழில் கிராமங்களிலும் ஊர் நிலங்கள் உண்டு. ஆனால் கைதொழிலாளர்கள் மிகுதியாக இருப்பார்கள். அவர்களுக்கும் நிலங்கள் இருக்கக்கூடும். சிறப்பாக இருக்கும் கைத்தொழில் நெசவு ஆகும். சில கிராமங்களிலே பாதிக்குமேலே நெசவாளர்கள் இருப்பார்கள். அக்கிராமங்கள் தொழில் கிராமங்கள் என்னலாம். வெகு சில கிராமங்களில் மட்டும் பாத்திர வேலை முதலியவைகள் உண்டு. ஆகவே பெரும்பான்மையான ஊர்களில் வேளாண்மையே பெரிதாக உள்ளபடியால் வேளாளர்களும் அவர்களை அண்டிப்பிழைக்கும் மற்ற வகுப்பார்களுமே நாட்டுப்புறத்துப் பெரும்பான்மையான குடிகள் என்று சொல்லலாம்.

குடியானவர்கள்.

எங்கள் ஊரிலே குடியானவர்களே மிகுதி. ஒட்டு மொத்தத்தில் பாதி வீடுகள் குடியானவர்கள் வீடுகளே. அவர்கள் வீடுகளும் அமைதியாகவும் கம்பீரமாகவும் இருக்கும். ஏனையோர் வீடுகள் மிகவும் தாழ்ந்தனவாய் இருக்கும். மற்றப்பாதி வீடுகளில் மற்ற எல்லா வகுப்பாளர்களும் சேர்ந்து வசிப்பார்கள். ஊரைச் சுற்றியுமுள்ள புலங்களில் பெரும்பான்மை ஊர் குடியானவர்களுக்கே சேர்ந்தவை. மற்ற வகுப்பார்களில் வெகு சிலருக்கே நிலங்கள் உண்டு. ஆகவே குடியானவர்களே ஊரில் மதிப்பு பெற்றவர்கள், எங்கள் ஊர்ப்போலவே மற்ற எல்லா நாட்டுப்புறத்து ஊர்களிலும் இருக்கும் என்று அறியவேண்டும்.

பொதுவாகக் குடியானவர்கள் என்றால் வேளாளர்கள் என்று தான் கூறவேண்டும். குடித்தனம் செய்பவன் எல்லாம் குடியானவன் என்று பொருள் இருந்தாலும், அது சிறப்பாக வேளாளர்களுக்கே வழக்கமாக வழங்குகிறது. முள் இருப்பது எல்லாம் முள்ளி என்று சொல்லக் கூடுமானாலும், ஒரு வகை முள் செடிக்கே முள்ளி என்று பெயர் வழங்குவது போல், குடியானவர்கள் என்றால் வேளாளர்களுக்கே உரிமைப்பேர் ஆகிவிட்டது. எங்கள் ஊர் வேளாளர்கள் எல்லோரும் கொங்கு வேளாளர்களே. இவர்களுடைய பட்டப் பெயர் கவுண்டர்கள் என்பார்கள். கவுண்டர் அல்லது கௌண்டர் என்ற சொல்லினுடைய பொருள் பெரும்பான்மையான வேளாளர்களுக்கே தெரியாது. இவர்களைப்போல் கன்னடிய நாட்டில் உள்ள குடியானவர்களுக்குக் கௌடர் என்று பட்டம் வழங்குகிறது. அதாவது கௌண்டர் என்ற சொல்லிருந்து ணகர ஒன்று எடுத்து விட்டால் கௌடர் ஆகிறது. ணகர ஒன்று சேர்ப்பதும் எடுப்பதுமே தமிழுக்கும் கன்னடத்திற்கும் உள்ள வேற்றுமை என்னலாமோ? இதற்கு எதிரிடையான உருவில் ஒரு பெயர்ச் சொல்வழங்குகிறது. தமிழில் சௌடம்மன் என்ற சொல் கன்னடத்தில் சௌண்டம்மன் என வழங்குகிறது. சொற்களின் வேறுபாடு ஒரு விசித்திரமான தத்துவம் ஆகும். கௌண்டன் என்ற சொல் காமிண்டன் என்ற சொல்லிருந்து வந்ததாகவும் அதுவே கௌண்டன் என நாளாவட்டத்தில் மாறினதாகவும் கூறுவர். காமிண்டன் என்ற சொல்லிற்கு தலைவன் என்ற பொருளாம், உதாரணம்—உத்தமக்காமிண்டன் ஆகவே கவுண்டன், முதலி, பிள்ளை, சிரேட்டி நாயக்கன் முதலிய பலவகைப்பட்டப் பெயர்களுக்கும் ஒரே பொருள் ஏற்பட்டது என அறியவேண்

டும். எங்களூர் கவுண்டர்கள் எங்களூர் நிலங்களைப் பரம் பரையாகப் பாலித்து வந்து வெகு அமைதியோடு வாழ் பவர்கள்.

ஏனைய குடியானவர்கள்.

எங்களூரில் கொங்கு வேளாளர்களே பெரும்பாலும் குடியானவர்களாக இருந்தாலும் எங்கள் நாட்டுப்புறங்க ளில் வேறு சில மக்களும் குடியானவர்களாக இருக்கி ருர்கள். கொங்கு வேளாளர்களுக்கு எதிரிடையாக எப் போதுப் பகைமை பூண்டு சற்றுச் செல்வாக்கோடு வாழ்ப வர்கள் வேட்டுவக் கௌண்டர்கள். நடை உடை பாவனை முதலியவைகளில் இரு குலத்தாரும் ஒரேவிதமாக இருந் தாலும் வகுப்புப்பிரிவினையில் மிகுந்த வேறுபாடுகள் இரு வருக்கும் உண்டு. இவ்விரு வகுப்பார்களுக்கும் முன் காலத்தில் கடும்போர் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் போரின் சரிதை குன்றுடையான் சரித்திரத்தில் காண லாம். அதனை அம்மானைப் பாடலாக நாடெங்கும் பாடப் படுகிறது. இவ்விரு வகுப்பார்களுக்கும் வெவ்வேறு கோயில்களும், திருவிழாக்களும் உண்டு. அந்தப் பகை மை இன்றுவரை குறையாமல் இருக்கிறது. இப்போதும் சட்டசபை வட்டசபைத் தேர்தல்களில் இருகட்சிக்காரர் களும் வெவ்வேருகவே பிரிந்து நிற்பார்கள். அரசியலி லும் அப்படியே காணலாம். வேட்டுவர்களே மிகுந்திருக் கும் ஊர்களும் பல இருக்கின்றன.

மேலும் சில ஊர்களில் நாயக்கன்மார் மிகுதியாக உண்டு. இவர்களும் குடித்தனமே செய்கிருர்கள். இவர் கள் சிறப்பாக கரிசல் நிலங்களிலே குடியிருப்பார்கள். கரிசல் நிலம் இப்போது பருத்தியினுல் பொன்னை விளை

விக்கிறபடியால் இவர்கள் ஆதிக்கம் மிகவும் செழித்து வருகின்றது.

மற்றும் சில ஊர்களில் அகமுடையார்கள் சிறப்பாக வாழ்கிறார்கள். இவர்கள் நன்செய், தோட்டம், தோப்பு, கொடிக்கால் முதலிய நிலங்களையே மிகுதியாக விரும்பு கிறார்கள். அவ்வூர்களில் இவர்களுக்குச் செல்வாக்கு உண்டு.

வேறு சில ஊர்களில் சிறப்பாக மலையோரங்களில் செம்மண் காடுகளில் ஒக்கலியக் கவுண்டர்கள் வாழ்கி றார்கள். கொங்கு நாட்டிற்கு வந்த பிறகு இவர்களும் கவுண்டர்கள் என்றே பெயர் பூணுகிறார்கள்.

ஆகவே, எங்கள் நாட்டுப்புறத்துக் குடியானவர்களில் இவ்விதமாகப் பலவகையார்கள் இருக்கிறார்கள். இவர் களிலே எங்கள் நாட்டில் கொங்கு வேளாளர்களே மிகவும் சிறப்புமிக்கவர்கள். இவர்களிலும் செந்தலை, நரம்புகட்டி, பால் வேளாளர் முதலிய பிரிவுகளும், சாத்தந்தை தூரன் பேயன், முதலிய வீட்டுப் பிரிவுகளும் உண்டு. இப்பெயர் கள் கல்வெட்டுக்களிலும் நிலைபெற்றிருக்கின்றன என்றால் சிறப்பு மிகுதி அல்லவா.

தொழிலாளர்கள்.

பண்டைக்காலம் முதல் தமிழ் நாட்டில் ஏனைய நாடு களைப்போலவே வேளாளர்களில் தொழில் முறையில் இரண்டுவகை உண்டு. ஒன்று உழுதுண்போர், மற் றொன்று உழுவித்துண்போர். நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்போர் உழுவித்துண்போர்கள். இவர்களே பெருங்குடியானவர்கள். பண்ணையாட்களை வைத்துக் கொண்டு உழுவித்துத் தாம் மேல்பார்வை மட்டும் செய்து

விட்டு விளைவுகளில் ஒருபகுதி ஆட்களுக்குக்கொடுத்து, மற்றொரு பகுதியைத் தாம் எடுத்துக்கொள்வார்கள். இவர்களுக்கு நிரம்ப நிலம் உண்டு. இரண்டாவது வகையினராகிய உழுதுண்போர் தாமே நிலங்களில் உழுது தாமே முழு விளைவையும் எடுத்துக்கொள்வார்கள். இவர்களுடைய நிலங்கள் குறைந்த அளவில் இருக்கும். வெகுவாகப் பண்ணையாட்கள் இருக்க மாட்டார்கள். குடியானவனுடைய குடும்ப ஆட்களே நேரில் வேலை செய்வார்கள். அறுவடைகாலங்களில் மட்டும் அதிகப்படியான ஆட்களை வைத்துக்கொண்டு வேலை வாங்கி தானியக் கூலி கொடுப்பார்கள்.

மேலே கண்ட இருவகையினரில் உழுவித்துண்போர் நிலத்தின் பரப்பிற்குத் தகுந்தபடி பண்ணையாட்களை வைத்திருப்பார்கள். இவ்வாட்களும் இரு வகையினர். வேளாளர்களும், மற்ற தாழ்ந்த வகுப்பினரும் ஆவர். இவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பம்பல் காலத்தில் அறுவடை ஆனபின்பு படி அளக்கப்படும். காலி காலங்களில் திருமணம் முதலிய சடங்குகளுக்குப் பண்ணையாரே செலவு ஏற்றுக்கொள்வார்கள். ஒருமுறை பண்ணை ஆட்களை ஏற்படுத்திவிட்டால் பெரும்பான்மையாக அவர்களே அந்த நிலத்தில் இருப்பார்கள். வெளிநாட்டுக் கண்காணிகள் கூலி வேலைகளுக்காக ஆட்களை மயக்கி இழுத்தால் ஒழிய பண்ணையாட்கள் பண்ணைகளைவிட்டு வெளியே போகமாட்டார்கள். இவ்வித ஆட்கள் பெரும்பாலும் தங்கள் தங்கள் வீடுகளில் ஊரிலே சேரியிலே வசிப்பார்கள். இவர்களிலே குடியானவர்கள் போக மற்ற ஆட்கள் அரிஜனங்கள் என்று இப்போது வழங்கும் பள்ளர், பறையர், சக்கிலியர் என்ற தாழ்ந்த மக்கள்தான். இவர்க

ளுடைய வீடுகள் சேரிகளில் இருக்கும். ஊருக்கு வெளியே தனியான நத்தத்திலே தனி ஊர் போல வீடுகளை மிக ஒழுங்கினமாகக் கட்டியிருப்பார்கள். சேற்றில் புழுக்கள் நாற்றம் அறியாது பிழைப்பதுபோல இவர்கள் கல்வி அறிவின்றி மிகுந்த அசுத்தங்களுக்கிடையே நாய், பன்றி, இவைகளை வளர்த்திக்கொண்டு, சுகாதார வீனமாக வசிப்பார்கள். இவர்களும் நிலங்களிலே உழவிற்கு வேண்டிய பல தொழில்களையும் செய்துகொண்டு படி அளக்கப் பெற்றுக்கொண்டு வாழ்வார்கள். இவர்களே உழவுத் தொழிலில் நேரடித் தொழில் ஆட்கள் என்று கூறலாம்.

சார்புத் தொழிலாளர்கள்.

வேளாண்மைத் தொழிலே நேரடியாக உழவிலே உழுதல், எருவிடல், விதைத்தல், களையெடுத்தல், நீர்பாய்ச்சல் அறுத்தல், விளைவை எடுத்துச் செல்லல், முதலிய பல பகுதிகள் உண்டு. அவைகளைச் செய்வோர் பண்ணை ஆட்கள். அவர்கள்மட்டும் ஒரு குடியானவனுக்குப் போதா. குடியானவனுடைய உழவுக் கருவிகள் பலஉண்டு. ஏர் அல்லது கலப்பை, பரி அல்லது ஏற்றக்கருவி. மண்வெட்டி, கைவண்டி, பெரு வண்டி, கால் நடைகள் முதலியன அவசியமானவை. இவைகளை அவ்வப்போது தக்கபடி பாதுகாக்கவேண்டும். இவைகளிலே தச்ச வேலையும், கொல்ல வேலையும் இன்றியமையாதவை. ஏர்களையும், வண்டிகளையும் அடிக்கடி பழுது பார்க்கவேண்டும். இவைகளுக்குத் தச்சன் இருந்தே ஆகவேண்டும். மண்வெட்டி, சக்கரங்களுக்கு இருசு, பட்டா முதலியன அமைத்தல், கடப்பாறை கூராக்குதல் முதலியவைகளுக்கு ஒரு கொல்லன் அவசியம் வேண்டும். பரித்

தோல் அடிக்கடி கிழிந்துபோகும். அதனைத் தைப்பதற்கு ஒரு சக்கிலியன் அவசியம். வீட்டுச்சுவர், சாலைச்சுவர், இவைகளைப் பழுது பார்ப்பதற்கும் புதிதாகக் கட்டுவதற்கும் ஒட்டன் வேண்டும். இந்தத் தொழிலாளர்கள் ஒரு குடியானவனுக்கு மிகவும் வேண்டப்படுவர்கள். ஆனால் நேரடித் தொழிலாளர்களான பண்ணையாட்களைப்போல இவர்களுக்கு அன்றாட நிரந்தர வேலை இருக்காது. ஆகவே ஊருக்கு எல்லாம் ஒரு குடியோ இரண்டு குடியோ தான் இருப்பார்கள். இவைகளிலே சக்கிலியர் தவிர மற்றவர்கள் ஊரிலே ஊர்க்கட்டுக்குச் சேர்ந்தாற்போல் அதனை அடுத்து வீடுகளைக் கட்டிக்கொண்டு பிழைப்பார்கள். சக்கிலியரோ தங்கள் சேரியிலே நத்தத்தில் இருப்பார்கள். அவனே எல்லாரிலும் தாழ்ந்தவன் என்று கருதப்படுகிறவன் என்றாலும் எல்லாரைக் காட்டிலும் மிகுதியாக வேலை செய்வான். இவன் பழக்கவழக்கத்தினாலே மிகத் தாழ்ந்துவிட்டான்போல இருக்கிறது. பன்றிகளை வளர்த்தித் தின்னல், இறந்த மாட்டு இறைச்சியை உண்ணல், பெருச்சாளி, எலி முதலிய சிற்றுயிர்களை வேட்டையாடி உண்ணல் முதலிய இழிவான தொழில்களில் ஈடுபட்டிருப்பதே இவனை மிகவும் தாழ்த்தி விட்டது எனலாம். இந்தப் பழக்கங்களிலிருந்து இவனை வெளிக்கிளப்புவதே மிகக் கடினம். மண் வேலை செய்யும் ஒட்டன் அடுத்தபடி உயர்ந்தவன். அவனுக்குத் தீட்டு இல்லை. ஆனாலும் இவனும் நாட்டுப்புறத்தில் மிகவும் இழிந்த பழக்கம் கொண்டவன். தச்சனும், கொல்லனும் நடுத்தர நாகரிகம் பெற்றவர்கள், இவர்கள் எல்லாம் ஊர் ஓரத்தில் ஒன்றிரண்டு குடிசைகளோ ஓட்டு வில்லை வீடுகளோ கட்டிக்கொண்டு தத்தம் தொழிலை ஊரார் எல்லாருக்கும் பொதுவில் செய்து வாழுகிறவர்கள்.

வீட்டுத் தொழிலாளர்கள்.

மேலே சொன்ன காட்டுத் தொழிலாளர்களுக்கு மாருக சில வீட்டுத் தொழிலாளர்கள் உண்டு. இவர்களும் இன்றியமையாதவர்களே ஆவார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வண்ணான், நாவிதன் என்போர். ஒவ்வொரு ஊருக்கும் இவர்களில் ஒவ்வொரு குடியாவது இருக்கும். வண்ணான் குடியானவனுடைய குடும்பத் துணிகளை எடுத்துக்கொண்டு போய் ஆற்று நீரிலோ குளத்து நீரிலோ துவைத்து வெள்ளையாக்கிக் கொடுக்க வேண்டும். இவனுக்கு ஆண்டுக்கு ஒருமுறை படியளப்பது உண்டு. சுபாசுப காலங்களில் நலம் பொலங்களுக்கு நடை பாவாடை முதலியவைகளை வண்ணானே தருவான். கோவிலுக்குத் தீவட்டி முதலியவை கொடுப்பது அவனுடைய உரிமையாகும். இந்த வகையில் அவன் பிழைப்பு நடக்கும். இவர்களில் சில பேர் படித்தவர்களும் உண்டு. அவர்கள் பாடல்களை நெட்டுருப் பண்ணிக்கொண்டு திருவிழாக்களிலே பாடுவார்கள். அதற்கு அவர்கள் வெகுமதி பெறுவார்கள். அப்பாடல்களே நாட்டுப் பாடல்கள். குன்றுடையான் கதை அவர்கள் பாடும் ஒரு சிறந்த தொடர்ச்சிப் பாட்டு.

இனி, நாவிதன் ஊருக்கே இன்றியமையாத ஒரு ஆள். ஒவ்வொரு பண்டிகையின் போதும் அவன் பெண்சாதி கூடை எடுத்துக்கொண்டு குடியானவன் முற்றத்தில் நிற்பாள். பண்ணாடிச்சி கொடுக்கும் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு செல்வாள். ஒவ்வொரு ஆணுக்கும் மாதத்திற்கு ஒருமுறையாவது நாவிதன் சிரைக்கவேண்டும். பெரிய பண்ணாடிகளுக்கு எண்ணெய் முழுக்கும் செய்து வைக்கவேண்டும். மேலும் நலம் பொ

லங்களுக்கு ஊர்ச்செய்தி அறிவிப்பதும் இவனே. சில ஊர்களில் வைத்தியனும் இவனே. சிறப்பாகக் கத்தி வைத்து இரண வைத்தியம் செய்வதில் இவனே சிறந்தவனும். ஆகையாலே இவர்கள் நாவிதர் என்ற பெயரை விட்டுவிட்டு, மருத்துவ குலத்தார் என்று தற்போது பெயர் பூண்டு இருக்கின்றனர். புலவர்கள் இல்லாத ஊர்களிலே இவர்களே திருமணக் காலங்களிலே திருமண வாழ்த்து பாடுவதுண்டு. இவர்களைத் தவிர மக்களை அலங்கரிக்கும் செயலில் ஈடுபடும் சில தொழிலாளர்கள் உண்டு. அவர்களில் தட்டான் சிறந்தவன். குடியானவர்களில் மகளிர்களுக்கு நகைநட்டு அணிவதில் மிகவும் விருப்பம். ஆகவே தட்டான் ஒவ்வொரு ஊரிலும் இருப்பான். வெள்ளி, பொன் நகைகளை இவனே செய்து நல்ல கூலி பெறுவான். எத்தனை பெற்றாலும் அவனுடைய பேராசைக் குணத்தாலே அவன் குடும்பம் ஈடேறுவதில்லை. குடியானவர்களுக்கு ஆடைகளிலே மிக விருப்பம். முன் நாளிலே தைத்த உடை எவரும் அணியமாட்டார்கள். அப்போது தையல்காரன் இருக்கவில்லை. ஆனல் இப்போதோ நாட்டுப்புறத்திற்கும், பாவாடை இரவிக்கை குடியேறிவிட்டது. அப்போது தையல்காரக் குடியும் ஒன்று கூடவே குடியேறிற்று.

ஊர்ச் சேவையாளர்கள்.

குடித்தனமும் குடித்தனத்திற்குச் சார்பான தொழில்களிலும் ஈடுபட்ட வகுப்பார்கள் பெரும்பான்மையாக இருக்க ஊர்ப் பொதுகாரியங்களில் ஈடுபட்ட குடிகளும் சிறுபான்மையாகவாவது இருப்பார்கள். இவர்களோ விரல்விட்டு எண்ணும்படியான கணக்கில் இருந்தாலும் ஊரில் இவர்கள் நடத்தும் அதிகாரம் மிகவும்

வலுவுடையது ஆகும். இவர்கள்தான் ஊர்த் தலைவர்கள். இவர்களைப்பற்றி முன்னமே கூறியுள்ளோம். இருந்தாலும் இவர்கள் எல்லாரும் ஒரே வகுப்பினர் அல்லாதவராயும், தனித்தனி வகுப்பினராகவும் இருந்தும் ஊர்ச் சேவையில் ஒரே மனப்போக்கு உடையவர்களாக இருந்தாலும், இவர்களைப்பற்றி ஊர்க்குடிகளிலும் தனியே கூற வேண்டியிருக்கும் அல்லவா? தொழில் முறையில் தான் முன்னே கூறினோம். இப்போது குடிமை முறையில் கூறுவோம். மணியகாரன், கணக்கன், வாத்தியார், சோதிடன், வைத்தியன், தலையாரி முதலியவர்கள் தனித்தனிச் சேவகர்களே. ஆனால் தனித்தனி வகுப்பார்கள். மணியகாரன் வேளாளனாக இருப்பான். அவனைப்பற்றித் தனியாகக் கூறவேண்டியதில்லை. கணக்கனோ கருணிகனாக இருப்பான். அல்லது சில ஊர்களில் பிராமணனாக இருப்பான். அப்படியாயின் பிரமலோகத்திலிருந்து நேரே வந்து உதித்து வந்தவனாக எண்ணுவான். மற்ற எல்லாக் குடிகளையும் தன்னைவிடத் தாழ்ந்தவனாக எண்ணி ஒருமையிலே பேசுவான். மற்றவர்களோ இவனை 'சுவாமி' என்று கும்பிட்டுத்தான் பேசவேண்டும், குருக்கள் உயர்ந்த பிராமணன் அல்ல. என்றாலும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாக நினைப்பான். அவனையும் எல்லோரும் 'சுவாமி' என்றே அழைப்பார்கள். வைணவர்கள் மிகுதியாக இருக்கும் ஊரில் பெருமாள் கோயில் உண்டு. அதன் அர்ச்சகர் பெரும்பாலும் சாத்தாத வைணவராக இருப்பான். அவனும் தன்னை உயர்ந்த நிலையில் இருப்பதாக நினைப்பான். அவனுக்கும் 'சுவாமி'ப்பட்டம் உண்டு. வாத்தியார், வைத்தியன், சோதிடன் அனேகமாக ஏனைய நாட்டு வேளாளராக இருப்பார்கள். இவர்கள் தொண்டை, சேர. சோழ, பாண்டிய மண்டலங்களிலிருந்து குடி

யேறியவர்கள். நிலம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் இலகுவான வாழ்க்கை நடத்துகிறவர்கள். ஏனைய வேளாளர்களிடம் உணவு கொள்ளமாட்டார்கள். இவர்களில் சிலர் சைவ உணவு கொள்ளுவார்கள். அதைக்கொண்டே தங்களை உயர்ந்தவர்களாக நினைப்பார்கள். இறுதியில் நிற்கும் தலையாரியோ அனேகமாக வேடன், வேட்டுவன், வலையன், பறையன் முதலிய வகுப்புகளில் சேர்ந்தவனாக இருப்பான். இவன் குடியானவன் வீட்டுக்குள் புகமுடியாது. இருந்தாலும் அவன் நடத்தும் அமுல் மிக உறுதியாக இருக்கும். இவர்களில் அரசியல் சம்பந்தமானவர்களுக்கு இனும் நிலங்கள் உண்டு. ஆகவே நிலத்த உரிமையும் பெருமையும் உண்டு. பல நிலங்கள் கைவிட்டு ஓடிவிட்டாலும் பெருமை போகவில்லை எனலாம்.

ஏனைய குடிகள்.

சின்னசிறு ஊர்கள் வாணிபத்திற்கு ஏற்ற இடங்கள் அல்ல. பெரிய நகரங்களே வாணிபத்திற்குச் செழுமை தருவன. ஆகவே சிறு ஊர்களிலே கடைத்தெரு காண முடியாது. எங்கள் ஊர்ப் புராணத்தில் சகலவிதமான வாணிகப் பண்டகச்சாலைகளும் திரண்ட கூலக்குவியல்களும் இருக்கும் எனக் கண்டிருந்தபோதிலும், அவைகளைப் புராண ஆசிரியருடைய மனோராச்சியத்தின் காட்சிப் பொருளாகக் சமர்ப்பித்து விட்டுவிடுவோம். எங்கள் ஊரில் ஒரு சில்லறைக் கடைத்தான் உண்டு. அதனாலேயே அதை நடத்தும் செட்டியாருக்கு தகுந்தபடி போகினி ஆவதில்லை. என்றால், கடைத்தெரு ஏற்பட்டுவிடின் எவ்வாறு எங்கள் ஊர் வர்த்தகர்கள் பிழைப்பை வைத்துக்கொண்டு காலம் கடப்பார்களோ அறியோம்.

ஆனால் எங்கள் நாட்டுப்புறங்களில் இருபது ஊர்களுக்கு இடையில் ஒவ்வொரு வாரச் சந்தை உண்டு. அதிலிருந்தே குடிமக்கள் ஒரு வாரத்திற்கு வேண்டிய பண்டங்களைப் பெற்றுக்கொள்ளுவார்கள். அதிலே தங்கள் சரக்குகளைப் விற்றுக்கொள்ளுவார்கள். ஆகவே எங்கள் ஊருக்கு ஒரு செட்டிக்கடை இருந்தால் போதாதா? அவனும் தன் முதலுக்கு நூறுவீதம் வட்டியாகச் சேர்த்துப் பழைய சாமான்களின் விலைமீது உயர்த்தி ஏழைக் குடிகளுக்கு அள்ளிக்கொடுப்பான். இப்படிச்செய்தும் அவன் தொப்பை பெருகவில்லை என்றால் எங்கள் வாணிபம் எந்த நிலையில் இருக்கிறது என்று நீங்களே அறிந்துகொள்ளலாம். தெருக்கோடியிலே ஒரு பிட்டுக்காரி அம்மாள், தம்பிடி பிட்டுக்களும், இரண்டு தம்பிடித் தோசைகளும், மூன்று தம்பிடி அப்பங்களும் விற்பாள். வந்த மக்களுக்குச் சுடச் சுட சுட்டுக் கொடுப்பாள். அவளிடம் கடன் இல்லை என்று பேர்தான் உண்டு. சில அடங்காப்பிடாரிகள் அவளை ஏமாற்றிக் கடன் பெற்றுக்கொண்டு உண்டுவிடுவார்கள். அவர்களைக் கண்டால் அவள் வாய் சும்மா இருக்காது. ஆகவே அவர்கள் வருத்தப்பட்டாவது அவள் தெருவில் நடக்காது சுற்றிச் செல்லும் தெரு வ்ழியாக நடப்பார்கள். ஆனாலோ எத்தனை நாளாயினும் தான் கொடுத்த கடனைத் தவறாமல் கேட்டுக்கொண்டே இருப்பாள். இதற்கும் அவளுக்குப் படிக்கத் தெரியாது. மணக்கணக்கிலேயே எதையும் வைத்திருப்பாள். எங்கள் ஊரில் துணிக்கடை ஒன்றும் இல்லாவிட்டாலும் ஒரு தையற்காரன் புகுந்துகொண்டான். அவன் சென்ற நூற்றாண்டு முறையில் கத்தரித்துத் தைத்தபோதிலும் இந்த நூற்றாண்டில் நேற்று பிரதம மந்திரியின் தங்கை அணிந்த கோலத்துடன் தைத்து கொடுப்பேன் என்று

அடுத்தவீட்டு அம்மாளிடம் சொல்லுவான். இந்த வகையில் வணிக அமைப்பு இருந்தது.

தொழில்பற்றுள்ள ஊர்கள்.

முன்னமே கூறியபடி தொழிற் பற்றுள்ள கிராமங்கள் ஆங்காங்கு தனித்தனித்து விரவி இருக்கின்றன. சில ஊர்களிலே நெசவுத்தொழிலே மேம்பட்டு இருக்கும். மக்கள் தொகுதியின் பாதிமட்டும் நெசவாளர்களாகவே இருப்பார்கள். இவர்கள் சந்தைகளில் நூல் பெற்றுக் கொண்டு ஊர் சென்று தறிகளில் இணைத்துச்சீலைகளும், வேட்டிகளும், துப்பட்டிகளும் நெய்து அச்சந்தைகளிலேயே விற்பார்கள். சில பெரிய கிராமங்களில் நெய்த துணிகளை வாங்கிக்கொண்டு போய்க் கடைகளுக்கு கொடுக்கும் தரகாளிகளும் உண்டு. பெரிய நகரங்களுக்கு அருகே இருக்கும் சிற்றூர்களில் நூலும் கூலியும் கொடுத்து நெய்த சரக்குகளை வாங்கிகொண்டு போகும் வியாபாரிகள் நகரத்திலிருந்து வந்து போவார்கள். கூலி மாத்திரம் பெறுகிற நெசவாளிகளுக்கு சிரமம் அதிகம் இல்லை. தாங்களே நூலும் வாங்கி நெய்து விற்கும் ஆட்களுக்கு சிரமம் மிகுதி. நிரந்தரமான கூலியும் கிடையாது.

இவர்கள் பெரும்பாலும் மட்டமான துணிகளை நெய்வார்கள். கிராமங்களில் உள்ள நெசவாளிகளுக்கு நகர நெசவாளிகளைப்போல நல்ல இரகங்களை நெய்யவும் தெரியாது. மிகுதியான கூலியும் கிடையாது. போர்க்காலங்களில் நூலின் அருமையினாலும் கிராம நெசவாளிகள் மிகுந்த வருத்தத்திற்குள்ளானார்கள். ஆனால் சமீப காலத்தில் தோன்றியிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் ஈடுபாட்டினால் நெசவாளர்களுக்கு நிரந்தரமான வேலை

கிடைக்கும் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் இயந்திரங்களின் போட்டியால் நெசவாளர் சமாளிப்பது மிகவும் கடினம் போதாக்குறைக்கு பொதுஉடமைக் கொள்கைகள் நாட்டில் பரவவே அடிக்கடி வேலை நிறுத்தங்களும் வேலையில்லாத் திண்டாட்டமும் மிகுதியாகி நெசவுத் தொழில் ஒரு பாவமில்லாத தொழிலாயினும் கஷ்டப்படுகிறது. இனி சில ஊர்களில் மரமேறுவதும், தெளிவு இறக்குவதும் சர்க்கரை காய்ச்சுவதும் கைத்தொழிலாக வைத்துக்கொள்ளுவார்கள். பனை நார், கற்றாழை நார், புளிமஞ்சை நார் இவைகளில் ஈடுபடும் தொழில்கொண்ட ஊர்களும் உண்டு. வெண்கலம், பித்தளை, தாமிரப்பாத்திரங்கள் செய்யும் கன்னாரக் கிராமங்களும் உண்டு. இன்னும் பல சிறு தொழில்களை செய்து ஈடுபடுகிற ஊர்களும் உண்டு. இவைகளில் குடித்தனக்காரர்கள் இல்லாமல் இல்லை. பேர் பகுதியாக குடித்தனமும் நடைபெறும்.

வகுப்புப் பிரிவினை.

இவ்வாறு நாட்டுப்புறத்து ஊர்களில் பல வகுப்பார்கள் கலந்து வாழ்ந்து வருகையில் இவர்களுள் எவ்வாறு ஒற்றுமை நிலவும் என்று ஐயப்பாடு தோன்றலாம். வகுப்புவாரிப் பேதத்தின் கொடுமை நகரப்புறங்களிலே உண்டே ஒழிய கிராமாந்தரங்களில் அது தோன்றுவதில்லை. படிப்பினால் உத்தியோகங்கள் பெறவேண்டும் என்ற வாஞ்சை வந்தவுடனே பிறப்பினால் தோன்றும் ஏற்றத் தாழ்ச்சி வளருகிறது. அதனால் ஒருவர்மேல் ஒருவர் அருவருப்பும் பொறாமையும் படவேண்டிவரும். கிராமங்களிலே அது தோன்றுவதற்கு இன்னமும் காலம் பிடிக்கும். கிராமங்களிலும் தற்காலப்படிப்பும் வேலைகளின் ஏற்றத்தாழ்ச்சியும் புகுந்தாலோ, பிறகு வகுப்பு

வாரிப் பேதத்தின் கொடுமை புகுந்துவிடும். பண்டைக் காலம் முதற்கொண்டு ஒவ்வொரு குடும்பமும் தனக்கேற்ற தொழிலைச் செய்துகொண்டிருந்தது. அதில் பிறர் பிரவேசிக்கவில்லை. தடை செய்யவில்லை. போட்டி போடவுமில்லை. குடியானவன் எத்தனை உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டிருந்தாலும் நிலத்திற்கு சென்ருல் பண்ணையாளாகிய சக்கிலியன் அருகிலே நின்று தானும் வேலை செய்வான். ஒரே கிணற்றில் இரண்டு கவலை இருக்க, ஒரு கவலை உயர்வகுப்புப் பண்ணுடியின் மகன் பிடிப்பான். மற்ருெரு கவலை ஈன சாதிச் சக்கிலியன் பிடிப்பான். இதனை நேரில் காணலாம். இதில் யாதொரு தாரதம்மியமும் நாம் காண்பதில்லை. ஒரே பண்ணையில் எல்லாவிதமான வகுப்பார்களும் கலந்தே வேலை செய்வார்கள். பேதமில்லை. ஆனல் சமூகச் சங்கதிகளில்மட்டும் பேதம் உண்டு. திருவிழா, சாப்பாடு, விருந்து முதலிய சமூகச் சங்கதிகளில் ஏற்றத்தாழ்ச்சி உண்டு. இது வெகுவாக வெளியே தெரியாது. அவரவர்கள் வீடுகளில் தன்னந்தனியே நடப்பதினல் பிறர் இதன் கொடுமையை அறிவதில்லை. ஆகவே நாட்டுப்புறங்களில் வகுப்புவாரிப் பேதம் உக்கிரமமாக இல்லை எனலாம். ஆனல் வடநாட்டு நூல்களில் கூறுகிறபடி நான்கு வருணங்களும் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு உரிமை கடமைகளும் தென்னுட்டு நாட்டுப்புறங்களில் கிடையாது, இனி அவைகளைக்கொண்டு புகுத்தவேண்டிய அவசியமும் நியாயமும் இல்லை என்க.

VI. எங்கள் குடும்பங்கள்.

குடும்பம் யாது?

எங்கள் நாட்டுப்புறம் நூற்றுக்கணக்கான ஊர்களின் தொகுதி. எங்கள் ஊரோ நூற்றுக்கணக்கான குடும்பங்களின் தொகுதி. குடும்பமோ இரண்டு முதல் பத்துப் பன்னிரண்டுவரை ஆட்களின் தொகுதி. அவ்வாட்களோ 'தந்தை, தாய், தமர், தாரம், மகவு' என்னும் உறவில் உள்ளவர்கள். ஒரு குடும்பத்திற்குக் குறைந்தது கணவனும், மனேவியுமே. மேம்பட்டது பாட்டன், பாட்டி முதல் பேரன் பேத்திவரை உள்ளவர்களின் தொகுதியே. எந்த நாட்டிலும் சமூகத்தில் குடும்பமே மிகச் சிறிய தொகுதி. அது ஒரு கட்டுப்பாட்டோடு உள்ள தொகுதி. தொழில்பற்றியோ, நோக்கம் கருதியோ, கோட்பாடு எண்ணியோ பல சமூகங்களும் கழகங்களும் இனங்களும் உலகத்தில் இருக்கலாம். அவைகளின் ஒற்றுமை அவரவர்கள் கொண்ட குறிக்கோள்களேக்கொண்டு இருப்பன. குறிக்கோளிடத்தில் ஆர்வம் உள்ளவரை அவைகள் நன்கு நடைபெறும். ஒற்றுமையோடு பிரிவினேயின்றி இருக்கும். ஆனல் குடும்பங்களோ அத்துணே எளிதில் பிரிந்துபோகா. இரத்த உணர்ச்சி மற்ற எல்லா உணர்ச்சிகளிலும் மேம்பட்டது ஆகும். மேலும் நமது நாடுகளில் உள்ள சாதி அல்லது வகுப்பு வேறுவித அமைப்புகொண்டது. ஒருவிதத்தில் ஒத்த தொழில், சிறிது இரத்தப் பிணேப்பு, பெரிது பழக்கவழக்கங்கள் இவைகள் பிணித்து நிற்கும். இதுபோன்ற அமைப்பு வேறு நாடுகளில் இல்லே. நாகரீகமும், கல்வியும், தாராள மனப்போக்கும் முதிர முதிர சாதியின் கட்டுப்பாடு விலகிவருகிறது. ஒரே

தொழிலே முன்னுளிலே கொண்டிருந்தது போய்ப் பல தொழில்களையும் கொள்ளத் தொடங்குகிறார்கள். திருமணம் பொருத்தமட்டில் தூய்மைக் கலப்பு இளகிப் போய் பிற சமூகக்கலப்பு நேரத் தொடங்கியுள்ளது. இதற்கு அரசியலும் ஆதரவு அளிக்கிறது. ஆகவே இந்தப் பலத்தக் கட்டுப்பாடு இப்போது தளர்ச்சியடைந்து வருகிறது. இனிப் பழக்கவழக்கங்களில் நம்பிக்கை குறைந்து வருகிறது. நடையுடை பாவனைகளும் முன்நாளில் வெவ்வேருக இருந்ததுபோய் இப்போது ஒற்றுமைப்பட்டு வருகின்றன. ஆகவே வகுப்புக்களை மேலே கண்ட பிரிவினை ஏற்பாட்டில் நுழைக்கமுடியாது. குடும்பங்களையே அடிப்படை உருப்படிகளாகக்கொள்ள வேண்டும். அவ்விதக் குடும்பங்களின் தொகுதியே எங்கள் நாட்டுப்புறத்து ஊர்கள் என்று சொல்லுவோம்.

ஒரு எடுப்புக் குடும்பம்.

நாட்டுப்புறத்துக் குடும்பங்கள் ஒன்ருென்றிற்கும் சின்னஞ்சிறு வேறுபாடுகள் சில தோன்றிளுலும், பொதுவாக எல்லாமே ஒரே மாதிரியான நடவடிக்கைகள் கொண்டிருக்கும் என அறியலாம். ஆகவே, ஏதாவது ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டு அதன் நடவடிக்கைகளின் போக்குகளை எடுத்துக் கூறுவோம். எங்களூரில் பண்ணுடி சுப்பண்ண கவுண்டர் குடும்பம் என்ருல் எல்லாரும் மரியாதையுடன் பேசுவார்கள். வேளாளர் மட்டும் அல்ல. எல்லா வகுப்பார்களுமே அக்குடும்பம் கண்ணியமான குடும்பம் என்பார்கள். பண்ணுடி சுப்பண்ண கவுண்டருக்கு வயது சுமார் ஐம்பது இருக்கும். நடக்கும்போது நிமிர்ந்தே நடப்பார். கை கால்கள் மிகவும் வலிவு பெற்றவைகள். சண்டை பிடித்தால் எவரை

யும் ஒரு கை பார்ப்பார். மீசை இன்னமும் கரு கரு என்றே தோன்றும். அதனை கிருதா மீசையாக வளர்த்தி இருப்பார். மீசையின் நுனிகளில் எலுமிச்சைப் பழங்களை வைத்தாலும் நிற்கும் என்று ஊர் வாத்தியார் வருணிப்பார். தலையில் சிறு குடுமி. ஆனால் அது பெரிய தலைப் பாகையில் எப்போதும் அமைந்திருக்கும். நெற்றி அகல மாக இருக்கும். சாப்பிடுவதற்குமுந்தித் திருநீறும் சந்தனப் பொட்டும் வைத்துக்கொண்டுதான் உட்காருவார். ஆனால் வேர்வையினால் ஒரு மணி நேரத்துள் அவைகள் மறைந்துபோகும். பிறகு வெறும் நெற்றியாக விளங்கும். இடையில் ஒரு வெள்ளை வேட்டி அணிந்திருப்பார். அது கச்சமாகக் கட்டியிருந்தாலும் இடது கால் முக்கால் பங்கு வெளியே தெரியும். மேலே எப்போதும் சட்டை போட்டது கிடையாது. வெள்ளை அங்கவஸ்திரத்தால் உடல் முழுதும் மூடியிருப்பார். அவரது உருவம் எத்தனை தொலைவில் வந்தாலும் தெரியும். பாமரமக்கள் சிறிது தூரத்திலே ஒதுங்கி நின்று கும்பிடு போட்டு நிற்பார்கள். அவரும் கௌரவமாகத் தலையசைத்து 'சுகமா?' என்று கேட்கிறாற்போல கையசைத்துவிட்டுச் செல்லுவார். அதைக்கண்டு வெகு மகிழ்ச்சியோடு ஊரார் சென்றுவிடுவார்கள். கவுண்டருடைய மனைவியோ 45 வயதுள்ள பெருமாட்டி. மாநிறமுள்ளவள். குடும்பத்திற்கு ஏற்ற சீரும் சிறப்புமோடு இருப்பாள். ஆனால் வெகு செம்மையாக வீட்டு வேலைகள் கால்நடைகள் பண்டங்கள் எல்லாவற்றையும் கவனிப்பாள். பழைய காலத்து நகைகளான தண்டொட்டி மேலொட்டி இவைகளைக் காதில் அணிந்திருப்பாள். இடது காலில் ஒரு காறை, கழுத்தில் பழையகாலத்துத் தாலி. இவைகளைத் தவிர வேறு நகைகள் அணிந்திருக்காள். தலையை பெரிதாகக் கட்

டிக்கொண்டை போட்டிருப்பாள்- பதினெட்டு முழப் புடவை ஒன்று வெகு நன்றாக உடுத்திருப்பாள். கணவனைப்போலவே வெகு விரைவாக நடப்பாள். அவளைக் கண்டாலும், ஊரார் எல்லோரும் பண்ணாடிச்சி என்று வெகு மரியாதையாக விலகிவிடுவார்கள். வீட்டு வேலை மட்டும் அன்றி பம்பல் காலங்களில் தோட்டங்களுக்கும் சென்று கவுண்டருக்கு மேல்பார்வை விஷயத்தில் உதவி செய்வாள். இருவரும் யாதொரு சண்டை சச்சரவின்றி பண்ணையாட்களை நடத்திவந்தார்கள், இவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்து வெகு நன்றாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்தார்கள். குடும்பம் மிகச் சிறந்து விளங்கியது.

பிள்ளைகள் வளர்ச்சி.

பண்ணாடி சுப்பண்ண கவுண்டருடைய இரண்டு பெண் மக்களும் திருமணம் ஆகிக் கணவன்மார் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அவர்களுக்குப் பண்ணாடியின் அந்தஸ்துக்குத் தக்கபடி சீர்சிறப்புகள் செய்யப்பட்டன. புக்கிடங்களும் நல்ல இடங்களே. அவர்களும் நல்லமாதிரியாக இல்லறம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். பண்ணாடி வீட்டில் ஏதாவது சிறப்பு நடந்தால் அதற்குக் கணவன்மார் சகிதமாக வந்திருந்து சில நாள் தங்கிவிட்டு விருந்துண்டு செல்வதுண்டு.

பண்ணாடியின் ஆண்மக்களிலே மூத்த மகனுக்கு கந்தப்பன் என்று பெயர். இப்போது அவனுக்கு வயது 25 இருக்கும். அடுத்த கிராமத்திலிருந்து சொந்த மாமன் மகள் வள்ளியம்மாளையே கலியாணம் செய்து வைக்கப்

பட்டது. கலியாணமும் வெகு விமரிசையாக நடந்தது. பண்டைக்கால முறைப்படி நாட்டுமக்கள் எல்லோருக்கும் நல்ல விருந்து அளிக்கப்பட்டது. அருமைக்காரன் சடங்குகளை நடத்தினுன். புலவன் வாழ்த்துச் சொன்னுன். அவன் சொன்ன வாக்கின்படி சகல சீர்களும் பெண்ணினுடைய தகப்பனுல் செய்யப்பட்டன. பெண்ணுக்குச் செய்த சீதன வரிசைகளிலே நகைநட்டு, புடவை சீலை, தனம் தானியம் முதலியவைகள் மட்டும் அல்ல. புதிதாக ஒரு குடித்தனம் வைத்து நடத்துவதற்கு வேண்டிய பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், பலகை, படுக்கைகள் முதலியவைகள் எல்லாம் இருந்தன. காய் அறிகத்தி, அறுவாள், தயிர்கடை மத்து, உரல், உலக்கை அம்மி, குண்டு முதலியவைகளும் இருந்தன.

ஏன் இவைகள் எல்லாம் தரப்பட்டன என்று கேட்கலாம் அல்லவா? திருமணம் ஆனவுடனே மணமகனும் மணமகளும் தனிக்குடித்தனமாக வைக்கவேண்டித்தான் அதற்கு வேண்டிய சில்லறைச் சாமான்களும் ஒன்றுவிடாமல் கொடுக்கப்பட்டன. அவ்விரு தம்பதிகளும் உடனே தனியாகச் சமையல் முதலியவைகள் எல்லாம் செய்து கொண்டு சுதந்திரமாக பிழைக்கவேண்டும் என்பது கருத்து. அவ்வாறு தனிக்குடித்தனம் நடத்தினுல் தங்கள் பிழைப்பிற்கு வேண்டிய அளவு சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். வீண் செலவுகள் செய்யமாட்டார்கள். பிறரால் பொருமையோ கட்டுப்பாடோ ஏற்படாது. இந்த விதமான ஏற்பாடுதான் தமிழ்நாட்டில் முன்னுளில் இருந்தது. கந்தப்பன் வள்ளியம்மையும் வெகு நிம்மதியாக அக்குடித்தனம் நடத்திவர ஒரு குழந்தையையும் ஈன்றெடுத்துச் சுகமாக இருக்

கிருர்கள். பேரக்குழந்தையைக் கண்டு சுப்பண்ண கவுண் டரும் வெகு மகிழ்ச்சியுற்று இருந்தார்.

இரண்டாவது மகனின் விளையாடல்.

இரண்டாவது மகன் சண்முகம் பள்ளிக்கூடம் சென்று சிறிது படித்திருந்தான். ஆனல் அரைகுறைப் படிப்பிலேயே அதனை நிறுத்திக்கொண்டான். ஊர் நண்பர்களோடு உல்லாசமாகக் காலம் கழித்துவந்தான். யார் என்ன சொல்லியும் குடித்தன விஷயத்தில் அவ னுக்கு அக்கரையே வரவில்லை. முதல் மகன் கந்தப்பன் தனிக்குடும்பம் வைத்திருந்தது மட்டுமின்றி குடும்பத் திற்குச் சேர்ந்த ஒரு நிலத்தைத் தானே உழுது பயிரிட்டு அதனல் வரும்படிகொண்டு சீவனம் செய்துவந்தான். அவனைப்போலவே சண்முகம் இருப்பான் என்று சுப் பண்ண கவுண்டர் எண்ணினர். ஆனல் அந்த முறை யிலே சண்முகத்தின் மனது செல்லவில்லை. ‘ஊரில் பெரிய பண்ணடிக் குடும்பத்தில் ஆள்காரன்போல் வேலை செய்வதாவது. இந்தக் காலத்து இளைஞர்கள் அவ் வாறு இழிவான வேலைகள் செய்வார்களா, கந்தப்பன் படிப்பில்லாதவனகையால் தானே ஏர் பிடிக்கிருன். நான் ஏன் ஏர் பிடிக்கவேண்டும்? என்று சொல்லிச் சீட்டாட்டம் முதலியவைகளில் பொழுது போக்கி வந்தான். வயதும் இருபது ஆயிற்று. திருமணம் செய்யவேண்டும் என்று தாயாரும் விரும்பினுள். திரு மணம் செய்துவைத்தால் பிறகுதானே குடித்தனத்தில் அக்கரை வந்துவிடும் என்று அவள் சொல்லி வற்புறுத் தினுள். சுப்பண்ண கவுண்டருக்கு அது பிடிக்கவில்லை. இருந்தாலும் வயது ஆன இளைஞனை எத்தனை நாள் கட்டிவைக்க முடியும். வேருெரு ஊரிலே நல்ல குடும்பத்

திலே ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்தார்கள். திருமணம் நடந்தது. சீரும் சிறப்பும் நன்றாக நடந்தது. சண்முகம் மூன்று மாதங்கள்வரை மாமனார் வீட்டில் சுக வாழ்வு வாழ்ந்துவிட்டுப் பிறகு தகப்பனார் வீட்டிற்கு மனைவியுடன் வந்தான். அவனுக்காக ஒரு தனி வீடும் ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆனால் யாதொரு சம்பாத்தியமும் இல்லாமல் தனி வாழ்வு எப்படி முடியும். சில நாள் தனியாக சமையல் செய்து சாப்பிட்டுவிட்டுத் தனக்குக் கொடுத்த தான்யத்தைச் செலவு செய்துவிட்டுத் தகப்பனாரிடமே வந்து சேர்ந்தான். பண்ணாடிக் கவுண்டருக்கு இது பிடிக்கவில்லை. இருந்தாலும் பெற்ற மனம் பித்து என்கிறபடி மொழிப்படி தாயார் அவனையும் மருமகளையும் தன்னிடமே அழைத்து வைத்துக்கொண்டாள். ஆனால் அந்த வாழ்க்கை இனிமையாக நடக்குமா? ஒன்றிரண்டு மாதங்களில் சிறு சிறு சச்சரவுகள் நடந்தன. மருமகளும் சீராடிக்கொண்டு தாய்வீடு சேர்ந்தாள். பண்ணாடிக்கு மிகுந்த கவலை ஏற்பட்டது.

மூன்றாவது மகன் திருவிளையாடல்.

இரண்டாம் மகன் சண்முகத்தின் நடவடிக்கை இவ்வாறிருக்க, மூன்றாம் மகன் வேலப்பனுடைய போக்கு எப்படி இருந்தது என்று பார்ப்போம், சுப்பண்ண கவுண்டருக்கோ ஒரு மகனையாவது ஆங்கிலப் படிப்பில் சேர்த்தி உத்தியோகத்திற்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. வேலப்பனும் சிறிது புத்திசாலி. வெகு விரைவில் திண்ணைப்பள்ளிக்கூடம் விட்டு நகரப் பாடசாலை சேர்ந்தான். அங்கு இரண்டு மூன்று ஆண்டுகள் சுமாராக வாசித்தான். இதற்குள் அவனுக்கு இரண்டு மூன்று பணக்காரச் சகாக்கள் சேர்ந்தார்கள். அந்தக்

காலத்தில் பாடசாலையை ஒட்டி உணவு விடுதி இருக்கவில்லை. ஆகவே ஒரு தனிவீடு அமைத்து அதில் ஒரு சமயலாளைக்கொண்டு சாப்பாடு நடத்தவேண்டியிருந்தது. சிக்கன முறைக்காக மூன்று பெருத்த குடியானவர்களின் மக்கள் ஒன்று சேர்த்து ஒரு வீடும் சமயலாளும் வைத்துப் படித்துவந்தார்கள். சுப்பண்ண கவுண்டர் குடும்பத்தில் எப்போதுமே பீடி, குடி, பொடி முதலிய கெட்ட வழக்கங்கள் இருந்ததில்லை. ஆனல் இளைஞர்கள் பெற்ரோர்களுடைய பார்வையைவிட்டு விலகி நகரவாழ்க்கையில் ஈடுபட்டு வந்ததினுல் இந்தக் கெட்ட பழக்கங்கள் வரிசையாக ஒன்றன்பின் ஒன்ருக அவர்களை அணுகத் தொடங்கின. முதலில் பொடி போடுதல், பீடி பிறகு குடித்தல், இவைகள் வரத் தொடங்கின. நாடகங்கள், திரைப் படங்கள் வரத்தொடங்கவே அவைகளுக்கு இம்மக்கள் அடிக்கடி போகத் தலைப்பட்டார்கள். செலவும் ஒன்றுக்கு பல மடங்கு அதிகம் ஆயிற்று. சுப்பண்ண கவுண்டருக்கோ கவலை மிகுதியாயிற்று. தன் மகனுடைய போக்கும் சிறிது சிறிதாக தெரியத்தொடங்கிற்று. பரீட்சைகளிலும் தேர்ச்சி பெறவில்லை. ஆனல் பாடசாலை விளையாடல்களில் பரிசுகள் பெற்ருன். இதனுல் கவுண்டருக்கு யாதொரு மகிழ்ச்சியும் தோன்ற இல்லை. தான் நினைத்தபடி காரியங்கள் கைகூடி வரவில்லை என்று ஏங்கினுர். மகன் உத்தியோகத்திற்கு வருவானே என்ற ஐயமும் வந்துவிட்டது. நகரத்திற்கு அனுப்பியதே வீண் தொல்லை என்று எண்ணினுர். படிப்பு நிறுத்தவேண்டும் என்று நினைத்தார். வேலப்பன் அதற்கு ஒத்துக் கொள்வானே? குக்கிராமத்தில் அத்தனை உல்லாச வாழ்க்கை கிடைக்குமா? கவுண்டர் அவன் போக்கிலேயே அவனை விட்டுவிட வேண்டிவந்தது.

குடும்பத்தில் பிளவு.

சண்முகத்தின் மனைவி தாயார்வீடு சேர்ந்ததும், அவள் திரும்பிக் கணவன் வீட்டை எட்டிப் பாராதிருந்ததும் வம்புப்பேச்சுக்கு இடமாயிற்று. அவனுடைய பெற்ரோர்களும் இதனை கவனித்தார்கள். அவர்கள் சுப்பண்ண கவுண்டருக்கு முந்தி நெருங்கிய உறவினர்கள் அல்ல. குடிப்பெருமையும் செல்வாக்குச் சீரையும் எண்ணியே பெண் கொடுத்திருந்தார்கள். இப்போதோ சீராடிவந்தாள் என்ருல் அவர்களின் மனதில் எரிச்சல் ஏற்படாமல் இருக்குமா? மெல்ல ஆளனுப்பிச் சண்முகத்தை அழைத்துக்கொண்டார்கள். நண்பர்கள் போட்ட தூபமும் மனைவி தந்த தலையணை மந்திரரோபதேசமும் அவனை மிகவும் வேற்றுமைப் படுத்திவிட்டன. சொத்து பிதிரார்ச்சிதம், மிகவும் செழித்தும் இருக்கிறது. அப்படியிருக்க அதில் ஒரு சரிப்பகுதி மகனுக்கு இல்லையோ? அப்படிச் சட்டமும் இருக்க அதைச் சிறிதும் அறியாமல் ஒரு மகன் மாமனுர் வீட்டில் குடியிருந்து அவர்கள் ஆதரவில் இருக்கிருன் என்ருல் அவனுக்கு மதிப்பு எப்படி இருக்கும். மானம் இல்லையோ? என்று இவ்வாறு வம்புப்பேச்சுக்கள் தெருத்திண்ணைகளிலும், அரசமரத்து மேடைகளிலும், தண்ணீர்க்கிணற்று அண்டையிலும் வளர்ந்தோங்கின. இதனைக் கேட்ட சண்முகத்திற்கு பொறுக்கமுடியாத கோபம்வந்தது. தான் என்ன பேடியா. ஒரு தகப்பனுக்குப் பயந்து மாமனுர் வீட்டில் ஒளிந்துகொள்ளுவேனு என்று நினைத்தான். ஒருநாள் மாமனுர் ஊரின் கணக்கனைச் சந்தித்தான். தன்னை அறியாமலே தன் மனதில் இருந்ததை வெளியிட்டுவிட்டான். வெறும் வாயை மெல்லுகிற கிழவிக்கு அவல் கிடைத்

தால் சும்மா இருப்பாளா என்ற சொற்படி அக்கணக்குப் பிள்ளை சிறிது சிறிதாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றி ஞற்போல அவன் மனதில் நஞ்சு ஊட்டினுன். நீயோ இங்கு வாடுகிருய். மானம் இன்றி மாமனர் வீட்டில் இருக்கிருய். நளமகாராசன் இராச்சியம் இழந்து மாமனர் வீட்டிற்குச் செல்ல மறுத்து காட்டிற்கு ஏகினுன். நீ இவ்வாறு இருத்தல் தகுதியன்று. போதாக் குறைக்கு உன் தம்பி நகரத்தில் கண்டபடி உங்கள் சொத்தை விரயம் செய்து கொண்டிருக்கிருன். அதைக் கேட்க உனக்கு உரிமை இல்லையா. எந்தப்பெரிய சொத்தானுலும் ஒருவன் போதாதா குலத்திற்கு கோடாலிக்காம்பு ஆவதற்கு? நீ உடனே உன் பாகம் கேட்பதுதான் சரி என்று தூபம் போட்டான். பிடித்துக்கொண்டது நெருப்பு. புகைந்து எரியத் தொடங்கிற்று. உடனே அடுத்த நாளே பாகம் வேண்டி ஒரு நோட்டீசு விடப்பட்டது. கணக்கு பிள்ளைக்கு பழுத்தது பத்து வெள்ளிப்பணம். பிளவு ஏற்படுத்துவதற்கு வேறு என்ன வேண்டும்?

வேண்டாதது வந்துவிட்டது.

ஒருநாள் பண்ணுடி சுப்பணகவுண்டர் தன் எளிமை உணவை உண்டுவிட்டு வெற்றிலை பாக்கு அணிந்துகொண்டு திண்ணைமேலே உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்போது தபால்காரன் வெகு வினயத்துடன் வந்து "சாமி, ஒரு ரிஜிஸ்டருங்கோ," என்று ஒரு கடிதம் நீட்டினுன். "ஏதடா ரிஜிஸ்தர்?" என்ருர். இதுவரைக்கும் ரிஜிஸ்தர் தனக்கு வந்ததில்லையே என்று எண்ணி மயங்கினுர். "அடுத்த கிராமத்திலே இருந்து வந்திருக்குதுங்கோ. கையெழுத்து இடுங்கோ." "என்னடா, கையெழுத்து போடவேண்டுமோ?" என்று கேட்டார்.

"ஆமாம் சாமி, ஒண்ணுமில்லையுங்கோ, கையெழுத்து போட்டால் போதுமுங்கோ" என்ருர். கௌண்டரும் கையெழுத்து இட்டுக்கொடுத்தார். அவனும் வணங்கி விட்டுச் சென்றுன்.

அதைப் பிரித்தார். அதன் பொருள் சரியாகத் தெரியவில்லை. கந்தப்பனை தோட்டத்திலிருந்து வரச் சொல்லி வாசிக்கச் சொன்னுர். அது இரண்டாம் மகன் சண்முகத்திடமிருந்து வந்தது. பல காரணங்கள் எல் லாம் காட்டித் தனக்கு இனிமேல் ஒட்டுகுடும்பத்திலிருந்து ஜீவனம் செய்ய முடியாதென்றும் சொத்துக்களைப் பிரித் துத் தனது பாகத்தைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படிக் கும் கண்டிருந்தது. அதைக் கேட்டவுடனே வெடிகுண்டு போட்டாற்போல இருந்தது. "இந்தத் துளியூண்டு பையல் என்னென்ன செய்துவிட்டான்" என்று கதறித் திண்ணையை ஒரு குத்து குத்திஞர். கைதான் வலி யெடுத்தது. கந்தப்பன் "ஐயா, கோபித்துக்கொள்ள வேண்டாம். நன்ருய் யோசித்துச் செய்யவேண்டியதைச் செய்வோம்" என்ருன். பண்ணடிக் கவுண்டருக்கு கோபம் தணிந்தது. என்றுமில்லாக் கோபம் வந்ததே என்று வெட்கப்பட்டார். அன்று முழுதும் அவர் முகம் வாடியது. குடும்பத்தினுடைய கௌரவமே கெட்டுவிட் டது என்று எண்ணிஞர். ஆனல் இதை எவருக்கும் சொல்லவில்லை. வெளிக் காட்டவுமில்லை. மறுநாள் அவ ரும் கந்தப்பனும் நகரத்திற்குப் புறப்பட்டார்கள். அங்கே அந்த குடும்பத்திற்கு வெகுகாலமாக பழகியிருந்த ஒரு வழக்கறிஞரிடம் சென்றுர்கள். அவர் மிக ஒழுக்கமான வர். கடிதத்தை நன்ருக வாசித்துவிட்டு இனி மத்தியஸ் தம் செய்வதில் பயனில்லை. அவனுக்குள்ள பாகத்தை

பிரித்து எறிந்துவிடுங்கள் என்றார். உடனே அவன் பிரித்துக்கொண்டு போவதில் ஆட்சேபனை இல்லை என்றும், அவ்வழக்கறிஞரிடம் வந்து தன் பாகத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் பதில் கொடுக்கப்பட்டது. உடனே இரண்டாம் பேருக்குத் தெரியாமல் குடும்ப சொத்துக்கள் ஒவ்வொரு பகுதியை எடுத்துக்கொண்டு அனுப்பிவிடத் தொடங்கினார்கள். பிரிவினை ஆயிற்று என்று ஊரில் எவர்க்கும் தெரியாது. சௌகரியத்திற்காக தனித் தனி பண்ணையம் நடத்துகிறார்கள் என்று மக்கள் நினைத்தார்கள். இல்லாவிடில் தரகர், வழக்கறிஞர், மாமூல்காரர், கச்சேரி ஆள்கள் முதலியோர் சாப்பிடுவதோடு அரை வாசிச் சொத்தும் தொலைந்திருக்கும். வீண் மனஸ்தாபம் அபவாதம் இவைகளும் நேரிட்டிருக்கும். என்றாலும் பிளவு பிளவுதான்.

குடும்பத்தின் தற்கால நிலை.

சுப்பண்ண கவுண்டர் மறுமொழி கூறாமல் பிரிவினை செய்ததே நன்மையாயிற்று. இல்லாவிடில் வேலப்பன் கண்டபடி திரிந்துக் கடன்பட்டுக்கொண்டே இருப்பான். சண்முகனும் பிறர் பேச்சை கேட்டுக்கொண்டு வம்புச் சண்டைக்கு இழுத்துவிடுவான். 'குலைக்கும் நாய்க்கு பிண்டம் போடு. தானே ஓடிப்போகும்' என்றபடி சொத்துப் பிரித்துக் கொடுத்தவுடனே அவரவர்கள் வெளியே போய்விட்டார்கள். கந்தப்பன்மட்டும் தகப்பனுடன் ஒற்றுமையாக இருந்தான். சுப்பண்ண கவுண்டர் செய்ய வேண்டிய வேலை ஒன்றே இருந்தது. வேலப்பனுக்குத் திருமணச் சடங்குதான். அதற்காக பல இடங்களில் பார்த்து அவனுக்கு உகந்த இடத்தில் பெண்தேடி மணம் செய்வித்தான். திருமணம் ஆனவுடனே அவன் நட

வடிக்கை மாறிவிட்டது. பிறவிக்குணம் போகாதல்லவா. அது கெட்ட வழிமட்டும் அன்று நல்லவழியிலும் செல்லு மன்றோ. தன் கையில் சொத்தும், தன்னைப்பிடித்து அடக்கும் மனைவியும் வந்து சேர்ந்தபிறகு வேலப்பன் ஒழுங்காகக் குடித்தனம் நடத்தினான். ஆகவே மரியாதை காப்பாற்றப்பட்டது.

சண்முகம்தான் சிறிது செலவாளி ஆனான். அதற்குக் காரணம் அவனுடைய மாமனார் வகைருக்களும், கணக் கனுமே ஆவார்கள். கணக்குப்பிள்ளைக்கு உடனே பிரி வினை ஆனது பிடிக்கவில்லை. தன்னை யோசனை கேட்டி ருந்தால் இன்னமும் இரண்டத்தனை சம்பாதித்துக் கொடுத்திருப்பேனே என்று அடிக்கடி சொல்லுவான். இந்தப் பேச்சுக்களினால் யாதொரு பயனும் ஏற்படவில்லை. ஆகவே தன்னாலேதான் இத்தனை சொத்தாவது கிடைத் ததே என்று சொல்லி அதற்குச் சம்பாவனைக்கு அடி போட்டான். அதனை கொடுத்தும் அவனது ஆசை அடங்கவில்லை. மீண்டும் மீண்டும் வில்லங்கங்கள் விளை விக்க எண்ணினான் ஆனால் ஊரில் சுப்பண்ண கவுண் டருக்கு இருக்கும் மட்டில்லாத பெருமையை எண்ணி எதுவும் செய்யச் சண்முகம் பயந்தான். இந்த வகையில் குடும்பம் நடந்துவருகிறது.

சுப்பண்ண கவுண்டருடைய குடும்பம் மாதிரிக் குடும் பம் என்றல்லவோ சொன்னோம். இந்த வகையிலே எல் லாக் குடும்பங்களும் இருந்தன. ஆனால் ஒன்றிரண்டு குடும்பங்கள் அறியாமையினால் கணக்கன் முதலிய துர் மந்திரிகளின் போதனையால் விவகாரங்களில் சிக்கி நாதா ரிகளாகிப் போய்விட்டன. சில குடும்பங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அவைகள் போகலாக

பெரும்பான்மையான குடும்பங்கள் முன்னிருந்த நிலைமையிலே இருந்தன. போருக்குப்பிறகு வெளிநாடுகளுக்குச் சென்ற சில கண்காணிகள் நிரம்பப் பணம் கொண்டுவந்து பழைய குடும்பங்களிலிருந்து பெரும் தொகைகள் கொடுத்து நிலம் வாங்கிக் கொண்டார்கள். பணத்தாசையினால் விற்ற மக்கள் அப்பணத்தை போக்கடித்துவிட்டு கூலியாட்கள் ஆனார்கள். ஆனாலும் ஊர்க்கட்டுப்பாடு மிகவும் மாறவில்லை.

குடும்பத்தின் தத்துவம்.

சுப்பண்ண கவுண்டர் குடும்பத்தில் அவர் இருக்கும் போதே அவருடைய விருப்பத்திற்கு மாறாக எதிர்பாராத பிளவு ஏற்பட்டுச் சொத்துப் பிரிவினை ஆகி முன்னிருந்த செல்வத்தில் நாலில் ஒரு பங்குக்குக் குறுகின செய்தி கேட்க நமக்கே பரிதாபம் ஆக இருக்கிறதல்லவா? இவ்விதமாகவே நமது நாட்டுப்புறங்களில் எத்தனை குடும்பங்கள் பிரிவினைகள் அடைந்து அழிவுற்றன என்பதை ஆராயுங்கால், இந்தப் பத்ததியை மக்கள் ஏன் உண்டாக்கி கொண்டார்களோ என்று வியப்போம். நாட்டில் செழிப்பான குடும்பங்கள் எத்தனைக்கெத்தனை உண்டோ அத்தனைக்கத்தனை மக்களில் செல்வாக்கும் சுகவாழ்வும் குறையாமல் இருக்குமல்லவா? இவ்விதமான வழக்கமும் சட்டமும் என்றைக்கும் இருந்ததா, நடுவில் ஏற்பட்டதா? என்ற ஒரு கேள்வி பிறக்கிறது. பண்டையத் தமிழர் ஆட்சிக்காலத்தில் குடியானவர்கள் மிகவும் செழிப்போடு இருந்தார்கள். நாட்டில் உணவிற்குச் சங்கடமோ இருக்கவில்லை. இப்போதோ சிறு சிறு குடித்தனங்கள் பெருகி எத்தனைப் பாடுபட்டாலும் வயிற்றுக்குப் போதுமான

அளவு உணவு உற்பத்தி இல்லாமல்போனால் இந்த வழக்கத்தை ஏன் நாகரீகத் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பது கேள்வி. தமிழ் நூல்களிலே பெற்றோர் உயிருள்ளபோது பிரிவினை ஏற்பட்டதாக இல்லை. ஒருவனுக்கு ஒரு மகன் பிறந்தவுடனே அம்மகனுக்கு சொத்தில் பாத்தியம் ஏற்பட்டதாக இல்லை. இந்தச்சட்டம் வடநாட்டிலிருந்து ஆங்கிலேயர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டது. அதற்குமுந்தித் தமிழ் அரசர்கள் காலத்திலும், முகமதியர் காலத்திலும் நாட்டுப் பழக்கவழக்கங்களையே ஊர்ச்சபையார் அனுசரித்து வந்தார்கள். பிறகு ஆங்கிலர் வந்தபிறகு முதலில் வங்காளத்தில் நீதிமன்றங்களைத் தொடங்கி அங்கே பண்டிதர்களைக்கொண்டு வடமொழிச் சட்டநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அவைகளே இந்துக்களுடைய சட்டம் என்று சொல்லி அமுல் நடத்தினார்கள். தென்னிந்தியாவிலும் அதே சட்டத்தை இந்துக்களிடைப் புகுத்தினார்கள். தமிழர்களுடைய பழக்கவழக்கங்கள் வேறு என்பதை அவர்கள் அறிந்திலர். இந்த முறையில் வடநாட்டுச் சட்டம் தெற்கே வரச்செய்து வற்புறுத்தத் தமிழர்களும் அவற்றையே கைக்கொள்ள நேரிட்டது. இந்தவகையில் குடும்பம், ஒட்டுக்குடும்பம், பாகமாகாத குடும்பம் என்ற சொற்கள் தெற்கே வந்தன. அவற்றோடு குடும்ப எஜமான், சபிண்ட ஞாதிகள், சமானோதக ஞாதிகள், பிறந்தபோதே உரிமை, பிண்டத்தில் இருந்தபோதே உரிமை முதலிய வைதிக சமயவிதிகள் இங்கே கொண்டுவரப்பட்டன. இவைகளுக்குத் தமிழ்ச்சொற்களே இல்லை. ஆகவே இவைகள் தமிழ்நாட்டில் எவ்வாறு இருந்திருக்க முடியும். பண்டைய சங்கக்காலத்து நூல்களில் இல்லாத வழக்கங்களை வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதால்

அனேக குடும்பங்கள் செல்வாக்கை இழந்தன. நாட்டுச் செல்வமும் குறைவுற்றது.

குடியின் நன்மை நிலை.

மேலும் மற்றொரு சிறந்த கொள்கை தமிழரில் இருந்து, இப்போது பறந்தது. அதுவும் ஆங்கிலர் இறக்குமதி செய்து வற்புறுத்தின சட்டத்தினலேயே தான். தமிழரில் ஒரு மகனுக்குத் திருமணம் ஆனவுடன் அவன் தன் மனைவியுடன் தனிக் குடித்தனம் நடத்தினன். இதனல் அப்புது தம்பதிகளுக்கு நல்ல சுதந்திர வாழ்வு இருந்தது. சம்பாதிக்க வேணுமென்ற ஆர்வமும் இருந்தது. சோம்பேறித்தனம் எவருக்கும் அணுக வழியில்லாமல் இருந்தது. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை மணந்ததும் தனியாகக் குடிவைக்கப்பட்டான். திருத் தொண்டர் புராணத்தில் பரமதத்தனைப் புனிதவதியார் மணந்தும் அவர்களுக்குத் தனிக் குடித்தனம் வைக்கப்பட்டது. இப்போதும் பழங்குடிகளாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் திருமணம் ஆனவுடனே தனிக் குடித்தனம் நடத்துகிருர்கள். இம் முறை எல்லாத் தமிழர்களிடையும் இருந்தது. கொங்கு நாட்டு வேளாளர்களிலும் இருந்தது. அதற்கு அனுகூலமாகச் சீதனங்கள் கொடுக்கப்பட்டன. மேலே கந்தப்பனுக்கு மணம் நடந்த போது கொடுக்கப்பட்ட சீதன விவரங்களை எடுத்துக் கூறியுள்ளோம். அதன்படி ஒரு குடித்தனத்திற்கு ஆகவேண்டிய சாமான் முழுதும் கொடுக்கப்பட்டன. அதன் பொருள் என்ன, புது தம்பதிகள் தனியே குடித்தனம் நடத்தினர்கள் என்பதேயாம். ஆனல் இப்போது எப்படி இருக்கிறது? ஒவ்வொரு மகனும் தனக்கு குடும்பத்தில் உரிமைப் பங்கு உண்டென்று சொல்லிப் பொதுக்

குடும்பத்திலேயே தனக்கு உணவு முதலியவைகள்கிடைக்கும் என்று நம்பித்தன் மனைவியோடு அதிலே உட்காரத் தொடங்குகிறான். குடும்பம் பெருகப்பெருக எத்தனை பேருக்கு என்று சமயல் செய்வது. சில குடும்பங்கள் சத்திரங்கள் போல ஆகிவிட்டன. இதனால் சௌகரியக் குறைவு, வீண் சச்சரவுகள், முதலியவைகளுக்கு இடம் ஏற்படுகிறது. முன்காலத்தின்படி மணம் ஆன மகன் தனியேபோய்க் குடித்தனம்செய்துத் தகப்பன் இறந்த பிறகே சொத்தில் பாத்தியம் கொண்டாடினான். ஒரு குடும்பமும் அழிவும் இழிவும் அடையாது. அவனும் சோம்பேரி ஆகான். ஒருவன் வருத்தப்பட ஒருவன் சுகப்பட ஒருவன் சேமித்து வைக்க ஒருவன் செலவழிக்கக் குடும்பத்தில் எதற்கும் போராட்டமே இருக்கும் இக்காலத்திய செயற்கை இழிவு ஏற்படவேண்டியதில்லை. நமது தமிழ் நாடு பண்டைய பழக்க வழக்கங்களுக்குச் செல்லுவதாகுக!

VII. எங்கள் குழந்தைகள்.

குழந்தைகளின் பெருமை.

எங்கள் குழந்தைகளைப்பற்றித் தனியாக சொல்ல வேண்டும். ஏனெனில் அவர்களைப்போல் எளிய தூய்மையான நடவடிக்கைகளும் குணங்களும் உள்ளவர்கள் உலகத்திலேயே இல்லை என்று பெருமையுடன் கூறுவோம். காலை எழுந்தவுடன் முதிர்ந்த வயதுள்ளவர்கள் ஆண் ஆனாலும் சரி, பெண்ணானாலும் சரி, குழந்தையின் முகத்தைப் பார்த்துவிட்டுத்தான் வேறு காரியம் செய்ய நினைப்பார்கள். குழந்தை பேசும் மழலைச் சொல்லும் தத்தித்தத்தி நடக்கும் குறுகிய நடையும் பெரிய புலவர் பெருமக்களையும் மகிழ்விக்கும் என்றால் தாத்தாக்களையும், பாட்டிமார்களையும் மகிழ்விக்காதோ

> " குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர் "

என்று ஏன் திருவள்ளுவர் கூறவேண்டும்? இன்றைக்கும் அதையே நமது மக்களும் நினைக்கிறார்கள். ஆனால் அவரைப்போலச் சொல்ல முடியவில்லை. நான் ஒரு நாள் ஒரு பெரிய ஜமீன்தாரரைப் பேட்டிகாணச் சென்றேன். அவரைச் சாதாரண மக்கள் பார்ப்பது அரிதாம். தன் திருவோலக்க மண்டபத்தில் அரியாசனத்தின்மீது அமர்ந்து என்னை வரவேற்றி அருளினார். தன் தர்ப்பாருக்குரிய உடை அணிகளை அணிந்து வீற்றிருந்தார். பார்க்கச் செல்லுகிறவர்கள், அதற்கு வேண்டிய தர்ப்பார் ஆடை முதலியவைகளை அணிந்துதான் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட தர்ப்பார் கோலத்திலே அந்தத் திருவோலக்க மண்டபத்திலே நான் என்ன கண்

டேன். அந்த ஜமீன்தாரர் அருகிலே அவருடைய குழந்தை சிறு துணியும் உடுத்தாமல் நின்றுகொண்டிருந்தது. இத்தனை ஆடம்பர விதிகளை ஏற்படுத்தின இந்த மன்னர் குழந்தைக்கு ஏன் விதி விலக்கு அனுமதித்தார் என்று எண்ணினேன். நாங்கள் பல அரிய செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் அந்த அம்மணக் குழந்தை அவர் மடிமீது ஏறிக்கொண்டது. அவருடைய விலையுயர்ந்த ஆடைகளைப் பாழ்ப்படுத்தியது. ஒரு சிறு கோபமும்கொள்ளாமல் தன் மடியின்மீது நன்றாய் உட்காரவைத்து ஒரு முத்தம் இட்டார். அப்போது நான் உணர்ந்ததோ, எப்படிப்பட்ட கடிய விதிகளை அனுசரிப்பவனுக்கும் குழந்தை என்றால் விதிவிலக்கு உண்டு என்பதேயாம். இல்லாவிடில்

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூ நாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்

சொன்ன கலையின் துறையனைத்து தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்
சிறுகுதலைக் கேளாச் செவி.

என்று புகழேந்திப்புலவர் கூறுவாரோ? ஆகவே எங்கள் ஊர்ப் பெரியார்கள் குழந்தைகளிடம் தனி அன்பு காட்டினால் அது ஒரு வியப்பன்று. முதியோர்மட்டும் அல்ல. நடுவயதினரும் பள்ளி வாத்தியாரும் குழந்தைகளிடம் அன்பு பாராட்டுவார்கள். அப்படிப்பட்ட இளங்குழந்தைகள் எல்லாக் குடும்பங்களிடம் இருப்பார்கள். அவர்

களே எங்கள் சொத்து என்றுகூட சிலர் சொல்லி மகிழ் வார்கள்.

ஆணும், பெண்ணும்.

எங்களூர் குழந்தைகளிலே ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் மொத்தத்தில் சமமாகத்தான் இருப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்தில் ஆண் மிகுதி யாக இருக்கும். மற்றொரு குடும்பத்தில் பெண் மிகுதி யாக இருக்கும். ஆனால் ஒட்டு மொத்தத்தில் இருபாலா ரும் சமமாகவே இருப்பார்கள். அதுபோலவே அவர்கள் இடத்தில் எங்களுக்குள்ள அன்பும் இருக்கும். பெண் களை அடுப்பூதத்தான் அனுப்பவேண்டியிருக்கும் என்று சொல்லிச் சில ஊரார் அவர்களை மதிப்பதில்லை. ஆண்கள் தோட்டவேலைகளை நன்றாகச்செய்வார்கள், ஆகவே அவர் களை நன்றாகப் பாராட்டுவோம் என்று வேறு சில ஊரார் கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவ் வாறு பேதஉணர்ச்சி இல்லாத எங்கள் போஷிப்பை நீங்கள் அறியவேண்டும் என்றால் எங்கள் திண்ணைப் பாடசாலையைப் பாருங்கள். எத்தனை ஆண்பிள்ளைகள் வாசிக்கிறார்களோ அத்தனைப் பெண்பிள்ளைகளும் அங்கே உண்டு. எங்கள் ஊர் வாத்தியார் பெண்பிள்ளைகளே ஆண்களைவிட நன்றாக வாசிக்கிறார்கள் என்றும்கூடக் கூறுவார். இதுமட்டுமோ எங்கள்தோட்டங்களில் பண்ணை யாட்களிலே ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் வேலை செய்வார்கள். மற்றொன்று சிறப்பாகக் கூறவேண்டும், எங்கள் பண்ணாடிகள் வீடுகளிலே ஆண்மக்கள் மட்டும் தோட்ட மேற்பார்வைக்குச் செல்லுகிறார்கள் என்பதில்லை. வீட்டுவேலைகள் முழுதும் செய்துவிட்டுப் பெண்மக்களும் உடனே தோட்டங்களுக்குச் சென்று வேலைசெய்வார்கள்.

பசுமாடு, எருமை, ஆட்டுக்குட்டிகள், கோழிகள் இவை களை பெண்மக்களே கவனித்துவருகிறார்கள். ஆகவே ஆண்மக்கள் உழவிற்கு எத்தனை எத்தனை பொறுப்பான வர்களோ அத்தனைப் பொருப்பைப் பெண்மக்களும் ஏற் றுக்கொள்ளுகிறார்கள். இதனைக்கண்டே இருபாலர் களும் சமமாக மதிக்கப்படுகிறார்கள். சில ஊர்களில் ஆண்கள் இரண்டு மூன்று மனைவியரை மணந்துகொள்ளு கிறார்கள். இதனாலே பெண்கள் குறைவாக்கிவிடுகிறார் கள். எங்கள் ஊரிலோ இரு மனைவியரைகொண்ட ஒரு குடும்பமும் கிடையாது. ஆகவே எங்கள் ஊர் மற்ற நாட் டார்களைப்போலப் பேதஉணர்ச்சி கொண்டதல்ல. இந்த எண்ணம் சிறு குழந்தையிலிருந்தே ஏற்பட்டிருக்கிறது என்று அறியவேண்டும்.

எளிமை நெஞ்சு.

குழந்தை நெஞ்சு மிகத் தூய்மையானது. களங்கம் அற்றது பளிங்கு போன்றது. பளிங்கு வெண்மையாக இருக்கும். யாதொரு கலப்பும் இல்லாதது. ஆனால் அதன் அருகில் வேறு நிறங்களை சேர்த்திவையுங்கள். பளிங்கும் அடுத்த கல்லின் நிறத்தை காட்டும். அது போல் குழந்தை உள்ளம் மிக தூய்மையாக இருக்கும். அதன் அருகில் சேரும் மக்களுடைய குணங்களை அது பெற்றுக்கொள்ளும். ஆகவே குழந்தைகளை நாம் எப்ப டிப்பட்ட சூழ்நிலையில் வைத்துப் போற்றுகிறோமோ அந் தச் சூழ்நிலையொத்து அவைகள் வளருகின்றன. பின்னா ளில் நல்லவனோ கெட்டவனோ செய்வது அவைகள் பெறும் சூழ்நிலைதான். இதனை எங்கள் ஊர் வாத்தியார் வெகு உருக்கமாக எடுத்துக்காட்டுவார். தன்னிடம் படிக் கும் பிள்ளைகளைக் களிமண் கொண்டுவரச் சொல்லுவார்.

அம்மண்ணை நீரால் நன்ருகக் குழைக்கும்படி சொல்லு வார். அது குயவன் பிசைந்த களிபோல் ஆகிவிடும். அதனைச் சிறு உருண்டைகளாகச் செய்யச் சொல்லி ஒவ் வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு உருண்டை கொடுப்பார். அவர்களை அவ்வுருண்டைகளைக் கொண்டு எலி, புலி, ஆடு, மாடு முதலியவைகளைச் செய்யச் சொல்லுவார். அவர்களும் செய்வார்கள். பிறகு அவைகளைக் கலைக்கச் செய்து சிறிது நீர்விட்டுப் பிசைந்து வேறு உருவங்க ளாக செய்யச் சொல்லுவார். அப்படியே அவர்கள் செய்து காண்பிப்பார்கள். அதாவது பச்சையாக இருக் கும்போது எந்த உரு வேண்டுமாளுலும் ஆகும். எலி புலி ஆகும். புலி எலி ஆகும். ஆனல் ஒருமுறை செய்து அப்படியே சிலநாள் வைத்துவிட்டால் அவைகள் உலர்ந்து கெட்டியாகிவிடும். அப்போது புலி புலிதான், எலி எலிதான். மாற்றந் தொடங்கினல் மாருது. உடைந் துதான் போகும். இதனை வாத்தியார் ஊராருக்கு அடிக் கடி எடுத்துக் காட்டிப் பிள்ளைகளை அதன் படிப்பினைப் படி நடத்தும்படி உபதேசிப்பார். பிள்ளைகள் குழந்தை கள் ஆக இருக்கும்போது தூயநெஞ்சு படைத்திருப்பார் கள். பெற்ருேர்கள் அவர்களுடைய நெஞ்சில் எந்த சூழ் நிலை புகுத்துகிருர்களோ அதை ஒட்டி அதன் வளர்ச்சி யும் இருக்கிறது. ஒரு குழந்தையைப் புலியாகவும் எலி யாகவும் செய்யப் பெற்ருேர்களுக்கு ஆற்றல் உண்டு என்று அடிக்கடி வாத்தியார் பெற்ருேர்களைக் காணும் போது எல்லாம் சொல்லுவார். ஒருநாள் ஒரு சிறுவனின் தகப்பனர் ‘சுவாமி பெற்ருேர்களுக்கு மட்டும் சூழ்நிலை மாற்றும் சக்தி உண்டு என்றீரே, உமக்கு இல்லையா? உங்கள் பிரம்பைக்கொண்டு பிள்ளைகளைப் பயங்காளிகள் ஆக்குவதில்லையா’ என்று கேட்டு வைத்தார். அது

முதல் இக்கதையை சொல்லுவதை வாத்தியார் நிறுத்தி விட்டார்.

சிறந்த அணி எது?

" கற்றோர்க்கு கல்வி நலனே கலன் அல்லால்
மற்றோர் அணிகலன் வேண்டாவாம் "

என்றார் குமரகுருபரர். ஆகவே, நமது தாய்மார்கள் நிரம்ப அணிகளைப் பூண்டுத் திருடர்களுக்கு பயந்து சாவதைவிட கல்விகற்று அதையே அணியாகக் கொள்வதே சிறந்தது என்பது அதன் கருத்து ஆகும். ஆனால் மற்றொரு பெருமாட்டி பெண்களுக்கு எந்த அணிகலன் சிறந்தது என்று கூறினாள் என்று உரைப்போம். சுமார் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னர், உரோமாபுரியில் ஒரு பெயர் பெற்ற செல்வச் சீமாட்டி இருந்தாள். அவளுக்கு இரண்டு அழகிய மதியிற் சிறந்த ஆண் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களை மிகச் செல்வத்தோடும், நற்படிப்புக்கொடுத்தும் வளர்த்திவந்தாள். ஒருநாள் அவ்விரு குழந்தைகளையும் அருகில் அழைத்துக்கொண்டு முத்தமிட்டு, உச்சி மோந்துப் பிறகு அவர்கள் மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருக்க, அதனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அச்சீமாட்டியைப் பார்க்க மற்றொரு சீமாட்டி வந்தாள். வந்தவள் நிரம்ப நகை நட்டுகளை அணிந்து ஆடம்பரமான உடைகளைத் தரித்துக்கொண்டிருந்தாள். வந்தவளை மிகுந்த அன்புடன் அவ்வீட்டுப் பெருமாட்டி வரவேற்று ஆசனத்தில் அமரச் சொன்னாள். வந்தவளும் மிகுந்த மகிழ்ச்சியோடு உட்கார்ந்தாள். சிறிது நேரம் உடல் நலங்களைப்பற்றி பேசிவிட்டு வந்தவள்,

"அம்மா, நீங்கள் பெரும் செல்வச் சீமாட்டியாயிற்றே தங்களிடம் அருமையான விலை பொருந்திய அணிகலன் இருக்குமே, அவைகளை அணியாது உடம்பை வெறு மனே வைத்திருக்கிறீர்களே! என்ன காரணமோ?" என்றாள்.

"அம்மா, தாங்கள் நினைக்கும்படியான அந்த மண மற்ற அணிகளின்மீது எனக்கு மதிப்பு வருவது இல்லை" என்று விடைதந்தாள்.

"இந்த அணிகலன்கள் பிடிக்காவிட்டால் எந்த அணிகலன் தங்களுக்கு மணம் தருபவைகளாக விளங்கி இருந்து தங்கள் பிரீதியை வசப்படுத்துகின்றனவோ? நான் அவைகளைக்கண்டு மகிழலாமோ!" என்று வினயத் துடன் கேட்டாள்.

"ஆகா, மகிழலாம்" என்று சொல்லி அருகிலே விளையாடிக்கொண்டிருந்த இரண்டு குழந்தைகளையும் அழைத்து மடிமீது இருத்தி "இவர்களே மணம்பொருந் திய அணிகலன்கள்" என்று அகமகிழ்ச்சியுடன் கூறி னாள். வந்த சீமாட்டி அவ்விளைஞர்களின் ஒளி பொருந் திய முகங்களைக் கண்டு மிக மகிழ்ந்து தான் கேட்ட கேள் விக்காக வெட்கம் அடைந்து விடை பெற்றுச் சென்றா ளாம். அவ்விரு இளைஞர்களும் பிற்காலத்தில் நாட்டில் சிறந்த அமைச்சர்கள் ஆனார்களாம். இந்த இளம் குழவி களைப்போலவே எங்கள் ஊரிலும் குழந்தைகளைப் பெரி யோர்கள் வாழ்த்துவார்கள்.

சில கொடிய சடங்குகள்.

குழந்தை பிறந்ததும் அதைக்குளிப்பாட்டி உலர்ந்த சூடான கம்பளிப்போர்வையில் மேற்கு நாட்டார் வைப்பார்

கள். பிறகு அதற்கு சர்க்கரை கலந்த நன்னீரும் தாய்ப் பாலும் கொடுப்பார்கள். நமது நாட்டுப்புறங்களிலோ நாட்டு மருத்துவச்சியினுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சீதம்வராமல் காக்க நெற்றி, இருகை, இருகால், வயிறு, இவைகளில், பழுக்ககாய்ச்சின ஊசியால் சூடு இடுவார்கள். குழந்தை அலறி அழுதால் மிக மகிழ்ச்சி. பிறகு விளக்கெண்ணெய் அடிக்கடி உள்ளுக்கு விடுவார்கள். இந்த விதத்தில் இனிமையாகச்செய்யக்கூடிய ஒரு போஷிப்பை மிக்கக்கடுமையாகச்செய்வார்கள். குழந்தை பெற பிரசவச்சாலைக்கு எடுத்துபோக நாட்டுமக்களுக்குப் பயம். ஒரு குழந்தைக்கு இரண்டு குழந்தைகள் தவறிப் போய் மூன்றாவது குழந்தை பிறந்தால் அதன் மூக்கைக் குத்தி ஒரு சிறு வளையம் இட்டு குப்பன், குப்பி என்று பெயர் இடுவார்கள். இப்படிச்செய்தால் அக்குழந்தையும் இறவாது பிழைக்குமாம். இந்த மூடக்கொள்கை எப்போது தொலையுமோ அறிகிலோம். குழந்தை பிறக்கும் வீடு இருட்டாக இருக்கும். நல்ல காற்றோட்டம் இருக்காது. அழுக்குச் சாமான்கள் நிரம்ப இருக்கும். இதன் நடுவிலே தாயாருக்கு பட்டினிபோடுவதே வழக்கம். குழந்தைக்கு நல்ல பால் வேண்டியபோது தாய்க்கு நிரம்பத் தூய்மையான உணவிற்கு மாறாக பட்டினியும் மருந்துக்களுமே கொடுப்பார்கள். இதனாலே தாயும் சௌக்கியம் பெறுவதில்லை. குழந்தையும் பிழைப்பது இல்லை. தப்பித் தவறி குழந்தை பிழைத்தால் அதற்கு மாதத்திற்குப் பல தடவை எண்ணெய் கொடுத்து வாட்டுவார்கள். தாயும் நல்ல திடதேகம் பெற பலமாதங்கள் பிடிக்கும். கிராமாந்திரங்களில் பயிற்சி பெற்ற மருத்துவச்சிகள் இருந்தால் நல்லது. கிராமங்களிலே குடித்தனம் செய்து எப்போதும் வேலை செய்துகொண்டிருக்கிற பெண்பாலர்களுக்கு மருத்

துவச்சியின் சகாயம் வேண்டியதே இல்லை. குழந்தையையும் வெகு சுலபத்தில் பெற்றுவிடுவாள். தற்கால சிறுமிகளுக்குத்தான் மருத்துவச்சியின் சகாயம்வேண்டும். குழந்தைக்கு ஒன்றிரண்டு ஆண்டுகள் ஆனவுடனே மயிர்களையக் கோயிலுக்கு அதை எடுத்துச்செல்வார்கள். அப்போது சிலர் காவடி எடுப்பார்கள். இதற்கு மிகுதியாகச் செலவு ஆகும். ஆனாலும் அது ஒரு உல்லாச பிரயாணமாகவும் உண்டு. மருதமலை, பழனி, திருப்பதி முதலிய இடங்களுக்கு காவடி எடுத்துச்சிந்து பாடிக்கொண்டு போதல் மிகவும் உணர்ச்சி ததும்பும்செயல் ஆகும். அப்போது மயிர்களைவதோடு காது குத்தலும் ஏற்படும். அக்காலத்தில் சீர்செய்து மொய்வைப்பதுண்டு. குழந்தைக்கு முந்தியேபேர்வைக்காதிருந்தால் அப்போது பெயரும் வைக்கப்படும்.

பெயர்வைத்தல் முதலிய சில சடங்குகள்.

நாட்டுபுறங்களில் பெயர் வைப்பதே ஒரு சுவைதரத்தக்க ஒருமுறை எனலாம். ஆங்கிலமுறைப்போல், கல். மண் என்ற பொருளற்ற பெயர்களை வைப்பதில்லை, மேலும், நகரப்பிராமணர்களைப்போல் நட்சத்திரப்பொருத்தம் பார்த்தும் வைப்பதில்லை. ஆனால் இக்காலத்தில் அந்த நாகரீகம் புகுந்துவருகிறது. சாதாரணமாகப் பாட்டன் பெயரைப்பேரனுக்கு வைப்பதே வழக்கம். முதற்பிள்ளை பாட்டன் பெயரைப் பெற்றுவிட்டால் மற்றப் பிள்ளைக்கோ அடுத்திருக்கும் கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமியின் பெயரைவைப்பார்கள். அடுத்தவன் பெயரோ முருகக்கடவுள் பெயர்களில் ஒன்றாக இருக்கும் அதுவும் தவறினால் பெயர் போன கோயில்களின் பெயரில் ஒன்றாக இருக்கும். அதும் தவறினால் சில தமிழ்ப்

பொதுப்பெயர்களாக இருக்கும். சிலவைணவப்பெயர்களும் உண்டு. அவைகள் திருப்பதி, சீரங்கம் முதலிய தலப்பெயர்களாக இருக்கும். பெரும்பாலும் பெயர்களைக் கொண்டே ஒருவனுடைய நாடும் கூறமுடியும். மருதாசலம், வெள்ளியங்கிரி, பட்டிலிங்கம், சென்னிமலை, சிவமலை, திரிமூர்த்தி முதலிய பெயர்கள் கொங்கு நாட்டைக் குறிக்கும். பெண்களின் பெயர்களில் பச்சையம்மாள், மருதாயி, கோணியம்மாள் முதலிய பெயர்கள் கொங்குப் பெயர்களே. ஆனால் பழனி, சிதம்பரம், சீரங்கம், காஞ்சி, அண்ணாமலை, திருப்பதி, மதுரை முதலிய பெயர்கள் தமிழ்நாடு முழுதும் பொதுவாக இருக்கக்கூடியவைகளே. நாட்டுப்புற மக்களிடை பொதுவாக இறைவன் பெயர்களே காணலாம். அன்றி ஏனையபெயர்களோ சுத்தத் தமிழ்ப்பெயர்களாகவே இருக்கும். ஆனால் பிராமணர்களோ பெரும் பாலும் வடமொழிப்பெயர்களையேவைப்பார்கள். வைணவர்களும் அதேமுறையைக் கொள்வார்கள். பெண்களிலே கிராமதேவதைகளின் பெயர்கள் மிகுதியாக இருக்கும். கோணி, பேச்சி, காளி, மாரி, சடைச்சி, மகாளி, வீராயி முதலியவைகள் தாழ்ந்தவகுப்பார் வைத்துக்கொள்ளுபவைகள். உயிர்களின் பெயர்களில் நாகப்பன், நாகி முதலியவைகள் மிகவுமுண்டு. பணக்காரர்களில் நாமகரணம் செய்தலைப்போன்ற சடங்குகள் கிராமாந்திரங்களில் இல்லை. மேலும் பாடசாலையில் தொடங்க வைக்கும் சடங்கும் கிடையாது. தற்காலத்திலோ பெயர் வைப்பதிலும் மாறுதல் ஏற்பட்டு வருகிறது. ஆண் பிள்ளைகளுக்கு வடமொழிப்பெயர்கள் மிகுதியாகவைக்கத் தொடங்குவர். பெயர் வாய் நிறம்ப இருக்கவேண்டுமாம். தமிழ்ப்பெயர்கள் வாய் நிறம்புவது இல்லையாம். வடமொழி இதிகாசப்புராணப்பெயர்கள் இப்போது கிராமாந்

திரங்களிலும் புகுந்து விட்டன. அதைப்போலவே பெண் களின் பெயர்களும் மாறத்தொடங்கிவிட்டன. வடநாட்டுப் பெயர்களேயன்றி ஒலிப்படங்களில் வரும் நாடகத்தாரகை மணிகளின் பெயர்கள் பட்டிக்காட்டிலும் புகுந்துவிட்டன. அவைகளைப் பழையவர்கள் உச்சரிப்பதை ஒரு முறை கேட்டுவிட்டால் என்ன பரமானந்தமாக இருக்கும்! கேட்டுப்பாருங்கள்.

நோய் பரிகாரம்.

"குழவி பிணியின்றி வாழ்தல் இனிது"

என்றார் பூதஞ்சேந்தனார் என்ற சங்கப்புலவர். இதனாலேயே குழந்தைப்பிணிகள் அந்நாள்களிலே மிகுதியாக இருந்தனவோ என்ற ஐயம் பிறக்கிறது. நாட்டுப்புறங் களிலே குழந்தைப்பிணிகள் மிகுதியும் வருவதுண்டு. சிறப்பாக சிறங்கு, கண்நோய், அம்மை முதலியவைகளே மிகுதி. சிறங்கு அசுத்தத்தினாலே வருவதன்றி வேறல்ல. அது தொத்துநோயாக ஒட்டிக்கொள்வதும் உண்டு. கண் நோயும் அப்படியே. ஆனால் அம்மைதான் மிகக் கொடிய நோய். குழந்தைகள் மிகுதியாக இறப்பதுண்டு. அன்றி பிழைத்துக்கொண்டாலோ குழந்தைகளுக்கு நிரந்தரமான ஊனங்கள் ஏற்பட்டுவருகின்றன, கண்களில் வெள்ளை, முழுதும் குருடு, இவைகள் மிகுதியாகக் காணலாம். முகம் முழுதும் தழும்புகள் ஏற்பட்டு விகாரம் ஆவதும் உண்டு. இவ்வித நோய்கள்வந்தால் மருந்து உண்பதில்லை. கிராம தேவதையாகிய மாரியம்மனுக்கு வேண்டுதலை செய்து கொள்ளுவார்கள். இந்தக் காலத்தில் அம்மை குத்தும் வழக்கம் நிரந்தரமாகிவிட்டது. ஆகவே வைசூரியின் மும்முரம் தணிந்துவிட்டது. ஆனாலும் வேண்டுதல் குறையவில்லை. அம்மை ஊரில் தோன்றிவிட்டால் மாரி

அம்மன் கோயில் பூசாரிக்குக் கொண்டாட்டம் தான். எத்தனை இளநீர், எத்தனை பனங்கற்கண்டு, எத்தனை காணிக்கை சொல்லமுடியாது. அம்மை சௌக்கியமாகிவிட்டாலோ மீண்டும் ஒருமுறை பூசைகள், காவடிகள், கோழி, ஆடு, பலி இடுதல் முதலியன நடைபெறும். ஊன் உண்ணுத சைவ வைணவர்களும் மாரியம்மனுக்கு பலி கொடுக்காமல் இருக்கமாட்டார்கள். இவ்விதம் பலி வாங்கும் தேவதைகள் தென்நாட்டில் மிக உண்டு. கொங்கு நாட்டில் பெயர்போனவை சூடலைமாரி, குலக்கல்மாரி, வெள்ளைக் கோயில் நாட்டுராயன் முதலியவைகள். பூசாரிகள் இதற்காகச் செய்யும் இரகசியமான பிரசாரம் மிகப் பெரியது. இப்பலியிடலை நிறுத்துவதற்குச் சைவர்கள் செய்த பிரசாரத்தை முற்றிலும் தடுத்துவிட்டார்கள். இப்போது இந்த முறையில் அரசியல் அக்கரை எடுத்துக் கொள்ளுவதினுல் காரியம் வெற்றிபெற்று வருகிறது. பலி கொடுப்பதற்குப் பதிலாகச் சுகாதார வசதிகள்செய்தால் குழந்தைகள் அபாயமின்றிப் பிழைக்க முடியும். அதனை நாட்டுப்புறத்து மக்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளுவார்களோ என்பது சந்தேகம்.

ஆடையணிகள்.

குழந்தைகளின் ஆடையணிகள் மேல் நாட்டைப் போல மிகுதியாகச் சிறப்புப் பெறவில்லை. சிறுவர்கள் 4, 5 வயதுவரை ஒன்றும் அணியமாட்டார்கள். பிறகு ஒரு சொக்காய் ஏறும். 7, 8 வயதாகையில் இடுப்பில் ஒரு துண்டு ஏறும். நாட்டில் துணிப்பஞ்சம் இருக்கும் போது வேறு எதையும் எதிர்பார்க்க வழியில்லை. ஆண் பிள்ளைகள் நகை அணிவது அருமை. பணக்காரப் பிள்ளைகள் கைக்காப்பு, கால் காப்பு அணிவார்கள். காது

குத்தியிருந்தால் ஒரு சிறு தளுக்கு அணிந்துகொள்ளு வார்கள். இடுப்பில் அரைஞாண் இருக்கும். பணக்கா ரர்கள் வெள்ளி, பொன் அறைஞாண் அணிவார்கள். ஏழைகள் கருங்கயிறு கட்டுவார்கள். அனேகமாக ஆறு வயதானவுடன் ஒரு சிறிய கோவணம் கட்டிக்கொள்ளு வார்கள். இக்காலத்திலோ கோவணம் போய் அரைச் சராய் வந்துவிட்டது. பெண்பிள்ளைகள் 5 வயதுவரை யில் அம்மணமாகத் திரிவார்கள். இடுப்பில் ஒரு அரை ஞாணும் அதில் ஒரு அரைமூடியும் கட்டியிருக்கும். பிறகு சிறு பாவாடை கட்டுவார்கள். மேலே ஒரு சிறு சொக் காய் அணிவார்கள். காதில் ஒரு சிறு தளுக்கு இருக்கும்.

ஆண்பிள்ளைகள் தலையில் குடுமி வைத்திருப்பார் கள். இப்போதோ அதைக் கத்தரித்துவிட்டு எண் ணெய் தடவிச் சீவிவிடுவார்கள். பெண்பிள்ளைகள் தலை வளர்த்திவிடுவார்கள். நன்ருய் வளரும்பொருட்டு தலை யை இரண்டு மூன்றுதரம் சிறைத்துவிட்டுப் பின்தான் வளர்த்திவிடுவது வழக்கம். சிறிது வளர்ந்ததும் எண் ணெய்விட்டு நீவிச் சிறு சடைபின்னித் தொங்கவிடுவார் கள். பெண்கள் கையில் வளையலும் காலில் காப்பும் அணிவார்கள். சிலர் பதக்கமும் தொங்கவிடுவார்கள். ஐம்படைத்தாலி கட்டுவது முன்னுளில் வழக்கமாக இருந் தது. இப்போது புலித்தாலி சிலபேர் கட்டுவதுண்டு. சைவர்கள் ஆண்பிள்ளைகளுக்கு உருத்திராக்க மணி கட் டுவதுண்டு. இப்போது இல்லை, காலம் மாறிவருகிறது. நகரத்து நாகரீகம் நாட்டுப்புறத்துப் பிள்ளைகளின் ஆடை அணிகளிலும் புகுந்துவிட்டது. பெண்பிள்ளைகள் பாவா டை அணிவதற்கு பதிலாக வடநாட்டில் சராய் அணிவார் கள். இந்தப் போருக்குப்பிறகு வடநாட்டிலிருந்து மக்

கள் தெற்கே ஓடிவந்து குடி புகவே, அவர்களைப் பார்த்துச் சில பணக்காரர்கள் தங்கள் பெண்களுக்கு சராய் அணிவித்து அழகு பார்க்கிருர்கள்.

ஆண்பிள்ளைகள் விளையாட்டு.

ஆண்பிள்ளைகள் ஐந்து வயதுவரைக்கும் சிறு பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவார்கள், அப்பொம்மைகள் துணியாலும், மரத்தாலும், பீங்காளுலும் செய்யப்பட்டிருக்கும். மேலும் சிறு குழல் சலங்கை முதலிய விளையாட்டுப் பொருள்களும் வைத்து விளையாடுவார்கள், அப்பொருள்கள் பெரும்பாலும் கோயில் திருவிழாக்களிலே விற்பதுண்டு. அவைகளை அங்கே வாங்கிக்கொண்டு வீடு செல்லுவார்கள். சிறிது வயதுவந்த பிற்பாடு அவர்கள் கோலியாடல், பம்பரம் சுற்றுதல், கறங்கு ஆடுதல், காற்ருடி விடுதல் முதலிய பலவகை ஆட்டங்களில் ஈடுபடுவார்கள்,

கோலியாட்டத்தில் சிறுவர்களுக்கு மிகப்பிரீதி. காலை முதற்கொண்டு மாலைவரை சலிக்காமல் ஆடுவார்கள். கோலி அல்லது குண்டு அரை அங்குலம் முதற்கொண்டு ஒரு அங்குலம்வரை குறுக்களவு கொண்டது. அதனை மாக்கல்லிலும், கண்ணுடியிலும், இரும்பிலும் செய்வார்கள். அவைகள் சில்லறைக்கடைகளில் கிடைக்கும் அதனை மூவகையாக ஆடுவதுண்டு. ஒன்று கையால் எறிவதும், மற்ருென்று விரலை வளைத்து அடிப்பதும். மூன்ருவது சுண்டுவதும் ஆக இவ்வாறு குண்டை எறிந்து ஒரு குழியில் போடுவதும், எதிரி குண்டை அடிப்பதும் ஆகும். இவ்வாட்டத்தில் குழியில் விழச்செய்பவன் வெல்வான். மற்றவன் தோற்பான். ஒரு குழி, இரு குழி, முக்குழி, கரைக்குழி முதலிய பல்வகை ஆட்டங்

கள் உண்டு. வென்றவனுக்குத் தோற்றவன் பந்தயம் கட்டவேண்டும். பண்டிகை நாட்களில் இவ்வாட்டத்தில் காசு வைத்து ஆடுவதுண்டு.

இனி பம்பரம் ஆட்டுதல் உலகமெங்கும் உள்ள ஒரு ஆட்டம். அதற்குப் பழக்கம்வேண்டும். பம்பரம் மரத்தால் செய்தது. மேலே பருமனாகவும் அடியில் நுனியாகவும் இருக்கும். நுனியிலே ஒரு இரும்பு ஆணி ஏற்றியிருக்கும். ஒரு கயிற்றால் ஆகிய சாட்டையால் சுற்றி வீசினால் பம்பரம் மிகவும் விரைவாக ஆணியின்மேல் சுற்றும். பம்பரம் ஆட்டத்திலும் யாருடைய பம்பரம் வெல்லுகிறதோ அவனுக்கு பந்தயம் சேரும். சிலபேர் வெகு நேரம் ஆட்டிவைப்பார்கள். பம்பர ஆட்டம் முன்நாளில் வெகு மும்மரமாக ஆடப்பெற்றது. அதனால் ஏற்பட்ட கோபத்தில் விளைந்தது பல்நாட்டு வீரப்போர். அப்போரில் தீங்கற்ற விளையாட்டில் தீங்கு விளைந்தது.

கறங்கு ஆடுதல் என்பது ஓலை நறுக்குகளை காற்றில் விட்டு அதனைச் சுற்றச் செய்தல். காற்றாடி சதுரம் முதலாகப் பலவகைகளிலும் காகிதத்தை ஒட்டி ஆகாயத்தில் பறக்கவிடுதல். இதிலும் பந்தயப்போட்டி உண்டு. பெரிய கலகங்களும் ஏற்படுவதுண்டு. இதைக் கண்டு தான் ஆகாயக்கப்பல் செய்யப்பட்டது. இனிக் கரையாட்டம் பல அறைகள்போல் நிலத்தில் கரைகள் போட்டு அதில் காய் எறிந்து மேல் ஏறுவது. இதில் சிறு மக்களுக்கு மிகப்பிரியம்.

பெண்பிள்ளைகள் விளையாட்டு.

ஆண்பிள்ளைகள் விளையாட்டு பெரும்பாலும் தெருவிலும், வெளியிடங்களிலும் போகும். பெண்பிள்ளைகள்

விளையாட்டோ வீட்டிற்குள்ளே அடங்கி நிற்கும். ஐந் தாறு வயதுமட்டும் சிறு பொம்மைகளை வைத்து விளை யாடுவார்கள். பொம்மைகள் மரத்தாலும், துணியாலும் செய்யப்பட்டிருக்கும். பெண்களுடைய மனப்போக்கு சிறு குழந்தையிலிருந்து தெரியும். சிறிது வயதுவந்த வர்கள் ஆண் பெண் பொம்மைகளை வைத்து கலியாணம் நலங்கு இவைகள் செய்வதாக விளையாடுவார்கள். மண் ணில் சிறு வீடுகளைக்கட்டி அங்கே அடுப்பு கட்டி அதில் உலைவைத்து சோறு ஆக்குவதைப்போல் விளையாடுவார் கள். இதனைப் புலவர்கள் 'சிற்றில்' என்று வெகு அழ காக வருணிப்பார்கள். "தேமாங்கனியில் அடுப்ப மைத்து" என்ற திருப்போரூர்ப் பிள்ளைத்தமிழில் வெகு அழகாக இவ்விளையாட்டு அமைந்திருப்பதைப் படித்துப் பாருங்கள்.

பொதுவாகப் பெண் குழந்தைகள் ஆடும் விளையாட் டுக்களில் கல்விளையாட்டு, விரல் வைத்தாடல், நாலுமூலைத் தாய்ச்சி, தாயம் ஆட்டம், புலியும் ஆடும், கண்ணும்பூச்சி, இருப்புப்பாதை வண்டி, குந்தியாட்டம், கரையாட்டம், கழஞ்சிக்காய் ஆட்டம், பல கறை ஆட்டம், பல கையாட் டம், காயெறி ஆட்டம் முதலியன. இவைகளில் பெரும் பாலும் பாட்டுகளோடு இணைத்து ஆடுவார்கள். சிறிது வயதாகில் பந்து அடித்தலும் உண்டு. இவ்வாட்டங் களால் கை கால்களுக்கு வலுவு ஏற்படுவதன்றி உற்சாக மும் விளையும். இன்னிசைக்குத் தக்க பயிற்சியும் ஆர்வமும் தொடங்கும்.

சிறுமிகள் பாடும் பாடல்கள் பல ஊர்களில் பல வாறுக இருக்கும். அவைகளைத் தொகுத்து நூலாகப் பதிப்பித்தாலும் வெகுபயன் தரும். ஏனெனில் பரம்

பரையாய் வந்த அப்பாடல்களில் பழமொழிகள்போல் எதுகைமோனை அடுக்கு முலியவைகள் இருக்கும். மனப்பாடம் செய்வதற்கும் பாடுவதற்கும் மிக ஏற்றதாக இருக்கும். இப்பாட்டுக்களை முதலில் அம்மைமார்கள் இளஞ் சிறுமிகளுக்கு சிறுவயதின் போதே பாடக்கற்றுக் கொடுப்பார்கள்.

உதாரணமாக:-

“கண்ணும் பூச்சி லேலே
காட்டுக்குட்டி லேலே
ஊளை முட்டை தின்று போட்டு
நல்ல முட்டை கொண்டோடிவா”

என்பனபோல உள்ளன. சிறு பருக்கைக்கல் எறிந்து கையில் பிடிப்பதில் ஒரு கல் முதல்கொண்டு பத்துக்கல் வரையில் பிடிப்பதுண்டு. உள்ளங்கையிலும், பின்புறமும் பிடிப்பதுண்டு. இப்படி ஆடுகையில் அம்மானைப் பாட்டுக்களைச் சொல்லி விளையாடுவார்கள். பந்து அடிப்பதில் ஒன்று முதல் 100, 200, 300, வரை அடிப்பதுவும். அப்போதும் பாடல்களைச் சொல்லுவதுண்டு. இதன் வேகத்தை குற்றாலக்குறவஞ்சியாசிரியர் வெகு அருமையாக

“மனம் முந்தியதோ விழி முந்தியதோ கரம் முந்தியதோ
எனவே மணிப்பைந் தொடி நாரி வசந்த ஒய்யாரிபோற்
பந்து கொண்டாடினளே”

என்ற அடிகளில் அருளிச் செய்திருக்கிறார். பந்தடிக்கும் பாடல்கள் அரிய பெரிய இலக்கியங்களிலும் உண்டு. சிலப்பதிகாரக் கந்துகவரி என்பது பந்தடிக்கும் பாடல் தான்.

"தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே"

என்பதைத் படித்துப் பாருங்கள். சாரணர் பாடல்போல இல்லையா? செயலுக்கும் ஓசைக்கும் இணைப்பு இருப்பதைக் காண்க. மேலும் கொங்கு வேளிர் அருளிச் செய்த மாக்கதையில் பந்தடிக்கும் வருணனை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் கொங்கு நாட்டில் இவ்விதப் பந்தாட்டம் மிகுதியாக இருந்தது என்று கூட இந்த நூலே சிறந்த அத்தாட்சியாக இருக்கின்றது.

VIII. எங்கள் இளவலர்கள்.

இளவலர் போக்கு.

எங்கள் ஊர் இளைஞர்கள் மற்ற எல்லா நாட்டு இளைஞர்கள் போலத்தான் இருப்பார்கள். என்றாலும் நகரத்து இளைஞரை விடச் சற்று ஊக்கத்திலும் ஆற்றலிலும் மேம்பட்டே இருப்பார்கள். பள்ளிப் படிப்பை மிகுதியாய்ப் போற்றமாட்டார்கள். பெரும்பான்மையான பேருக்குப் பள்ளி என்றால் வெறுப்புத்தான். வானில் பறந்து ஓடி ஆடும் கிளியைக் கூண்டில் அடைத்தாற் போலப் பிள்ளைகளைப்பள்ளியில் காலை முதல் மாலை வரையில் ஓய்வின்றி அடைத்து வைப்பதைக் குடியானவர்களின் பிள்ளைகள் தாங்குவார்களா? ஆகவே வெளியே ஓடித் தம்மிச்சைப்படி சுற்றப் பார்ப்பார்கள். கூண்டில் அடைபட்ட கிளி கூடிய மட்டும் கம்பிகளைக் கடித்து வெளியே ஓட முயன்றிடும். அதுபோலவே எங்கள் ஊர்ப்பிள்ளைகளும் ஏதாவது சாக்குகள் ஏற்படுத்திக்கொண்டு பள்ளியை விட்டு நின்று விடுவார்கள். அவர்களுக்குத்தோட்டங்களிலும், புலங்களிலும் வேலைகளைக் கவனிக்க ஆர்வம் இருக்குமே ஒழிய எந்நாளும் வாத்தியார் காலண்டை உட்கார்ந்துகொண்டு நாள் முழுதும் காலம்போக்கத்தமது மனது இடம் தராதவர்களாகி ஊரில் சுயேச்சையாகத் திரிவார்கள். பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் இருபது பேர் இருந்தால், நான்காம் வகுப்பில் நான்கு பேர்தான் நிலைப்பார்கள். அவர்களும் வேலைசெய்ய இயலாப் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளும் வாத்தியார்குலத்துப் பிள்ளைகளுமே ஆவார்கள். மற்றவர்கள் மேலே படியார்கள். பெண்களிலும் அவ்வாறே இருக்கும். மேலும் கூலி வேலை செய்யும் வகுப்பார் படிப்பு வாசனையே பெறார்கள். அது வீண் கால விர

யம் என்றே நினைப்பார்கள். தங்கள் தங்கள் தொழிலில் ஈடுபடுதலே நன்மை பயக்கும் என்பது அவர்கள் எண்ணம். இந்த எண்ணம் ஏழைகளாகிய நமது நாட்டில் ஏற்படுவது இயல்பே. வெறுமனே எழுத்து கற்றுக்கொள்ள இருபது ஆண்டுகளைச் செலவழிப்பதைக் காட்டிலும் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள இரண்டு ஆண்டுகள் செலவழிப்பதே மேல் என்பார்கள். இதே கொள்கையை அண்மையில் கவர்னர் ஜெனரல் எடுத்துப் போற்றினதை நமது நாட்டுப்புற மக்கள் வெகு காலத்திற்கு முந்தியே அறிவார்கள். எழுதிப் படிக்க அறியாதவர்களாக இருந்தபோதிலும் பெரும்பான்மையான இளைஞர்கள் தக்க புத்தி கூர்மை பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை.

ஆடையணிகள்.

நமது நாட்டுப்புறங்களில் மக்கள் அணியும் ஆடையணிகளில் குழவிப் பருவத்திற்கும் வாலிபப் ப்ருவத்திற்கும் பேதம் மிகுதியில்லை. அதுபோலவே வயது ஏறினபிறகும் அதேயாகுமென்க. ஆனால் வெளிநாடுகளிலோ இரண்டிற்கும் மிகுந்த பேதம் உண்டு. அங்கே ஆடைகளைப் பார்த்தே ஒரு மகனுடைய பருவம் குறிக்க முடியும். வட நாட்டிலும் அவ்வாறே உண்டு. தென் நாட்டில் சிறப்பாக நாட்டுப் புறங்களில் அப்பேதம் இல்லாததற்கு காரணம் என்ன என்று கேட்பீர்களோ, இங்கு ஆடைப் பொருள்களின் குறைவும் அவைகளைப் பெற இருக்கும் பணத்தின் குறைவும் ஆகிய இரண்டையே கூறலாம். ஆனால் மக்களில் ஏற்படும் பகட்டுக்குறைவே என்பேன் யான். இப்படிப்பட்ட பேதம் வெகுவாய் இல்லை யெனினும் சிறிது ஆழ்ந்துநோக்கினால் சிற்சில பேதங்களும் இருக்கத்தான்

றலாம். இக்காலத்தில் மக்களில் பகட்டுகள் மிகுதியாய்க் கொண்டே செல்லுகின்றன. அவைகள் நாட்டுப்புறங்களி லும் புகுகின்றன. இனிமேல் பேதங்கள் மிகுதியும் ஆகக் கூடும். சிறு குழந்தையில் தைத்த பாவாடையும் சொக்கா யும் அணிந்தவள் வயது பனிரெண்டு ஆனதும் சிற்ருடை யும், இரவிக்கையும் அணிவாள். தலையில் கூந்தல் பெருகி வளரும். அப்போது தலையைச் சடையாகப்பின்னி தொங்க விடுவாள். தாழ்ந்த வகுப்பினள் ஆகில் தலையில் கூந்தலைக் கொண்டையாக முடித்து ஒரு புறத்தில் சொருகுவாள். கையிலும், காலிலும் வளையலும், காப்பும் ஏறிடும். காதில் தோடு அணியத் தொடங்குவாள். பழய நாகரிகத்தார்கள் மூக்கைத் துளைக்கமாட்டார்கள். சென்ற பத்து ஆண்டு களாக மூக்கைக்குத்தி ஒன்ரே இரண்டோ மூக்குத்தியும் அணியத் தொடங்குகிருர்கள். இந்த மூக்கணிகள் தமிழ் நாட்டணிகள் அல்ல, இதனைப் பின்ஞல் விவரமாகக் கூறுவோம். பெண்கள் ஏழெட்டு வயது ஆனவுடனே பச்சை குத்திக் கொள்வதுண்டு. ஊர்கள் தோறும் திரியும் பச்சைக்குத்திகள் ஊரில் தோன்றி பெண்களின் நெற்றி யிலும் கன்னத்திலும் மோவாய்க்கட்டையிலும் பெருவி ரல் அடியிலும், நாமப்பொட்டு, தேள் உருவம், அடுப்புக் கல் முதலிய சிறு உருவங்களைக் குத்தி விடுவார்கள். தாய்மார்கள் கைக்காசு கொடுத்தேனும் இவ்வருத்தத்தை அக்குழந்தைகளுக்கு உண்டாக்குவார்கள். ஏனெனில் இப்பச்சையைக் குத்தி கொள்ளாவிடின் குழந்தைகள் இறந்தால் எமலோகத்தில் வாதனை செய்யப் படுவார் களாம். இந்த மூடக் கொள்கைகள் இந்நாட்டில் இன்னும் இருக்கின்றன. இவ்வாருகப் பெண்பிள்ளைகள் ஆடைய ணிகளில் சிறப்புக்கொண்டாட, ஆண்பிள்ளைகளோ இவ் விதமான கொடுமைகளுக்கு உட்படாமல் வளருவார்கள்.

வாத்தியார் அச்சம் ஒன்றைத்தவிர வேறுவிதமான அச்சங்கள் அவர்களுக்கு இல்லை எனலாம்.

படிப்பு.

மேலே கூறிய படி திண்ணைப்பள்ளிக் கூடத்து வாத்தியார் இளைஞர்களை அஞ்சும் படி செய்ய என்ன செய்கிறார் என்று சற்று பார்ப்போம். நகரங்களிலே பள்ளிக் கூடம் காலையில் மூன்று மணி நேரம் தான் நடைபெறும். ஆனால் நாட்டுப்புறங்களிலோ காலை 6 மணிக்குத் தொடங்கின வகுப்பு மாலை இருட்டும்வரை பாடசாலைத் திண்ணையிலே நடக்கும். அதுவரை பிள்ளைகள் அங்கேயே உட்காரவேண்டும். வெளியே போக முடியாதபடி சட்டாம்பிள்ளை பார்த்துக்கொள்வான். இந்தச் சிறைக் காவலுக்கு பெற்றோர்களும் உடந்தை. வீட்டில் இருந்தால் (லூட்டி) தொந்தரவு செய்கிறார்கள் என்று சொல்லி இந்தச் சீர்திருத்தப்பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பி விடுவார்கள். மறுத்தவர்களுக்கு வாத்தியார் கை பிறம்பே தண்டனைக்கோல். மற்றும் பெஞ்சியின் மேல் மணிக்கணக்கில் நிற்க வைத்தல், குந்துக்காலில் நிற்கவைத்தல், வேறொருவனை முதுகின்மேல் ஏற்றிச் சுமக்கச்செய்தல், எல்லாவற்றிலும் கொடிய தண்டனையாகக் கோதண்டம் போடுதல் முதலிய தண்டனைகள் உண்டு. கோதண்டம் மிகவும் விசித்திரமான ஒரு தண்டனை. அதை எந்த வாத்தியாரின் மூளை சிருட்டித்ததோ அறியோம். எமதருமராசன் ஸ்தானத்திற்குப் போட்டி போடுவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த ஒரு வாத்தியாரே இதனைச் சிருட்டித்திருக்கவேண்டும். வாத்தியார் தாழ்வாரத்தில் இரண்டு கயிறு கட்டி ஒரு கோலைத் துணி தொங்க வைக்கும் தண்டம் போலக் கட்டியிருப்பார். அதனைத்

தண்டிக்கப்படும் சிறுவன் இரு கை காலால் பிடித்துக் கொண்டு தொங்கவேண்டும். கீழே குதிக்காதபடி முள்ளு கள் பரப்பப்பட்டிருக்கும். இந்தக் கடுந்தண்டனை எந்த சிறைச்சாலையிலும் செய்யமாட்டார்கள். இதனைச்செய்தால் அந்த வாத்தியார் மீது எந்தப்பையனுக்குத்தான் அன்பு இருக்கும்? அப்படிப்பட்ட பாடசாலையில் பிள்ளைகள் வருடாவருடம் குறைந்து போவது இயல்பே அல்லவா. அப்படிப்பட்ட பாடசாலையில் ஒரே வாத்தியார்தான் இருப்பார். அவரோ முதல் வகுப்பிலிருந்து படிப்பு முடியும் மட்டும் கற்றுக்கொடுப்பார். எழுத்து என்கிற நெடுங்கணக்கு முதற் கொண்டு காவியங்கள் வரை கற்றுக் கொடுப்பார். காவியங்களை வாசிக்கும் வரைப் படிப்பவன் ஒரு ஊரில் ஒருவனும் இருப்பானோ என்பது சந்தேகம். தானும் வாத்தியாராக வரவேண்டும் என்ற எண்ணம் இருப்பவனே பல வருடங்கள் படிப்பான். பெரும் பான்மையான பிள்ளைகள் இரண்டு மூன்று ஆண்டுகளில் வெளியேறி விடுவார்கள். பெண்பிள்ளை களோ மூன்று ஆண்டுகளுக்குமேல் வாசிக்கவேமாட்டார் கள். வீட்டு வேலை காட்டு வேலை இவைகளுக்குச் சென்று விடுவார்கள். இந்தமுறையில் பாடசாலை நிரந்தர நிலைய மாக நடைபெறும்.

பள்ளிச் சிறப்பு.

காலையில் பிள்ளைகள் கூடியதும் எல்லோரும் சிறிது நேரம் விளையாடிக் கொண்டேயிருப்பார்கள். அப்போது சட்டாம்பிள்ளை வந்து அமைதி ஏற்படுத்துவான். பாட சாலையில் பெரிய பையன்தான் சட்டாம்பிள்ளை. அவனே வாத்தியாருக்கு உதவி. அவனைக்கண்டு சில பிள்ளைகள் அஞ்சுவார்கள். அதற்குள் வாத்தியார் காலைக்கஞ்சி

குடித்து விட்டுத் திண்ணைக்கு வருவார். வந்தவுடனே பிள்ளைகள் எல்லோரும் எழுந்திருந்து ஒரு பாட்டைப் பாடுவார்கள்.

காலமே எழுந்திருந்து கால் முகம் சுத்தி செய்து
கோலமாம் நீறு பூசிக் குழந்தைகள் பசிகள் தீரப்
பாடமும் படித்தோமையா பகரடி பட்டுக்கோண்டோம்
சீடரை அனுப்புமையா திருவடி சரணந்தானே.

பிறகு ஒவ்வொரு வகுப்புப் பிள்ளைகளும் தனித்தனியாகப் பாடம் படிப்பார்கள். முதல்வகுப்புப் பிள்ளைகள் "அ ஆன, அ ஆன, அ ஆனு; ஆ வன்ன, ஆ வன்னு, ஆ வேன்னு" என்ற பெருத்த ஒலியுடன் கூச்சலிடுவார்கள். மேல் வகுப்புப் பையன்களோ அரிச்சந்திர புராணத்தில் ஒருபாட்டை இசையுடன் பாடிக் கொண்டிருப்பார்கள். மற்றப்பிள்ளைகளோ இடையில் பல வகுப்புப்பாடங்களையும் பல விதமாகப்படிப்பார்கள். இந்த விதத்தில் நடை பெறும் பாடசாலையின் ஒலி தெருவின் கோடியிலும் கேட்கும் என்றால் அடுத்த வீட்டு ஆட்கள் எப்படி அதனைப் பொறுத்துக்கொண்டிருப்பார்கள் என்று கேட்கவேண்டியதில்லை. அவர்களோ காலையில் பழயது சாப்பிட்டுவிட்டுக் காடுகளுக்குச்சென்றால் மாலையில்தான் வீடு திரும்புவது ஆயிற்றே. ஆகவே எவ்வாறு இந்த ஒலி அவர்கள் காதைப்பிளக்கும். ஒரு நகரம் ஆனால் அங்கு ஏற்படும் பேரொலியால் துன்பம் ஏற்படுகிறதென்று அடுத்த வீட்டான் கச்சேரியில் வழக்குத் தொடருவான். அது இங்கில்லை. இந்தவகையில் நாள் முழுதும் பள்ளியில் ஓயாத ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். இதைக்கண்டு இது ஒரு விழா ஒலியோ என்று கவிகள் கவி புனையலாம்.

இளங்கோவடிகள் அடியிற்கண்டபடி சொன்ன அடிகள் இதற்கு ஏற்புடைத்தாய் இருக்கிறதல்லவா?

“ உழவர் ஓதை மதகோதை
உடை நீரோதை தண்பதங்கோள்
விழவர்-ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய்வாழி ” என்பதே.

ஆனால் இந்த ஒலியை வாத்தியார் எப்போதும் சகித்துக்கொண்டிருப்பாரா என்று கேட்கவேண்டாம். அவர் அடிக்கடி வெளியே போவார். ஊரில் பத்திரம் எழுத, வீட்டில் சாப்பிடப்போக, பண்ணையார்களுக்கு யோசனைகூற, அவர்களிடம் ஊதியம் பெறப்போவார். அவருக்கு அந்த மாறுதல் இல்லாவிடில் அவர் உயிருடன் முதுமை வரைக்கும் இருப்பாரா என்பது சந்தேகம். மாலையில் பிள்ளைகள் வீட்டிற்குத் திரும்பிப்போகும்போது இப்பாட்டைப்பாடிவிட்டுப் போவார்கள்.

அந்திக்கு போறோம் நாங்கள் அகந்தனில் விளையாடாமல்
சுந்தர விளக்கின் முன்னே சுவடிகள் அவிழ்த்துப்பார்த்து
வந்தது வராத தெல்லாம் வணவுடன் படித்துக் காட்டி
கந்தனுர் கோழி கூவக் காலமே வாறோம் ஐயா.

இப்பாடல்கள் தான் கடவுள் வணக்கம், தேசிய கீதம் என்ற வகையில் இந்த நாளில் மாறி வேறுருவம் அடைந்திருக்கின்றன.

பள்ளி நடப்பு.

பள்ளிக் கூடத்திலுல் வாத்தியாரின் குடும்பமே நடைபெறும். இந்தக் காலத்தில் அரசியல் மாணிபம் இல்லாவிடில் வாத்தியார் பிழைப்பது அரிது. ஆகவே ஒவ்வொரு

வாத்தியாரும் அரசியல் கல்விப் பரிசோதகர் முகத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பார். சில ஆண்டுகளுக்கு முன்பு வாத்தியார் பிழைப்பு நன்ருகத்தான் இருந்தது. பிள்ளைகள் சம்பளம் கொடுப்பது கிடையாது. ஆனல் சனிக்கிழமைதோறும் வாத்தியார் குளிப்பதற்கும், பூசை முதலியவைகளுக்கும் எண்ணெய், சீவக்காய், அறைப்பு, பிண்ணுக்கு முதலியவைகள் வந்துசேரும். குடித்தனக் காரர்கள் பண்ணைகளில் அறுவடை ஆகும்போதெல்லாம் வாத்தியாருக்கு என்று ஒரு பகுதி எடுத்துவைப்பார்கள். பண்டிகை தோறும் உப்பு, பருப்பு, புளி முதலிய பண்டங் களும் தோட்டத்துக் கறிகாய்களும் வந்துவிடும். இந்த வகைகளில் வாத்தியார் உணவு திட்டத்திற்குக் குறைவு இல்லாமல் இதுவரை இருந்தது. இனி ஆண்டிற்கு ஒரு முறை 'மகர் நோன்பு' வரும். அதுதான் வாத்தியாருக்கு உற்சாகமான திரு நாள். மகர் நோன்பு என்ற சொல் மகா நவமி என்றதன் மருவாம். மகா நவமி என்றது நவ ராத்திரியாகும். புரட்டாசித் திங்களில் அமாவாசைக் கடுத்த பத்து நாட்களும் இந்த விழா ஆகும். அப்போது ஒவ்வொரு கோயிலும் கொலுவு வைப்பார்கள். ஒன்பதாம் நாள் கலைமகள் வழிபாடு நடக்கும். பத்தாம் நாள் ஊரில் மெரமனை (ஊர்கோலம் அல்லது உலா) நடக்கும். இந்த நாட்களில் பள்ளிப்பிள்ளைகள் நன்ருக உடை உடுத்திக் கொண்டு கோல்களை எடுத்துக்கொண்டு பண்ணுடிமார் வீடுகளுக்குச்செல்வார்கள். அங்கே முற்றங்களில் கோலாட்டம் ஆடி பண்ணுடிகளைக் களிப்பிப்பார்கள். அப் போது வீட்டிற்குத் தகுந்தபடி சம்பாவனைகள் கிடைக்கும். இதுதான் வாத்தியாருக்கு ஆண்டுக்கு வேண்டிய மேல் வரும்படி. அதிலிருந்து ஆடை அணிகளைத்தன் குடும் பத்திற்கு வாத்தியார் வாங்கிக்கொள்ள முடியும். பெண்

பிள்ளைகளுக்குக் கும்மி கோலாட்டம் உண்டு. ஆனால் அவைகளை மகாநவமியில் அவர்கள் ஆடுவதில்லை. அவைகளைத் தைப்பொங்கல், ஆடிப்பதினெட்டு முதலிய விழாக்களில் நடிப்பார்கள். ஆனால் பெண்பிள்ளைகளைக் கொண்டு வாத்தியார் நாட்டுப்புறங்களில் பிழைப்பதில்லை. இந்த வகையில் நாட்டுப் புறத்துப் பள்ளிகள் நடைபெற்றன. ஆனால் இப்போதோ வாத்தியார் பாடு அம்பலம் தான். பண்ணடிகள் போஷணை குறைந்து விட்டது. ஆகவே அரசியல் போஷணையை எதிர்பார்க்கிறார்கள். இது இந்த நாளைய உணவுக் கட்டுப்பாட்டில் மிக்க வறுமையே அளிக்கிறது. பாவம், வாத்தியார்தான் என்ன செய்வார். ஊராரும் என்ன செய்யமுடியும். எல்லாம் காலப்போக்கே. வாத்தியார் பிழைப்பு படிப்பற்ற நாகரீகம் அற்ற, கூலிக்காரனின் பிழைப்பைவிடக் கேவலம் ஆகிவிட்டது. இது மிகை அல்ல.

ஆண் பிள்ளைகளின் பொழுது போக்கு.

பள்ளியிலே படிக்கும் பிள்ளைகளுக்குப் பொழுது போக்கு வேறு, பள்ளியில் சேராத பிள்ளைகளின் பொழுது போக்கு வேறு. ஏனெனில் பள்ளிப்பிள்ளைகளுக்கு விடுமுறை நாள்களில்தான் விளையாடப் பொழுது இருக்கும். மற்றைய நாள்களில் பகல் முழுவதும் பள்ளியிலே சிறைப் பட்டிருக்கவேண்டும். விளையாட நேரம் ஏது? 'அடியாத பிள்ளை படியான், விளையாட்டுப்பையன் முளையான்' என்பதும் எங்களூர் வாத்தியாரின் பழமொழி. அதன்படி வெகு தீவிரமுடன் பிள்ளைகளை அடக்கி ஆளுவார். விடுமுறை வந்தால் பள்ளிப்பிள்ளைகள் அவிழ்த்து விட்ட கன்றுக்குட்டிகள் போல துள்ளி விளையாடுவார்கள். எங்கள் பள்ளிப்பிள்ளைகளுக்கோ மாதம் ஒன்றுக்கு

மூன்றே நாட்கள் பொதுவான விடுமுறை நாட்கள் அந் நாட்களை உவா நாட்கள் என்பார்கள். அவையாவன அம் மாசை பாட்டிமை மதியம் என்பன. சில இடங்களில் கிருத் திகை நாள் விடுமுறைநாள் ஆகும். இவைகளைத்தவிர மற்றப் பெரும் பண்டிகைகளும் ஓய்வு நாட்களே ஆகும். தற்போது உள்ளபடி ஞாயிற்றுக்கிழமை என்ற ஓய்வு நாள் கிடையாது. உவா நாட்களுக்குமுந்திய நாளே பிள்ளை கள் சாணமும், நீரும் கொண்டுவந்து பாடசாலையை நன் ருகப்பெருக்கி மெழுகிவிட்டுச் சுத்தப்படுத்தி விடுவார்கள். பிறகு தங்கள் வீடுகளுக்குச்சென்று உபாத்தியாயருக்கு எண்ணெய், சீவக்காய், உப்பு, புளி, விறகு கொண்டு வந்து கொடுப்பார்கள். இந்தப்பொருள்கள் வாத்தியா ருக்கு அடுத்த உவா நாள் மட்டும் வரும். இந்த உதவி இல்லாவிட்டால் அந்த நாளிலே வாத்தியார் பிழைப்பது அரிது. பண்ணுடிமார் கொடுக்கும் மூன்று மிடா சோளம் வாத்தியாருக்கு எப்படிப்போதும். (மிடா என்பது 32 படி)

உவா நாட்கள் சிறுவர்களுக்குத் திருநாட்கள். அந்த நாளிலே அவர்கள் ஊர் வெளியிடங்களிலே சென்று. பந் தாட்டம் முதலிய விளையாடல்களை ஆடுவார்கள். அன்று தான் அவர்கள் ஊருக்கு வெளியே இருக்கும் தோட்டக் கிணறுகளுக்குச்சென்று நீராடுவார்கள். எங்கள் ஊரிலே பெரிய குளமோ, ஏரியோ, ஆருே இல்லை. ஆகவே தோட்டக்கிணறுகளுக்கே பிள்ளைகள் சென்று குளிப்பார் கள். பெரும்பாலும் பத்து வயது ஆனலே பிள்ளைகள் மற்றவர்கள் உதவியைக்கொண்டு நீந்தத்தெரிந்து கொள் ளுவார்கள். நீந்தந்தெரியாது என்ருல் பிள்ளைகளுக்கு ஏளனம். நகரத்துப்பையன் தற்செயலாய் எங்கள்ஊருக்கு வந்து விட்டால் பிள்ளைகள் நீந்துவதைக்கண்டு விட்டுப்

பொருமைப்படுவான். உவா நாட்கள் சிறுவர்களுக்குத் திருநாள் ஆனால் மகா நவமி வாத்தியாருக்குப்பெரு நாள் அந்த விழாவந்தாலே வாத்தியார், தான் பிள்ளைகளுக்குப் பழக்கின ஆடல் பாடல்களைக்கொண்டு பண்ணுடிகளுக் குக்காட்டிப் பணம் பெறுவார். இதனைத் தனியாய் விவரிப்போம்.

மும்முர விளையாட்டு.

பாடசாலைப் பிள்ளைகளைவிடப் பள்ளி செல்லாத பிள்ளைகளே மும்முரமான விளையாடல்களில் ஈடுபடுவார்கள், அவ்விளையாட்டுக்கள் ஊருக்கு வெளியே விளையாடப்படும். புறம்போக்குகளிலே புற்றரைகளும் நெடு மரங்களும் உண்டு. புற்றரைகளில் பந்தாட்டம் முதலிய ஆடல்களும் மரந்தோப்புகளிலே கொம்பேறி முதலிய விளையாட்டங் களும் நடைபெறும். பள்ளி செல்லாதவர்கள் பெரும் பாலும் தோட்ட வேலைகளிலே அமர்ந்திருப்பார்கள். அவர்களும் தினந்தோறும் விளையாடமாட்டார்கள். உவா நாட்கள், பண்டிகை நாட்கள் இவைகளிலேதான் அவர் களும் விளையாடுவார்கள். பெரும்பாலும் அவர்களும் உவாநாட்களிலேதான் தலைமுழுகக் கிணறுகளுக்குச் செல் வார்கள். அந்த நாட்களிலேதான் ஊர்ச்சிறுவர்கள் நெற் றிகளில் திருநீறும் திருமண்ணும் சந்தனப்பொட்டும் ஏறி விளங்கி நிற்கும். மற்ற நாட்களில் எது வைத்தாலும் கரைந்துபோகும் அல்லவா.

வெற்றிடங்களிலே ஆடும் ஆட்டங்களாவன: கிண் ணுங்கிணி கிட்டி, கரம் ஆட்டம் (சதுரமும் வட்டமும் கரைகளில் உண்டு) கண்ணும்பூச்சி, கூந்தலடி, கட்டாந் தரம், நாலு மூலைத்தாச்சி, வெய்யிலும் நிழலும், மேடு பள்ளம், கோல், கும்மியாட்டங்கள் முதலியவைகளை இளை

ஞர்கள் ஆடுவார்கள். சற்று வளர்ந்த பிள்ளைகள் குரவைக்கூத்து, கோட்டான் கோட்டான், கிளித்தட்டு, குந்தி காலாட்டம், கில்லியாட்டம், கோல்குந்தி, மசப்பந்து, பேய்ப்பந்து, பிள்ளையார் பந்து, துடுப்புப்பந்து, கவட்டிக்கவட்டி, கழுதை தூக்கி முதலியவைகளை ஆடுவார்கள். மற்றும் பெரியவர்கள் ஆகிவிட்டால் பல்சிக்கு அல்லது பலின் சுடுகுடு என்ற மும்முரமான விளையாட்டுக்களை ஆடுவார்கள்.

இவைதவிர மரம்களின் கொம்புகளின்மீது பாய்ந்து ஆடும் விளையாட்டுகள் கொம்பேறி, கொம்பேறித் தொடுதல் என்பன. இன்னும் கோல் விளையாட்டு, கத்தி வீசுதல், சிலம்பு வீசுதல், கைச்சண்டை என்ற குஸ்தி சில ஊர்களில் உண்டு. முன்காலத்தில் அதாவது ஐதர் கலாபக் காலத்தில் இந்த வீர விளையாட்டுகள் மிகுதியாக இருந்தன. ஒவ்வொரு ஊரிலும் ஒரு கெரடிக்கூடம் இருந்தது. அதில் வஸ்தாது என்ற கெரடி வாத்தியார் இருப்பார். அவரே இப்பெரிய ஆட்டங்களைக் கற்றுக் கொடுப்பார். ஆங்கில ஆட்சி வந்தபிறகு இந்தக் கெரடிக் கூடங்கள் மறைந்தன. ஆனால் பெரிய திருவிழாக் களிலே சிலர் வேடிக்கைக்காக அவைகளைக் கற்றுக் கொண்டு ஆடுவதுண்டு. (ஐதர் காலம்மட்டும் அன்று நாயன்மார் காலங்களிலும் இருந்தது என்பதற்கு நாயனார் புராணம் வாசித்து அறிந்துகொள்க.)

பெண்பிள்ளைகளின் வீட்டு விளையாட்டு.

ஆண்பிள்ளைகளைப் போலவே நாட்டுப்புறத்துப் பெண்பிள்ளைகளிலும் படிக்கிற பிள்ளைகளுக்கும் படிக்காத பிள்ளைகளுக்கும் விளையாட்டு விஷயத்தில் வேறுபாடு உண்டு. படிக்கிற பெண்கள் மிகக் குறைவுதான். ஒரு ஊர் முழுவ

திலும் பத்து இருபது பேர்மட்டும் படிப்பார்கள். இவர்களும் பத்து பதினொரு ஆண்டுகள் வரைக்குமே படிப்பார்கள். சிறப்பாகப் பெரிய வீட்டுப்பெண்களே படிப்பார்கள். பாமர மக்களில் பெண்களைப்பள்ளிக்கூடம் அனுப்புவதே இல்லை. வீட்டு வேலைக்கும் காட்டு வேலைக்குமே சிறு பெண்களையும் பயன்படுத்திக்கொள்ளுவார்கள். ஆகவே ஒரு சிறு பான்மையாரான பெண்களே எழுத்து வாசனை பெறுவார்கள். அவர்கள் நாள் முழுவதும் பள்ளியிலே அடைபட்டிருக்க விளையாட்டிற்கு இடம் ஏது. ஆண்களைப்போலவே அவர்களும் ஓய்வு நாள்களாக உவா நாள்களிலேதான் விளையாடுவார்கள். அப்போது வீட்டிற்குள்ளே பன்னாங்கல், பன்னாங்குழி, தாயம் அல்லது பலகரை ஆட்டம், ஆடு புலி என்ற கரை ஆட்டம், சோணாலி என்ற கரை ஆட்டம், கேரளபட்சி ஆட்டம், பரமபதசோபான பட ஆட்டம், புளியங்கொட்டை, குட்டுவைத்து ஊதுதல் முதலிய ஆட்டங்களை ஆடுவார்கள். கல், பலகறை, சோணாலி முதலிய காய்களை வைத்து ஆடுவதில் பெண்களுக்கு மிகவும் விருப்பம். விளையாட உட்கார்ந்தால் எத்தனை நேரம் வேண்டுமென்றாலும் ஆடுவார்கள். சில வீடுகளிலே இந்த விளையாட்டுக்களை ஆடுவதற்காக நிலத்திலேயே நிரந்தரமாக கரைகள் போட்டுவைத்திருப்பார்கள். இவ்விளையாடல்களிலே குறைந்தது இரண்டு பேராவது இருக்கவேண்டும், தோல்வி வெற்றி என்பது இதில் உண்டு. பாடசாலைவிட்டுத் திரும்பி வந்தபிறகும் அவ்வித ஆடல்களில் உட்காருவார்கள். பாடசாலைப்படிப்பு நிறுத்திவிட்ட பெண்கள் வீட்டுவேலை முடிந்தபிறகு இவ்வாட்டங்களில் ஈடுபடுவார்கள். இனி பாடசாலைக்குப் போகாத ஏழைப் பெண்களுக்கு இவ்வாட்டங்களில் மனம் சென்றாலும் ஆட நேரம் கிடைக்காது. காட்டு வேலை, உறவினர்

களுக்கு சாப்பாடு கொண்டுசெல்லுதல், ஆடு மாடு மேய்த்தல், முதலிய வேலைகளில் ஈடுபடுவதால் அப்பெண்களுக்கு விளையாட நேரம் இருக்காது. ஆடு மாடுகள் மேய்த்துக்கொண்டிருக்கையில் வெய்யில் பொறுக்கமாட்டாமல் மர நிழலில் இருக்கையில் இவ்வித கரை ஆட்டம் கல்லாட்டம் முதலியவைகளில் ஈடுபடுவதுண்டு. சில சமயங்களில் வீட்டினுள்ளே பெண்பிள்ளைகள் உட்கார்ந்து விளையாட்டு நடத்தும்போது பெரியவர்களும் உடன் இருந்து ஆட்டங்களில் கலந்து கொள்வார்கள்.

தெரு விளையாட்டு.

நாட்டுப்புறங்களிலே திருமணம் ஆகாத பெண்பிள்ளைகள் தெருக்களிலும் விளையாடுவது உண்டு. திருமணம் ஆனபிறகு அவர்கள் விளையாடல்களில் ஈடுபடுவதே கிடையாது. தங்கள் தங்கள் வீடுகளுக்கு எதிரே உள்ள தெரு, சந்து, வெற்றிடம் முதலியவைகளில் மட்டும் விளையாடுவார்கள். ஊருக்கு வெளியே செல்லவே மாட்டார்கள். இப்பெண்களின் விளையாட்டுக்கள் பெரும்பாலும் கரையாட்டம் கண்ணும்பூச்சி, கூந்தலடி கட்டாந்தரம், நாலுமூலைத்தாய்ச்சி, வெய்யிலும் நிழலும், கும்மியாட்டம், கோலாட்டம் கொப்பியாட்டம் என்பவைகளே, இவைகளை ஆடும்போது அருமையான பாடல்களைப்பாடுவது உண்டு. கும்மியாட்டத்திலும் கொப்பியாட்டத்திலும் கைகளைத் தட்டி ஆடுவார்கள். கோலாட்டத்தில் வெறும் கோலாட்டம் பின்னல் கோலாட்டம் முதலியவைகளும் நன்ருக நடைபெறும். இவ்வாட்டங்கள் எல்லாம் மிகுந்த அப்பியாசம் உடலுக்குத்தரும். இவைகளிலே கும்மியும் கோலும் பாடசாலைகளை ஒட்டி ஆடுவதுண்டு.

மற்ற ஆட்டங்கள் பெண்கள் தாமாகவே சேர்ந்து ஆடு வார்கள். கரை ஆட்டம் என்பது தெருவில் மண்ணிலே சதுரமாகவும் வட்டமாகவும் கரைகளை வரைந்து அதில் பல வீடுகளைப்போல ஆக்கி அவ்வீடுகளில் வட்டு எறிந்து அதனை மிதித்துப்பிறகு காலைக் குந்திக்கொண்டு திரும்பி அவ்வட்டை வெளியே எறிந்து அதனை மீண்டும் மிதிப்பது ஆகும். எறிவது அளவில் எறியவேண்டும். இல் லாவிடில் மிதிக்க இயலாது. ஒருமுறை வெற்றியாக மிதித் தால் ஒருவட்டம் கீறிவிடுவது. இவ்விதமாக ஒருத்தி எத்தனை வட்டம் கீறுவாளோ அதனைப்பொறுத்து அவளுடைய இறுதி வெற்றி ஏற்படுகிறது. கண்ணும் பூச்சி என்பதில் கண்ணை மூடுவாள் ஒருத்தி, மற்றொருத்தி ஓடி ஒளிந்துகொள்ளுவாள், கண்ணை திறக்கவே, அவளைப் போய் கண்டுபிடிக்கவேண்டும். கூந்தலடி என்பது தலையில் பின்னும் சடைபோல் சில பெண்கள் நிற்பார்கள். மற்றொரு பெண் அவளுடைய கைகளுக்குப்படாமல் ஓடிச்சென்று இறுதிப் பெண்ணைத் தொடுவாள். தொட்டால் அவள் இடம்மாறவேண்டும். இந்த விளையாட்டில் அவர்கள் நிற்கும் பாவனை ஒரு பெண்ணின் தலையில் தொங்கும் கூந்தல் சடைபோல் இருக்கும். நாலு மூலை தாய்ச்சி என்பது நான்கு தூண்களை ஐந்து பெண்கள் தழுவிக் கொள்ள முயல்வது. ஒருத்திக்குத் தூண் கிடையாது. தழுவி நிற்பவர்கள் மாறி மாறித் தழுவுவார்கள். தழுவு முன்னர்ஐந்தாம் பெண் தான் தழுவ முயலுவாள். இவ் வாறான விளையாட்டுகள் உடலுக்கு மிகுந்த பலம் தருவன. வேனிற் காலங்களில் முழுமதிகளிலே வளர்ந்த பெண்களும் இவ்வாடல்களில் ஈடுபடுவதுண்டு.

தற்கால மாறுதல்கள்.

மேலே கூறிய விளையாடல்களை தினந்தோறும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற படியால் அவைகளின் சிறப்பை நாம் அறிவதில்லை. மேல் நாட்டார் என்றால் இவைகளை நன்றாக வருணித்துப்படங்கள் வரைந்து பெருநூல்களாக வெளியிட்டு விடுவார்கள். ஆனால் நமது முன்னோர்களுக்கு இந்த பழக்கம் இருந்தது. மணிவாசகனார் பெண்களின் சில விளையாட்டுக்களை எடுத்துக்கொண்டு அருமையான பாடல்களாக வரைந்து அருளியிருக்கிறார்கள். கம்பர், தாயுமானவர் போன்ற புலவர்கள் கறங்கு, காற்றாடி, பம்பரம் முதலிய விளையாட்டுக்களை உவமைகளுக்காக எடுத்தாண்டிருக்கிறார்கள். ஆனால் விவரிக்கும் நூலாக எவரும் எழுதவில்லை.

இந்த விளையாடல்களைத் இப்பொழுது மறையத் தொடங்குகின்றன. விளையாடல்களிலே பாடும் பாடல்களும் மறையத்தொடங்குகின்றன. பாடல்களையாவது தொகுத்து எழுதுதல் ஒரு சிறந்த பணி ஆகும். மறைந்துவிட்டால் பின்னர் கிடைப்பதறிது. பழைய விளையாட்டுக்கள் மறைய மறையப் புது விளையாட்டுகள் வந்துவிட்டன. மேல் நாடுகளிலிருந்து கால்பந்து, கைப்பந்து, துடுப்புப் பந்து முதலியவைகள் வந்துவிட்டன. பாடசாலை விளையாட்டுக்களுக்குப் பல புது மாறுதல்கள் வந்துவிட்டன. பள்ளிவாத்தியார்கள் கிறிஸ்றுவசங்கப் பாடசாலைகளிலிருந்து புதுமுறை ஆட்டங்களைக் கற்றுக் கொண்டுவந்து நாட்டுப்புறப் பள்ளிகளிலே கற்றுக்கொடுக்க தொடங்கி உள்ளார்கள். பாடல்களும் புதுமுறையில் பொருள் அற்ற மணம் அற்ற முறையில் இருக்கின்றன. இப்புது முறைகளிலே அப்பியாசம் இருக்குமே ஒழிய பொருளாவது,

நாட்டுப்பண்பாடாவது இருக்கமுடியாது. இந்த மாறுதல்கள் முழுவதும் ஏற்படும் முன்னரே கூடிய மட்டும் பழைய முறைகளை விவரிக்கும் நூல்களை எழுதிவைப்பதே நல்லது. பண்டைக்கலை ஆராய்ச்சியாளர்கள் பல மலைசார் ஊர்களுக்குச் சென்று அவர்களுடைய ஆடல்பாடல்களை எழுதி வெளியிடுகிறார்கள். ஆனால் நமது நாட்டுப்புறங்களில் பெரும்பாலான மக்களிடை நடை பெற்றுவரும் விளையாடல்கள், பாடல்கள், இவைகளைத் தொகுத்து வெளியிடுவார் இல்லை. இந்த முயற்சி நல்ல பலனை அளிக்கும் அல்லவா?

IX. எங்கள் பெரியவர்கள் பொழுதுபோக்கு.

மாறுமை உண்டோ?

உயர்தரப்பாடசாலையில் வாசித்த காலை எங்களுக்குச் சரித்திர பாடத்திட்டத்தில் "இந்தியக்குடி" என்ற தலைப்புக்கொண்ட ஒரு ஆங்கில நூல் பாடமாக இருந்தது. அதனை அரசியல் அலுவலில் பெரியதொரு பதவி வகித்துக்கொண்டிருந்த ஒரு ஆங்கிலன் எழுதியிருந்தான். அந்நூலின் தொடக்கம் அடியிற்கண்ட கருத்தைக்கொண்டிருந்தது. 'எந்தமரத்தின் கீழ் முப்பாட்டன் உட்கார்ந்துகொண்டு பொழுது போக்கினனோ அதே மரத்தின் கீழ் இருந்துகொண்டு அவன் கொள்ளுப்பேரனும் இப்பொழுது பொழுது போக்கிக்கொண்டிருக்கிறன்' என்பதே. அவ்வாங்கிலனுடைய கருத்து என்னவெனில் 'இந்திய மக்களில் முன்னேற்றமோ மாறுதலோ கிடையாது. பழமைப்பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டே இந்தியன் வாழுகிறன். விஞ்ஞான முறைகள் அவன் மூளையில் ஏறு' என்பதாகும். இந்தியர்களைப்பற்றி எத்தனை ஏளனமாய்ப் பேசக்கூடுமோ அத்தனைக் கேவலமும் அந்த நூலில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைப்படித்துப்பரீட்சையில் விடை எழுதவேண்டிய தலை எழுத்தும் எங்களுக்கு இருந்தது. பின்னல் வந்த மக்களுக்கு அந்த விதி தள்ளப்பட்டது. ஒரு உயர்ந்த ஆங்கில அலுவலாளன் பைக்குள் பணம் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கமே அவ்விதம் அந்நூலை வாசிக்கும்படி எங்களுக்கு விதி ஏற்படுத்தியதின் காரணம் என்று பின்னல் அறிந்தோம்.

ஆனால் மேலே கூறிய மாறுமைக்குணத்தில் ஒரு சிறிது உண்மையும் உண்டு. ஊருக்கு வெளியே பொது இடங்களில் மாமரம் காணவிட்டாலும் அரசமரமேடையாவது உண்டு. அதன் கீழ் சில ஊர்களில் நன்றாகத் திண்ணை கட்டியிருப்பார்கள். அதன் பேரில் எப்போதும் சில பேராவது உட்கார்ந்து கொண்டு வம்பு பேசிக்கொண்டே இருப்பது வழக்கம். வயதினால் வேலை செய்ய முடியாமல் ஒய்வு எடுத்துக்கொண்டிருக்கும் வயோதிகரும் நோயினால் வேலைக்கு ஆகாமல் தவிக்கும் ஆண்களும் அம் மேடையில் அமர்ந்து நீண்ட நாளின் பளுவைக்குறைக்க ஏதாவது பேசிக்கொண்டிப்பார்கள். நாளடைவில் சில கிராமங்களில் கேரளபட்சி ஆட்டம், சீட்டாட்டம், புலியும் ஆடுகளும் என்ற ஆட்டங்களுக்கு அம்மேடை பயன்படுவதுண்டு. விடுமுறைப்பண்டிகை நாள்களிலோ மற்ற ஆண் மக்களும் இங்கே சிறிதுநேரம் உட்கார்ந்து பேசுவதுண்டு. அருகில் வெளியிடங்களில் சிறியவர்கள் கோலி ஆடுவதைப் பார்த்துக்கொண்டும் சிலர் பொழுது போக்குவார்கள். அல்லது அருகில் கல் திண்ணையில் பொரி கடலை விற்கும் கிழவியிடம் வம்புக் கேலி பேசிக்கொண்டும் இருப்பார்கள்.

மாறுதல் இல்லையோ?

எப்பொழுதும் விளையாடும் பையனும் மூடன் ஆவான், விளையாட்டு இன்றி எப்பொழுதும் படிக்கிறவனும் மூடன் ஆவான், என்பது பிறநாட்டுப்பழமொழி. உடம்பு என்றாலும் சரி, மூளை என்றாலும் சரி, அவைகளுக்கு ஓய்வு இல்லாமல் எப்போதும் வேலை கொடுத்துக் கொண்டிருந்தால் அவைகள் சிறிதுநாளில் களைப்பும் சோர்வும் அடைந்து எவ்வித வேலைக்கும் அருகதையில்லாமல்

போய்விடும். ஆகவே அவைகளுக்கு அடிக்கடி ஓய்வு கொடுக்கவேண்டும். நமது நாட்டுப்புறத்துக்குடிகள் இந்த உண்மையை நன்கு அறிவார்கள். காலாகாலங்களில் தங்கள் உடலுக்கும் மூளைக்கும் ஓய்வு தருவார்கள். அவர்கள் காடுகளில் வேலை செய்துகொண்டிருந்தாலும் வேண்டிய காலங்களில் சிரமபரிகாரம் செய்து கொள்வார்கள். அந்தவகையான ஓய்வு இரண்டுவிதம் உண்டு. ஒன்று, யாதொன்றும் செய்யாமல் சும்மா இருத்தல். இதனால் உடம்பின் தசைகள் தளர்ச்சி பெற்று அயர்வு கொள்ளும். மூளையின் நரம்புகள் சிறிது உறக்கம் பெறும். சிறிது நேரம் ஆனவுடன் இவைகள் இரண்டும் பின்னும் வேலை செய்ய ஊக்கமும் வலுமையும் பெறும். அப்பொழுது குடியானவன் இரு மடங்கு வேலை செய்ய ஆற்றல் பெறுவான். இரண்டாவது, வெறுமனே சும்மா இராமல் உற்சாகம் தரக்கூடிய ஒரு மாறுதலை அனுபவித்தல். இது வெறும் ஓய்வைவிடச்சிறந்தது. ஒரேபணியை விடாமல் செய்துகொண்டிருந்தால் ஆயாசம் ஏற்படும். நடு நடுவிலே மாறுதல் ஒரு சிறிது ஏற்பட்டாலும் உற்சாகம் தோன்றும். உதாரணமாக, குடித்தன வேலைகளையே செய்துகொண்டிப்பவன் மாலை நேரங்களில் விளையாட்டுக்களைப் பார்த்தல், போட்டிகளை ஏற்படுத்தி அதை நடத்துதல், ஆடல், பாடல், காலட்சேபம், கதை, பஜனை, கூத்து, பொம்மலாட்டம், வித்தை முதலியவைகளை நடத்தி வைத்து மக்களை பார்க்கச்செய்து தானும் பார்த்து மகிழுதல், திருவிழாக்களை ஊர்களில் நடத்தி அவைகளுக்கு வேண்டிய சீர் சிறப்புகளை ஏற்படுத்துதல், இவைகள் எல்லாம் குடியானவர்களுக்குத்தக்க உற்சாகம் விளைவிக்கும் செயல்கள். மேலும், நெடுநேரமாக கை ஏற்றம் வைத்துக்கிணற்றில் நீர் இறைக்கும்போது எவனுக்கும்

ஆயாசம் ஏற்படும். ஆனால் அவன் அழகாகப் பாடிக் கொண்டே நீர் இறைத்தால் அந்த ஆயாசம் தோன்றாது. துணி துவைக்கிற வண்ணானும், நெல் குத்துகிற பெண்ணும், சுண்ணாம்புக்காரை இடிக்கிற ஒட்டச்சியும், கல் உடைக்கிற ஒட்டனும், அருமையாகப்பாடி சிரம சாந்தி செய்து கொள்வதுண்டு. இம்முறையில் மாறுதல் ஏற்பட்டால் அயர்ச்சி மறையும்.

எக்கரை பச்சை.

எங்கள் நாட்டுப்புறத்துப் பொழுது போக்குகள் உண்மையாகவே மகிழ்ச்சி தரக்கூடியவைகள்தான். நகரத்து மக்கள் அவைகளைக்கண்டால் வியப்பு அடைவார்கள். அனுபவித்தால் என்னசெய்வார்களோ சொல்லமுடியாது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற பழங் கருத்துப்படி நான் சொல்லுகிறேன் என்று எண்ண வேண்டாம். நாட்டுப்புறத்தின் மேல் உள்ள அபிமானத்தை முன்னிட்டு இவ்வாறு உயர்வு நவிற்சி (அதிசயோக்தி) யாகக் கூறுவதன்று. மெய்யாகவே நாட்டுப்புறங்களின் பொழுது போக்குகள் மனதிற்கு உற்சாகமும் ஊக்கமும் கொடுப்பவையாகும். நகரப்புறங்களில் அவ்வாறு இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். காற்பந்து, கைப்பந்து, விளையாட்டுகள், அவைகளில் போட்டிப்பந்தயங்கள், மற்றப்போர் பந்தயங்கள் (குஸ்தி), இரப்பர் கையுறைகொண்டு முகத்திற் அடித்து வெல்லும் விளையாட்டு, (Boxing) குதித்தல், தாண்டுதல், ஓடுதல், குண்டு வீசுதல் முதலிய பந்தயங்கள் முதலானவைகள் எல்லா நகரங்களிலும் சிறப்பாகப் பெரிய பாடசாலைகள் இருக்கும் ஊர்களிலும் நடைபெறுவதைக்கண்டிருக்கின்றோம். இவைகளைக்காண ஆயிரக்கணககான மக்கள் சென்று பணக்

கட்டணங்கள் கொடுத்தும் பார்ப்பதில்லையா? ஆகவே கிராம விளையாடல்களில் என்ன சிறப்பு என்று கேட்கலாம். மேலும் மாலைகளிலும், இரவுகளிலும் நாடகம், திரைப்படம், பரதநாட்டியம் இவைகள் இல்லையா? இவைகள் ஊக்கமும் ஓய்வும் அளிப்பதில்லையா? என்றும் கேட்கலாம். உண்மை. அவைகள் நகரமக்களின் நாகரிகத்திற்கு ஏற்றபடி உற்சாகமும் ஓய்வும் கொடுக்கின்றன. ஆனால் யார்க்கு எப்படி எந்த முறையில் ஓய்வு கொடுக்கின்றன என்று சிந்தனை செய்துபாருங்கள். இந்தப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைக் காணச்செல்லுகின்றவர்கள் நாள் முழுதும் யாதொரு கடினவேலையும் இன்றி ஏற்கனவே உல்லாச வாழ்க்கை வாழ்கிறவர்கள் தான். இவர்கள் மிகப்பணம் செலவழித்து இவைகளைக்காணுகிறார்கள். ஏழைகள் சென்றால் பெரும் பணவிரயமே அன்றி உண்மைப் பயனைப்பெற மாட்டார்கள். ஏற்கெனவே சாப்பிட்டவனுக்கு அவை மீண்டும் விருந்தளிப்பதை ஒக்கும். நாட்டுப்புறங்களிலோ முன்னமே யிருந்து வேலை செய்த மக்களுக்கு அவைகள் ஓய்வு கொடுக்கின்றன. பணவிரயம் மிகுதியும் இல்லை. ஏழைமக்களுக்கு ஒரு தம்பிடிச்செலவும் இல்லை. ஆகவே எந்தக்கரை பச்சை என்று நீங்களே கூறுங்கள்.

வித்தைக்காரன்.

பண்ணடி சுப்பண்ணகவுண்டர் ஒரு நாள் தெருத் திண்ணையில் வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் முன்னால் தலையாரி குப்பன் தோன்றினான். 'சுவாமி தண்டம்' என்றான். 'என்னடா குப்பா? என்ன இந்த வேளையில் வந்தாய், கஞ்சி குடிச்சாச்சா?' என்றார். 'ஆமாம் சுவாமி

உங்கள் தயவாலே ஆச்சுங்கோ' 'சரி ஊரிலே என்ன விசேஷம்?' 'ஆமாங்க நம்ம புறம்போக்கிலே ஆலமரத் தடியிலே வித்தையாடுகிறவங்க கூடாரம் போட்டிருக் கிருங்கள். இளைய பண்ணுடிகள் எல்லாரும் வித்தை பார்க்க வேணும் என்கிருங்க.' 'அப்படியா, சரி, பகல் நாலு மணிக்கு வரச்சொல்லு, நல்ல வித்தை காட்டவேண் டும். ஊரிலே குடிகளுக்கு சொல்லிவிடு, கோயில் முன் ஞலே ஆடட்டும். பண்ணுடிச்சியிடம் சொல்லி அவங் களுக்குகஞ்சிக்கு ஏற்பாடு செய்யச்சொல்லு' என்று உத்திரவிட்டார்.

உடனே ஊர் முழுதும் அல்லோலகல்லோலப்பட்டது. பறையடித்து விளம்பரப்படுத்திஞன். வாத்தியார் பள்ளிக் கூடம் சாத்திஞர். சங்கதி எல்லாப்பண்ணைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. மூன்று மணியிலிருந்து ஊர் மக்கள் வரத்தொடங்கினர். கோயில் முன்ஞல் வெளி யிடம் முழுதும் நிரம்பி விட்டது. நடுவிலே பத்து அடி வட்டமாக காலி இடம் வித்தைக்காரனுக்கு என்று விடப் பட்டது. அதை ஒரு கரை போட்டு அத்துப்படுத்தி விட்டான் வித்தைக்காரன். அதை சுற்றிலும் சிறு பிள் ளைகள் உட்கார்ந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் பெரிய பிள்ளைகள் உட்கார்ந்தார்கள். அவர்களுக்குப்பிந்தி பெரியவர்கள், ஒரு புறம் ஆண்களும், மற்ருெருபுறம் பெண்களும் உட்கார்ந்தார்கள். சரியாக நான்கு மணிக்கு வித்தைக்காரன் துடியடித்தான். பண்ணுடி சுப்பண கவுண்டரும் மற்ற உறவினர்களும் கோயில் திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

வித்தைக்காரன் தன்வித்தைகளை ஒவ்வொன்ருகக் காட்டிஞன், பாம்புக்கும் கீரிக்கும் சண்டை, செத்த பாம்

யை உயிர்ப்பித்தல், கோழி கீரி இவைகளை ஒன்றுமில்லாக் கூடையிலிருந்து வெளிவரச்செய்தல், வாயில் நெருப்பு எரித்தல், வாயில் பில்லாங்குழல் ஊத அப்போது ஒரு மூக்கில் நீர் ஊற்ற மறு மூக்கில் நீர் ஓடச்செய்தல், பத்து பந்துக்களை கீழே விழாமல் எறிதல் முதலியவைகளை எல்லாம் காட்டினன். மாஞ்செடி முளைக்கச்செய்ததே சிறுவர்கள் மிக வியந்தார்கள். ஒரு பெண்ணை பெரிய கூடைக்குள் மூடி விட்டு கத்தியினல் குத்தவும் அவள் சாகாதிருந்தது வியப்பாக இருந்தது. சிறிதுநேரம் பொறுத்து அவள் வெகுதூரத்திலிருந்து வந்தாள். இது மிகவும் ஆச்சரியத்தைத்தந்தது. அன்று இருளும்வரை வித்தைகள் நடந்தன. ஆட்களுக்கு உணவு, பழந்துணி, நான்கு பணமும் கொடுக்கப்பட்டன. மிகவும் சலாம் செய்துவிட்டு அவர்கள் போனர்கள். இவ்வித்தைகளைக் குறித்து ஒரு வாரம்வரை ஊரில் பேச்சுமயமாகவே இருந்தது.

கழைக்கூத்து.

சிலமாதங்கள் சென்றன. வித்தைக்காரர்கள் பேச்சு மறந்துபோயிற்று. ஒரு நாள் ஆலமரத்தடியில் சில கழைக்கூத்தாடிகள் கூடாரம் போட்டனர். பண்ணுடிக் கவுண்டருக்குத் தகவல் கிடைத்தது. அவரும் ஊர் மக்களுக்குச் சலுகை காட்ட இச்சித்தார். தலையாரிக்கு உத்திரவிடப்பட்டது. அன்றைய பிற்பகல் ஊருக்கு விடுமுறை ஏற்பட்டது. பள்ளிச்சிறுவர்களுக்கோ மாங்கொட்டை முளைத்ததுபோல வேறு ஒரு அதிசயம் வரும் என்று எண்ணி வெகு ஆசையோடு இரண்டு மணி நேரத்திற்கு முந்தியிருந்தே நான் முந்தி நீ முந்தி என்று இடம் பெற முயன்றுர்கள். இடத்திற்காகச் சில குட்டிச் சச்சரவுகளும் நடந்தன. சுமார் நான்கு மணி அளவில் கோயில்

முற்றம் முழுவதும் திருவிழாபோலக் கூட்டம் நிறைந்தது. இந்தமுறை கழைக்கூத்தாடிக்கு 10 அடி அகலம் போதாது. இருபது அடி அகலத்தில் வட்டம் செய்துகொண்டார்கள். 30 அடி உயரமுள்ள ஒரு பெரு மூங்கில் நாட்டப்பட்டது. அருகே 15 அடி நீளத்தில் 10 அடி உயரமுள்ள இரண்டு கம்புகள் நாட்டப்பட்டன. அவ்விரண்டிற்கும் இடையே ஒரு கம்பி பிணைக்கப்பட்டது. அது இரு புறமும் ஆணிகளால் பிணைக்கப்பட்டது. பறை அடித்ததும் கூத்தாடித் தலைவன் வெகு உருக்கமாக ஒரு பிரசங்கம் செய்தான். இந்திரசாலம், மகேந்திரசாலம் எல்லாம் தோற்கும்படியாக அற்புதமான வேடிக்கைகளைச் செய்வதாகச் சொன்னான். முதலில் இரண்டு இளைஞர்கள் பலவிதமாகக் குட்டிக்கரணங்கள் போட்டார்கள். பிறகு காலைத் தேள் கொண்டிபோல நிறுத்தி இரு கைகளால் நடந்தார்கள். பலவித ஆசனங்களையும் செய்தார்கள். பீப்பாய் மேல் ஏறி காலால் பீப்பாயை உருட்டிக்கொண்டே கைகளால் பத்து பந்துக்களை கீழே விழாமல் வீசினார்கள். தலைகீழே நடக்கையிலே ஒருவன் கண்ணிமைகளில் பிடித்த ஊசியை கண்ணிமைகொண்டே மற்றொருவன் வாங்கினான். ஒரு பெண்ணை நிறுத்தி அவள்மீது படாமலேயே கூரிய ஈட்டிகளை ஒருவன் வீசினான். கம்பியின் பேரில் ஒரு பெண் முன்னும் பின்னும் நடந்தாள். உயர்ந்த கழையின் உச்சியில் ஒரு பெண் ஏறி கரகர என்று சுற்றினாள். தலைகீழாய்த் தொங்கினாள். இறுதியில் ஒரு பெண் நீர் நிறைந்த ஒரு அடி குழியில் தலைகீழாக நின்று தலையைவிட்டு அந்நீருள் போட்ட மூக்கரையைத் தன் மூக்கின் துளையில் கை உதவியின்றித் தானே மாட்டிக்கொண்டு வெளியே தலையை எடுத்து நின்றாள். இந்தக் கடைசி அற்புதத்தைக் கண்டு எல்லாரும் மிகவும் ஆச்ச

ரியப்பட்டார்கள். பண்ணுடிகள் அக்கூத்தர்களைப் பாராட்டி வெகுமதிகளும் ஆடை உணவு முதலியவை களும் கொடுத்து வழியனுப்பினார்கள்.

வேடக்காரர் கூத்து.

வித்தைக்காரனும் கழைக்கூத்தனும் ஊரூராய்ச் சென்று தங்கள் வித்தைகளைக் காட்டி மக்களை உல்லா சப்படுத்தியது போல மற்ற வேடிக்கையாளர்களும் ஆண் டுக்கு ஒருமுறை வருவதுண்டு. எங்கள் ஊரிலே இவர் களுக்கு எல்லாம் சகல வசதிகளும் தந்து மக்களுக்கும் உற்சாகம் மூட்டுவதில் பண்ணுடி சுப்பண்ண கவுண்ட ருக்கு மீறின பெரியார்கள் எங்கும் இல்லை. இதனாலே சுப்பண்ண கவுண்டருக்கு அந்த வட்டாரத்தில் நல்ல பேரும் புகழும் உண்டு. மற்ற வேஷக்காரர்களைப்பற்றி நாம் மிகுதியாகச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் பகல் வேஷக்காரர்களைப்பற்றி ஒரு வார்த்தை கூறவேண் டியது அவசியம். வேனிற் காலங்களில்தான் அவர்கள் வருவார்கள். வெகுவாக மூன்று பேருக்கு குறையாமல் இருப்பார்கள். ஒருவன் கிழட்டு வேடம். ஒருவன் வாலிப வேடம். மற்றவன் பெண் வேடம். பெண் வேடக் காரன் பெண்போலவே காதும் மூக்கும் குத்தியிருப்பான், மயிர் வளர்த்தியிருப்பான். இவர்கள் எல்லாரும் வேடிக் கையான பாடல்களை நன்றாகப் பாடுவார்கள். இவர்கள் நன்றாக நடனமும் ஆடுவார்கள். வேண்டிய வேடங்களைப் பூண்டுகொண்டு ஒவ்வொரு வீடாக காலைமுதல் பகல் வரையில் சென்று ஆடல்பாடல் செய்து மக்களை நகைப் பிப்பார்கள். காசி யாத்திரைப் பயிராகிகள், வள்ளுவனும் மனைவியும், கலைமகளுக்கும் திருமகளுக்கும் சம்வாதம், சிவ பிரான் பெருமாள் சம்வாதம் முதலிய பகுதிகளை வெகு

உருக்கமாகப் பாடி மக்களைக் களிப்பிப்பார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஐந்து நாளுக்கு குறையாமல் இருந்து இறுதி நாளில்காணிக்கைகளையும் துணிமணிகளையும் வசூலித்துச் செல்லுவார்கள். சுப்பண்ண கவுண்டர் கொடுப்பது எல்லாரிலும் சிறிது தாராளமாகவே இருக்கும். இவர்களைப் போலவே வந்துபோகும் மற்றொரு கூட்டம் பட்டுராஜாக் கூட்டம். அவர்கள் சாதாரணமாக மூன்று பேராகவருவார்கள். தேசிங்குராஜன் கதை, கான் சாயபு கதை, நல்ல தங்காள் கதை, கட்டபொம்மு கதை, பாலநாகம்மாள் கதை இவைகளைப் பாடுவது வழக்கம். மூவரும் நன்றாக ஆடைகளை உடுத்தித் தலைப்பாகை அணிந்து கையில் தம்புரு வைத்துக்கொண்டு நின்றுகொண்டே பாடுவார்கள்.. சில நிமிஷங்களுக்கு ஒருமுறை வெகு விரைவாகப் பத்தடி நடந்துபின் மெதுவாய் நின்ற இடத்திற்குத் திரும்புவார்கள். அடிக்கடி "தந்தானே, தந்தானே" என்று பல்லவி பாடுவார்கள். இவர்கள் மாலை 8 மணி முதல் 12 மணிவரை இவ்வாறு பாடுவதுண்டு, இந்தக் கூட்டத்தாரே முன்னாளில் நாட்டுச்சரிதப் பிரசாரகர்கள். இவர்கள் பாடல்கள் வெகு எளிமையாகவும் மிக உருக்கமாகவும் இருக்கும். ஊர் மக்களில் வீரம் ஊட்டும் பாடல்கள் மிக்கக் கூறுவார்கள். சுப்பண்ண கவுண்டருக்கு இப்பாடல்களில் மிகவும் விருப்பம்.

இசை கொடுக்கும் உற்சாகம்.

வெளி ஊர்களிலிருந்து நாட்டுப்புறங்களுக்கு வருவோர் பலவித வேடிக்கைகளினாலும், கேளிக்கைகளினாலும் உற்சாகம் மூட்டிவருவதைக் கண்டோம். அவைகளால் நாட்டுப்புற மக்கள் அடைந்த ஆறுதலைப்பற்றியும் கூறினோம். மேலும் ஊர் மக்களும் பலவிதங்களில் உற்சாகம் தாக்

கூடிய செய்கைகளைச் செய்து தமது சகோதர சகோதரிகளை மகிழ்விக்கிறார்கள். அவைகளை தனியே பின்னால் கூறுவோம்.

இங்கே மற்றொரு சிறந்த நிகழ்ச்சியைக் கூறாமல் தள்ளமுடியாது. அதாவது இன்னிசையின் உபகாரம். வேடிக்கைகள் மனதிற்கு ஆறுதலைத் தருவதைக்காட்டிலும் இன்னிசை அதிகமாகக் காட்டும் என்று உறுதியாகக் கூறலாம், மேலே சொன்ன வெளி ஊரார்கள் ஊர் மக்களை வசீகரித்தது அவர்களுடைய இசையினாலே என்க. பகல் வேடக்காரன் எத்தனை அழகாக வேடம் போட்டபோதிலும் அது இளைஞர்களை இழுக்குமே தவிர பெரியவர்களை வசியம் செய்யாது. ஆனால் அவ்வேடக்காரன் ஆடுவதோடு பாடுவதையும் கொண்டிருப்பதினால் அப்பாடலில் உள்ள இசையே மக்களை மயக்குகிறது. அதுபோலவே பட்டுராஜக்களும் கதைகளைச் சொல்லும்போது தாளத்திற்கும், தம்பூராவிற்கும் இயைய இன்னிசைப் பாடல்களைப் பாடுவதினால்தான் ஊர் மக்களை இழுக்கிறார்கள். ஆகவே இன்னிசையில் கவர்ச்சி மிக உண்டு என்று அறியவேண்டும். ஊர் மக்கள் இன்னிசையில் ஈடுபட்டவர்கள் ஆனதினாலே சின்னஞ்சிறு வயது முதல்கொண்டே பாடல்களைப் பாடி மகிழ்வார்கள். பள்ளிப் பிள்ளைகள் பள்ளியில் கற்பதுவும் ஏனையோர்கள் பாடலாசிரியர்களிடம் கற்பதுவும் சகஜம். ஆனால் பெரும்பாலும் பாட்டிமார்கள் தாய்மார்கள் சொல்லும் நாட்டுப் பாடல்களையே கர்ண பரம்பரையாகப் பாடக் கற்றுக்கொள்ளுவார்கள். அவைகளில் விளையாட்டுப் பாடல்கள் மிகுதி. பெண்பிள்ளைகள் மட்டும் அல்ல. ஆண்பிள்ளைகளும் இவ்வாறான பாடல்களை கற்றுக்கொண்டு இள

வேனிற் காலங்களில் நிலா ஒளியில் தெருக்களிலும் வெளியிடங்களிலும் இருந்துகொண்டு ஆடிப்பாடுவார்கள். பெண்பிள்ளைகள் கும்மி கோலாட்டம் இவைகளில் பாட்டுக்களைப் பாடினால், ஆண்பிள்ளைகள் ஒயிற்கம்பி, பெருங்கோலாட்டம் இவைகளில் ஈடுபட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். இப்பாடல்களைப் பெரியவர்கள் கேட்டு மகிழ்வார்கள். பற்பல திருவிழாக்களிலும் பாடல்கள் பாடுவதுண்டு. சிறப்பாக காமன் பண்டிகையில் இரு கட்சிகளுக்குள் போட்டி போட்டுக்கொண்டு பாடல்களைப் பாடுவார்கள். இவைகள் எல்லா மக்களுக்கும் உற்சாகம் தருபவைகள்.

வேலையில் இசை.

மக்கள் தனியாக இசையை இரசிப்பதற்காகப் பாடுவது இயற்கை. அது சும்மா இருப்பவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். ஆனால் வேலைசெய்து கொண்டிருப்பவர்களுக்கு ஆறுதல் இல்லையா என்று கேட்கலாம். அவர்களுக்கும் உண்டு. அதனைத் தருவதும் இன்னிசையே. அவ்வின்னிசையும் பிறர் பாடுவது ஆகும். அதனைச் சற்று விவரிப்போம்.

ஆற்ரோரமாக நான் ஒரு நாள் நடந்துகொண்டிருந்தேன். இரு புறங்களிலும் தென்னம் பொழில்கள் நிரம்பியிருந்தன. அங்கே நடப்பது மிக இனிமையாக இருந்தது. அப்போது பொழில்களிடையிலே தொலைவிலிருந்து அழகிய இனிய பாட்டோசை கேட்டது. காதுக்கு வெகு இனிமையாக இருந்தது. அது வந்தவழியே நடந்தேன் தோப்புக்கள் தாண்டினதும் புன்செய் நிலங்கள் தோன்றின. அங்கே சிறிது தூரத்தில் ஒரு தோட்டம் தெரிந்தது. அந்தத்தோட்டக் கிணற்றின் மேலே கை ஏற்றம்

ஏறவும் இறங்கவும் கண்டேன். அங்கே இரண்டு ஆட்கள் ஏற்றத்து மரத்தின் மேலும் ஒருவன் கிணற்று வாரியிலும் நின்றுகொண்டு நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். மேலே இருப்பவர்கள் ஏறு மரத்தின் மேல் ஏறியும் இறங்கவும் செய்யச்செய்யப் பாடிக்கொண்டே இருந்தார்கள். அந்த பாடல்தான் என் காதை குளிரவைத்தது. வெகு தொலைவில் வெறும் இசைதான் கேட்டது. அருகில் வரவர சொற்களும் கேட்டன. "மூங்கில் நுனி மேலே" என்று ஒருவன் பாடினான். மற்றவன் "ஓங்கு பனி நீரே" என்று இரண்டாம அடி சொன்னான், இவ்விரண்டையே வெகு நேரம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் இளையவனது கண்டம் மிக மெல்லியதாகவும் இனிமையாகவும் இருந்தது. வெகு தூரமும் கேட்டது. சிறிது நேரம் நின்று கேட்டுக்கொண்டிருந்தேன். பிறகு முதல்வன் "ஓங்கு பனி நீரை" என்று தொடங்கினான். மற்றவனோ "வாங்கு கதிரோனே" என முடித்தான். முழுப்பாட்டு

"மூங்கில் நுனி மேலே ஓங்கு பனிநீரே
ஓங்கு பனி நீரை, வாங்கு கதிரோனே"

என்றிருந்தது. என்ன இயற்கை வருணனை என்று மெச்சினேன், இது சொல்ல ஒரு மணியாயிற்று. அந்த ஒரு மணி நேரம் போனது எனக்குத் தெரியவில்லை. வருந்தி நீர் இறைக்கும் ஆட்களுக்கோ அதேபோல் தான் காலம் போனதும் இருக்கும் என்று எண்ணினேன்.

தொழிலாளர் பாட்டு.

எங்கள் தோட்டத்திலே ஒரு சாலை கட்டினோம். செங்கல் வேலை சில ஒட்டர்கள் செய்தார்கள். காறை பூச

வேண்டிவந்தது. அதற்காக சில ஒட்டர்கள் காறை இடித்தார்கள். நிலத்திலே பாத்தி காட்டி அதில் சுண்ணும்பும் மணலும் கொட்டி அவற்றைக் கலப்பதற்காக உலக்கைகளால் இடித்தார்கள், அவ்வாறு இடிக்கையில் வேலையின் சிரமம் பொறுக்க அழகிய பாட்டுக்களைப் பாடினார்கள். ஒருத்தி சில சொற்கள் சொல்ல மற்றவர்கள் மீதிச் சொற்களை சொல்லிப் பாடினார்கள்.

"ஒரு கப்பல் ஓடி வந்து பட்டணம் சென்று
பட்டணம் சென்று,
பட்டணத்து சுற்ற(ம்) கண்டு பாய்மரம் என்றாண்டி,
பாய்மரத்தின் கீழ் இருக்கும்பார்ப்பர் ஆசாமி,
பார்ப்பர் ஆசாமி
தாமரைப்பூ மருக்கோழுந்து சந்தனப் பெண்ணே"

இப்பாட்டு முடிந்ததே மற்றொருத்தி மீண்டும் தொடங்கினாள்.

"இரண்டு கப்பல் ஓடிவந்து பட்டணம் சென்று
பட்டணம் சென்று......................பெண்ணே"

என்று முடிந்தது. பிறகு மூன்றாம் பெண் "மூன்று கப்பல்கள் ஓடிவந்து பட்டணம் சென்று" என்று தொடங்கினாள். இவ்விதமாக ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, எட்டு, ஒன்பது, பத்து என்று வரிசையாக எண்களை கப்பலோடு அடுக்கிப் பாட்டுக்களை முடிவு செய்தார்கள். பத்து ஆனவுடன் மீண்டும் ஒன்று என்று தொடங்கினார்கள். இந்த முறைகளை எண்ணினால்போதும் இப்பெண்கள் இத்தனை இடிகள் இடித்தார்கள் என்று சொல்லமுடியும். எண் தெரிந்து சரியாகக் காறை மிதிபட்டதா என்ற கேள்வி ஒரு பக்கம் இருக்க வேலையாட்கள் இப்பாடலை சொல்லிவந்ததினால், அவர்

களுக்கு வேலையின் சிரமமே தெரியவில்லை. மனதும் இரம்மியமாக இருந்தது. வேலையும் விரைவில் பூர்த்தி ஆகியது. இப்பாடல்களைச் சொல்லாவிட்டால் வேலையால் கொடிய பீதிபெற்று ஆயாசம் அடைந்திருப்பார்கள். அதனை விலக்கவே பெண்கள் இவ்வாறு பாடுவது இயற்கையாகி விட்டது. ஒட்டர் பாடலைப்போலவே பலவித விவசாயச் செய்கைகளிலும் பாடல்கள் உண்டு. அவைகளில் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் வித்தியாசம் உண்டு.

வண்ணான்.

எங்கள் ஊர் வண்ணானும் வண்ணாத்தியும் ஊரில் பண்ணாடிக் கவுண்டர்கள் முதலியவர்களின் அழுக்குகளை யெல்லாம் சாலாகக்கட்டிக் கழுதையின்பேரில் சுமக்கமுடியாதபடி போட்டு ஆற்றிற்குத் துவைக்கக்கொண்டு போவார்கள். அங்கே அவர்கள் அவைகளையெல்லாம் துவைக்கத் தொடங்கினால் ஆற்றில் ஓடும் கால்வாய் போன்ற அளவான நீரோ ஒரே அழுக்காகிவிடும். அதனைக் கண்டால் எங்கள் குடியானவர்களுக்கு ஒரே புகைச்சல். 'என்ன எங்கள் அழுக்கு இத்தனை என்று காட்டவோ இப்படி பாசியெல்லாம் கலந்து உருட்டுகிறாய்' என்று அவர்களைத் திட்டுவார்கள். ஆனால் அதே காலத்தில் அவர்களுடைய நெஞ்சில் மகிழ்ச்சியும் தோன்றும். அதனை அவர்களிடம் காட்டமாட்டார்கள். ஆனால் அதை அவர்கள் அறிந்து பாசத்தையும் சிறிது கலந்துவிடுவார்கள். நிலங்களுக்கு இந்த அழுக்கே போதும் அல்லவா. ஏன் தாங்கள் தனியாக வேறு எருவைக் காசு கொடுத்து வாங்க வேண்டும் என்று நினைப்பார்கள். அந்த வண்ணானும் வண்ணாத்தியும் தப்பும்போது ஆயாசம் தோன்றாமல் பாடுவார்கள். அவர்கள் பாடுவது அவர்களுக்குத்தான் தெரி

யும். அப்பாட்டின் இசை தெரிகிறதே ஒழிய பதங்கள் ஒன்றும் தெரிவதில்லை. அவர்களிடம் 'அப்பா நீ என்ன பாட்டு பாடுகிறாய் "வண்ணான் வந்தானே வண்ணாரச் சின்னான் வந்தானே" என்பதைப் பாடுகிறாயோ' என்று கேட்டுவிட்டால் அவனுக்கு வரும் கோபத்திற்கு அளவில்லை. 'எவனோ சுடுகாட்டு முண்டம் பாடிவிட்டது அப்படி. அது எங்கள் பாட்டு அல்ல' என்று ஒரே போடு போடுவான். ஆனால் அவன் பாடும் இசையை ஒட்டி இதுவாக இருக்குமோ என்று ஊகித்தேன்.

"ஆழந்துறைதனிலே அழகான கல்பதித்து
நீளத்து கில் பிடித்து நின்றடிக்கும் வண்ணாரே,
வண்ணாரப்போட்டி மகன் மதிகேடன் செய்தவினை
உண்ணாமல் தின்னாமல் ஊரேத்தப்பட் டேனே.
உண்ணேன் என் சோத்தை, உடுத்தினேன் என்துகிலை,
தின்றேன் அவன் பாக்கை, திருமார் போடணையாமல்
என் சோட்டுப்பிள்ளைகளா என்னைப்போல் ஏழை
மதி போகாமல்
தட்டியெழுப்பித் தழுவிமனம் கூடுங்கடி"

ஆனால் இத்தனை படிப்பினை அவன் மண்டையில் ஏறியிருக்குமா என்பது என் சந்தேகம். இதைப் பாடிக் காட்டி இதுதானோ உன் பாட்டு என்று அவனைக் கேட்கவும் எனக்குத் தைரியம் வரவில்லை. ஆகவே சும்மா இருந்துவிட்டேன்.

இடையன்.

எங்கள் ஆடு மாடுகளை மேய்க்கும்படியான இடையனுடைய சிறப்புகளைச் சொல்லாவிட்டால் பெரும் குறைவு அல்லவா. சண்டீசுவர நாயனார் எடுத்துப் பாராட்டின

தொழில் அல்லவா அவனுடைய தொழில்? ஆறைய நாய ஞர் குலத்தில் அல்லவா அவன் பிறந்தான். மேலும் அவர்களில் ஒரு சித்தரும் தோன்றினர் அல்லவா. கண் ணனே அவர்களுடைய குலத்தவன் என்ருல் வேறு என்ன வேண்டும். அவனே எங்கள் மாடுகளை நன்ருகப் போஷித்துவருவான். எங்கள் ஆடுகளை எந்த வேலியும் விடாமல் மேய்த்துவரச் செல்வான். ஆனல் அந்த ஆடு களுக்கு ஒரு மதி உண்டு. தன் முதலாளியின் காட்டை யும் வேலியையும் மேய்வது கிடையாது. பிற ஆட்களின் வேலிகளை மட்டும் மேயும். தொண்டுப்பட்டி அடைத்தா லும் அதற்கு வேறு மதி தோன்றுவதில்லை. இடையச் சிறுவர்களுக்கோ வெகு தீவிர இசைஞானம் உண்டு. தங்கள் ஆடுகளை அறிந்து அழைப்பதுபோல இசைகளின் வண்மைகளையும் அறிவார்கள். புல்லாங் குழல் ஊதினல் ஆறையநாயனரே அவதரித்து வந்துவிட் டாரோ அல்லது பல்லடம் சஞ்சீவிராயரிடம் இவன் பழகி விட்டானே என்று ஐயுறவேண்டி வரும். ஆனல் அவ னுக்கோ சினிமாக்கள் என்ருல் சொல்லமுடியாத கோபம். ஒருமுறை ஒரு சினிமாப்பாட்டைக் கேட்டுவிட்டான்.

“டையன்ன டையன்ன டையன்ன டையோ
டாவன்ன டீவன்ன டேவன்ன டேவன்ன
டையன்ன டையோ
டிர்ர் டிர்ர் டிர்ர்”

என்றதும், பாடும் பெட்டியை உடைக்கச் சென்றுவிட் டான். ஆனல் அவனுக்கு

“தாங் திமித் தீமித் தந்தக் கோனரே
திங் திமித் திமித் திந்தக் கோனரே”

என்றால் ஆனந்தந்தான். மேலும் எங்கள் ஊரில் கூடை பின்னும் மேதர்களும், பாய் பின்னும் குறத்திகளும், ஊசி விற்கும் குருவிக்காரர்களும் மற்றுமுள்ள பல தொழிலாளர்களும் அடிக்கடி காணப்படுவார்கள். இவர்களும் வேலைசெய்யும் போதெல்லாம் அழகிய பாடல்களைப் பாடுவதுண்டு. இவர்களிலே எல்லோரைக் காட்டிலும் பச்சை குத்தும் குறத்திகளே தாங்கள் நறுக்கு நறுக்கு என்று குத்தும்போது வருத்தம் எத்தனை எடுத்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளுமாறு தம் இனிய இசைகளை அவிழ்த்துவிடுவார்கள். அப்பாடல்கள் மிக இனிய குரலில் வெளிவந்து பெண்களையேயன்றி அருகில்வரும் ஆண்களையும் மயக்கிவிடும். இவ்விதமான பாடல்களிலே ஆடவர்களும் பெண்மக்களும் ஈடுபடுவார்கள். ஆனால் அன்னார்களுடைய கடுமையான குத்துத்தொந்திரவுகள் எத்தனை எளிதில் மாறி ஆயாசம் தீர்ந்து ஆறுதல் தோன்றும் என்று கூறவேண்டுமா. இந்தமுறையில் சில பொழுதுபோக்குகள் எங்கள் ஊர்களில் தோன்றுவதுண்டு.

X. நாட்டுப் பாடல்கள்.

நாட்டுப்பாடல்கள் எவை?

பெரிய பெரிய நகரங்களிலும், கலைக்கழகங்களிலும் அருமையான இலக்கியங்கள் என்று சொல்லிப் புலவர் களும் கவிவாணர்களும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, இராமாவதாரம், வில்லிபாரதம் முதலிய காவியங்களை எடுத்துச் சொல்லிப் பலவிதச் சுவைகள் அவைகளில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இருப்பதாகப் புனைந்து கூறி மேடைகளில் ஏறிச் சொற்பொழிவுகளைப் பரப்பி விடுவார்கள். அவர்களுக்குப் பல பெரிய பிருதுக்கள் தோடாக்கள் சால்வைகள் பட்டங்கள் தருவார்கள். சம்ப ளமும் ஊதியமும் கிடைக்கும். ஆனால் எங்கள் குக்கிரா மங்களிலோ அவைகளைச் சொன்னால் இது என்ன காட் டுப்பாஷையா ஒன்றும் விளங்கவில்லையே என்பார்கள். ஆனால் எங்கள் குடிமக்களுக்கு அறிவு இல்லையா, இசை இல்லையா, கருத்துக்கள் இல்லையா? இரண்டு நாள் எந்தப் புலவனும் எங்கள் ஊர்களில் இருந்தும் திரிந்தும் பார்க்கட்டும். சிறு குழந்தைப்பருவம் முதற்கொண்டு பல் விழுந்த பொக்கைவாய்க் கிழவி வரையில் எத்தனை அருமையான பாடல்களைக் கற்றிருக்கிறார்கள் என்று எளிதில் அறிந்துகொள்ளலாம். இரும்புக்கடலை போன்ற தும் பல் உடைந்து போகக்கூடியதும் கண் கூசும்படியா னதும் காது செவிடுபடும்படியானதும் ஆன பாடல்கள் எங்கள் ஊருக்குத் தெரியாது. அவைகளைக் கேட்டும் இரா ர்கள். கேட்டாலும் பொறுத்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். தெளிவான கருத்து விளங்கும்படியான சொல், நெஞ்சை உருக்கும்படியான அடுக்கு, காதுக்கு

இனிக்கும்படியான இசை, எத்தனை முறை கேட்டாலும் தெவிட்டாத மகிழ்ச்சி, இவைகளைக்கொண்டவை எங்கள் மக்கட் பாடல்கள். இவைகளை எந்தப் பெரிய கவிச்சக்கர வர்த்தியும் பாடவில்லை. எந்தப் புலமை இராட்சதனும் இயற்றவில்லை. கர்ண பரம்பரையாகக் கிழவிப்பாட்டி தன் பேர்த்திகளுக்குச் சொல்ல, அவளும் திருப்பித் தன் பேர்த்திக்குச் சொல்ல அவை நாட்டுப்புறம் எல்லாம் பரம்பரையாக ஒலித்துக்கொண்டிருக்கும். இவைகள் எந்த நூலிலும் அச்சுவாகனம் ஏறவில்லை. சில பேராசைக்கார அச்சகத்தார்கள் கிழிக்கத்தக்க காகிதத்தில் தப்புத் தப்பாக அச்சடித்து ஒரு அணு இரண்டணுவிற்கு விற்றதுண்டு. பெரும்பான்மையான பாடல்கள் நான்முகன் நாவில் கலைமகள் இருப்பதுபோல உறைந்துக்கொண்டு இருக்கும். அவைகளுக்கும் இந்த நாளிலே அதிட்டம் வந்துவிட்டன. கலைமகள், விகடன், கல்கி முதலிய ஆசிரியர்களும் இலங்கை வெள்ளவத்தை இராமலிங்கமும் சந்திக்கு இழுத்துவிடுகிறார்கள். சிறப்பாகத் திருச்சி வானொலித் தலைவர்களும் அவைகளைத் தேடிக்கொண்டு சென்று சேகரித்து எழுதிவைத்து அவைகளைச் சிறிது சிறிதாக வெளியிட்டுப் பொதுமக்களை மகிழ்விக்கிறார்கள்.

குழவிப் பருவம்.

பெரிய கவிகள் குழவிப்பருவத்தை வெகு அழகாகப் பாராட்டியுள்ளார்கள். பெரியாழ்வார் முதலில் தொடங்கினார். பிறகு குமரகுருபரர், பகழிக்கூத்தர், சிதம்பர முனிவர் அதனை விரிவுபடுத்தினார்கள். பிள்ளைப்பிராயத்தைப் பத்துப் பருவங்களாக வருணித்து அழகாக இலக்கியச்சுவை கொடுத்துப் பாடிப்போந்தார்கள். வரந்தருவாரோ (வில்லிமகனார்) பிறத்தல், கிடத்தல், இருத்தல்

தவழ்தல், நின்றல், பயில்தல், வளர்தல் என்ற எட்டு நிலைகளில் வைத்துப் பாடினர். வேறு எந்த மொழியிலே எந்தப் பாவாணர் இத்தனை அருமையாகப் பாகுபடுத்தித் தம் மொழியன்னையைப் பாடியுள்ளார்கள். இதனைத் தனியே படித்தும் இசைத்தும் அனுபவித்துக்கொள்க.

" பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே வளர்ந்தோர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள் "

ஆனால் நமது நாட்டுப்புறத்து மங்கையோ இந்தக் கட்டுப் பாடுகளை அறியாள். தன் நெஞ்சில் எழுந்த உணர்ச்சி ததும்ப அழகிய சொற்களால் பாடிப்பாடி மகிழ்வாள். பிறந்தபிறகு குழந்தையைத் தொட்டிலிலே இட்டுத் தாலாட்டுவாள். தாலாட்டும்போது

" ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆாரிரோ
சீராரும் பசுங்கிளியே தேவிட்டாத தெள்ளமுதே
நேராக உறங்கிலையோ நிறையன்பு ஊக்கிலையோ
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ "

என்று தன் மகவைப் பலவாறு வருணித்து அன்பை வெளியிடுவாள். பெரும் புலவர்களோ குழவியினுடைய வளர்ச்சி ஒவ்வொன்றிலும் கவிநயம் பொருந்தப் பாடுவார்கள். செங்கீரை ஆடுதல், சப்பாணி கொட்டுதல், தாலேலோ ஆட்டுதல், மெல்லமெல்லத் தடுமாறி நடத்தல், அம்புலி என்ற சந்திரனை அழைத்தல் முதலிய நிலைகளை வெகு உணர்ச்சி ததும்ப அழகு சொட்டச் சொட்டப் பாடியிருக்கிறார்கள். குமரகுருப சுவாமிகள் முத்துக்குமார சுவாமிப்பிள்ளைத் தமிழில்

" செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யோடுமொளி
திகழரை வடமாட
பைம்பொ னசும்பிய தொந்தியொடுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்,
பட்ட நுதற்பொலி பொட்டோடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்,
கட்டிய சூழியு முச்சியு முச்சிக்
கதிர்முத்தொடுமாட
அம்பவ ளத்திரு மேனியுமாடிட
ஆடுக செங்கீரை,
யாதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை "

" விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே
கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணாமே
யுருவ மணிச்சிறு தொட்டி லுதைத்துநி
னெண்பதநோவாமே

யொருதாளூந்தி யெழுந்திரு கையு
மொருங்கு பதித்து நிமிர்ந்
தருள்பொழி திருமுக மசைய அசைந்தினி
தாடுக செங்கீரை
யாதி வயித்திய நாதபுரிக்குக
ஞடுக செங்கீரை"

என்று பலவகைக் கருத்துக்களைப் புகுத்தித் தக்க உவமையோடு பாடி இருக்கிருர். ஆனல் நமது கிராமத்துக் குயில்களோ அத்தனை கவிநயமும் சொல்நயமும் இல்லாமற் போனபோதிலும் அன்பும் உணர்ச்சியும் குறைவுபடாமல் பாடுவார்கள். கிராமக்குயில்களுக்குப் பாடசாலைப் படிப்பே இல்லை, இயற்கைப் படிப்பே உண்டு என அறிவோம். 'தட்டுவாணி தட்டுவாளாம், கம்பஞ்சோறு உண்பாளாம்' என்று பாடிக் குழவியைக் கைகள் சேர்த்துத் தட்டச்சொல்லி அது தட்டுவதைப் பார்த்துச் சொல்வாள். அதையே பெரும் புலவர்கள் சொல்நயம், பொருள் நயம் பொலியப் பாடுவார்கள். இதனைப்படித்து பொருள் உணர்க.

"பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம்
புரக்கவெழ நாண்மற வனுய்ப்,
புறவுறு வளைத்தெனது பெயர் முட்டை பாடனெப்
பொன்போலு மென்றுபாட,
வெய்யான பாலைக்கி தேலாது நும்பெயர் விளம்பென
விளம்ப அவர் மேல்,
விழுந்ததுளி யென்றெடுத்துப் பாடியவர் நாவில்
வேல் கொடு பொறித்த சதுரா,

மையான மஞ்சுதவழ் காவில்வா ழுதிர்புன்னை
மலரரும் பைத்தரளமா,
வடபால் நதிக்கரையில் வண்டலம் பாவை முலை
மார்பினி லணிந்து மகிழ் வாய்த்
தையா விழிச்சியர்கள் விளையாடு கரனூர
சப்பாணி கொட்டியருளே,
சங்கரி திகம்பரி சிதம்பரிதருங்குமர
சப்பாணி கொட்டியருளே ”

விளையாட்டுப் பருவம்.

குழந்தைகளுக்கு நான்கைந்து வயதானவுடனே அவைகள் விளையாடத் தொடங்கும். சிறு பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடும். மண்ணிலே சிறு வீடுகளைக் கட்டி அடுப்பு வைத்துத் தாய்மார் சமயல்செய்வது போல தாமும் சமயல்செய்வதாக பாவிக்கும். பெண்பிள்ளைகள் அவ்வாறு சிற்றில் கட்டி விளையாட ஆண்பிள்ளைகள் அதனை அழிக்க வருவார்கள். அதனை வெகுநன்ருக அறிந்த சிதம்பரமுனிவர்

சிற்றிற் பருவம்

தேமாங் கனியி னடேப்பமைத்துத்
திகழுன் கழிந்த வலம்புரியிற்
செந்தேனுலைப் பெய்தரவின்ற
செழுமா மணி வெங்கனல் மூட்டிப்
பூமாதளையின் விதையரிசி
புகட்டிச் சமைத்துக் கதலிமடற்,
பொங்கப்பிழியு மதன் கனியும்
பொருத்த வளவிக் கறியட்டுக்,

காமாதவிப்பூம் பந்தரிடைக்
கயற்கண்ணுய மிழைத்தவண்டல்
கருதும் புவனகோடி யெல்லாங்
கரந்தும் படைத்துங் காக்குமோரு,
சீமானுனக்கோ ரிலக்கோ சொல்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
தேரூர்வீதிப் போரூரா சிறியேஞ்
சிற்றிற் சிதையேலே

என்று பாடியிருக்கின்ருர்.

பின்னர் சிறு கற்கள் பலகறைகள் முதலியவைகளை வைத்துக்கொண்டு அம்மானை பண்ணுங்கல், பண்ணுங் குழி முதலிய ஆட்டங்களை ஆடுவார்கள். விரல்களை வைத்து ஒன்று இரண்டு என்று பாடல்களால் எண்ணுவார்கள். இவ்வாட்டங்களில் கூறும் பாடல்கள் அருமை யானவை. சிலவற்றில் பொருள் இல்லை. சிலவற்றில் பொருள் உண்டு. அடியிற்கண்ட பாடல்கள் இவை சம்பந்தமானவை.

கல் விளையாட்டலில்

" ஒன்ருங் கல்லே ஒருதனி முதல்வன்
இரண்டாங் கல்லே இமையவர் பெருமான்
மூன்ருங் கல்லே முக்கண் மூர்த்தி
நான்காங் கல்லே நஞ்சுண்ட கண்டன்
ஐந்தாங் கல்லே ஐந்து முகத்தோன்
ஆருங் கல்லே ஆற்றுச்சடையன்
ஏழாங் கல்லே எமனை உதைத்தோன்
எட்டாங் கல்லே எருத்து வாகனன்

ஒன்பதாங் கல்லே உமை ஒரு பாகன்
பத்தாங் கல்லே பத்தர்கட் கடயன்" என்றும்

விரல் வைத்தாடலில்

திருவருள் அடிகள் திரும்பா அடிகள்
மருவறும் அடிகள் மாறு அடிகள்
ஆக்கிடும் அடிகள் அளித்திடும் அடிகள்
போக்கிடும் அடிகள் புதைத்திடும் அடிகள்
அருளிடும் அடிகள் ஐந்தொழில் அடிகள்.
பொருள் தரும் அடிகள் புண்ணிய அடிகள்

ஆடிய கழல்கள் அழகிய கழல்கள்
தேடிய கழல்கள் தேரா கழல்கள்
சோதிசேர் கழல்கள் சோக்கிடும் கழல்கள்
மாதுசேர் கழல்கள் மறைதரு கழல்கள்.

அன்புறும் பாதம் அருள் பொழிபாதம்
துன்பறும் பாதம் துணைதரு பாதம்
என்புருகவுமே இனித்துதிப்போமே
சொன்மலி பெயரில் சொலித்திடு முருவினை.

மலரடி மேலே மாப்பெருங் கழல்கள்
கழல்கள் அன்றிக் கணைக்கால் தோற்றம்
தோற்ற மன்றித் துதைந்தெழு தொடைகள்
தொடைகள் அன்றித் துவன்றிடும் இடையே
இடையும் அன்றி ஆடை யன்றி
இங்கித ஆடை அழகிய கச்சு
கச்சும் அன்றிக் களிதரு மார்பு
மார்பும் அன்றிமலிந்திடு நூலே

நூலும் அன்றி நுழைந்திடு மாலை
மாலையு மன்றி மகிழ்தரு கையே
கையு மன்றிக் கவின் பெரு தோளே
தோளு மன்றித் தோல்விட மிடறு
மிடறு மன்றி மிகுமறை வாயே
வாயு மன்றி வடிவுடை மூக்கே
மூக்கு மன்றி மூன்றுடைக் கண்ணே
கழநகைக் காதும் காதுமன்றிக்
கண்ணு மன்றிக்கலி செய் சடையும்
சடையுமன்றிச் சலித்திடு கங்கை
கங்கையன்றி கவின் பெறு பிறையும்
பிறையுமன்றிப் பிணிதவிர் முடியும்
முடியுமன்றி முகதியும் வருமோ
முடிதனைக் கண்டு முத்தினை அடைவோம்"

என்றும் பாடி யாடுதல் அறிக. வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு பாடல்கள் பாடப்படுவதால் அவைகளைத் திரட்டி வெளியிடுவது மிக்க பயன் தரும்.

பள்ளிப் பருவம்.

எங்கள் ஊர் வாத்தியார் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும்போது அவர்களுக்குக் கல்வியும் தமக்குக் கூலியும் இரண்டும் ஒன்று சேர அமைத்திடுவார். ஒவ்வொரு ஆண்டிலும் மகாநவமிக்சாக இரண்டு மாதங்கள் மற்றப் படிப்பை நிறுத்திவிட்டுக் கும்மி கோலாட்டம் பழக்கிவைப்பார். கோலடிக்கையில் நவரசப் பாடல்களும் கற்பிப்பார். வாணசுர நாடகத்தில் உடாங்கனை சித்திரரேகையைப் பார்த்துக் கூறும் காதற்பாட்டுகளும் இருக்கும். அரிச்சந்திர விலாசத்தில் சந்திரமதி லோகிதாசனை ஏந்திக்

கொண்டு மயானத்தில் அழுகிறபோது எவரையும் உருக்கும் சோகப்பாடல்களும் உண்டு. கோபிகள் கண்ணனைத் திட்டும் வசைப்பாடல்களும், பிரகலாதன் இரணியனுடன் வாதாடும் வீரப்பாடல்களும் உண்டு. இவ்வாறு பாடல்களைப் பயிற்றுவித்து உறவினர் வீடுகள்தோறும் கோலடிக்கையில் பாயிரமாகப் பாடும் பாட்டு இது.

"கடலை பொரி அவல் பயறு கரும்பு மிளநீரும்
கற்கண்டு சீனியுடன் அப்ப மதிரசமும்
வடை தோசை பணியாரம் வரிசை பலாச்சுளையும்
வாகான எள்ளிருண்டை பொறி விளாங்கனியும்
சூடவயிறு தனில் நிறைய அமுது கொள்ளும்பரனே
கும்பமத கம்பீர தும்பி முகத்தோனே
அடைவுடனே நகர்தன்னில் வாழும்
ஐங்கர நின்னிரு சரணம் அன்பில் மறவோமே"

என்பது. ஒவ்வொரு விழாவிலும் கும்மி அடிப்பது வழக்கம். அதனை வயதுவந்த இளைஞர்கள் அடிப்பார்கள். அவர்களிலே ஒயிற்கும்மி என்பது கொங்கு நாட்டில் சிறப்பாக உண்டு. அதனைப் பத்துப்பேர் வட்டமாக நின்று ஆடிப்பாடுவார்கள். நன்றாக இடுக்கி வேட்டிகளை கோவணமாக மடித்துக் கட்டிக்கொண்டு நிற்பார்கள் ஆட்டுவிப்போன் நடுவில் நின்று பாட்டுச் சொல்லிக் கைகளால் சைகை செய்வான். அப்பாட்டுக்கிணங்க ஆடுவோர் நடந்தும், சாய்ந்தும், நிமிர்ந்தும், உட்கார்ந்தும் கையாட்டியும், கால் தூக்கியும் பாட்டு இசைத்துக் கும்மி அடிப்பார்கள். இந்தவகையில் பாடும் பாட்டு இது.

"செம்பவளக் கால் நாட்டி நன்றாய்ச்
சிறந்த தளங்களைப் பூட்டி

கம்பளைப் பொன்மணி நிரப்பி அதில்
கனம் பொருந்தும் தழை பரப்பி
பருத்த குமிழாணி வைத்து வள்ளி
பாதம் வைக்க ஏணி வைத்து
ஏணிதனிற் பாதம் வைத்து வள்ளி
ஏறவள்ளி மனது வைத்து
பேணியவள் பரணிருந்தும் வள்ளி
பெற்றியுடன் வளம் பொருந்தும்
வரிசை அண்ணன் மார்போக அங்கே
வள்ளியும் பாங்கியுமாக
விரைந்து கையிற் கவண் சேர்த்தாள் வள்ளி
விளைந்த தினைப் புனங்காத்தாள்.
திசையை நோக்கிப் பார்த்திடுவாள் வள்ளி
தெய்வங்களைக் கும்பிடுவாள்
அசையாத பரணேறி வள்ளி
அன்னை வள்ளி மனந்தேறி
பாங்கியரைப் பிரியாமல் நெஞ்சில்
பல நினைவுங் குறியாமல்
தீங்குவரச் செய்யாமல் கிளி
தினைக் கதிரைக் கொய்யாமல்
வீசுங் கவண் மாறாமல் அம்மன்
வேற்று முகம் பாராமல்
காசலையப் பரண்மீது நின்று
காத்தாளே குறயாது.
இரு தனங்கள் அசைந்தாட உண்டை
எறிந்தாளே கவணிசைய
பருவ முகிற் குழல்சரிய வள்ளி

பண்புடனே கவணெறிய
கைவளைகள் கலகலென வள்ளி
கவணெறிந்தா ளுடல் பன்ன
மெய்யிலிட்ட பணிதுலங்க உண்டை
வீசுகிருள் கவணிலங்க
வஞ்சியிடை துவள நின்ருள் அமமன்
மணிக்குர லோலமிட்டாள்.
அஞ்சுகப் பெண் குரல் போடக் கேட்டு
அன்னங்கள் வந்திசை யாட
பூங்குயில்கள் சூழ்ந்து மொய்க்க அன்னப்
பூவைகளும் புகழ் பொய்க்க
மாங்குயில்க ளிசை பாட புள்ளி
மயிலனமும் நடமாட
செப்பு சிலைக் கண்ணுளே அம்மன்
தினைப்புனங் காத்திருந்தாளே.

ஆடுவோர் முன்னுலே ஆறடி வைத்தால் பிறகு வாத்தியார் "தை" சொன்னுல் அவர்கள் திரும்பி பின்னுலே இரண்டு அடி வைப்பார் இவ்வாறு பலவிதக் கூத்தாட்டுக் கதைகளும் நடத்தப்பெறும்.

விழா செல் பருவம்.

எங்களூர் விழாக்களிலே பெண்பிள்ளைகள் மிகுதியாகப் பங்கு எடுத்துக்கொள்வது இரண்டு விழாக்கள் ஆகும். அவைகள் ஆடிமாதத்திலே பதினெட்டாம் பெருக்கமும் தை மாதத்திலே பூ நோன்பும் என்பன. இந்த இரண்டிலும் பிள்ளைகள் அழகிய புதுக்கூடைகளிலே பூக்களையும் மற்ற மங்கலச் சாமான்களையும் எடுத்

துக்கொண்டு ஆற்றிற்குச் செல்லுவார்கள். அங்கே கன்னிமார் பூசை நடத்திவிட்டு வீடு திரும்பும்போது 'ஓலையக்காள்' பாட்டுப் பாடுவார்கள்.

"ஓலையக்கா(ள்) கொண்டையிலே ஒருசாடு தாழம்பூ
தாழம்பூச் சிற்றாடை தலைநிறைய முக்காடு— (ஓலே)
நாழி நாழி நெல்குத்தி நடுக்கிணற்றிலே பொங்க(ல்) வைத்து
நாட்டாரைக் கூட்டமிட்டு நடந்துபோறா(ள்) ஓலையக்கா(ள்) (ஓலே)
மேற்படியைத் தூர்த்துப் போட்டு வெற்றிலைக்காம்பைக் கிள்ளிப்போட்டு
மேனாட்டு ஓலையக்கா(ள்) மேற்கே குடி போறா(ள்) (ஓலே)
கும்பந் தலையிலே கோடாலி தோளிலே
வன்னி மரம்பிளக்க வருகிறாளாம் ஓலையக்காள் (ஓலே)
மஞ்சள் அறுபதென்பா(ள்) மைகோதி முன்பதென்பா(ள்)
மச்சட் குறைச்ச லென்று மயங்குறாளா மோலையக்கா(ள்) (ஓலே)
மாலை அறுபதென்பா(ள்) மைகோதி முப்பதென்பா(ள்)
மாலை குறைச்சலென்று மயங்குறாளா மோலையக்கா(ள்) (ஓலே)
சீலை அறுபதென்பா(ள்) சிற்றாடை முப்பதென்பா(ள்)
சீலை குறைச்சலென்று சிணுங்குறாளா மோலையக்காள்(ஓலே)
தான்போட்ட சிந்தாக்கைத் தான் கழற்றமாட்டாமே
தாயோடு சீராடித் தான் போறா(ள்) ஓலையக்கா(ள்) (ஓலே)
அஞ்சடுக்குச் சிறு சட்டுவமாம் அரும்பேத்த மண்டபமாம்
கொண்டெடுக்கமாட்டாமே குடிபோறா(ள்) ஓலையக்காள் (ஓலே)
பொரும்பி யடியிலே பொறிக்கோழி மெய்கையிலே

பொரும்பி யலைக் கொட்டப் போருளா மோலையக்கா(ள்)
(ஓலே)
தகரை யடியிலேயே தன்கோழி மேய்கையிலே
தகரையலைக் கொட்டத்தான் போருள் ஓலையக்கா(ள்) (ஓலே)
கல் கிட்க்குது கழுவாமே நெல்கிடக்குது குத்தாமே
மேனாட்டு ஓலையக்கா(ள்) மேற்கே குடி போரு(ள்) (ஓலே)
ஓலையக்கா(ள்) கொண்டையிலே ஒருசாடு தாழம்பூ
தாழம்பூச் சுற்றிவரத் தாம்பாளங் கொட்டி வர (ஓலே)
கட்டை தளதேளனக் கண்ணாடி மினுமினென
பொழுது தள தளேனப் புறப்பட்டாளா மோலையக்கா(ள்)
(ஓலே)
அவரை சலசலேன ஆடிமீ னோடிவர
குதிரையெலாங் கொஞ்சிவரக் கொத்தளத்தார் குடை
பிடிக்க (ஓலே)
பாக்குப் பதின்கலமாம் பச்சரிசி முக்கலமாம்
எண்ணெய் இருநாழி இளந்தேங்காய் பத்தெட்டு
இத்தனையும் கொண்டுவந்து இறக்கினாள் பந்தலிலே
மலையாள பகவதிக்கு மாலையிடப் போருளாம் (ஓலே)
கடுகாம் சிறுமிளகாம் காரணத்துக் கற்பூரம்
நடுவே மணல் பரப்பி நல்லோலை புல்லோலை
நாட்டுப் பனையோலை பேழைகொண்டு வருவாளாம் (ஓலே)
முச்சிவைத்து முறம் வைத்து மூன்றிறகு ராட்டை வைத்து
பானை கரி கழுவி பன்னீர் உலை வைத்து
தென்னல் அரிசியைத் தீட்டிச் சமைத்து வைத்து
ஆக்கினாள் சோறுகறி அலரிப்பூத் தன்னிறமாய்
பொங்கினாள் சோறு கறி பொரசம்பூத் தன்னிறமாய்
ஆக்கின கறிக்கு மேற்கறி யில்லாமே

அள்ளி யெறிந்தாளே அழகான மார்மேலே
துள்ளி விழுந்தாளே தூங்கு மஞ்சற் கட்டிலிலே
சிற்ருற்றங்கரைதனிலே சிறுமணல் கோழிக்கும் பெண்ணே
(ஓலே)

உற்ருரறியாமே உறவாட வல்லவையா?
தட்டாரறியாமே தாலிபண்ண வல்லவையா?
அடுப்புப் புகையாமே ஆக்கிவிட வல்லவையா?
தாயோடு சீராடி நாயோடே போருளாம்" (ஓலே)

இந்தப் பாடல் மிகவும் பிரியத்தோடு பாடப்படுவது ஆகும். இதனை எல்லாப் பெண்களும் அறிவார்கள். ஒரு மகள் தாயோடு சீருடிக்கொண்டு மேற்கே போகிறதைத் துயரம் ததும்பக் கூறிக்கேட்போர் மனம் கலங்கும்படி செய்யவல்ல பாடல் இதுவாம். இது மிகுந்த அவலச்சுவை கொண்டது.

பிள்ளையார் நோன்பில் மூன்று நாள் பிள்ளையாரை வைத்துக் கும்பிட்டுவிட்டு மூன்ரும் நாள் மாலையிலே அப் பிள்ளையாரை கூடையிலே வைத்து கட்டுச்சாதம் முதலியவைகளை வைத்து எடுத்துக்கொண்டு போய் ஆற்றிலே விடுவார்கள். மார்கழி மாதம் இறுதியிலும் வீட்டின் முற்றத்தில் வைக்கும் சாணிப்பிள்ளையார்களை பூசணிப் பூவால் தலையில் அலங்கரித்து அவற்றை இறுதி நாளில் ஆற்றில் விடுவார்கள். அப்போது பாடும் அருமையான பிரிவினைப்பாட்டு

"வட்ட வட்டப்பிள்ளையாரே,
வாழைக்காய் பிள்ளையாரே
உண்ணுண்ணு பிள்ளையாரே,
ஊமத்தங்காய்ப் பிள்ளையாரே

வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி
　　வளர்த்தினேன் பிள்ளையாரே
வறட்டாற்றுத் தண்ணீரிலே
　　ஓட்டிவிட்டேன் பிள்ளையாரே
சிந்தாமல் சிதறாமல் பொறித்தேனே பூவே,
சிற்றாற்றுத் தண்ணீரிலே போறையே பூவே
வாடாமே வதங்காமே வைத்திருந்தேன் பூவே
வறட்டாற்று மேட்டிலே போறையே பூவே"

காதற் பருவம்.

பெண்கள் தங்கள் மச்சினர்மாரோடு வேடிக்கையாகக் காதற்பாடல்களைப் பாடுவது வழக்கம். அப்பாடல்களுக்கு கணக்கு இல்லை. அவைகளில் இதுவும் ஒன்று.

' மதுரைக்குப் போற மச்சான்—நல்ல
மருக்கொழுந்து வாங்கி வாங்கோ
மருக்கொழுந்து வாங்கி வாங்கோ—நல்ல
மயிர் முளைச்சது வாங்கி வாங்கோ
மயிர் முளைச்சது வாங்கி வாங்கோ—நல்ல
வழவழத்தது வாங்கி வாங்கோ
வழவழத்தது வாங்கி வாங்கோ—நல்ல
கொளகொளத்தது வாங்கி வாங்கோ
மயிர் முளைச்சது வெட்டி வேராம்—நல்ல
வழவழத்தது வாழைப்பழமாம்
வழவழத்தது வாழைப்பழம்—நல்ல
கொளகொளத்தது கொய்யாப்பழம்(மதுரைக்கு)

தமிழ் இலக்கியத்திலே அகப்பொருள் துறையிலே கணக்கற்ற காதற்பாடல்கள் உண்டு. அவைகளை மிகவும் கற்

றுத் தேர்ந்தவர்களே சுவைக்க முடியும். பாளையக்காரர்கள் நாளிலும் கணக்கற்ற சிற்றின்பப் பாடல்கள் முளைத்தன. விறலிவிடு தூது, கூளப்பநாய்க்கன் காதல் முதலிய பாடல்கள் இந்த இனத்தில் சேரும். ஆனால் பட்டிக்காட்டுக் குயில்கள் பாடும் கேலிப்பாடல்கள் மிகவும் சுவைக்கத்தக்க நிலையில் விகடம் கலந்த பண்பாட்டில் அமைந்திருக்கும்.

திருமணப் பருவம்.

எங்கள் நாட்டுப்புறங்களிலே கொங்கு வேளாளர்களிலே நடக்கும் திருமணம் பண்டைக்கால முறையைப் பின்பற்றி நடப்பது. தற்காலம் சில பெரிய மனிதர்கள் புகுத்திக்கொண்டது போல அந்தணர்கள் முறைப்படி அது இருக்கவில்லை. நாட்டு அருமைக்காரன் முன்னிலையிலே பெரிய மனிதர்கள் அவையினிலே திருநாண் பூட்டுவது வழக்கம். அப்போது புலவன் வாழ்த்துப்பா பாடுவான். இப்பாட்டு கம்பர் பாடியதாக மக்கள் நம்புகிறார்கள். அதிலே மிகவும் பொருத்தமான பல கருத்துக்கள் உண்டு, சில பகுதிகளை மட்டும் குறிப்போம். இது ஒரு சிறந்த நாட்டுப் பாடலாகும்.

நாளது குறித்து நல்விருந்துண்டு
வாழ்வது மங்கைக்கு மனம்மது குளிர்ந்து
நாளைத்திங்கள் நற் கலியாணம்
பிடிபிடி வெற்றிலை பிடிதனிற் பிடித்து
பாக்கு வெற்றிலை பல பேர்க்குங் கொடுத்து
அன்னமும் தேனும் அனைவோர்க்குங் கொடுத்து
மிக்க மாப்பிள்ளையை விரிதலிலிருத்தி
பெரிய கலத்திற் பிரபலமாக

உரிய அரிசி ஒரு மூன்று வள்ளம்
முக்காலிதன்னில் முகூர்த்தமாய் வைத்து
பாரிய வெல்லம் பாக்கு வெற்றிலையும்
வரிசை குறையாமல் மதிப்புடன் வைத்து

* * * *

இணையோங்கு மங்கையரை ஏந்திழையைத்
தானழைத்து
மந்தாரை மல்லிகையும் மருக்கொழுந்து
மாலையிட்டு
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி
ஆடையாபரணம் அழகுடன் பூண்டு
அம்மி வலமாக அரசாணி முன்னுக
ஆயிரம் பெருந்திரி அதுவும் வலமாக
நாக்கரசு நாட்டி நல்ல முகூர்த்தமிட்டு
பேய்க்கரும்பு நாட்டி பிரமனது வைத்து
சந்திரரும் சூரியருஞ் சபையோருந்தானறிய
இந்திரனர் நல்ல தங்கை இணையோங்க
வந்தபின்பு

* * * *

மந்தாரை மல்லிகைப்பூ மருக்கொழுந்து
மாலையிட்டு
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி
முல்லையிருவாட்சி முனைமுறியாச் சண்பகப்பூ
தண்டைமாலை கொண்டை மாலை சொர்னமாலை
தொடை மாலை
ஆடையாபரண அலங்கிருதஞ் செய்தபின்பு
பொட்டுமிட்டுப் பொன்முடிந்து போதவே
யலங்கரித்துப்

பட்டமினிக் கட்டிஞர் பாரிலுள்ள தாமரைக்கு
நிட்டமுடன் பேழைதனில் சோறுநிறை
நாழிவைத்து
நட்டுமுட்டுத்தான் முழக்க நாட்டார்
சபைக்கு வந்து

* * * *

அத்தனை பேரும் அனைவோரும் வந்திறங்கி
தாய்மாமன் முன்னே தவருமல் பொட்டுமிட்டு
நாற்காத முள்ள நகரிலுள்ள பந்தலுக்கு
ஐங்காதமுள்ள அகலமுள்ள பந்தலுக்கு
அன்னங்கள் நின்று அலங்கரிக்கும் பந்தலுக்கு
தும்பிகள் நின்று துவண்டாடும் பந்தலுக்கு
வண்டுகள் நின்று மனங்குளிரும் பந்தலிலே
இன்பமுடன் மாப்பிள்ளையை இருத்தியே
மணவறையில்

* * * *

ஆல் போல் தழைதழைத்து அறுகதுபோல்
வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல்
வாழ்ந்திருக்க
பார்த்தவர்களெல்லோரும் பதினாறும்
பெற்றெடுக்க
கேட்டவர்களெல்லோரும் கிளை கோத்திர
மாய் வாழ்ந்திருக்க

இப்பாடல் எத்தனை உருக்கத்தோடு திருமணம் நடை பெற்ற சீர்களையும் மக்கள் கூறும் வாழ்த்துச் சொற்களை யும் வெளிப்படுத்துகிறது காணுங்கள்.

நடுநிலைப் பருவம்.

வயதுவந்த மக்கள் சில்லறைப் பாடல்களிலே நாட்டம் கொள்ளார்கள். அவர்களுக்கோ நாட்டுக்கதைகளிலே உள்ள பெரிய பாடல்களைக் கேட்க விருப்பம். பத்து நாள் ஆனாலும் இராக்காலங்களில் ஓரிடத்தில் அமைந்துகொண்டு பாட்டுப்பாடுவோன் பாடிச் செல்லத் தாங்கள் மிக்க அமைதியுடன் கேட்பார்கள். எங்கள் நாட்டிலே சிறப்பாக விரும்புகிற கதைகள் கோவலன் கதை, இரணியன் கதை, வாணாசுரன் கதை, சந்திரமதி கதை முதலியவைகள். இவைகளிலே கோவலன் கதையைச் சொல்லுகிறவன் சிலம்பு விற்கப்போன கோவலன் காவலாளர்களால் நடுத்தெருவிலே வெட்டுண்ட பிறகு கண்ணகி கேட்டுப் பரிதவித்து அங்கே ஓடிச்சென்று அவனைக்கண்ட வரலாற்றுப் பகுதியைப் பாடகன் பாடும் போது எவருடைய நெஞ்சுதான் துடிக்காது. கேட்டுக் கொண்டிருக்கும் பண்ணுடிகள் கண்களில் தானே கண்ணீர் வழியும். அதனைத் தொடைத்துவிட்டு மூக்குச் சீந்தத் தொடங்குவார்கள்.

"ஏற்றி வைத்ததிரு விளக்கு
 இருளடைந்து போகக்கண்டாள்
ஒற்றிவைத்த சந்தனம்தான்
 உமிபோல உதிரக் கண்டாள்.
கொண்டை கலையக் கண்டாள்
 கொண்டையிற் பூ வாடக்கண்டாள்
வாடாத மல்லிகைப்பூ
 வாடிக் கருகக்கண்டாள்.

மஞ்சளழியக் கண்டாள்,
மணமழிந்து போகக் கண்டாள்
கோதுமைத் தாழ்வடமும்
கொலுசு முதிரக் கண்டாள்.
உட்கழுத்து வயிரமணி
உருவிவிழக் கண்டாளே
வாழ்மதுரைப் பட்டணத்து
மதிலிடியக் கண்டாளே.
உள்ளூரில் தேரதுதான்
உடையக் கண்டாள் பத்தினியும்
அசலூரில் தேரதுதான்
அச்சு முறியக் கண்டாள்.
தேங்கா யுடையக்கண்டாள்
செம்பு சலம் குறையக் கண்டாள்
மூந்நூறு வேதியர்கள்
முகூர்த்தமிட்ட மாங்கலியம்
கடகங் கழன்றுவிழக்
கண்டாளே பத்தினியும்.
தாலி பறிபோகக் கண்டாள்
தலைவனங்கே மாளக்கண்டாள்
மாலை பறிபோக மணவாளன்
மாளக்கண்டாள்.
காளியம்மன் கோவில் முன்னே
கண்டதுண்டஞ் செய்யக்கண்டாள்
குலைவெட்டி சாய்த்ததுபோல்
கோவலனார் சாயக்கண்டாள்.

சிறுகுடலும் பெருகுடலும்
சிதறிவிழக் கண்டாளே
மணிகுடலும் பெருகுடலும்
மண்மேல் விழக்கண்டாள்."

என்று கண்ணகி கண்ட கனவையும் அவள் சென்று புலம்பினதையும் சாங்கோபாங்கமாகக் கூறுவான்.

முதுமைப் பருவம்.

முதுமைப் பருவம் பாடலுக்கு ஏற்றதல்ல. உடல் முழுதும் தளர்ந்து கூன் விழுந்து நோய்வாய்ப்பட்டு வருந்தும்போது பாடல் எப்படி வரும். பாடுகிறவர்களைக் கண்டாலே அந்தப் பருவத்தில் எரிச்சல் உண்டாகும். இறைவனை வணங்குவோம் என்று சில பேர் இருப்பார்கள். அவர்கள் சிறுவயது முதற்கொண்டே சமயவாழ்வில் ஈடுபட்டவர்களாகி இருப்பார்கள். அவர்களுக்குத் தான் இறைவன் நினைவு வரும். அப்போது தேவாரம், திருவாசகம் பிரபந்தம் சொல்லி நேரம் கழிப்பார்கள். நன்ருக வாசித்தவர்கள் சமயசாத்திரங்களை ஓதுவார்கள். மெய்கண்ட நூல்கள் திவ்வியப்பிரபந்தம் வாசித்து மனத் தெளிவு உறுவார்கள். இறைவணக்கமும் பஜனைகளும் செய்வதில் ஈடுபடுவார்கள்.

அப்படியில்லாமல் வாழ்நாள் முழுவதும் பொருள் வருவாயிலேயே இருந்தவர்கள் வயது வந்தாலும் கணக்கைத் தேடிக் கொள்முதல் பாக்கி இவைகளைப் பார்ப்பார்கள், உயிர் போகும்மட்டும் வட்டிக்கணக்கிலேயே நினைவு வைப்பார்கள். இவர்கள் பிறப்பினுல் அடைந்த பயன் அதுதான். இவர்களைக் கண்டு பட்டினத்தார் கூறுகிருர்.

"வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையினிலோர் தடியுமாகியே—

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெனும்படி குந்தி நடந்து
மதியுமிழந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல் விடாமன் மொழிந்து,

துயில் வருநேர மிருமல் பொருது
தொண்டையுநெஞ்சு முலர்ந்து வரண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு,

கலியுகமீதி லிவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
சலசல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து,

தெளிவு மிராமலுரை தடுமாறி
சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேரினலாதர வேதென நொந்து,

மறையவன் வேத னெழுதியவாறு
வந்தது கண்டமு மென்றுதெளிந்து
இனியெனக்கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வி னிலாதினி னின்ற

கடன்முறை பேசு யெனவுறை நாவு
றங்கி விழுந்துகை கொண்டுமொழிந்து

கடைவழி யஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே"

இவ்விதமாக முதுமைப்பருவம் ஒருவனுக்குப் பெரும் பளுவாக நிற்கும்.

நீத்த பருவம்.

இரங்கற்பாக்கள், புலம்பல்கள், ஒப்பாரி, தமிழ் இலக்கியங்களிலே துன்பத்தைக் காட்டும் பகுதிகள். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் துன்பமாலே, கந்தபுராணத்தில் இரதிமன்மதனை நோக்கிப் பாடியவை, அரிச்சந்திர புராணத்தில் சந்திரமதி லோகிதாசனை ஏந்திக்கொண்டு பாடியவைகள் இவையாகும். எங்கள் நாட்டிலே சந்திரமதி புலம்பல் எல்லாருக்கும் தெரியும். கும்மியிலும் அது பாடுவது உண்டு. "தேம்பித் தேம்பி" என்னும் பாடல் எவரும் பாடுவார்கள். ஆனால் இதையே இலக்கிய முறையில் வீரகவிராயர் தமது அரிச்சந்திர புராணத்தில் பாடியிருக்கிறார்கள்.

"பனியானனைந்து வெயிலாலுலர்ந்து
பசியாலலைந்து முலவா
அனியாய வெங்க ணரவாலிறந்த
வதிபாவ மென்கொ லறியேன்
தனியே கிடந்துவிடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே
இனியாரை நம்பி யுயிர்வாழ்வ மென்ற
னிறையோனும் யானு மவமே"

என்பது புராணச் செய்யுள். கச்சியப்ப சிவாசாரியாருடைய

"பொன் செய்தார் முடி காணேன், அழகு
ஒழுகும் திரு முகத்துப் பொலிவு காணேன்,
மின் செய் பூண் அணி குலவும் புயம் காணேன்,
அகல் மார்பின் மேன்மை காணேன்,
கொன் செய் பூங் கழல் காணேன்,
சிலை காணேன், ஆடல் புரி கோலம் காணேன்,
என் செய்வேன், என் கணவா!
என்னை ஒழித்து எவ்விடத்தே இருக்கின்றாயே?

என்பதே மிகச் சிறந்ததென்பர். இனி நாட்டுப்புறங்களில் பெண்கள் பாடும் ஒப்பாரிப் புலம்பலோ எளிமையிலும் உருக்கத்திலும் இவைகள் எல்லாவற்றையும் மீறிவிடும். சில பகுதிகளைக் கூறுவோம்:

பத்துப்பிராயத்திலே—நான்
பால் குடிக்கும் நாளையிலே
ஆணழகர் மாலையிட்டு—என்னை
அழகாக வைத்திருந்தீர்
கட்டழகர் மாலையிட்டு—என்னை
காட்சியுடன் வைத்திருந்தீர்.
காட்சிக் குலைத்துவிட்டீர்—இன்று
கர்த்தன் பதி நடந்தீர்—என்
மகிழ்ச்சி குலைத்துவிட்டீர்—என்னை
மண்மேலே படுத்திவிட்டீர்—என்னை
கொண்ட அருமை என்னே—இப்போ
கோலம் வந்த நேர்த்தி என்னே-இப்போ

கண்டவர் நகைக்கவிட்டு—நீர்
கைலாசம் நடந்ீரோ

*　*　*　*

கப்பல் வரப் போகுதென்று—நான்
கரையேறிப் பார்த்திருந்தேன்
கப்பல் உடைந்தபோதே—நான்
கரை யோரம் நின்றழுதேன்
தோணிவரப் போகுதென்று—நான்
துறையேறிப் பார்த்திருந்தேன்—உங்கள்
தோணி உடைந்தவன்றே—நான்
துறையோரம் நின்றழுதேன்—என்
பெருமை குலைத்துவிட்டீர்—என்
பூ முடியை கொள்ளை கொண்டீர்—என்
அருமை குலைத்துவிட்டீர்—என்
ஆளமுடி கொள்ளை கொண்டீர்

*　*　*　*

உமக்கு—வரப்போ தலையாணி
வாய்க்காலோ பஞ்சு மெத்தை
உமக்கு—புல்லோ தலையாணி
பூமியோ பஞ்சு மெத்தை
உமக்கு—மல்லிகைப்பூ கட்டிலின்மேல்
நீர் மனமகிழ்ந்து தூங்காமல்
எனக்கு—கற்றுறுத்த முன்னறுத்த
நீர் கானலிலே தான் படுத்தீர்!

ஒழிபு

இவ்விதமாக பள்ளிக்கூடங்களையும், ஏடுகளையும், அச்சு யந்திரத்தையும், பார்க்காத நாட்டுப்பாடல்கள் எத்

தனையோ கிராமக்குயில்களின் மூளையிலும் வாயிலும் மிளிர்கின்றன. அவைகளை ஒருங்கு சேர்த்திப் பாகுபடுத்தி எழுதிவைத்தால் மக்களுடைய சீவியசரிதம் முழுதும் அவைகளில் பொதிந்திருக்கக் காணலாம். அவைகளின் சிறப்புக்களை நமது கலாசாலை இலக்கியம் அறியவில்லை. அறிந்திருந்தால் நமது பண்டிதர்கள் இதற்குள்ளேயே முன்னேற்றம் அடைந்திருப்பார்கள். ஆங்கிலரைப் பாருங்கள். தாலாட்டுப் பாடல்கள் எத்தனை வெளியிட்டுள்ளார்கள். நர்சரிப்பாடல் (Nursary Rhymes) என்ற நூல்கள் கணக்கின்றி வெளிவந்துள்ளன. அவைகளைச் சிறு பிள்ளைகளுக்குப் பாடசாலைகளிலும் கற்பிப்பார்கள். இந்த நாட்டிலும் அவைகளைப் புகுத்திருக்கிறார்கள் அல்லவா? ஒரு உதாரணம் கூறுவோம். 'Twinkle Twinkle little Star' என்பது அவைகளில் ஒன்று. அதனைத் தமிழ்ப் படுத்துவோம்.

"சின்னச் சின்னத் தாரகையாய்
மின்னும் மின்னும் நீ யாரோ
துன்னும் உலகில் வெகு மேலாய்
மின்னி விண்ணில் வைரமதாய்.

கொதிக்கும் கதிரோன் சென்றவுடன்
எதற்கும் அவனொளி இலையாகில்
உதிக்கும் சிற்றொளி நீ காட்டி
மதிக்கும் இரவில் மின்னிடுவாய்.

அப்போதிருட்டில் வழி நடப்போன்
ஒப்பி உன்னொளி போற்றிடுவான்
அப்படி மின்னுதிருந்தனையோ
எப்படி அவன் வழி அறிந்திடுவான்?

கருநீல் வானம் தாங்கிடுவாய்
அருமென் திரைக்குள் நுழைந்திடுவாய்
இருவான் கதிரோன் வருமட்டும்
திருநின் கண்கள் மூடிடலாய்.

முன்னம் இருட்டில் வழி நடப்போற்
குன்நல் சிற்றெளி காட்டிடல்போல்
மின்னும் எனக்கே, நினை அறியேன்,
சின்னஞ்சிறிய தாரகையாய்!"

XI. எங்கள் பண்டிகைகள்.

சீரும் சிறப்பும்.

நமது நாட்டில் பண்டிகைகள் உண்டு. அவைகளையே பிற நாட்டார்கள் கொண்டாட்டங்கள் என்பார்கள். இரண்டும் ஒன்றே. ஆனால் பண்டிகை என்றால் சிறிது சமயச்சார்பு தொனிக்கும். கொண்டாட்டம் என்றால் அந்தத் தொனி இல்லை. கொண்டாட்டங்களோ எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உண்டு. அவைகளால் மக்களுக்கு இன்பமும் உற்சாகமும் ஏற்படுகின்றன. மக்கள் தங்கள் வயிற்றுப்பாட்டிற்காக வேலை செய்யும்போது உடலுக்கு வேலையினால் களைப்பும் ஒரு விதமான ஆயாசமும் தீரும்பொருட்டே உற்சாகம் தரக்கூடிய கொண்டாட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அக் கொண்டாட்டங்களில் சிறிது சமயச்சாற்றைப் பிழிந்து சேர்த்துவிட்டால் அவைகள் பண்டிகைகள் ஆகிவிடுகின்றன.

கொண்டாட்டங்கள் ஒருவித மாறுதலை ஏற்படுத்தும். நாடோறும் செய்கிற வேலையிலே அவை ஒரு வேறுபாட்டை உண்டாக்குகின்றன. இந்த வேறுபாடு மனிதனுடைய இயற்கைக்கு இன்றியமையாதது. அதனால் மனதிற்கு ஊக்கமும் உடலுக்கு ஓய்வும் ஏற்பட்டு பின்னால் சுருசுருப்போடு செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. பாடசாலைச் சிறுவன் எப்போதும் படித்துக்கொண்டே இருந்தால் அவன் உருப்படமாட்டான். ஆனால் அவனுக்கு இடையிடையே விளையாடல்கள், உடற்பயிற்சிகள் முதலியவைகளைக் கொடுத்தால் அவன் மூளைக்கு ஓய்வும் ஆறுதலும் உடலுக்கு வலிமையும் சுருசுருப்பும் ஏற்படுகின்றன. பிள்ளையும் நன்றாக வாசித்து மேலே செல்லுவான்.

அதுபோலவே வயதுவந்த மக்களுக்கும் ஆண்டு முழுதும் வேலை கொடுத்துக்கொண்டே இருக்க முடியாது. குறித்த கெடுவுக்கு ஒருமுறை அவனுக்கு உற்சாகம் தரக்கூடிய ஓய்வோ வேறு மாறுதலோ கொடுத்து வந்தால் அவன் வாழ்க்கை சிறப்பு அடையும். அவன் மனதிற்கு அப்படிப்பட்ட உற்சாகம் தரக்கூடியது கொண்டாட்டம் அல்லது பண்டிகையே ஆகும். அதில் அவன் ஈடுபட்டால் அவன் எளிதில் முன்னேற முடியும். இதனைச் செயல் முறையில் ஈடுபட்டு அதன் பலன்களை அறிந்த நமது முன்னோர்கள் பலவிதமான கொண்டாட்டங்களை பலவிதமான கெடுக்களுக்கு ஏற்றபடி அவ்வப்போது ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஒரு பள்ளிப் பையன் படிப்பதையே விட்டு விளையாடிக்கொண்டே இருந்தாலும் உருப்படமாட்டான். அதுபோலவே குடியானவன் தன் குடித்தனத்தை விட்டுவிட்டு கொண்டாட்டங்களிலேயே ஈடுபட்டாலும் பயன்படமாட்டான். ஆகவே கொண்டாட்டங்களும் எப்போதும் இல்லாமல் சில குறித்த கெடுக்களில்தான் ஏற்பட்டிருக்கின்றன.

எங்கள் நாட்டு வகைகள்

எந்த நாட்டிலும் எந்தக் காலங்களிலும் கொண்டாட்டங்கள் இருக்கின்றன என்றோம் அல்லவா. அவைகள் நாகரீகம் முதிர்ந்த நாடுகளில்மட்டும் அன்று. அநாகரீக நாடுகளிலும் வழக்கில் இருந்தன. நாகரீகம் இன்னது என்று அறியாத கருப்புக் காட்டுமிராண்டிகளிலும் கடலின்கண் போக்குவரவு இருந்திரா தீவாந்திரங்களில் பண்டைக் குடிகளிடத்திலும் கொண்டாட்டங்கள் இருந்திருக்கின்றன. கொண்டாட்டங்களை நடத்துகிற மக்கள்

பருவங்கள்தோறும் நடத்துவதுண்டு. சில நாடுகளில் அவைகளைச் சமயச் சார்பாக நடத்துவார்கள். சில நாடுகளிலோ சமயச் சார்பு இன்றி இருக்கும். அப்படிப்பட்ட நாடுகளில் பெரும்பான்மைத் தொழிலாகிய வேளாண்மையை ஒட்டி இருக்கும். மேல் நாடுகளில் பல நூற்றுண்டுகளாகச் சமயத் தொடர்பு பெற்ற கொண்டாட்டங்களே நடைபெற்று வந்தன. கிரீக்கர், உரோமானியர் முதலிய ஐரோப்பிய மக்களில் சமயக் கொண்டாட்டங்களே மிகுந்திருந்தன. உரோமானியர் கிறிஸ்து சமயம் தழுவின பின்பும் சமயச் சார்பான கொண்டாட்டங்களையே தழுவினர். அமெரிக்கா சிகப்பு இந்தியர், ஆப்பிரிக்கா நீக்ரோவர் முதலிய பண்டை குடிகளும் சமயக் கொண்டாட்டங்களை கொண்டிருந்தனர். உலகியச் சடங்குகளிலும் சமயமே புகுந்திருந்தது. பின்னுல் வந்த கிறிஸ்துவ இஸ்லாமிய பண்டிகைகளும் சமயச்சார்பு பெற்றவைகளே.

ஆனுல் நம் தமிழ் நாட்டிலே சிறிது வேற்றுமை காண்கிறேம். பண்டைக் காலத்து தமிழர் கொண்டாட்டங்களில் சமயத் தன்மை ஒருவாறு குறைந்திருந்தது என்றே கூறவேண்டும். தமிழர்களுக்குச் சிறந்த தொழில் உழவுத் தொழில். இதனை முன்னிட்டே எல்லாக் கொண்டாட்டங்களும் நடைபெற்றன. நடவு, அறுவடை முதலிய செயல்களை நடத்தும் பருவங்களில் தமது மகிழ்ச்சியைத் தோன்றுவிக்கும் கொண்டாட்டங்களை வைத்திருந்தார்கள். அவைகளில் சமயச் சார்பே இருக்கவில்லை. ஆனுல் நாட்டில் சமயத்துறை தோன்றிப் பெருகவே அக் கொண்டாட்டங்களும் சமயத் தொடர்பைப் பெற்றன. அப்போது அவைளுக்குப் பண்டிகைகள் என்றும் இன்னும் சிறப்பாகத் திருவிழாக்கள் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. சாதாரண சமய விழாக்களோடு உழவு விழாக்க

ளும் சமயச் சார்பு பெறவே எல்லா விழாக்களும் சமய விழாக்கள் ஆயின. நாளாவட்டத்தில் இவைகளுக்குப் புராண ஆதாரங்களும் கண்டு பிடிக்கப்பட்டும் உண்டு செய்யப்பட்டும் வழக்கத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பண்டையத் தொடர்பு எது ?

இந்தத் தேசத்தில் தமிழ்நாடு மட்டும் அல்ல, மற்ற நாடுகளிலும் பண்டைய நாளிலே எல்லா கொண்டாட்டங்களும் மக்கள் தொழில்களைப்பற்றியே இருந்தன. அவைகளிலே சிறந்தது அங்கேயும் உழவுத் தொழிலே. மற்றத் தொழில்கள் ஆடுமாடு மேய்த்தல் முதலியன. வடநாடுகளிலே சமயம் வெகு காலங்களுக்கு முன்னமே மக்களில் புகுந்து கொண்டது. அது இக் கொண்டாட்டங்களைத் தன் வயப்படுத்திக்கொண்டது. எல்லாப் பண்டிகைளுக்கும் புராண ஆதாரங்கள் உண்டுபண்ணப்பட்டன. விவசாயக் கொண்டாட்டங்களின் மதிப்பு குறைந்துபோய் புராணத் திருவிழாக்கள் சிறப்பு பெற்றன. இந்த வகையில் அங்கே தீபாவளி, சீராமநவமி, கோகுலாட்டமி சிறப்பு பெறத் தொடங்கின.

நாளாவட்டத்தில் வடநாட்டு நாகரீகம் தெற்கே திரும்பியது. சமயமும் மேம்பட்டது. ஆகவே தமிழ் நாட்டிலும் சமயச் சார்பான பண்டிகைகள் சிறப்பு பெறத் தொடங்கின. தமிழர்கள் தாங்கள் தன்னுரிமையோடு இருந்த காலத்தில் கொண்டாடாத பண்டிகைக்ள் இப்போது கொண்டாடப்படுகின்றன. அவைகளில் சிறப்பாக தீபாவளி முதலியவைகள். இவைகளுக்கும் உழவுத் தொழிலுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை, அப்படியாயின் பண்டைக் கொண்டாட்டங்கள் எப்படிப்பட்டவை என்று கேட்கலாம் அல்லவா.

தமிழ்நாடு முழுவதும் அப்படிப்பட்ட மாறுதல் ஏற்படவில்லை. சிற்சில பகுதிகள் பண்டைய கொண்டாட்டங்களை இன்னும் சிறப்பாகக் கொண்டாடுகின்றன. அப்பகுதிகளிலும் சிற்சில வகுப்பார்கள் பழமையை விடாது போற்றி வருகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கொங்கு நாட்டு வேளாளர்களும், அவர்களைச் சார்ந்த பண்ணை ஆட்களும் தொழிலாளர்களுமே ஆவர். இவர்கள் இப்போதும் வடநாட்டு நோன்புகளைவிட மிகச் சிறப்பாகத் தம் பண்டைய தொழிற் பண்டிகைகளையே போற்றி வருகின்றனர். அவர்களுக்குச் சமயச் சார்பைவிடத் தொழிற் சார்பே சிறப்பாக விளங்குகிறது. அவர்களிலும் இக்காலத்தில் சமய முனைப்பு புகுந்து வரத் தொடங்குகிறது. இருந்தாலும் நாட்டுப்பற்று குலப்பற்று இவைகளினால் தங்கள் பண்டைப் பழக்க வழக்கங்களைவிடாமல் வைத்துக்கொண்டிருக்கின்றனர். அவ்விதப் பண்டைத் தொடர்பு எது என்று ஆராய்வோம். அது எவ்வாறு தொழில்பற்றி வருகிறது என்றும் கூறுவோம்.

கார்காலக் கொண்டாட்டங்கள்.

தமிழ் நாட்டிலே உழவர்களுக்கும் அவர்களை அண்டிப் பிழைக்கும் தொழிலாளிகளுக்கும் ஆண்டு முழுவதும் வேலை இருந்து கொண்டேயிருக்கும். ஆனால் சில மாதங்களில் நிரம்ப வேலையிருக்கும். சில மாதங்களில் குறைந்த வேலைகளிருக்கும். இளவேனிற்காலத்தில் வெகுவாக ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பார்கள். முதுவேனில் வரவே ஒவ்வொரு துளி மழை பெய்யும். அப்போது உழவு ஒன்று போட்டு நிலத்தைப் புழுதியாக்கி எரு சேகரித்து நிலத்தில் பரப்பி விடுவார்கள். வயல்களில் ஆட்டு மந்தைகளை பட்டி போட விடுவார்கள். ஆட்டு எரு வயல்களுக்கு

மிகுந்த பலன் கொடுக்கும். அதற்காக இடையர்கள் பட்டி போட்டு காவல் இருப்பார்கள். அவர்களுக்கு ஊதியமும், மாமூல்படிக்கும் கிடைக்கும். நிலம், பயிர் இடுவதற்கு பக்குவமாக இருக்கும். அந்தப் பருவம் முழுதும் குடியானவனுக்கு வேலை குறைவுதான்.

நாற்று நடவு.

முதுவேனில் சென்றவுடன் கார்காலம் தோன்றும். மழை நன்ருகத் துளிக்கத் தொடங்கும். ஒரு உழவு மழை பெய்தவுடனே மற்றுமொரு முறை நிலத்தை உழுவார்கள். புன்செய் நிலங்களில் அவ்வுழவோடு கருந்தானியம் விதைக்கத் தொடங்குவார்கள். ஆடி மாதத்து அடைமழை அப்போது பெய்யும். ஆறுகளில் வெள்ளம் எடுத்துக் குளங்களில் நீர் நிரம்பும். வாய்க்கால் வழியே நீர் ஓடி வயல்களுக்குப் பாயும். அப்போது நாற்றங்கால் விட்டுப் பக்குவம் வந்தவுடன் வயலில் சேருக்கி அதிலே நாற்று நடுவார்கள். இதனை ஒரு விழாவாகவும் கோவைக்கடுத்த பேரூரில் நடத்துவார்கள். இறைவனும் இறைவியுமே உழவனும் உழவியும் (பள்ளன் பள்ளி) ஆக திருவேடம் பூண்டு நாற்று நட்டார்களாம். அதனை இங்கு விஜயம் செய்த சுந்தர மூர்த்திகளும் கண்டு அம்மையப்பர்களைத் தொழுதாராம். இது புராணக் கதை. ஆனாலும் இதில் உள்ளுறை பொருள் உண்டு. தொழிலின் மேன்மை இங்கு காண்கிருேம். சுந்தரர் போன்ற மெய்ஞ்ஞானிகள் உழவு செய்யும் தொழிலாளியிடமும் இறைவனைக் காணும் இயல்புடையவர்கள் என்பதே தொழிலில் கண்டார்கள் என அறியவேண்டும். முதலாளி காணும் கண்ணியம் தொழிலாளியிடமும் உண்டு என்று இக்கதை தெரிவிக்கிறது. நாற்று நட்டவுடன் நீர் குறையாமல் பாய்ச்ச

வேண்டும். இவ்வித வேலைகள் குடியானவனுக்குத் தொடர்ந்தே இருக்கின்றன. நாற்று நடவு விழா தொண்டை நாட்டிலும் பெரு நகரங்களிலும் மறந்து போயிற்று எனலாமோ?

ஆடிப் பெருக்கம்.

ஆடி மாதத்து அடை மழை நாட்டுப்புறங்களில் மட்டும் அன்று. மேற்கு மலைகளில் மிக வலுவாகப் பெய்யும். ஆறுகள் இரு கரைகளும் புரண்டோடும். காட்டாறுகளும் ஊற்றுப் பெருக்கெடுத்து சிற்றாறுகள் ஆகிவிடும். அவைகளிலிருந்து பிரியும் கால்வாய்கள் நிரம்பி குளங்களை நிரப்பும். கலிங்கல்களில் நீர் வடிந்து வேறு குளங்களுக்குச் செல்லும். ஊர் குட்டைகளிலும் நீர் தேங்கிக் கிணறுகளுக்கு ஊற்று தரும். இவ்வாறு நீர்வளம் பெருகும்போது பவானிக் கூடுதுறையிலும், காவிரித் துறையிலும் பதினெட்டுப் படிவரை நீர் ஏறும். மக்களுக்கு சொல்ல முடியாத குதூகலம். ஆகவே அதனை மறவார்கள். இயற்கையினுடைய ஒழுங்கையும் தமிழ் மக்களுடைய வானநூல் அறிவையும் ஆராயுங்கள். வெள்ளம் பதினெட்டுப்படி ஏறுவதோ ஆடி மாதம் பதினெட்டாம் தேதியன்றே ஆகும். ஆகவே அதனை ஒரு விழாவாகக் கொண்டாடுவார்கள். அவ் விழாவின் பெயரும் ஆடிப் பண்டிகை அல்லது பதினெட்டாம் பெருக்கம் என்பதே. எத்தனை இயற்கைப் பொருத்தம்? இப்பண்டிகையை ஆண் மக்களைவிடப் பெண் மக்களே மிகுதியாகக் கொண்டாடுவார்கள். மக்களுக்கு உணவைத் தருகிற உழவுத் தொழிலிலேயே நமது நாட்டுப் பெண் மக்கள் எத்தனை அக்கரை வைத்துள்ளார்கள் என்று இப் பண்டிகை ஒன்றே காட்டும்.

பதினெட்டாம் பெருக்கத்தன்று நாட்டுப்புறத்து ஊர்ப் பெண் பிள்ளைகள் எல்லாரும் நன்றாக புது உடை உடுத்து நல்ல அணிகள் அணிந்து தலையில் கூந்தல் பின்னிப் பூ முடித்து கூடைகளிலே, சிறுகூடை, சிவப் போலை, கருமணி, சின்னஞ் சிற்றாடை, மஞ்சள், கர்ப்பூரம் முதலியவைகளை வைத்து கக்கத்திலோ, தலையிலோ ஏந்திக்கொண்டு ஆற்றிற்குக் கும்பல் கும்பலாகச் செல்லு வார்கள். ஆற்றங்கரை அடைந்ததும் வெள்ளம் பெருகி வரும் கரை ஓரம் கன்னிமார்கள் என்று ஏழு கற்களை நட்டு தாம் கொண்டு சென்ற பூசைப் பொருள்களை வைத் துப் பூசை செய்து கர்ப்பூரத்தை எரித்துத் தொழுது விட்டு கன்னிச் சாமான்களை ஆற்றில் மிதக்கவிட்டு எரியும் கர்ப்பூரத்தை கன்னிச் சாமான்களோடே ஆற்றில் மிதக்க விட்டு இயற்கைகளைத் தொழுதுவிட்டு வீடு திரும்புவார் கள். திரும்பும்போது வெகு களிப்புடன் கும்மி அடித்துக் கொண்டு நிதானமாக வருவார்கள். கொங்கு நாட்டிலே வெகுவாக ஓலையக்காள் பாட்டையே பாடிக்கொண்டு வரு வார்கள். பெண் பிள்ளைகள் ஆற்றிற்குப் போவதும் திரும்பி வருவதும் மிகுந்த அழகான காட்சியாக இருக் கும். இது கார்காலக் கொண்டாட்டம். காரைக்கண்டு மயில்கள் தோகை விரித்து ஆடும் அல்லவா? அதனை பெண் மயில்களிடம் நாட்டுப்புறங்களில் நேரில் காணலாம்.

இடைக்காலம்,

கார்காலத்து அடை மழை ஒருவாறு ஓய்ந்ததும் புரட்டாதி ஐப்பசித் திங்கள்களில் சிறிது வெய்யில் உரக்க அடிக்கும். பயிர்பச்சைகளில் முளைக்கும் களைகளை எடுப் பதற்கு இதுவே தருணம். கடினமான வேலையிலும் சிறிது ஓய்வு கிடைக்கும். அப்போது குடியானவனுக்கு

மூத்த பிள்ளையார் நினைவு வரும். புரட்டாதித் திங்கள் புதுமதியின்பிறகு நான்காம் நாளன்று அவன், பிள்ளையார் நோன்பு நடத்துவான். ஒவ்வொருவீட்டிலும் மண்ணுப் பிள்ளையார் வைக்கப்படும். மொச்சைக்கொட்டை வேவித்துச் சுண்டல் வறுத்துக் கொழுக்கட்டை சுட்டு பிள்ளையாருக்கு இட்டு மூன்று நாள் பூசித்து இறுதியில் கிணற்றிற்கோ ஆற்றிற்கோ பிள்ளையாரை எடுத்துச் சென்று கட்டுச்சோற்ருெடு வழியனுப்புவார்கள். பெண் கள் பிள்ளையாரை வழியனுப்பிவிட்டுத் திரும்பும்போது 'வட்ட வட்டப் பிள்ளையாரே'—என்று பாடிக்கொண்டு திரும்புவார்கள்.

குடியானவனுக்குத் தச்சன் கொல்லன் முதலியோர் துணைத் தொழில் வேலையாட்கள். அவர்களைக்கொண்டு தான் கலப்பை, மண்வெட்டி, கோடாலி முதலிய படைக் கலங்களை செய்து கொள்ளுவான். அவ்வுளக் கருவி களைச் செய்து கொள்ளுவதற்கு அத்தொழிலாளிகளு டைய உளி, சம்மட்டி, பட்டை முதலிய கருவிகள் இன்றி யமையாதவை. அக்கருவிகளே அத்தொழிலாளிகளுக்கு உயிர் போன்றவை. ஆகவே அவைகளை எண்ணி அதற்கு ஒரு பண்டிகையும் அவர்கள் நடத்துவார்கள். அதுதான் கருவி விழா அல்லது ஆயுத பூசை. அதுவே கலைமகளுடைய திருநாள். எத்தொழிற்கும் கலைகமள் தேவைதையல்லவா. அக்கலைமகள் விழா வளர் பிறையில் ஒன்பதாம் நாளன்று நடைபெறும். பள்ளிப் பிள்ளைகள் அதனை நாமகள் விழாவாகக் கொண்டு அவளைகொலுவில் வைத்துத் தம் நூல்களை முன்ஞல் வைத்துப் போற்று வார்கள். அப்போதுதான் பரிசுகளைப் பெறப் பிள்ளைகள் கோலடித்துக்கொண்டு வீடுவீடாய் செல்லுவது. அறி யாமை என்னும் அரக்கனை அறிவிஞல் அழித்து அந்த

வெற்றியை அம்மன் திருவடியில் வைத்து தொழுவது தான் நாமகள் நாள். ஐப்பசி மாதத்தில் உழவு வேலை மிகுதியாக இருக்கும். வெய்யிலும் மாறி மாறி அடிக்கும். குடியானவனுக்குப் பெரும் பண்டிகை இல்லை. ஆனால் நகரங்களில் வட நாட்டிலிருந்து ஒரு புதுப் பண்டிகை வர்த்தகத்தார்கள் மூலமாக வந்துவிட்டது. அதுதான் தீபாவளி. வடநாட்டாரை ஒட்டி தென் நாட்டு வர்த்தகர்களும் இப்போது திருமகள் பூசை புதுக்கணக்கு தொடக்கம் முதலியவைகளை அனுசரிக்கத் தொடங்கிவிட்டார்கள். அன்று புதுத் துணியும் விளையாட்டு வெடிகளும் வந்துவிடும். அது வாணிபர் விழாவாகையால் குடியானவர்களுக்கு தொடர்புத் வேண்டியதில்லை. தென்நாட்டில் அது புகுந்ததும் விளக்கு இல்லாத் தீபாவளி ஆகிவிட்டது. ஆகவே அதன் ஒளி போய்விட்டது அல்லவா.

குளிர் காலம்.

கார்த்திகை மாதத்தில் மீண்டும் மழை பெய்யும். காற்றும் குளிர்ந்துவிடும். பயிர்கள் எல்லாம் ஓங்கி வளர்ந்து எங்கும் பச்சைப் பசேல் என்று இருக்கும். அப்போது வளர்பிறை இராக் காலங்களில் மிக ஒளியோடு நிலவிடும். ஆனால் சிறிது மப்பும் மந்தாரமுமாகக் கார் மேகங்கள் தோன்றி அதனை மறைக்கத் தொடங்கும். நிறைமதி அருகில் வரவர குடியானவர்கள் தங்கள் வீட்டு வாசல்களில் விளக்குகளை வைத்து அலங்கரிப்பார்கள். முழுமதி வந்ததே திருவண்ணாமலை தீப உற்சவம் நடைபெறும். எல்லாக் கோயில்களிலும் அதனை ஒட்டி விளக்கு வைப்பார்கள், நாடெங்கும் வீடுகளிலும் வரிசையாக விளக்குகளை எரிப்பார்கள். ஊர் முழுதும் வெகு அழகாக ஜோதி மயமாக இருக்கும். அருட் பெருஞ்

சோதியின் நினைவை மக்கள் மனதில் கொள்ளுவார்கள். மாலைக்காலம் வந்தவுடனே சிறுவர் சிறுமிகளுக்கு மிகுந்த கொண்டாட்டம். மப்பு மந்தாரமாக வானம் இருக்கவே சிறுவர்கள் தென்னைப் பண்ணுடைகளை சூழந்தாகக் கட்டி அதைத் தீப்பற்ற வைத்து ஊர் வெளிப்புறங்களில் அழகாகச் சுற்றுவார்கள். வெட்ட வெளியிலே நெருப்பினாலே கோலங்கள் மாதிரி இவைகளைச் சுற்றுவார்கள். இந்தச் சுடர்ச் சூழ்ந்துகளைக் கண்டு கவிழ்ந்திருக்கும் மேகங்களும் பயந்து ஓடிவிடுமாம். மிகுதியாகப் பெய்த மழையும் நின்றுவிடும். இவ்வாறு மூன்று நாட்கள் சிறுவர்களும், இளஞ் சிறுமிகளும் சூழந்து சுற்றி மாலை நேரங்களை அழகு படுத்துவார்கள். இவ்வித ஒளிமயத்தினாலே மக்கள் முருகக் கடவுளை போற்றுவார்கள், அழகுத் தெய்வத்திற்கு ஒளிக் கோலமே தகுந்த வணக்கம் அல்லவா. தமிழ்த் தெய்வமான முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்களின் திருநாள் இது அல்லவா. அதனை மக்கள் கொண்டாட வேண்டாமா. சம்பந்தப் பெருந்தகை யாரும் "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம் பாவாய்" என்று பாடினார் அல்லவா.

மழை நின்றதும் பனி பெய்யத் தொடங்கும். பயிர்களும் நன்றாக வளர்ந்து கதிர் விட்டு நல்ல மணிகளை ஈன்று வரும். அவைகளை அடிக்கடி பார்வையிடவேண்டியது குடியானவன் தொழில். காலையில் விடிவதற்கு முந்தியே புலத்திற்குச் செல்லுவான். பனியைச் சிறிதும் பொருட்படுத்தமாட்டான். வீடுகளில் சிறுமிகளே விடிவதற்கு முந்தி எழுந்து ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு திருவெம்பாவை பாடித் திருக்குளத்தில் நீராடி விட்டுக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வார்கள். அவர்கள் இறைவனைக் குறித்து நோன்பு இருப்பார்கள்.

ஆண்களோ தங்கள் சிறுமிகள் தெருத்தோறும் பாடிச் செல்லும் இனிய பாடல்களைக் கேட்டு எழுந்து சோம்பலை அப்புறப்படுத்திவிட்டு புலங்களுக்குச் செல்லுவார்கள். திருவெம்பாவை பாடினதும் திருப்பள்ளி யெழுச்சியும் இறைவனை எழுந்திருக்கும்படி வேண்டினாலும் உண்மை யில் தம் வீடுகளில் தூங்கும் ஆடவர்களை எழுப்பி புலங் களுக்கு அனுப்பும் பாடலாக முடியும். வயல்களுக்குச் சென்றதே அங்கு பயிர்களைக் காக்கும் பொருட்டு பறவை களை ஓட்டியும், பன்றி, நரி வராமல் காத்தும் காவல் புரி வார்கள். அப்போது விளைவை அறுக்கும் நாளை எதிர் பார்ப்பார்கள். அறுவடை காலம் என்றாலே குடியான வனுடைய முகத்தில் மலர்ச்சி தோன்றும்.

பம்பல் காலம்.

மார்கழி போய்த் தை பிறக்கிறது. பனியும் குறையத் தொடங்குகிறது. கதிரவன் இதுவரை தென் திசையில் திரிந்துகொண்டிருந்தான். இப்போது வடதிசைச் செல லத் தொடங்குகிறான். அதுகண்டு குடியானவன் நெஞ்சு மலருகிறது. சென்ற ஆறுமாத காலம் பட்ட பாட்டி னுடைய பலனை அனுபவிக்கும் எண்ணம் மனதில் தோன்றுகிறது. தானும் தன் ஆட்களுமாக விளைந்த விளைவை அறுக்கிறார்கள். அறுத்தவைகளைக் களத்தில் சேர்க்கிறார்கள். மாடுகளைக்கொண்டு தூம்பு அடிக்கிறார் கள். தானியத்தைப் பிரித்து மூட்டைகளாகக் கட்டி வீட்டிற்குக் கொண்டுபோய் சேர்கட்டி நிரப்புகிறார்கள். நெற் களஞ்சியமும் சோளமிடாக்களும் நிரம்புகின்றன. வைக்கோலை ஒரு இடத்தில் சேர்த்தி போர் போடுகிறார் கள். தவனைக்கு வேண்டியதை விற்றுக் கொடுத்து விட்டு மற்றதைத் தங்களுக்கு என்று எடுத்துக்கொள்ளு

கிறுர்கள். பண்ணை ஆட்கள் ஊர்ச் சேவையாட்கள் முதலியவர்களுக்கெல்லாம் பங்குகள் கொடுக்கப்படுகின் றன. இதுதான் பம்பல் காலம். வேலை மிகுதி ஆனுல் உற்சாகமும் மிகுதி எங்கும் மகிழ்ச்சி.

குடியானவன் சென்ற ஆறு மாதமாக வருந்தி உழைத்ததன் பலனுகக் கிடைத்த வெற்றியைக் கொண் டாடுவதுதான் தைப் பண்டிகை. இதனை தமிழ்நாடு முழுவதும் பொங்கல் என்பார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் புது தானியத்தைக்கொண்டு பொங்கல் வைப்பதிஞல் இது பொங்கல் என்று பெயர் பெற்றது. இதனைக் கொங்கு நாட்டில் பட்டி நோன்பு என்பார்கள். அது மூன்று நாள் கொண்டாடப்படும். முதல் நாள் மண நோன்பு. அது எல்லோருக்கும் பொது. முந்தின நாள் பூளைப்பூவும் வேப்பந் தழையும் சேர்த்தி இரவாரங்களிலே சொருகிக் காப்பு கட்டியிருப்பார்கள். அது காப்பு கட்டுதல் என்று சொல்லப்படும். அப்போது வீடுகள் சுத்தம் செய்யப்பட்டுச் சுண்ணும்பு பூசப்பட்டிருக் கும். புதுச் சுண்ணும்பு பூசுவது எங்கும் தவறுவதில்லை. சென்னை முதலிய இடங்களில் பழைய கந்தை தட்டுமுட்டுச் சாமான்கள் இவைகளையெல்லாம் எரித்து வெளிப்படுத்தி சுத்தம் செய்வார்கள். அதனை அங்கே போகிப் பண்டிகை என்பார்கள். அதாவது அழுக்குப் போக்கிப் பண்டிகை என்பதாம். இனி மணநோன்பன்று புதிதாய் எடுத்த நெல்லைக் குத்தி அரிசி ஆக்கி பொங்கல் வைத்து இறை வனுக்கு அளிப்பார்கள். இது அன்பளிப்பு ஆகும். பிறகு அப்பொங்கலை அனைவரும் பகிர்ந்து உண்பார்கள். இரண் டாம் நாள் குடியானவர்களுக்கு சிறப்பானது. இதனைத் தமிழ் நாட்டில் மாட்டுப் பொங்கல் என்றும், கொங்கு நாட் டில் பட்டி நோன்பு என்றும் கூறுவார்கள். மாடுகளைக்

குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வர்ணம் பூசி பொங்கல் வைத்து செய் குளத்தில் கால் வைக்கச் செய்து பொங்கல் உண்ணச் செய்து பூசிப்பார்கள் கோவை முதலிய ஊர் களில்.

மாடுகளை மாதப்பன் கோயிலுக்கு கொண்டுபோவதுண்டு. மூன்ரும் நாள் பூ நோன்பு ஆகும். இது சிறுமிகள் நோன்பு. ஊர் கன்னிப் பெண்கள் கூடைகளில் கண்ணிச் சாமான்களை ஏந்திக்கொண்டு ஆற்றங்கரை சென்று கன்னிகைகளைப் பூசித்து பூப் பொறித்து விளையாடி வீடு திரும்புவதுண்டு. திரும்பும்போது ஓலையக்காள் பாட்டும், பிள்ளையார் பாட்டும் பாடிக்கொண்டு திரும்புவார்கள். இந்தப் பவனி உலா வெகு நன்ருக இருக்கும். அக் காலங்களில் தென் நாடுகளில் சமீன் வட்டாரங்களில் ஏறுழுவுதல் என்ற ஜல்லிக்கட்டு நடைபெறும். இது தற்காலத்து வெள்ளையர் பந்தியம் போன்றது. மற்ற ஊர்களிலே கோல் அடிப்பது, சிலம்பு எறிவது, சடுகுடு ஆடுவது முதலான விளையாட்டுகள் நடைபெறும். இவை கள் குடியானவர்களின் மகிழ்ச்சிகளைக் காட்டும் கொண் டாட்டங்கள்.

வேனிற் காலம்.

பம்பல் காலமாகிய தை மாசி இரண்டும் கழிய இள வேனிற் காலம் தோன்றும். பனி நீங்கி செடி கொடிகள் புது இலை புதுப்பூவிடத் தொடங்கும். குடியானவர் களுக்குப் புலங்களில் வேலை இல்லை. வீடுகளில் தானியம் நிறைந்திருக்கும். ஊர்கள் எங்கும் கொண்டாட்டங்கள் தொடங்கும். ஒவ்வொரு நிறை மதியிலும் கோயில் களிலே திருவிழாத் தேரோட்டம் நடைபெறும். சில ஊர் களில் காமன் பண்டிகை நடத்துவார்கள். எரிந்த கட்சி

எரியாத கட்சிப் பாட்டுப் போட்டி நடக்கும். இப்போது அது நின்றுவிட்டது. வெய்யில் காலங்களிலே திண்ணைகளிலே பாட்டுக் கதைகள் படிப்பார்கள். கோவலன் கதை, அண்ணன்மார் கதை படிப்பார்கள். தெரு எங்கும் ஆண் பெண் சகிதம் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். தெருக்கூத்து உயில்கும்மி முதலியன நடைபெறும். மாரியம்மன் சாட்டு, அங்காளம்மன் விழா, மகாளியம்மன் விழா, துரௌபதியம்மன் குண்டம் கூத்தாண்டை சாட்டு முதலியவை நடைபெறும். அப்போது ஊர்களில் வரிபோட்டு பணம் வசூலித்துத் திருவிழாக்களை நடத்துவார்கள். ஆட்டுப்பலி கொடுப்பதும் உண்டு. அப்போது இராட்டை, தெருக்கூத்து, பகல் வேடம், கோலாட்டம், கும்மிகள் சிறப்பாக நடக்கும். சாமி சொல்லுதலும் உண்டு. பெரிய கோயில்களிலேயும் வேனிற் காலங்களில்தான் பெருந் திருவிழாக்கள் நடைபெறும். அவைகளுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லுவார்கள். குடியானவர்கள் வீடுகளில் பருவம் அடைந்த இளைஞர், பெண்கள் இவர்களுக்கு திருமண ஏற்பாடுகள் நடைபெறும். பழனி, வெள்ளியங்கிரி முதலிய புனிதத் தலங்களுக்குக் காவடி எடுத்துச் செல்லுவதும் இந்தக் காலந்தான். இவ்வாருக குடியானவர்களும் அவர்களுடைய ஆட்களும் தங்கள் மகிழ்ச்சிகளைத் தெரிவிக்கும் கொண்டாட்டங்களில் ஈடுபடுவார்கள். மேலும் இவைகளில் தீண்டாத வகுப்பார்களும் கலந்து கொள்ளுவார்கள். அவர்களுக்கு ஒரு சிறப்பு இடமும் உண்டு. பறை அடித்தல், பூக்கம்பம் சுற்றி குரவைக்கூத்து ஆடுதல் முதலிய செயல்கள் அவர்களுடையவையே. இளவேனிற் காலத்தே வருடப் பிறப்பு ஏற்படும். அப்போது வேப்பம் பூ மலர்ந்திருக்கும். காலையிலே எண்ணை

தேய்த்துக் குளித்துப் புது ஆடை தரித்து வேப்பம் பூவால் பஞ்சாமிருதம் செய்து இறைவனுக்குப் படைத்து உண்டுப்பண்டிகை நடத்துவார்கள். வேப்பம் பூவே இள வேனிலைக் குறிப்பதாகும்.

பொது இயல்பு.

மேலே கூறியவாறு நாட்டுப்புறங்களில் கொண்டாட்டங்கள் ஆண்டு முழுவதும் நடைபெறுவதைக் காண லாம். ஆனால் அவைகள் எல்லாம் உழவாளியின் தொழிலை ஒட்டியே நடைபெற்றன என்று காண்கிறோம். மேலும் அவ்விதப் பண்டைக் கொண்டாட்டங்கள் அவன் குடும்ப நிலையின் வளர்ச்சியைக் கருதியே இருந்தது எனவும் காணலாம். கொண்டாட்டங்கள் பெரியவர்களின் மகிழ்ச்சியைக் குறித்துமட்டும் தோன்றியவைகள் அல்ல. சமயச் சார்பான சடங்குகளாகவோ திருவிழாக்கள் ஆகவோ அவைகள் இருந்தால் அவைகள் பெரியவர்களைக் குறித்தே நடைபெற்றிருக்கும். அதன் உண்மை அறிய வடநாட்டுப் பண்டிகைகளை காண்க. அல்லது ஏனைய சமய விழாக்களைக் காண்க. தமிழர்களுடைய கொண்டாட்டங்களோ ஒரு குடும்பத்தில் உள்ள எல்லா மக்களையும் பற்றியவை என்று அறியவேண்டும். அக் குடும்பத்தைச் சேர்ந்த கால்நடைகளுக்கும் அவைகளில் ஒரு பங்கு உண்டு அல்லவா. பசுமாடு இல்லாவிட்டால் பட்டி நோன்பு நடைபெறுமா. குழந்தைகள் சேராவிட்டால் பூநோன்பு நடைபெறுமா. ஆடி மாதத்துக் கும்மி கோலாட்டக்கள் நடைபெறுமா. 18-ம் பெருக்கம் நடைபெறுமா. வேலையாட்கள் சேராவிட்டால் கலைமகள் ஆராதனை நடக்குமா. ஆகவே இப்பண்டிகைகள் குடும்பப் பொதுவான பண்டிகைகள் ஆகும் என்க. அவைகள்

மனதிற்கு உற்சாகமும் உடலிற்குப் பயிர்ச்சியும் தந்தன என்பதில் ஐயமில்லை. நோக்கம் இன்னதென்று கூருமலே அவைகள் அப்பெருமைகளைத் தந்தன. இந்நாளிலோ மேற்கு நாட்டாரைப்போலப் பாவித்து கால் பந்து கைப்பந்து முதலிய பேதையர் விளையாட்டுகளை நமது வாலிபர்கள் கைக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். அவ்விளையாட்டுக் கொண்டாட்டங்களில் பொருளும் இல்லை. உரமும் இல்லை. ஆகவே பிறனுடைய மயக்கத்தில் விழாமல் நமது முன்னோர்களின் பழக்கங்களை அறிந்து அவைகளில் நாட்டம் செலுத்துவது நன்று அல்லவா. தொழிற் பண்டிகைகளுக்குச் சமய சார்பைத் தந்து மர்மச் செய்கைகள் ஆக்குவதும் சரியன்று. வடநாட்டு மயக்கம் இவைகளுக்கு வேண்டவே வேண்டாம்.

XII. பழக்கங்கள்.

பழக்கமோ வழக்கமோ

நமது பேச்சில் பொதுவாகப் பழக்க வழக்கங்கள் என்ற சொற்றொடர் வழங்குகின்றது. அச்சொற்றொடர் எவற்றைக் குறிக்கின்றது என்று நாம் ஊன்றி ஆராயாமலே வழங்குகின்றோம். கல்விமான்களும் இதனைச் சிந்தித்ததில்லை. அகராதி எழுதின பேர்களும் இதனை ஆராய்ந்து எழுதினதாகத் தெரியவில்லை. பல்கலைக் கழகத்தார் வெளியீட்டிலும் பழக்கம் என்றால் வழக்கம் என்றும் வழக்கம் என்றால் பழக்கம் என்றும் அச்சடித்துள்ளார்கள். இரண்டும் ஒரு பொருட் சொற்களா? அப்படியாயின் ஏன் இரண்டு சொற்கள் வந்தனவோ என்று சிந்தனை செய்வார் இல்லை.

நாம் ஒரு சிறிது ஆராய்வோம். பழக்கம் என்ற தொழிற்பெயர் பழகுதல் என்ற வினையின் அடியாகப் பிறந்தது. வழக்கம் என்ற தொழிற்பெயரோ வழங்குதல் என்ற வினையின் அடியாகப் பிறந்தது. பழகுதலும் வழங்குதலும் ஒன்று என்பதைச் சற்று ஆராயுங்கள். பழகுதல் என்றால் பிறர் எவரோ செய்துவரும் ஒரு செயலை நாம் எடுத்துக் கையாண்டுவந்து அதில் ஈடுபடுதல் ஆகும். வழங்குதலோ நாமே பண்டை நாளிலிருந்து செய்துவந்த ஒரு செயலைச் செய்து அதில் ஈடுபடல் ஆகும். ஆகவே ஒன்று நாம் கடன் வாங்கிக்கொண்டது. மற்றொன்று நம்முடைய பழைய உரிமையைக் கொண்டது. பழக்கம் இடையில் வந்து நம்மை அடிமைப்படுத்தினது. வழக்கம் முதலிலிருந்தே நம்மிடம் இருந்து நம்மை ஆட்கொள்ளுவது. இந்தப் பேதப்பொருள் இருக்க நாமோ ஆராயாது இரண்டையும் ஒன்றாகக் கருதுகிறோம். ஒரு எடுத்துக் காட்டு சொல்லி விளக்குவோம். பெண்கள் மூக்கைக் குத்தி மூக்கணி அணிதல் முன்னே தமிழ் நாட்டில் இருக்கவில்லை. வடநாட்டார் செயலைக்கண்டு நமது நாட்டுப் பெண்கள் அதனை அழகு என்று புலியைப் பார்த்து பூனை சூடு இட்டுக்கொண்டதுபோல அழகிய மூக்கைத் துளைத்து அழகுக்கு அழகு செய்தாற்போல மூக்கணி அடையத் தொடங்கினர். அது நாளாவட்டத்தில் ஊன்றிவிட்ட ஒரு பழக்கம் ஆகிவிட்டது. மூக்கணி அணிதல் ஒரு பழக்கம் என்க. மற்றொன்று மக்கள் இறந்துபோனால் பிணத்தைச் சிலர் சுடுவார் சிலர் புதைப்பார். சுடுவதும் புதைப்பதும் எந்த நாளிலும் இருந்தது. 'சுடுவோர் இடுவோர்' என்று மணிமேகலையும் கூறுகிறது. அவை புதிதாய் வந்ததல்ல. இப்போதும் உண்டு. ஆகவே அது நம் நாட்டு வழக்கமாக இருக்கிறது. இந்த

வகையில் பழக்கத்தையும் வழக்கத்தையும் வேறு படுத்திக் கூறலாம். இக்கருத்து சரியல்ல என மாறுபடு வோர் கூறக்கூடும். நாமோ இவ்வேறுபாட்டை மனதில் வைத்துக்கொண்டு நமது நாட்டுப்புறத்தின் பழக்கவழக் கங்களில் சிலவற்றைக் கூறுவோம்.

பழக்கங்களின் வகைகள்.

பழக்க வழக்கங்களில் முதலில் பழக்கங்களைப்பற்றிச் சில கருத்துக்களை எடுத்துக் கூறுவோம். பிறகு வழக் கங்களைப்பற்றி எடுத்து ஆராய்வோம். நமது நாட்டுப் புறங்களில் ஆண்டுவரும் பழக்கங்கள் பலவகைப்படும். பொதுவாகக் கூறுமிடத்து எப்பொருள்களை முன்னிட்டு அப் பழக்கங்கள் காணப்படுகின்றனவோ அப் பொருள் களின் தன்மையைப்பற்றி அவ்வகைகள் தோன்றும். அவைகள் நாள்தோறுமாகவோ கெடுவாரியாகவோ அனு சரிக்கப்படுகின்றன. இந்த முறைகளை முன்னிட்டு அவை களை ஆராய்ந்தால் அவைகளின் பாகுபாடுகள் தெளி வாக விளங்கும் அப்பொருள் வகைகள் எவை என்ருல் 1. மனிதனுடைய உடல், உறவினர், குலம் முதலியவை. 2. மனிதனைச் சுற்றியிலுமுள்ள சூழ்நிலைப் பொருள்கள். 3. மனிதன் வாழும் சமூகம் நாடு முதலியன. 4. சமூகத் தில் கொண்டிருக்கும் கொள்கைகள் எண்ணங்கள் கருத் துக்கள். 5. அறிவுக்கு உகந்ததோ உகவாமலோ நடை பெறும் செயல்கள் முதலியவைகளாக பழக்கங்களை ஆராயலாம். இப்பழக்கங்கள் நடுவில் புகுந்து நாளா வட்டத்தில் சமுதாயத்தில் ஊறிப்போய் இருந்துவிடுவ தால் இவைகள் எப்போது புகுந்தன. சமுதாயத்தை எப்படி மாற்றிவிட்டன. எல்லாம் இன்னும் இருக்கின் றனவா. மறைந்து போனவை மீண்டும் சிற்சிலவிடத்து

முளைக்கின்றனவா. அவைகள் சமுதாயத்தை எப்படி திருத்தியிருக்கின்றன என்ற சில கேள்விகள் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் உதாரணங்களோடு விளக்கினுல்தான் நம் நாட்டில் பழக்க வகைகள் மனிதன் இப்போதிருக்கும் நிலைக்கு எப்படி கொண்டு வந்தன என அறியலாம். இவ்வாறு ஏற்பட்ட பழக்க வகைகளில் சில முக்கியமானவைகளை இப்போது கூறுவோம்.

உடல் முதலியவைகளின் கோலம்.

கோழி, மயில், சிங்கம் இவைகளைச் சிறிது பாருங்கள். பெண் இனம் எளிமையாக இருக்கும். ஆனுல் ஆண் இனமோ அழகுபடுத்திக்கொள்ளும். பெண்கள் கண்களைக் கவரும்பொருட்டு ஆண் இனங்கள் அழகுபடுத்திக் கொள்ளுகின்றன என உயிர் நூலார் கூறுகின்றனர். சேவல் பலவித வண்ணங்களோடு இறகு, கொண்டை முதலியவைகளை வளர்க்கின்றது. கூறைமேல் ஏறி தலை நிமிர்ந்து கூவுகின்றது. மயிலோ தன் தோகையை வெகு அழகாய் விரித்து ஆடுகின்றது. சிங்கமோ தன் பிடரி மயிரை சிலிர்த்துக்கொண்டு கம்பீரமாக கர்ச்சிக்கிறது. இவைகள் இயற்கைக் கோலங்களை பெருக்குகின்றன. ஆனுல் மனிதனிலே அம்முறை மாறியிருக்கிறது. ஆடவன் வெள்ளை உடைகளை உடுத்திச் சாதாரணமாக இருக்கிருன். ஆனுல் பெண் மகளிரோ பலவித வண்ணங்களை ஆடைகளில் ஏற்றி அழகிய அணிகளைப் பூட்டி அழகு படுத்திக்கொள்ளுகிருர்கள். கரியமேனி உடையவளும் வெண்மையாகத் தோன்றுவதற்கு வெண்மாவும் பசுமையாகத் தோன்றுவதற்கு மஞ்சளும் பூசிக்கொள்ளுகிருள். இவ்விதம் செய்வதைக் கோலம் கொள்ளுதல் என்பதில் அடக்குவர். இந்த முறை எந்த நாட்டிலும் உண்டு. வட

நாட்டார் இதனை மிகுதியும் ஆட்கொண்டு அதற்கப்பால் விதிகளையும் ஏற்படுத்தியுள்ளார். மேல் நாட்டிலும் இதனை ஒரு கலையாகவும் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலும் இம்முறை இல்லாமல் இருக்கவில்லை. ஆனால் பண்டைய பழக்கம் இப்போது மாறிப்போய் புதுப்பழக்கம் நுழைந்திருக்கிறது.

கோலம் கொள்ளுதல் நான்கு வகை என்பர். முடித்தல், உடுத்தல், பூணுதல், பூசுதல் என்பன. இவைகள் முன் காலத்தில் இருந்தவைகளை பண்டை நூல்களிலும், கற்சிற்பங்களிலும் குகை ஓவியங்களிலும் காணலாம். அவைகள் பெரும்பாலும் மாறிவிட்டன. சில பழைய வழக்கப் பிரதேசங்களிலும் மலைவாசிகளிலும் சிற்சிலவைகள் மாறாமல் இருக்கின்றன. அவைகளும் இப்போது மக்கள் போக்கு செல்லும் வேகத்தில் மாறிவருகின்றன. நமது ஆலயங்களில் மாறுதல் இல்லை என்ற சம்பிரதாயம் என்றும் பண்டைக்காலப்படியே ஒவ்வொரு சடங்கையும் செய்யவேண்டும் என்றும் குருக்கள் கூறுவார்கள். ஆனால் உண்மையை ஒரு சிறிது ஆராய்ந்து பாருங்கள். கல்லிலும் பூச்சிலும் உள்ள உருவங்களைத் தவிர உற்சவ மூர்த்திகளின் கோலங்களை மாற்றிவிடுவதில்லையா, மூலஸ்தானங்களில் உள்ள மூர்த்திகளுக்கும் தற்கால ஆடை அணிகளை ஏற்றுவதில்லையா. ஒரு முறை ஒரு பண்டைய பாடல் பெற்ற கோயிலுக்குச் சென்றிருந்தேன். நான் உத்தியோகத்தில் இருந்ததினால் என்னை மகிழ்விக்க அம்மனைத் தற்கால நாட்டியப் பெண்போல அலங்கரித்திருந்தான் அர்ச்சகன். உண்மையான பெண் உருவமோ என்று சந்தேகிக்கவேண்டி இருந்தது. அத்தனை ஆற்றலோடு கற்சிலையைச் செய்தால் உயிருள்ள ஒரு பெண்ணை எவ்வாறு அலங்கரிக்க முடியும்? உற்சவ மூர்த்திகளை

மிக அழகோடு சிங்காரிப்பதை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். ஆகவே அலங்காரம் செய்தல் நாட்டில் ஒரு கலைபோல வளர்ந்துவிட்டது என்று சொல்லலாம். அதன் பயனை நாட்டுப்புறங்களிலும் பார்க்கிறோம்.

நால்வகைக் கோலம்.

கல்வியின் பெருமையைக் கூறவந்த சமணப் புலவர் அதன் அழகிற்குக் 'குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல' என்றார். சமணர் உலகிய அழகுகளை வெறுப்பார்கள் அல்லவா. ஆனால் நமது நாட்டுப்புறத்தார் இம்மூன்று அழகுகளோடு பூவழகும் ஒன்று சேர்த்தி நான்காய்க் கொண்டார்கள். குஞ்சியழகில் கூந்தல் உட்படும். பண்டைக் காலத்தில் கொண்டையாக முடித்தார்கள். இக்காலத்திலும் நாட்டுப்புறங்களில் அவ்வடிவைக் காணலாம். 'தேங்காய்போலத் திரண்டுருண்ட பைங் கூந்தல்' இப்போது நகரங்களிலும் நாட்டில் படித்தவர்களிடமும் இல்லை. ஐம்பால் பின்னற் சடை வேறு நாடுகளில்தான் காணலாம். நம்நாட்டில் ஒற்றைப் பின்னலே நடைப் பழக்கமாகிவிட்டது. இனி சில குழந்தைகள் மேல் நாட்டைப்பார்த்து இருசடைகளாய்ப் பின்னத் தொடங்கிவிட்டார்கள். பெரியவர்கள் ஆனவுடன் சடையைச் சுருட்டி பின்னால் இணைத்துக்கொள்ளுவார்கள். இது முடிப்பு ஆகும். இது ஒரு பழக்கம்.

உடுத்தல் என்பது ஆடை அணிதல். பண்டைக் காலத்தில் தமிழர் கத்தரித்துத் தைத்த ஆடை அணிந்ததில்லை. ஆடவர்கள் கீழும் மேலும் வெண் துணியைக் கட்டினார்கள். பெண்கள் பலவர்ணப் புடவைகளைக் கட்டினார்கள். மார்பில் கச்சு இறுக்கிக்கொள்ளுவார்கள். இக்

காலத்தில் உடை மாறிவிட்டது. ஆங்கிலரிடத்திலிருந்து தைத்த சொக்காய்களை அணியத் தொடங்கினார்கள். ஆனால் கொங்கு நாட்டில் பல பகுதிகளில் முன்னாளைய உடையே காணலாம.

கைம்பெண்ணானால் வெள்ளை உடை தரித்திருப்பது சில வகுப்புகளில் உண்டு. மலை நாட்டில் சுமங்லிகளும் வெண் உடையே அணிவார்கள். இங்கேயும் புதுப்பழக்கம் வரத் தொடங்கியது.

பூசுதல் என்பது முன்னாளில் மஞ்சள் பூச்சாய் இருந் தது. அதனால் பூச்சி புழு அணுகாது என்பர். பல தோல் நோய்களும் அணுகா. நறுமணப் பூச்சுகளும் உண்டு. புனுகு சவ்வாது முதலியவைகளை அணிந்தார் கள். இக்காலத்தில் அவை மாறி வெண் மாவு பூசுவது வழக்கமாகிவிட்டது. பூச்சிலே பலவித நறுமணங்களும், பொடிகளும், மைகளும், எண்ணைகளும் வந்துவிட்டன.

பூணுதல் என்றால் நகையணிதல். பண்டை நாளில் காது ஒன்றுதான் துளை செய்து அணிவது. அந்நாளில் மூக்கணிகள் இல்லை. அது தமிழ் நாட்டிலே 17-நூல். தோன்றியது. அவ்வணிகளின் பெயர்களே வடச்சொற் கள் ஆனால் நாட்டில் வழக்கம் ஏது. ஆனால் முன்னாளில் காலணி (சிலம்பு) தலையணி (சிந்தாமணி) இடையணி (மேகலை) கையணி (வளையாபதி) காதணி (குண்டலம்) என்ற காவிய அணிகளை தமிழ் மாது அணிந்திருந்தாள். இக்காலத்திலோ கணக்கற்ற அணிகள் வந்துவிட்டன. எல்லாம் பிற நாட்டு இறக்குமதிகள். இப்போது புதுப் பழக்கங்கள் ஆகிவிட்டன.

மற்றைய விசித்திர கோலங்கள்.

மேலே கண்ட நால் வகைக் கோலங்கள் உடலின் மேல் கொள்ளுபவைகள். அணிகளில் ஒன்றிரண்டு காதிலும் மூக்கிலும் துளைத்து அணிபவைகள். ஆனால் மற்றொரு வகை விசித்திர கோலம் உடலின் தோலில் நிரந்தரமாகச் செய்து கொள்ளுவது ஆகும். இதனை பச்சை குத்திக் கொள்ளுதல் என்பர். இது மிகுதியாக நாட்டுப் புறங்களில் வழங்கி வரும் பழக்கம். இது பண்டைத் தமிழர்களில் இருக்கவில்லை. ஏனெனில் பண்டைத் தமிழ் நூல்கள் எவற்றிலும் இது குறிக்கப்படவில்லை. நடுக் காலத்து நூல்களாகிய கம்பர், சேக்கிழார் முதலியோரும் கூறவில்லை. ஆகவே இப்பழக்கம் வடநாட்டிலிருந்து இங்கே சமீப காலத்தில் வந்ததெனை ஊகிக்கலாம். கொங்கு நாட்டு வேளாளர், அகமுடையார், மற்றத் தொழிலாளிகள் முதலிய நாட்டுப்புறத்து மக்கள் இதனை மிகுதியாக ஆதரிக்கின்றனர். முலைப்பாலில் பச்சைச் சாயத்தைக் கலக்கி அதனை ஒன்றுமுதல் ஐந்து ஊசிகள்வரை இணைத்து அதனால் தோலில் குத்துவார்கள். அச்சாயம் உள் தோலில் ஒட்டிக்கொள்ளும். சில நாள்களில் ஆறிப் போனால் அப்பச்சை நிரந்தரம் ஆகிவிடும். இதனை பெண்பாலர்களே ஆதரிக்கின்றனர். நெற்றியில் கைம்பெண்களுக்கு பொட்டு கூடாது என்பர். ஆனால் பச்சை குத்திக் கொண்டால் அதை அழிக்க வகையில்லை. கைம்பெண்ணும் பொட்டுடன்தான் விளங்குவாள். இது நாட்டு வழக்கத்திற்கு எதிரானது அல்லவா. சாதாரணமாக உடலில் தெரியக்கூடிய பாகங்களுக்குத்தான் பச்சை குத்துவது வழக்கம். அதாவது நெற்றி, கன்னம், கைகள், கால்கள் முதலியன. பலவித கோலங்கள், பூக்கள், தேள், கிளி, மயில் முதலிய உருவங்கள் குத்தப்

பெறும். இப்பழக்கம் நகரங்களைக்காட்டிலும் நாட்டுப் புறங்களில் மிகுதி. இது மேல் வகுப்பார்களிலும் படித்த வர்களிலும் இல்லை.

சில சில்லறைக் கோலங்களும் பழக்கத்தில் வந்து விட்டன. அவை நெற்றியில் நாமம், சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டு முதலியவை அணிதல் என்பன. பெண் கள் எல்லா நாடுகளிலும் அணிவார்கள். விதவையானால் அணியமாட்டார்கள். பிற நாட்டார் இதனைச் சாதிக்குறி என்பார்கள். அது தப்பு. இவை வெறும் அழகுக் குறி கள்தான். திருமண் திருநீறு என்பவை சமயக்குறிகள். அவைகளின் பொருளை வெளி நாட்டார் அறியமாட்டார் கள். அதனால்தான் கேலி செய்கிறார்கள். கண்ணுக்கு மையிடுதல் தலைக்கூந்தலுக்கு எண்ணெய் நீவுதல் பூச்சூட்டு தல் இவைகள் மங்கலக் குறிகள். காலுக்கு செம்பஞ்சணி தல் உண்டு. இப்போது குறைந்துகொண்டு வருகின்றது. மார்பில் தொய்யெழுதல் நீங்கிவிட்டது. ஆண்குறி தோல் நீக்குதல் இசுலாமியர்களில் உண்டு. இந்து மக்களில் எப்போதும் இல்லை. இவைகளே உடற் கோலங்கள்.

சூழ்நிலைப் பொருள்.

மனிதனைச் சூழ்ந்து இருப்பது உணவும் இருப்பிட முமாம். உறவில், நெருங்கிய உறவும் தொலை உறவும் பிற மக்களும் சேருவர். உறவினர்களில் இறப்பு பிறப்புத் தீண்டல் பூப்புத்தீண்டல் முதலியன வரும். இவைகளே யன்றிப் பிற மக்களில் இழிவு நடத்தையை முன்னிட்டு தொடுதல்கூடாது என்ற வகுப்புத் தீண்டல்கள் எக்கா லத்தில் தோன்றினவோ கூற இயலாது. பண்டைத் தமிழ் நூல்களில் தீண்டலைப்பற்றி இல்லை. ஆனால் வடமொழி யில் உண்டு. வடக்கே இருந்து பல பழக்கங்களைக்கொண்டு

வந்து விட்டவர்கள் சமணர்கள். அவர்கள் கண்டுமுட்டு, கேட்டு முட்டு என்று இருவகை தீண்டல்களைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய இயக்கம் தெற்கே நுழைய வடநாட்டுப்பழக்கங்கள் பலவும் தெற்கே வந்தன. அவைகளோடு தீண்டலும் வந்திருக்கலாம். இந்தவகையில் தீண்டல் ஒரு பழக்கமாகிவிட்டது. தீண்டலினால் நாட்டுப்புறங்களில் தீண்டாதிருக்க தனி இடம், தனிக்கிணறு, தனி விழாக்கள் ஏற்பட்டுவிட்டன. இப்போது அவைகள் குறைந்து வருகின்றன. தீண்டலினால் நாட்டுச் சமயங்களுக்கு நேரிடும் தீங்கு சொல்லி முடியாது.

பிறப்பிறப்புத் தீண்டல்களிலே பிறரைத் தொடாது சில நாள் தனித்து இருத்தலும், பிறகு அத்தீண்டலைப் போக்க தனி கழுவாய் ஏற்படுத்தலும் உண்டு. இவ்விதப் பழக்கங்கள் தெற்குத் தீவுகளில் வசிக்கும் ஆட்களில் நிரம்ப உண்டு. அங்கிருந்து நமது நாட்டில் புகுந்திருக்கும் என்று சொல்லமுடியாது. சமயல், சாப்பாடு, தீட்டு முதலியவைகள் குல வேறுபாட்டிலிருந்தே தோன்றி இருக்கலாம், இவைகள் நாட்டுப்புறங்களில் மிகவுண்டு. இப்போது நெகிழ்ந்து வருகின்றன.

இருப்பிடம்.

மக்கள் தனித்தனி வகுப்புகளாகப் பிரிந்து வாழ்க்கை நடத்தத் தொடங்கிய பின்னர் அவர்கள் இருப்பிடங்களும் தனித்தனி ஏற்படத் தொடங்கின. சில சமயங்களில் ஆராய்ந்தால் இவ்வித ஒழுங்கினால் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவும் இருப்பார்கள். அந்தமுறையினையே வற்புறுத்தி நூல்களும் உரைத்து வந்தன. பெரிய ஊர்களிலும் அன்றி சிறு கிராமங்களிலும் ஒத்த

தொழிலாளிகள் ஒரே இடத்தில் மனைகளைக்கட்டி வாழ்தல் இயற்கையாகிவிட்டது. இந்த வகையில் அந்தணர் சேரிகள் வேறே, குடியானவர்கள் தெருக்கள் வேறே தீண்டாதார் குடிசைத் தொகுதிகள் வேறே இருக்கக் காண்கிறோம். இவர்கள் இன்ன வகையாகத்தான் வீடுகளை கட்டவேண்டும் என்ற வற்புறுத்தலும் இருந்தது எனக் கூறலாம். வீடுகளின் அமைப்பும் இன்ன வகை இருக்கவேண்டும் என்ற கருத்து இருந்தது. வீடுகளில் வசிக்கும் இடம், சமயல் இடம் முதலியவைகளுக்கும் விதிகள் தோன்றிவிட்டன. அளவு, நீளம், உயரம் இவைகளுக்கும் விதிகள் உண்டாயின. ஒற்றைக் கால், ஒற்றைவிட்டம் கூடாது. இவைபோன்ற நியமம் ஏற்பட்டது. வீடுகளுக்குச் சுண்ணும்பு பூசுதல் இரண்டு அடுக்கு மாடி கட்டுதல் முதலிய செய்கைகளும் உரிமையாக்கப்பட்டன. சில குறிப்பிட்டவர்களே வீட்டில் சாந்து இடலாம், மாடி கட்டலாம் என்ற உரிமை பெற்ருர்கள். இந்த வில்லங்களாலே நாட்டுப்புறங்களில் பெரிய வீடுகள் இல்லாமற்போயின. இந்தப் பழக்கங்களுக்குக் கல்வெட்டு ஆதாரமும் உண்டு. மேலும் ஒருவர் பகுதிக்குள் மற்ருெரு வகுப்பார் குடியிருக்கப்படாதாம். அந்தணர் குடியிருப்புக்களில் வேறு மக்கள் குடியிருக்கலாகாதாம். அல்லது யாராவது குடிபோனல் அவர்கள் பாழாய்ப் போவார்களாம். இந்தவிதமான எண்ணப் போக்கு மக்களிடை புகுந்துகொண்டது. இதனுல் வகுப்புவாதப் பிரிவினை நாட்டில் மிகுதியாகிவிட்டது. வகுப்பு பேதம் இன்றி மக்கள் குடியிருப்பு கலந்திருந்தால், நாளடைவில் ஏற்றத் தாழ்ச்சி நீங்கி ஒரே வளர்ச்சியும் அன்புக் கொள்கையும் நாட்டில் ஏற்பட்டிருக்கும். இந்த முறையை ஒட்டிப் பிற நாடுகளில் மக்கள் உயர்தரப் பள்ளிகள் நடைபெறுகின்ற

னவாம். அவ்வகை அன்னியோன்னியபாவம் நமது நாட்டில் வருமா?

தீ மிதித்தல், பலியிடல்.

நாட்டுப்புறங்களிலே கிராம தேவதைக் கோயில்களிலே தீ மிதிப்பது என்ற சடங்கு திருவிழாக்களிலே நடைபெறுகின்றது. இது பல ஊர்களில் இருந்தாலும் மாரியம்மன், காளியம்மன், துரௌபதியம்மன் கோவில்களில் மிகுதி. பூசாரி முதலில் செல்லுவான். பிறகு ஆண் பெண் சிறுவர் சிறுமிகள் எல்லோரும் மிதிப்பார்கள். பாரியூர் குண்டத்துக் காளியம்மன், பெருமாநல்லூர் காளியம்மன், பன்னூரி மாரியம்மன் இவைகள் மிக முக்கியமானவை. அவைகளில் அங்கே பெரிய குண்டங்களை வளர்த்தித் திருவிழாக்களை வெகு விமரிசையாக நடத்துகிறார்கள். மாசி மாதம் சிவராத்திரியின்போது தீ மிதித்தலை மிகுதியாகக் கொண்டாடுகிறார்கள். இதன் பொருள் விளங்கவில்லை. வடநாட்டில் துரௌபதி, சீதை முதலிய மாதர்கள் தங்கள் கற்பை நிரூபிப்பதற்காக தீப்புகுந்து வெளிவந்ததாகக் கதைகள் உண்டு. அக்கதைகள் தென்னாட்டில் நடைபெறவில்லை. பண்டைய நூல்களில் இல்லை. கைம்பெண் கணவனுடைய ஈமத்தீயில் புகுந்து உயிர் விட்டதுண்டு. அது தீ மிதித்தல் ஆகாது. கண்ணகி மதுரையை எரித்த காலத்தில் அறவோர் முதலியோரை விட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இதுதான் தீ மிதித்தலுக்கு ஒரு காரணம் என்று கூறுவாரும் உண்டு. ஆனால் அது ஒரு சான்று என்று சொல்லலாகாது. ஆகவே தீ மிதித்தல் பிற நாட்டிலிருந்து வந்ததொரு பழக்கமென்க.

இனி பலியிடலும் அவ்வாறே கொள்ளவேண்டும். பலியிடலைச் சில சங்க நூல்கள் கூறுகின்றன. ஆனால்

அது வடநாட்டு இறக்குமதி என்று அறியவேண்டும். பலி என்பதும் அவி என்பதும் வடமொழிகள். இவைகளுக்கு ஏற்ற தமிழ் மொழிகள் இல்லை. ஆகவே பலியிடலும் தமிழ் நாட்டிலே பின் காலத்தில் வந்ததொரு பழக்கம் என்று கூறவேண்டும். திருவள்ளுவர் என்ற தமிழ்க் கவிஞர் பலியை எப்போது கண்டித்தாரோ அப்போதே அது தமிழ்நாட்டு வழக்கம் அல்ல என்றும் வடநாட்டிலிருந்து தெற்கே புகுந்த பழக்கமென்றும் அறிவோமாக.

நோன்பும் பேயும்.

வேண்டுதல், கோரிக்கை, நோன்பு, தவம் என்ற பல பெயர்களாலேயும் சில பழக்கங்கள் நமது நாட்டில் புகுந்துவிட்டன. அவைகளில் நாட்டுப்புறத்து மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அது படிப்பின்மையாலும் அறிவின்மையாலும் ஏற்பட்டது என்று அறியவேண்டும். அவ்வித பழக்கங்களாலே நமது உயிருக்கு மேன்மையும் நமது குணத்திற்கு கண்ணியமும் நமது வாழ்க்கைக்கு கௌரவமும் வந்ததாகத் தெரியவில்லை. அவைகள் இல்லாமையினுலே யாதொரு தீங்கும் நமக்கு ஏற்படாது. யாதோ ஒரு தொத்து நோய் ஒரு காரணத்தினுல் ஏற்பட்டுவிட்டால் அது சௌக்கியமானுல் அலகு குத்திக்கொள்ளுதல், செடில்குத்திப் பூந்தேர் இழுத்தல், தெருவில் உருளுதல் முதலிய கொடிய செயல்களைச்செய்வதாக வேண்டிக்கொள்ளுதல் அத்தனை சிறப்பு என்று தோன்றவில்லை. இவற்றை, வேண்டுதலை அல்லது கோரிக்கை என்பார்கள். செடில் ராட்டினத்தில் சுற்றுதல் வலியெடுத்த இடத்தில் விளக்கு ஏற்றிவைத்துக் கிடத்தல் இவைகளைப்பற்றி பாண்டி நாட்டில் தவம் என்கிருர்கள். இரவெல்லாம் பேய்போல் குதித்தல் பிரம்

பினால் அடித்துக்கொள்ளுதல் இவைகளை நோன்பு என்கிறார்கள். இவைகள் பகுத்தறிவுக்கு அழகு அல்ல என்று உணரவேண்டும். இவைகளைப்பற்றித் தமிழ் நூல்களில் இல்லை. இல்லாதிருந்தும் ஏனோ இவைகளில் ஈடுபட்டு உடலைத் துன்புறுத்தவேண்டுமோ தெரியவில்லை. இத் துன்பங்கள் தவம் ஆகா என்று வள்ளுவ நாயனாரும் மறைமுகமாகக் கூறியுள்ளார். தவத்தைப்பற்றிக் கூறும் பொழுது "உற்ற நோய் நோற்றல் உயிருக் குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்குரு" என்றார். தானே ஏற்பட்ட நோயை சகித்தலும் ஒரு உயிருக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் என்றார். அப்படியாயின் ஒருவன் உடலுக்குத் தீங்கு செய்து அதனைச் சகித்தல் எப்படித் தவம் ஆகுமோ. ஆகவே நாட்டுப்புறங்களில் நடக்கும் இச்செயல்களை நிற்பாடு செய்வதே நன்று.

பேயாடுதலும் அதனால் சிலபேர் பிழைப்பிற்கு வழி தேடுதலும் மிக அநாகரீகம் என்க. மொண்டிப்பாளையம் முதலிய கோயில்களில் பேயாடுதல் மிகக் கொடுமையும் அநாகரீகமுமானது. உடலில் நோய் உண்டானால் அதனை மருந்து கொடுத்துத் தீர்க்கவேண்டுமே ஒழிய பேய் என்ற பெயரால் மந்திரவாதியைக்கொண்டு பிரம்பினால் அடித்துத் துன்புறுத்தல் மிகக் கொடுமை. இக் கொடுமை படிப்பினால்தான் நீங்குமென்று அறியவேண்டும். பேயும் பிசாசும் அறிவீனர்களுக்கேயன்றி அறிவுள்ளவர்களுக்கு இல்லை. பேய் ஓட்டுதலும் பிற்காலத்திலேதான் இந்நாட்டில் புகுந்தது.

செய்வினை.

மந்திரம் போடுதல் என்ற செயலினால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் துன்பத்திற்கு அளவில்லை. மந்திரத்தினால்

மாங்காய் விழாது என்பது பழமொழி. அப்படியிருந்தும் நாட்டில் மந்திரவாதத்தில் மக்களுக்கு நம்பிக்கை போக வில்லை. இதில் பலவிதம் உண்டு. பயத்திற்கு மந்திரம் போட்டு யந்திரம் கட்டுதல் ஒன்று. ஒருவருக்குத் தீங்கு செய்ய மந்திரவாதியைக் கொண்டு செய்வினை செய்தல், பில்லி சூனியம் வைத்தல், விரோதிகள் வீட்டில் நெருப்பு, அசுத்தம், மலம் இவைகளை விழச் செய்தல் முதலிய காரியங்கள் மற்றவை. மனைவி கணவனுக்கு மருந்து வைத்து வசியம் செய்தல் மற்ற உறவினர்களுக்கு மந்திரம் ஏவுதல் முதலிய எல்லாம் பணம் பிடுங்கச் செய்யும் மோசடிகள் என்க. இவைகள் தமிழ் நாட்டில் முன்னாளில் இல்லை. எந்த நூலிலும் சொல்லப்படவில்லை, அவை வடநாட்டிலிருந்து தெற்கே வந்த பழக்கங்கள். சங்கத்து நூலில் தமிழர் கொள்கை அடியிற்கண்டபடி தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதே. ஒருவன் மற்றொருவனுக்கு நன்மையும் தீமையும் செய்ய முடியாது. அவன் செயலுக்கு அவனே பொறுப்பாளி. ஆகவே வெறும் மந்திரங்களினால் எவ்வாறு ஒருவன் பிறனுக்குச் செய்வினை செய்ய முடியும்? ஆனாலும் நாட்டில் இந்த நம்பிக்கை இன்னமும் இருக்கின்றது. அதனால் நாட்டில் மிகவும் தீங்கு விளைகிறது. இந்த அநாகரீக அறிவில்லாத நம்பிக்கைகளை அறவே ஒழித்தல் நன்று.

ஆரூடம் சோதிடம் என்று சொல்லி பலபேர் மோசடிகள் செய்து அவற்றையே பிழைப்பாகக் கொள்ளுகிறார்கள். மனிதனுக்கு பிற்காலம் தெரியாமல் இருப்பதே இன்பம் ஆகும். தன் தன் கடமை செய்யின் விளைவு தானே கிடைக்கிறது. ஆகவே கடமைகளைச் செய்வதே நன்று ஆகும்.

XIII. வழக்கங்கள்.

திருமணம்.

வடமொழி அறநூல்களிலே எட்டுவித மணங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலங்களில் நடைபெற்றிருக்கலாம். தமிழ் நாட்டில் நடைபெறும் திருமண நடவடிக்கைகளுக்கும் வட மொழிப் பாகுபாட்டிற்கும் சம்பந்தமே இல்லை எனலாம். காதலில் திருமணங்கள் முன்காலத்தில் நடைபெற் றிருக்கலாம். தற்காலத்தில் எங்கேயோ ஒன்று நடைபெற லாம். பொதுவாக இல்லை என்றே கூறலாம். இனி நாட்டிலே நடைபெறும் முறை என்னவெனில் ஒத்த குலத்திலே பெற்றோர்கள் பொருத்தம் விசாரித்துப் பெண் பார்ப்பது வழக்கம். பிறகு ஜாதகக் குறிப்பு பார்த்துப் பத்துப் பொருத்தங்களில் பெரும்பான்மை ஒத்துவருகின்றனவா என்று ஆராயப்படும். ஜாதகங் கள் இல்லாத இடத்தில் குறி பார்த்து நிச்சயிக்கிறது ண்டு. அல்லது கோயிலில் பூ கேட்பது உண்டு. அந்த வகையில் ஒப்பு ஏற்பட்டால் மணம் நிச்சயிக்கப்படும். பிறகு விவாகச்சடங்குகள் நடத்துவார்கள். பெரிய புரா ணத்தில் காரைக்கால் அம்மையார் சரித்திரத்தில் கூறப் பட்ட வரலாறு பொதுவாக நமது நாட்டில் நடைபெறு வதே ஆகும். சடங்குகளும் மிகக் குறைவே. கொங்கு நாட்டில் வேளாளர்களிலே ஒரே நாள் கலியாணம்தான் நடைபெறும். வேளாளன் கலியாணம் விடிந்தால் தீர்ந் தது என்பதே பழமொழி. அதனை வேதியன் வடமொழி மந்திரம் சொல்லி நடத்துவது கிடையாது. அருமைக்கா ரன் என்ற பெரிய குடித்தனக்காரன் முன்னின்று நடத்தி வைப்பான். ஆனால் தற்போது சில பணக்காரக் குடும்

பங்களில் அருமைக்காரனை விட்டு விட்டு வேதியனை அழைத்துக்கொள்ளுகிறார்கள். கல்யாணம் நடந்தபிறகு புலவன் வாழ்த்துப் பாடுவான். அகவல் பாவினால் அது ஆக்கப்பட்டது. அதனைக் கம்பர் பாடியதாகக் கூறு வர். அந்தப் பாட்டில் திருமணச்சடங்கு முழுவதும் ஒழுங் காகக் கூறப்பட்டுள்ளது. மேலும் சில அம்மானைப் பாடல் களிலும் இச்சடங்குகள் கூறப்பட்டுள்ளன. கள்ளழகர் அம்மானையில் இந்த விவரம் காணலாம். திருமணம் ஆனவுடனே அது பூர்த்தி ஆகிறது. வடநாட்டு வழக் கப்படித் தனியாகத் திரட்டிச் சடங்கு என்பது ஒன்று இல்லை. பெரும்பாலும் மணமக்கள் தனிக் குடும்பம் வைத்து நடத்துவார்கள். இது முன்னமே கூறப்பட்டது.

இறுதிச் சடங்குகள்.

மனிதன் பிறந்ததுமுதல் இறக்கும்வரை சடங்குகள் உண்டு. வாழ்நாட்கள்மட்டுமோ, வாழ்க்கை மறைந்த பிறகும் இறந்த உடலுக்கும் சடங்குகள் உண்டு. பல நாடுகளில் பல சமயங்களில் பலவாறு அவைகள் இருக் கும். இவற்றை ஆராய்ச்சி செய்வதே ஒரு தனி இயல் ஆகும். பலவித ஈமமுறையினரைக் கூறவந்த மணி மேகலை ஆசிரியர்,

“சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்”

என்று கூறினார். இவைகள் சில பண்டைக் கொங்கு நாட்டிலும் இருந்தன. பேரூருக்கு அடுத்த சில நிலங்களில் முதுமக்கட்டாழிகள் கிடைத்தன. வெள்ளலூருக்கு அடுத்த நிலங்களில் மாண்டவர் குழி களும் மண்டபக்குழிகளும் கிடைத்தன. இனி, மேலே கூறி

யவைகள் வெகுபண்டைய சடங்குகள். தற்போது இடுவதும் சுடுவதுமே செயலில் இருக்கின்றன. ஒருவனோ ஒருத்தியோ இறந்தபிறகு செத்தஉடலை நீராட்டிக்கழுவி அலங்கரித்துச் சுடுகாடோ அல்லது இடுகாடோ எடுத்துச் செல்லுவார்கள். இறந்தவனுடைய வார்சு கொள்ளி வைப்பதற்காக கொள்ளி எடுத்துச் செல்லுவார். சுடுகாடு பெரும்பாலும் ஆற்றோரம் இருக்கும். அதில் ஒரு மேடைமேல் விறகும் எரு மூட்டையும் அடுக்கித் தீப்பற்ற வைப்பார்கள். அது எரிந்து சாம்பலானபிறகு எலும்புகளை ஒரு புனிதத் தீர்த்தத்தில் இடுவார்கள். கொங்கு வேளாளர்கள் இவ்விதச் சடங்குகளைச் செய்வார்கள். பின்னால் பதினொருநாளோ அல்லது பதினாறுநாளோ ஆனால் இறுதிச் சடங்கு நடைபெறும். சில வகுப்பார்களில் அந்த வகுப்புப் பெரியார்களும் சிலரில் அந்தணர்களும் செய்வார்கள். தானதருமங்கள் விருந்து இவைகளோடு கடமை நிறைவேறும். புதைக்கிற கொள்கையுடையவர்கள் பொதுவாக வீர சைவச்சார்பினரும் துறவிகளும் ஆவார்கள். நிலத்தில் ஆழக்குழி தோண்டி அதில் உடலை வைத்து மண்ணால் மூடிவிடுவார்கள். அந்த இடத்தில் சமாதி கட்டுவது உண்டு. அதில் பெயர் முதலியவை எழுதுவதும் உண்டு. மூன்றும் நாள் பால் ஊற்றுகிற சடங்கு நடக்கும். பதினோராம் நாள் மோட்ச தீபம் என்ற மற்றொரு சடங்கும் உண்டு. இச்சடங்குகளுக்குக்கெல்லாம் உறவினர்கள் வந்து கலந்து கொள்ளுவார்கள். திருமணத்திற்கு வராவிட்டாலும் இறுதிச் சடங்குகளுக்கு எவரும் வராமல் இரார்கள். வைணவர்களில் சுடுகாட்டுக்குச் செல்லும்போதுபஜனை செய்து கொண்டு செல்லுவது வழக்கம். பண்டைக் காலத்தில் இறந்த வீரர்களுக்குக் கல் நடுதல் என்ற வழக்கம் இருந்

தது. அவைகளும் துறவிகளின் சமாதிகளும் கோயில் களாக மாறுவதுண்டு. அங்கே பூஜைகளும் குருபூஜை களும் நடப்பது உண்டு. அப்படிப்பட்ட குருபூஜை சமாதி களில் கொங்கு நாட்டில் சாந்தலிங்க சுவாமிகள் சமாதி சிறந்தது.

கைம்மை.

கைம்மை நோன்பு மிகக் கடுமையானது. உயர்குலப் பெண்கள் கணவன் இறந்தால் கைம்மை நோன்பு பூண் பார்கள். மேற்குநாட்டாரைப்போல விதவைகள் மறுமணம் செய்வதில்லை. பண்டைக் காலத்தில் சில வீரப் பெண் மணிகள் தம் கணவருடைய உடலோடு தாமும் உயிர் துறப்பார்கள். அதற்குச் சில எடுத்துக்காட்டுகள் சங்க நூல்களில் உள்ளன. கைம்மை நோன்பின் கொடுமை யால் அவ்வாறு செய்திருக்கலாம். ஆனால் நாட்டில் நடைபெறுவதோ கைம்மை நோன்பு இருத்தலே ஆகும். வாழ்க்கைத் துணைவியாய் இருக்கும் காலத்தில் பல வண்ண உடைகளை உடுத்துப் பல அணிகளை அணிந்து விளங்குவாள். சிறப்பாக நெற்றியில் சாந்தும், குங்கும மும், கையில் வளையல்களும் காலில் மிஞ்சும் அணிந்திருப் பாள். கைம்மை அடைந்தவுடனே இந்த மங்கலப் பொருள்கள் அகன்றுவிடும். கழுத்தில் தாலியும் மறையும். 'பொற்றாலியோடெவையும்போம்' என்பது ஔவையார் வாக்கு. வேளாளர் முதலிய வகுப்புக்களில் வெள்ளைச் சேலை கட்டிக்கொள்ளவேண்டும். நெற்றியில் பொட்டு இடப்படாது. மிஞ்சி கழற்றிவிடவேண்டும். அதுமுதல் சுபகாரியங்களுக்கு செல்லக்கூடாது. இந்த நிபந்தனை கள் உண்டு. ஆனால் சில கைத்தொழில் வகுப்பார்களில் இத்தனை கண்டிப்பான விதிகள் இல்லை. வருணச்சேலை

கட்டலாம். சிறு அணிகளும் அணியலாம். சில தாழ்ந்த வகுப்பார்களிலோ விதவையானபிறகு சிலநாள் கழித்து மறுமணமும் செய்துகொள்ளலாம். அம்மணம் பெரும்பாலும் இரவில்தான் நடைபெறும். அதற்கு அந்த வகுப்புப் பெரியார்கள் சம்மதமும் வேண்டும். என்ன இருந்தாலும் இரண்டாம் மணத்தை சிறிது தாழ்மையாகவே அந்த வகுப்பார்களும் எண்ணுகிறார்கள். முன் மறுமணம் நடந்த வகுப்புக்களிலும் அவைகள் இப்போது குறையத் தொடங்கின. மறுமணச் சட்டம் ஏற்பட்டும் மக்கள் ஆதரிக்கவில்லை என்பது செயலினால் அறிகிறோம்.

வடக்கிருத்தலும் கல் நிற்றலும்.

பண்டை நாளிலே பல வழக்கங்கள் தமிழ் நாட்டில் இருந்தன. அவைகள் இப்போது மறைந்துவிட்டன. அவைகள் நூல்களிலும் சிற்பங்களிலும் மட்டும் காண்கிறோம். அவைகளில் ஒன்று வடக்கிருத்தல் என்பது. உலக வாழ்க்கை வெறுத்த மக்கள் ஊருக்கு வெளியே ஒரு பாறையின்மேல் அமர்ந்து வடக்கு நோக்கி உட்கார்ந்து ஊண் உணவின்றி உயிர்விடுதல் அது ஆகும். இந்தக் கடுந்தவம் சங்கத்தார் காலத்தில் இருந்தது. அதுதான் வடக்கிருத்தல் என்பது. பிசிராந்தையார் இவ்வாறு தமது நண்பரின் பொருட்டு வடக்கிருந்தாராம். சமணர்களும் தவம்செய்யும் முறையில் பாறையின்பேரில் இருந்து உயிர் துறப்பார்கள். அதற்குச் சல்லேகானம் என்று பெயர். இந்த வழக்கங்கள் இப்போது இல்லை. ஆனால் கொங்கு நாட்டில் கல் நிற்றல் என்ற சடங்கு மிகுதியாக இருந்திருக்கிறது. நாட்டுப்புறங்களில் பல இடங்களில் வீரக்கல், மாசதிக்கல், என்பவைகளைக் காணலாம். கோவையில் சிறிய ஏரிக்கரையில் ஒரு அருமையான வீரக்கல் நிற்

கிறது. தன்னுடைய ஊரில் கால்நடைகளை அழித்துவந்த புலியோடு போர்செய்து அதனைக் கொன்ற ஓர் இளைஞன் அப்புலியால் உண்டான காயங்களினால் இறக்க அவனைப் போல உருவம்செய்து அங்கே நட்டிருக்கிறார்கள். இந்தச் சடங்கை கல்நிற்றல் என்ற பெயராலே இலக்கியங்கள் கூறுகின்றன. இறந்த கணவனோடு ஈமத்தீயில் உயிர் துறந்த பெண்மணியின் உருவம் அமைத்துச் செய்த கல்லுக்கு மாசதிக்கல் என்று பெயர். இந்நாட்டில் மாஸ்தியப்பன் மாஸ்தியம்மாள் போன்ற பெயர்களும் இடப்படுதல் பெரும் வழக்கு. இனி, பலியிட்ட பாலர்களைப்போல உருவம் அமைத்தல் சாவாரப் பலி உருவம் என்ற பெயரால் வழங்கிற்று. பேரூர் அன்னூர் முதலிய ஊர்களில் இவ்விதச் சிலைகள் உண்டு. விவரத்தைச் சோழன் பூர்வ பட்டய த்தில் காணலாம்.

செஞ்சோற்றுக் கடன்.

'உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினையாதே' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. ஒருவன் எப்படிப்பட்ட கொள்ளைக்காரனானாலும், தான் ஒருமுறை ஒரு வீட்டில் சோறு உண்டால் பிறகு அந்த வீட்டாருக்கு யாதொரு வஞ்சனையும் செய்யமாட்டானாம். பாரதப்போரில் இரு கட்சிக்காரர்களுக்கும் போர்க்காலங்களில் உணவு அளித்தவன் சேரநாட்டு மன்னன் பெருஞ் சோற்று உதியஞ் சேரல் என்பவன். அவனுடைய நாட்டில் செஞ்சோற்றுக் கடன் ஒரு சிறந்த பண்பாகும். அதைச் சேர்ந்த கொங்கு நாட்டிலும் அது பண்டைக்காலம் முதல் உண்டு. வீட்டுமனும் துரோணனும் துரியோதனன் எத்தனைக் கொடியவன் என்று அறிந்தும் போரில் அவனுக்காகவே உயிர் துறந்தார்கள். காரணம் என்னவெனில் செஞ்சோற்றுக்

கடன்தான். இந்த செஞ்சோற்றுக் கடன்தான் கொங்கு நாட்டில் பற்பல இனத்தாரிலும் ஒவ்வொருவரையும் இணைத்து வைத்திருப்பது. பெரும் விழாக்களில் குலத்தார்கள் எல்லாரும் சேர்ந்து உண்டு களிப்பார்கள். பகைமை ஏற்பட்ட காலத்திலும் எல்லோரும் சேர்ந்து போவார்கள். அண்ணன்மார் போர்களிலும் மைசூர் மதுரையார் போர்களிலும் இந்தச் செஞ்சோற்றுக் கடனே மக்களை ஒன்றுபடுத்திப் போர்புரியச் செய்ததாம்.

இருப்பிட அழகு.

மக்கள் வாழ்வதற்கு இருப்பிடம் அவசியம் வேண்டும். அவைகள் பெரும்பாலும் ஊர்க்கட்டுகளிலே வீடுகளாய் இருக்கும். சில குடியானவர்கள் தோட்டச் சாலைகளிலே குடியிருப்பு வைத்துக்கொள்ளுவார்கள். குடியிருப்புக்கள் பலவகைப்படும். ஆட்களுடைய செல்வத்தைப்பொருத்துக் குடியிருப்புக்கள் அமைந்திருக்கும். ஊர்க்கட்டில் எவ்வாறு வீடுகள் கட்டப்படுகின்றன என்று முன்னமே கூறியிருக்கின்றோம். முன்காலத்தில் தென்னங் கீற்றுகளால் கட்டின கூறை வீடுகளே மிகுதி. பின்னாலே சுவர்கள் மண்ணினாலும் பிறகு செங்கல்லாலும் கட்டப்பட்டு நாட்டு ஓட்டினால் மேயப்பட்டன. இக்காலத்தில் தார்சு போட்ட மேடை வீடுகள் ஏற்படுகின்றன. முதலில் ஒரு சாய்ப்பு வீடு, பிறகு இரு சாய்ப்புவீடு, பிறகு தொட்டிக்கட்டு, பிறகு மேடை இவ்விதமாக செல்வத்திற்கேற்றபடி வீடுகள் அமைந்துள்ளன. பண்டைய வீடுகளில் சாளரங்கள் குறைவு. பின்னாலே சாளரங்கள் ஏற்பட்டன. இருட்டு வீடுகள் தற்போது காற்றோட்டத்தோடு வெளிச்சம் கொண்ட வீடுகள் ஆயின. வீடுகளில் முற்றம் தாழ்வாரம், தொட்டிக்கட்டு முதலியன உண்டு. கதவுகள்,

தூண்கள், போதிகைகள் நல்ல வேலைப்பாட்டோடு கட்டியிருக்கும். வீடுகளைக் கட்டுவதிலும் சில நியதிகள் உண்டு, கொங்கு நாட்டில் ஒற்றைவிட்டம் கூடாது. மூன்று முகடுகளும் கூடாது. தூண், விட்டம், சன்னல் எல்லாம் இரட்டையாக இருக்கவேண்டும். ஊரிலுள்ள கோயிலின் தளத்திற்கு மேல் எந்த வீடும் உயரக்கூடாது. உயர்ந்தால் கேடு சூழுமாம். தெருக்குத்தல், மூலைவீடு, இவைகள் அபசகுனங்கள். தெருவில் நடுக்கதவின் இருபக்கங்களிலும் விளக்கு மாடங்கள் வைத்துக் கட்டப்பெறும். வீட்டிற்கு முன்னால் காலையிலும் மாலையிலும நீர் தெளித்துச் சுத்தப்படுத்தி மாவினால் கோலம் போட்டுப் பிள்ளையார் வைத்துப் பூசனிப்பூ வைப்பார்கள். கோலம் போடுவதே ஒரு சிறந்த கலை. அதனை இளஞ்சிறுமிகள் நன்ருகப் பழகிக்கொள்வார்கள், கோலம இடாத வீடு மூத்த அம்மை வீடு என்று கருதுவார்கள்.

வாழ்க்கை நலங்களும் இடங்களும்.

நாட்டுப்புறத்துக் குடியானவன் வாழ்க்கையிலே நலங்களும் உண்டு. இடர்களும் உண்டு. அவ்விதம் விரவி இருத்தல் இயற்கைபோலும். நலங்களே எப்பொழுதும் இருந்தால் வாழ்க்கை தெவிட்டுப்போகும். இடர்களே எப்பொழுதும் இருந்தாலும் அது சுடுகாடாகத் தோன்றும். ஆகவே நலங்களும் இடர்களும் மாறி மாறி வருகின்றன எனலாம். சராசரி பார்த்தால் இரண்டும் சரி பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஒருவனை ஆட்சிபுரிகின்றன என்றும் சொல்லக்கூடும். நலங்கள் சிறியவையாக இருந்தாலும் இடர்கள் அவைகளை மிகுதியாகத் தோற்றுவிக்கின்றன. அப்படியே இடர்களை நலங்களும் மிகுதிப்படுத்துகின்றன. மனிதன் தேவர்களுக்கும் நரகர்

களுக்கும் இடையில் இருப்பதினால் இவ்விதமாக இறைவன் தோற்றிவைத்தான்போல இருக்கிறது.

குழந்தை பிறக்கையில் மகிழ்ச்சி. உறவினன் இறக்கையில் துயரம். இலாபம் வரும்போது மகிழ்ச்சி. நஷ்டம் வரும்போது துயரம். வெற்றியடையும்போது சுகம். தோல்வியடையும்போது விசனம். இவ்விதமாக மாறி மாறி ஒருவருக்கு வருகின்றது. இந்த சுக துக்கங்களை ஒன்றுபோல யார் பாவிக்கிறானோ அவனே ஞானி என்று பகவான் கீதையில் சொல்லுகிறார். ஆனால் அவ்வாறு மனிதனால் முடியுமா என்பதுதான் கேள்வி. ஒரு குடியானவன் வெகு கஷ்டப்பட்டு வேளாண்மை செய்கிறான். விளைவும் உண்டாகிறது. நிரம்ப மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கனவு காண்கிறான். திடீரென்று பயிரில் ஒரு நோய் விழுகிறது. பயிர் முழுவதும் பாழ் ஆகிறது. அவன் நெஞ்சு அப்போது எப்படியிருக்கும். கடவுளையும் கூடத் திட்டத் தொடங்குகிறான் மற்றொருவன் சுமாராகப் பாடுபடுகிறான். விளைவும் பாதிதான் ஏற்படுகிறது. ஆனால் கடையில் விலை நான்கத்தனை ஏறுகிறது. மொத்தத்தில் இரட்டத்தனை லாபம் கிட்டுகிறது. அவனுடைய மகிழ்ச்சியை சொல்ல முடியுமா? பழனிக்குப் பால் அபிஷேகம் செய்யவும் செல்லுகிறான். மேலும் வீட்டில் அன்னியோன்யமாயிருந்த வகையில் ஒரு பொல்லாப்பு ஏற்பட்டுப் பிரிவினை ஆகச் சொத்து குறைந்துவிடுகிறது. எதிர்பாராத வழக்கு வந்துவிடுகிறது. இதற்கு எந்த ஊழ்வினை காரணமோ? ஆகவே வாழ்க்கையிலே நலங்களும் உண்டு. இடர்களும் உண்டு. எது வந்தாலும் நடுநிலைமையில் இருப்பதே நன்மை என்க.

சில வழக்கங்கள்.

வேறு நாடுகளில் இல்லாத சில வழக்கங்கள் கொங்கு நாட்டில் உண்டு. அவைகள் இப்போது மறைந்து கொண்டு வருகின்றன. சில ஆண்டுகளில் அவ்வழக்கங்கள் இருந்தனவோ என்றுகூட மக்கள் சந்தேகிப்பார்கள். அவ்வித வழக்கங்களில் உரிமைப் பெண்ணைக் கட்டிக் கொள்ளுதல் என்பது ஒன்று. ஒரு இளைஞனுக்கு அவனுடைய அத்தை மகள் உரிமைப்பெண் ஆவாள். அவள் வேண்டாம் என்ருல்தான் பிறருக்கு கட்டிக்கொடுக்கலாம். உரிமைப் பெண்ணுக்கு ஜாதகமோ, ஆரூடமோ வேறு பொருத்தங்களோ பார்க்கமாட்டார்கள். சில சமயங்களில் உரிமைப்பெண் மிகப்பெரியவளாக இருப்பாள். மாப்பிள்ளை சிறுவனுக இருப்பான். இருந்தாலும் திருமணம் நடைபெறுவதுண்டு. இப்படிப்பட்ட வழக்கம் சில குடியானவர்களில் சில குடும்பங்களில் தான் நடைபெற்றன. நினைக்கக்கூடாத வயது பேதமும் இருக்கக்கூடும். மணமகன் பையனுகவும் மணமகள் வயதுவந்த குமரியாகவும் இருப்பதுண்டு. அவனைப் பெண்சாதியோ தன் மகனுக்கு உணவு ஊட்டுவதுபோல ஊட்டுவாள். அவனுக்கு அறிவு வருமளவும் மாமனுரிடமே அவள் வசிப்பாள். அப்போது பிறக்கும் குழந்தைகளும் அவனுடைய குழந்தைகளாகப் பாவிக்கப்படும். அசம்பாவிதமான இந்த உரிமை வழக்கம் முன்னுளில் ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனல் சமீப காலத்தில் அதனை ஏற்றுக்கொள்ளுவார் இல்லை. இந்த வழக்கத்தின் பயனுகச் சில ஆண்டுகளுக்கு முந்தி இந்த வட்டத்தில் சில கொலை வழக்குகளும் ஜீவனும்ச வழக்குகளும் நேரிட்டிருக்கின்றன. நாளாவட்டத்தில் அவ்வழக்கம் நின்றுவிடத் தொடங்கி இருக்கிறது.

கைக்கோளர் முதலிய சில வகையார்களில் பெண் மக்களில் ஒருத்தியைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டி விடுவதுண்டு. அவள் அதன்பின்னர் பதியில்லா வகுப்பைச் சேர்ந்துவிடுவாள். அவள் திருமணம் இன்றி மக்களிடம் செல்ல அனுமதி உண்டு. இந்த வழக்கமும் இப்போது நின்றுவிட்டது.

அனுமதியின்றி குடும்பப் பெண்கள் கெட்டுவிட்டால் ஜாதிச்சபை கூட்டி விலக்கி வைப்பதுண்டு. அவர்களும் அவர்களுக்குப் பிறந்தவர்களும் ஊருக்கு வெளியே தனித்து வாழுவார்கள். ஜாதி விவகாரங்கள் பேசி முடிவு செய்யப் பட்டக்காரர்களும், நாட்டாண்மைக்காரர்களும் இருப்பார்கள். இந்த அதிகாரங்கள் இப்போது தளர்ந்து வருகின்றன.

மற்றும் சில வழக்கங்கள்.

வேறு தமிழ் நாடுகளில் காணாத மற்றொரு வழக்கம் கொங்கு நாட்டில் நடைபெற்று வந்திருக்கிறது. வேளாளர் முதலிய உயரிய குடிகளில் முடங்கள் முதலிய அங்கவீனர்கள் தோன்றிவிட்டால் அவர்கள் சீர்கெட்டு வருந்தி அழியாமல் இருக்கும்பொருட்டு ஒவ்வொரு முடத்திற்கும் ஒவ்வொரு காலாள் பாதுகாப்பிற்காக வைத்து அவ்விருவர்களையும் வளர்த்தும பொறுப்பு சமூகம் ஏற்றுக்கொண்டது. அதற்காகப் பண்டைய நாளில் முன்னேயோர் ஒரு தனிக் கிராமத்தையும் ஒதுக்கிவைத்தார்கள், அந்தக் கிராமத்தில் ஏற்பட்ட வரி முதலியவைகள் அந்தப் பொறியிலிகளுக்குப் பயன்படுத்தி வந்தார்கள். இந்தமாதிரி ஒரு அறச்செயல் வேறு நாடுகளில் இருந்ததாகத் தெரியவில்லை. அந்தக் கிராமத்தின் பெயர் முடவாண்டி சத்திய மங்கலம் என்பது. அதனை ஆங்கிலர் வந்தபிறகு எடுத்

துக்கொண்டு ஒரு சிறு மொத்தத் தொகை கொடுத்துக் கோவை நகரசபையார் வசம் தந்தார்கள். நகரசபையார் முதலில் 100 பேருக்கு வசதிசெய்து வந்தார்கள். தற்போது 10 பேரும் அங்கு இல்லை. இடத்தையும் இப்போது மாற்றிவிட்டார்கள். இந்த அறச்சாலைக்குப் பின் நாளில் லங்கர்கானு (முடவர் விடுதி) என்ற இந்திப் பெயர் கொடுத்திருந்தார்கள். இதனுல் நம் முன்னேர்களின் அறமும் அதன் கருத்தும் எந்த பெருமையில் இருந்தனவென்று கூறவும் வேண்டுமா ?

மேலும் படிப்பிற்கும் ஆதரவளித்து கிராமங்களை மானியங்களாகக் கொடுத்த பெருமையும் அறிகின்றேம். இவைகள் எல்லாம் நாட்டுப்புறங்களில் நடந்துவந்த நடவடிக்கைகளே ஆகும்.

ஒழிபு.

சில வட்டங்களிலே சாதிக்கொடுமை மிகவும் கொடியதாக இருக்கும். நகரங்களில் அக்கொடுமை காணமுடியாது. தொலைவில் இருக்கிற நாட்டுப்புறங்களில் அக்கொடுமை மக்களை அடிமைகள் ஆக்கிவிடுகின்றன. சிறப்பாகப் பட்டக்காரர்கள் வசிக்கும் ஊர்களில் இக்கொடுமை சகிக்கவொண்ணுது. அவர்களுக்கு ஒவ்வாத குற்றம் செய்துவிட்டால் அது மிகச் சிறியதாக இருப்பினும் சாதிவிலக்கு சுமத்திவிடுவார்கள். பிறகு வண்ணுன், நாசுவன் கட்டுப்பாடு வந்துவிடும். பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கக்கூடாது. கோயில் குளம் அணுகக்கூடாது. ஆகவே குற்றவாளி பிழைக்கமுடியாமல் போய்விடுவான். நாட்டைவிட்டு ஓடி நகரத்திற்குள்தான் அடைக்கலம் புகவேண்டும். கொங்குநாடு இருபத்திஞன்கு நாடுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அந்நாடுகள்

ஒவ்வொன்றிற்கும் ஒரு பட்டக்காரன் உண்டு. அவனுடைய பட்டம் பரம்பரையாக வருவது. அப் பட்டக்காரனே குலம் கூட்டி சாதி வழக்குகளை விசாரிப்பான். ஆகவே அவன் பறக்கூடிய செல்வாக்குக்கு அளவில்லை. அவன் வசிக்கும் ஊருக்கு அருகில் மக்கள் செல்லவும் அஞ்சுவார்கள். அவனுடைய கட்டுப்பாடு மிகவும் வல்லமை உடையது. அவன் எதிரே செருப்புப் போட்டுக்கொண்டு நடக்கக்கூடாது. அவன் வசிக்கும் தெருக்களில் குடை பிடித்துக்கொண்டும் செல்லக்கூடாது. தற்போது இந்த நிர்ப்பந்தங்கள் ஒழிந்துவிட்டன. என்றாலும் பவானி தாலுகாவில் வடக்கு பகுதியில் இன்றைக்கும் இந்தவித நிர்ப்பந்தங்கள் நடைபெறுகின்றன. படிப்பு ஏற ஏற மக்களுடைய உரிமைகள் மேலோங்கும். அப்போது இந்தப் பொருள் அற்ற ஆசாரங்கள் பறந்து போகும்.

XIV. மக்கள் அரங்கு.

பொது இயல்பு.

பெரிய ஊர்களிலே பாடுபடும் சுந்தரமும், நடராஜனும் பகல் முழுதும் வேலை செய்துவிட்டு மாலை நேரங்களில் வீடு திரும்பும்போது அடுத்த சிற்றுண்டிக் கடையில் வேண்டியதை அருந்திவிட்டு அடுத்துள்ள கொட்டகையில் திரைப்படம் பார்த்துவிட்டு மகிழ்ச்சியுடன் வீடு செல்லுவார்கள். ஆனால் நாட்டுப்புறத்திலிருக்கும் இராமண்ணனுக்கும் சுப்பண்ணனுக்கும் இந்த உற்சாகம் தரும் மாறுதல் நாள்தோறும் கிடைக்காது. அவர்கள் கார் காலமும் குளிர் காலமும் தங்கள் காடுகளில் வேலை செய்துவிட்டுத் தை மாசித் திங்களில்தான் பலனை எடுப்பார்கள். அதுவரையில் வெளியில் போகவோ உல்லாசமாகத் திரியவோ அவர்களால் முடியாது. நிலங்களில் அறுவடை தானியங்களை வீட்டிற்குக் கொண்டுவந்து சேகரம் செய்த பிறகுதான் இளைப்பாற முடியும். முதலில் பொங்கல் வைத்து இறைவனைத் தொழுதுவிட்டுப் பிறகே இளவேனிலில் மாலை நேரங்களிலும் இரவு நிலாவிலும் ஆடல் பாடல்களை அனுபவிப்பர். நகரங்களில் திரைப்படம், நாடகம், பரதநாட்டியம் இவைகள் கிடைத்தால் நாட்டுப்புறங்களில் பொம்மலாட்டம், தெருக்கூத்து, குறவஞ்சி நாடகம், யட்சகானம் முதலியவைகளைப் பார்த்து உல்லாசமாகக் காலம் கழிப்பார்கள். மனிதன் வயிற்றுப்பாட்டிற்காக வேலை செய்வதோடு மனதிற்கு உற்சாகம் கொடுப்பதற்காக அழகிய காட்சிகளையும் அருமையான பாடல்களையும் அனுபவிப்பான். இதனால் வாய்க்குச் சுவை, காதுக்கு, இசை, கண்ணுக்குச் சித்திரம், மூக்குக்கு நறுமணம்

தோலுக்குக் குளிர்ச்சி இவைகளைப் பெறுவான். மானிட வாழ்க்கைக்கு இவ்விதமான இன்பங்கள் இன்றியமையாதவைகள்தான். இவைகளை அனுபவித்தால்தான் மறுபடியும் வேலை செய்ய அவனுக்கு ஊக்கம் பிறக்கும். நகரங்களிலோ மிகுதியான பணம் இருக்கும். இன்பப் பொருள்களும் உண்டு. அடிக்கடி அனுபவிக்கவும் முடியும். ஆனால் நாட்டுப்புறங்களிலோ பணமும் குறைவு, அனுபவிக்கும் பொருள்களும் குறைவு. அடிக்கடி அனுபவிக்கவும் முடியாது. அப்படி அனுபவித்தால் பிழைப்பிற்கே மோசம் வந்துவிடும். ஆகவே ஆண்டுக்கு ஒரு முறை இளவேனில் முழுவதும் இவ்வித ஆட்டபாட்டங்களில் அவன் உல்லாசமாக இன்பம் பெறக்கூடும். அவ்வித இன்பங்களை எவ்வித அரங்குகளிலே அவன் பெறுகிறான் என்பதை ஒரு சிறிது ஆராய்வோம்.

பாட்டுப் படிப்பது.

மாலை நேரங்களிலே ஊர்ப்பண்ணாடி வீட்டுத்திண்ணையிலேஒரு குத்துவிளக்கு வைத்திருக்கும். அருகிலே ஒரு பலகை உட்காரவும், இரட்டை மடிப்புப்பலகை நூல் வைக்கவும் வைக்கப்பட்டிருக்கும். சுவரில் ஒரு நடராஜர் படம் தொங்கும், இருட்டி ஒரு நாழிகை ஆனதும் ஊர் மக்கள். ஒவ்வொருவராக அங்கே உட்காரத் தொடங்குவார்கள். ஒன்பது மணிக்குமேல் ஊர்ப் பெரியார்கள் உணவு அருந்திவிட்டுத் திண்ணையின்மேல் சாய்வு காறையில் உட்காருவார்கள். படிக்கிற பெரியார் விளக்கிடம் உட்காருவார். உடனே கற்பூரம் ஏற்றிக் கும்பிட்டுவிட்டுப் புத்தகத்தை விரித்து வைத்துப் பாட்டுப் படிப்பார். "பட்டினமாம் பட்டினமாம் காவிரிப்பூப்பட்டினமாம்" என்று பாடத் தொடங்குவார். கோவலன் கதையை

எத்தனை தரம் கேட்டிருந்தாலும் மறுபடியும் ஆவலுடன் ஊர் மக்கள் கேட்பார்கள். தேசிங்கு ராஜன், நல்லதங்காள், பஞ்சாலகுறிச்சி வீரர்கள் கதை கேட்டுத் தாமும் இக்கதைகளை மிக ஆர்வத்தோடு கேட்பார்கள். வீரர்களாக ஏன் இருக்கக்கூடாது என்று எண்ணுவார்கள். எல்லாவற்றிலும் எங்கள் நாட்டாருக்குக் குன்றுடையான் கதை கேட்க மிகவும் பிரீதி. அண்ணன்மார் வீரச்செயல்கள் அவர்களை மெய்மறக்கச் செய்யும். சில சமயங்களில் பெரிய ஊர்களிலிருந்து வரும் புலவர்கள், வள்ளி, சந்திரமதி, தமயந்தி, துரௌபதி, சரிதங்களைப் பாடுவார்கள். ஆனால் கொங்குநாட்டுக் கதைகள்போல மற்றவைகளில் அத்தனை பிரீதி இல்லை.

தென் வட்டாரங்களிலே வில்லுப்பாட்டு மிக விசேஷம். அதில் சின்னப்பன் வில்லுப்பாட்டு சிறந்தது. அதைப் பாடுகிறவன் அபிநயத்துடன் பாடுவான். வில்லடிக்க அதன் ஓசையிலும் தாளங்களிலும் மிகவும் ஈடுபட்டு வெகு அபூர்வமாகப் பாடல்கள் பாடுவான். ஆயிரக்கணக்கான பேர்கள் மிகுந்த ஆவலுடன் கேட்பார்கள். வில்லுப்பாட்டு என்பது வெறும் பொழுது போக்குப் பாட்டுத்தான். ஆனால் விவிலியப் பாதிரிகளோ இதனைப் பிசாசின் ஆடல் என்று கண்டிப்பார்கள். அது வெறும் அறியாமையே.

அபிநயத்தோடு பாடுகிற பாடற் கதைகள் மற்றொரு வகையும் உண்டு. அது தந்தானகார்கள் பாடுவது கையில் தம்பூரு வைத்துக்கொண்டும் நல்ல உடை உடுத்திக்கொண்டும் முன்னும் பின்னும் ஆடியும் நடந்தும் பாடியவண்ணம் அபிநயம் செய்வார்கள். இவர்கள் வட

நாடுகளிலிருந்து வருவார்கள். வீரப்பாடல்களே இவர்களுக்குப் பிரியம்.

கும்மியிலே கோலாட்டங்களிலே கதைகளோ கதைகளின் பகுதிகளையோ படிப்பது உண்டு. இவைகளைப் பாடுகிறவர்கள் பெரும்பாலும் கிராமத்து ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளுமே ஆவர்கள். இவ்வித ஆடல் பாடல்கள்தான் கிராம அரங்கிற்கு மூலாதாரம் ஆகும். இவைகளிலிருந்தே நாட்டு அரங்கு தேர்ச்சிபெறத் தொடங்கியது.

பலவகைக் கூத்துக்கள்.

எந்த நாட்டிலும் ஆடல் பாடல்கொண்ட கூத்தாட்டங்கள் உண்டு. அநாகரீக நாடுகளிலும் இருக்கின்றன. நாகரிகர்கள் அநாகரீகர்களுடைய கூத்தாட்டங்களை மெச்சிக் கட்டுரைகள் எழுதுகின்றனர். படங்களையும் பிடித்துப் பதிப்பிக்கின்றனர். நமது நாட்டில் தொதவர், இருளர், காடர் முதலியவர்களுடைய ஆடல் பாடல்கள் மிக விநோதமாக இருக்கும். மனதிலிருந்து எழும்பும் உணர்ச்சியினால் மகிழ்ச்சி பொங்க அது பாடலாக வளர்ந்து ஆடலில் முடிகிறது. இந்த வகை ஆடல்கள் பலவகைப்படும். அவைகளின் இலக்கணத்தை அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார விரிவுரையில் குறித்திருக்கிறார். இவைகளின் போக்குகளை அறியவேண்டுமானால் நமது நாட்டுப்புறங்களுக்கே போகவேண்டும். குரைவக்கூத்து என்றது சோழர்கள் காலத்தில் இருந்தது. ஆனால் அது இப்போது மறைந்துவிட்டது. மலையாள நாட்டில் இந்த நாளிலும் நடைபெறுகிறது. சாக்கியன் நங்கையோடு சேர்ந்து பாடல்களைச் சொல்லி ஆடுவது ஆகும். அங்கே இப்போதும் பலவித களியாட்டங்

கள் உண்டு. அவைகள் முன்னாளில் தமிழ் நாட்டில் இருந்தவையேயாகும். கதை சொல்லி ஆட்டமாக ஆடுவது கதை களி ஆகும். இந்த நாளில் அது தமிழ் நாட்டில் மறைந்து போய்விட்டது. சிலப்பதிகாரத்தில் கண்ட வரிப்பாடல்களை ஆராய்ந்து பார்க்கலாம். கடற்கரையில் ஆடிப்பாடுவது விழாவின்போது. அது நகரங்களில் உயர்ந்த நடையும் இலக்கியமாயும் கொண்டது. ஆய்ச்சியர் குரவை வேட்டுவர் குரவை முதலியவைகள் நாட்டுப்புறங்களில் ஆடுவது. ஒன்று இடையர்களும் மற்றொன்று வேடர்களும் ஆடுவது. இவைகளிலே அவரவர்கள் வகுப்புக்களுக்கு ஏற்றவாறு அருமையான கருத்துக்கள் கொண்ட பாடல்களை இளங்கோவடிகள் அமைத்திருக்கிறார். கிராமங்களிலே இலக்கியமரபு இல்லாவிடினும் மக்கள் அறியக்கூடிய வகையில் பாடல்கள் அமைந்திருக்கக்கூடும். அவ்வாறு சாதாரணமான பாடல்களைக் கொண்ட நூல்கள் பிற்காலங்களில் மிகுதியாகத் தோன்றின. அவைகளில் குறத்தி, பள்ளி இவர்களின் பாடல்கள் சேரும். அவைகளை ஒரு சிறிது விவரிப்போம்.

குறவஞ்சி.

சென்ற நான்கு நூற்றாண்டுகளாக நாட்டில் குறுநில மன்னர்கள் தோன்றி சிறுசிறு பகுதிகளை ஆளத்தொடங்கினர். அவர்கள் பிறநாட்டுப் பேரரசர்களுக்குக் கப்பங் கட்டிக்கொண்டு தம் குடிகளை எதேச்சை அதிகாரம் கொண்டு பரிபாலித்து வந்தார்கள். ஆனால் அவர்கள் புகழையே பெரும்பாலும் விரும்பினவர்கள். ஆனதினால் சின்னஞ்சிறு புலவர்கள் அவர்களுடைய கொலுவுகளில் தோன்றி ஆஸ்தான புலவர்களாகி அவர்களைப் புகழ்ந்து பாடுவதிலேயே காலம் கழித்து வந்தார்கள். அப்படிப்

பட்ட பாடல்கள் பெரும்பான்மை சிற்றின்பப் பாடல்களாக இருக்கும். காதல், தூது, உலா முதலிய பாடல்களும், நாடகங்களில் குறவஞ்சி, பள்ளு, விலாசம் முதலியவைகளும் ஆளப்பட்டன. அவைகளில் குறவஞ்சி சிறந்த வகையில் சிறு நாடக ரூபமாக அமைந்தது. நல்லிசைப் புலவர்கள் திவ்வியஸ்தலங்களில் எழுந்தருளியிருந்த மூர்த்திகளின்மீது பாடினுர்கள். உதாரணமாக மீனுட்சியம்மைகுறம், குற்ருலக் குறவஞ்சி போன்றவை. இரவலராய்ப்போந்த புலவர்கள் பாளையக்காரர்களின்மீது பாடினுர்கள். அப்படிப்பட்ட பல குறவஞ்சிகள் நாட்டில் உண்டு. ஒரு கன்னிகை பாட்டுடைத் தலைவன்மீது காதல் கொண்டாள். ஆனுல் அவனை அடைய முடியவில்லை. அப்போது ஒரு குறத்தி அந்த வழியே வருகிருள். அவளைக் குறி கேட்கிருள். தலைவி குறத்தி பூசைப் போட்டு குறி பார்க்கிருள். அப்போது தன்னுடைய நாடு, மலை, குலம் முதலியவற்றின் மேன்மைகளைக் கூறுகிருள். அப்பாடல்களின் இசை நன்ருக இருக்கும்.

"கோல்லிமலை கூடகுமலை எங்களது நாடு,
குமரேசன் வாழுமலை எங்களது நாடு,
பச்சமலை பவளமலை எங்களது நாடு,
பரமேசன் வாழுமலை எங்களது நாடு

என்பது அதன் மெட்டு. அவள் குறி சொல்லும்போது தலைவன் கண்டிப்பாக அவளை அடைவான் என்று சொல்லுகிருள். அதற்காக வேண்டியமட்டும் நகை நட்டு முதலியவைகளைப் பரிசாகப் பெறுகிருள். பின்னுலே அவளுடைய வாக்குப்போலவே தலைவி தலைவனை அடைகிருள். குறத்தி குறி சொல்லிவிட்டுத் தனது ஊர் போவதற்குள் நாள் ஆகிவிட்டபடியால் குறவன் அவளைத்

தேடிக்கொண்டு வருகிறான். குறத்தி பரிசு பெற்று வெகு சொகுசாக வருவதைப்பார்த்து அவன் அவளை இவ்வணிகள் எப்படி கிடைத்தன, எங்கேயாவது மாயவலை போட்டுத் திருடினையோ என வேடிக்கையாகக் கேட்கிறான். அவள் தான் பெற்ற விதத்தை வெகு நாஜூக்காகச் சொல்லுகிறாள். அப்பாடல்கள் மிகச் சுவையாக இருக்கும். இந்தப் பாடல்கள் எல்லாம் பேசுகிற முறையில் உள்ளபடியால் வெகு நன்றாக நாடகமாக நடிக்கலாம். இவ்விதக் குறவஞ்சிகள் கொங்கு நாட்டில் பல தலைவர் மீதும் பாடப்பட்டுள்ளன.

பள்ளு.

குறவஞ்சி எவ்வாறு குறத்திகளுடைய செயல்களைக் கூறி அவர்கள் மூலமாகத் தலைவனுடைய சிறப்புகள் புகழப்படுகின்றனவோ அதுபோல பள்ளர்களுடைய செயல்களைக் கூறி அவர்களுடைய சொற்கள் மூலமாகத் தலைவனுடைய புகழ்களை எடுத்துக்கூறும் ஒரு நாடகப் பிரபந்தம். பள்ளர் தென்னாட்டில் ஒரு தாழ்ந்த வகுப்பினர். ஆனால் தொழிலோ உழவு. இக்காலத்திலும் அவர்கள் உழவர்தான். பெரும்பான்மையாக நன்செய் நிலங்களிலே பாடுபடுகின்றவர்கள். அவர்களை மழவர் என்றும் கூறுவர். பள்ளுப் பிரபந்தங்களில் பள்ளருடைய பழக்க வழக்கங்கள் வெகு உருக்கமாகக் கூறப்பெறும். நாட்டில் வழங்கும் கொச்சைச் சொற்கள் மிகவாய்க் காணலாம். குறவஞ்சியைப்போல பள்ளுகளும் இறைவனைப் பற்றி இருக்கின்றன. குறுநில மன்னர்களைப்பற்றியும் உண்டு. அவ்வித நூல்களில் நூல் எழுதின காலத்து மக்களின் பெயர்களையும் காணலாம். இறைவனைப்பற்றிய சிறந்த நூல்கள் திருவாரூர்ப்பள்ளு, திருமலைப்பள்ளு,

முதலியன. மன்னரைப்பற்றிய பள்ளு, கனகராயன் பள்ளு, ஊற்றுமலைப்பள்ளு முதலியன. ஒரு பள்ளனுக்கு இரு மனைவியர். மூத்த மனைவியும் இளைய மனைவியும் சண்டை பிடித்து வைது கொள்ளுகிறார்கள். மூத்த மனைவி பண்ணையாரிடம் குறை கூறுகிறாள். பண்ணையார் பள்ளனை வைது அடிக்கிறார். அதுகண்டு இளைய மனைவி விசனப்பட்டுப் பண்ணையாரைக் கெஞ்சி அவனை மீட்டுக் கொண்டு போகிறாள். பின்னால் இரு மனைவியரும் நேசமாகி வாழுகிறார்கள். இக்கதை நல்ல இசையுடன் பாடக் கூடிய சிந்துகளாலே பாடப்பெற்றது. பள்ளருடைய பழக்கங்களைக் கூறுகையில் மீன் முதலிய உயிர் வகைகளின் பெயர்கள் முறையாக வருதலைக் காணலாம். உழவருடைய வரலாறுகளும் காணலாம்.

நொண்டி நாடகம்.

இதுவும் பாளையக்காரர்கள் காலத்தில் தோன்றிய ஒருவகை பிரபந்தம். கெட்ட குணமுடைய ஒருவன் தண்டனை பட்டு படமுடியாத வருத்தமும் பட்டுப் பின் ஒரு கனவால் உபதேசிக்கப்பெற்று நல்ல குணவானாகி வாழ்க்கை நடத்தல் இதன் கருத்து. பல நொண்டி நாடகங்கள் தோன்றியிருக்கின்றன. இவைகளிலும் கோயில் தொடர்புடைய நூல்கள் உண்டு. தலைமகன் தொடர்புடைய நூல்கள் உண்டு. திருச்செந்தூர் நொண்டி நாடகம் மிகச் சிறந்தது. திருக்கச்சூர் நொண்டி நாடகம் முதலிய பல நாடகங்கள் கோயிலைப் பொருத்து பாடப்பட்டன. இவைகள் எல்லாவற்றிலும் கதை ஒன்றே ஆகும். தெலுங்கு நாட்டில் சாரங்கதரன் சித்திராங்கி நாடகமும், கிறிஸ்துவத்தில் ஞானசௌந்தரியும் இந்தக் கதைகளை ஒட்டியே உள்ளன. இந்தக் கதைகள் நாட்டு மக்களால்

பெரிதும் புகழ்ப்பெற்றுப் பாராட்டப்படுகின்றன. பொதுக் கதை என்னவெனில் ஒரு திருடன் தன் நாட்டில் திருடித் திருடி இனிமேல் திருட முடியாதெனக் கண்டு வேறு நாடு செல்லுகிருன். அங்கே ஒரு தாசி வீட்டில் சென்று கையில் இருந்த பணம் முழுவதும் தொலைத்துவிட்டு மீண்டும் திருடச் சென்று ஒரு அரண்மனையில் திருடு கிருன். அங்கே அகப்பட்டுக்கொண்டு விசாரணைக்குட் பட்டதில் தண்டனை பெற்று மாறுகை மாறுகால் வாங்கப் பெற்று மிகவும் துன்புறுகிருன். அப்போது ஒரு கன வானின் கருணைக்குப் பாத்திரப்பட்டு புண்கள் ஆற்றப் பெற்று ஒரு ஆலயத்திற்குச் சென்று வழிபடுகிருன். அவன் பக்திக்கு மெச்சி இறைவன் கைகால் தருகிருன். பிறகு அங்கேயே அறப்பணிகள் செய்து நன்ருக வாழ் கிருன். இதுதான் எல்லா நாடகங்களிலும் காணும் அடிப்படைக் கதை. இதனை விரித்து இடத்திற்குத் தக்கபடி கதை அமைக்கப்படுகிறது. இதனை முன் ஞளிலே நாட்டுப்புறத்தில் நடித்துக்காட்டுவர். இந்நாளில் இதனை இன்னிசையோடு பாடுகின்றனர். இது ஒருவகை அரங்கு.

யட்ச கானம்.

இது மற்ருெரு வகை நாடகப்பிரபந்தம். முழுவதும் பாட்டு மயமாக இருக்கும். யக்ஷர்கள் மனிதப் பிறவிக் கும் உயர்ந்த ஒரு பிறவி என்பர். அவர்கள் கின்னரர் வித்தியாதரர் என்ற வகுப்பில் சேர்ந்தவர்களாம். குபேர உலகைச் சேர்ந்தவர்கள் என்பது புராணம். அவர்கள் எப்போதும் பாடிக்கொண்டே ஆனந்தமாக இருப்பார் களாம். அவர்களுடைய பாடல்கள் யட்ச கானம் என்பது ஆகும். அதுபோலவே ஒரு கதையைப் பாடல்களாகப்

பாடி வைப்பது யட்சகானமாகும். பேச்சு எதுவும் இல்லாமல் முழுவதும் பலவித இன்னிசைப் பாடல்களாக ஏற்படுவது அந்தப் பிரபந்தம். இது தெலுங்கு நாட்டிலிருந்து தெற்கே வந்ததாக இருக்கலாம். தெலுங்கிலே இந்த வகை பிரபந்தங்கள் பல உண்டு. நாயக்கர் ஆட்சி காலத்தில் இவைகள் மிகுதியாக ஆளப்பட்டன. தமிழிலே சாரங்கதர யக்ஷகானம், சிறுத்தொண்டர் யக்ஷகானம் நீலியட்சகானம் இவைகள் இருக்கின்றன. நீலியட்சகானம் என்பதில் திருவாலங் காட்டில் ஒரு வணிகனைக் கொன்ற நீலி செய்த பழிக்காக எழுபது வேளாளர்கள் உயிர்துறந்த சரிதத்தை அந்நூல் கூறும். சிறுதொண்டர் சரிதம் நாம் எல்லாம் அறிந்ததே. இந்த நாடகங்களை இக்காலத்தார் மறந்தே போய்விட்டார்கள்.

தெருக்கூத்து

தெருக்கூத்து என்பது கிராமத்தில் நடந்துவந்த எல்லாக் கூத்துகளிலும் முதிர்ச்சி பெற்றது ஆகும். அதனைத் தற்கால நாடகத்திற்கு ஒப்பிடலாம். அது ஒரு சரிதத்தை அடிப்படையாக வைத்து எழுதியது. அதில் பல பாத்திரங்கள் உண்டு. அவர்கள் உரைநடை சம்பாஷணையும் பாடல் சம்பாஷணையும் செய்வார்கள். பாடல் சம்பாஷணை தர்க்கம் என்றதால் குறிப்பிக்கப்படும். நடு நடுவில் பலவித இன்னிசைப் பாடல்கள் உண்டு. தற்கால நாடகங்களைப்போல் அங்கம் காட்சி என்ற பிரிவினை இல்லை. பாத்திரங்கள் வேடங்கள் போட்டுக்கொண்டு ஆடுவார்கள். சாதாரணமாக இராக்காலங்களில் எல்லாரும் உண்டபிறகு சுமார் 10 மணிக்கு தொடங்கி விடிய விடிய ஆடிப்பாடுவார்கள். பொதுமக்கள் தெருமுழுதும் உட்கார்ந்து பார்ப்பார்கள். முன்னாலே உட்காருவதற்காக வெகு

நேரத்திற்கு முந்தியே பாயும் கையுமாக கிழவிகள் போய் உட்கார்ந்துகொண்டு இடத்தை பிடித்துக்கொள்ளுவார்கள். அங்கேயே தூங்கிக்கொண்டும், விழித்துக்கொண்டும் பார்ப்பார்கள். தெருவின் ஒரு கோடியில் மூன்றடி உயரத்தில் பலகைகளால் ஒரு மேடை கட்டப்படும். அதற்கு நாற்புறமும் நான்கு கழிகள் நட்டு ஒரு ஓலைச் சாய்ப்பு போடப்படும். மூன்று புறங்கள் மறைப்பு கட்டப்படும். ஒரே ஒரு திரைதான் இருக்கும். அது திறந்ததும் ஆட்டக்காரர்கள் கூத்து தொடங்கும். முதலில் விநாயக வணக்கம். பிறகு சரஸ்வதி வணக்கம். பிறகு சூத்திரதாரனும் நடிகையும் தோன்றி நாடகத்தை ஆடுவதாக வெளியிடுவார்கள். பிறகு இராஜா வருவான். அதனை சேவகன் வெளிப்படுத்துவான். சேவகனே விதூஷகனாகவும் இருப்பான். இராஜன் கொலுவில் அமைச்சர்கள் வீற்றிருப்பார்கள். இராசன் அமைச்சர்களை நோக்கி நான்கு வருணத்தாரும் சுகமாய் இருக்கிறார்களா என்று கேட்பான். அமைச்சன் ஆமாம் இராசனே என்பான். குடிகள் சுகமாயிருக்கிறார்களா என்று கேட்பான். அமைச்சன் ஆமாம் என்பான். மழை பெய்ததா என்று கேட்பான். ஆமாம் என்பான். குடிகள் சுகமாய் இருக்கிறார்களா என்பான். ஆமாம் என்பான். அதற்குள் குடிகள் வருவார்கள். "தங்கள் தானியங்களைப் பன்றி முதலிய காட்டுமிருகங்கள் அழித்துவிடுகின்றன" என்று கூக்குரலிடுவார்கள். அப்போது அரசன் வேட்டைக்குப் புறப்படுவான். இந்த முறையிலே எல்லா நாடகங்களும் தொடங்கும். அரசன் முதலியோர்கள் தங்கள் வருகையைத் தங்களே பாடல்களினால் வெளியிடுவது நோக்கத்தக்கது. 'வாரானே பிரகல்நாதன், வந்தானே பிரகல் நாதன் என்று அவனே சொல்லிக்கொண்டு வர, பின்

பாட்டுக்காரன் அதையே திருப்பித்திருப்பிப் பாடுவான். இந்தவகையில் தெருக்கூத்துக்கள் நடைபெறும். பாணுசுர விலாசம், அரிச்சந்திர விலாசம், சாரங்கதர விலாசம் முதலியவைகள் சாதாரணமாக எங்கள் நாட்டுப்புறங்களில் நடைபெறுவன.

பொம்மலாட்டம்.

இந்த ஆட்டம் இப்போது அனேகமாக மறைந்துவிட்டது. நான் சின்னஞ்சிறு வயதில்தான் பார்த்தது. இதில் பலவிதங்கள் இருந்தன. சில நாடுகளில் அபூர்வமாக நடைபெறுகின்றன. சிறப்பாக நடைபெற்றுவந்தது திரையில் காட்டி வந்த பொம்மலாட்டம் தான். ஒரு வெள்ளைத் திரை கட்டப்பட்டிருக்கும். திரைக்கு ஒருபுறம் பொதுமக்கள் உட்கார்ந்திருப்பார்கள். மறுபக்கம் ஆட்டுகிறவன் உட்காருவான். அவனருகில் ஒரு பெரிய விளக்கு எரிந்துகொண்டிருக்கும். அவ்விளக்கின் ஒளி அத்திரையின் மேல் நன்ருகப்படும். ஆட்டுகிறவன் அத்திரையின் பின் அட்டை பொம்மைகளைக் குச்சிகளைக்கொண்டு ஆட்டுவான். அட்டை தடித்த காகிதத்தாலே அல்லது தோலாலே செய்யப்பட்டிருக்கும். அதனை ஆட்கள்போல கத்திரித்திருப்பார்கள். கை கால் தலை இவைகள் ஆடும்படியாகக் கயிற்ருல் தைக்கப்பட்டிருக்கும். குச்சிகளைக்கொண்டு கை கால் தலை இவைகளை அசைக்கமுடியும். இரண்டு பேர் பேசுவதைப்போலவும் ஆடுவதைப்போலவும் ஆட்டி வைக்கிறவன் வெகு சாமர்த்தியமாகக் குச்சிகளைக்கொண்டு ஆட்டுவான். அவ்விதம் ஆட்டும்போது பேசுகிற பேச்சுகளைப் பாடல்களாகப் பாடுவான். சிறு வயதில் நான் பார்த்தது வாலிவதம். அதனை நன்ருகக் காட்டக்கூடிய ஒருவர் எங்கள் வீட்டுக்கு

அடுத்த வீட்டில் சிலநாள் குடியிருந்தார். அவர் நன்ருகப் பாடுவார், வாலி சுக்கிரீவன் சம்வாதம். பிறகு இருவருக்கும் சண்டை, இராமன் தோன்றுதல், அம்பு எய்தல், வாலி கண்டுகொண்டு இராமனுடன் வாதாடுதல் இந்தப் பகுதியை வெகு சுவையுடன் அவர் காட்டுவார். பாடல்களும் நன்ருகப் பாடுவார். இந்த வகை ஆட்டம் மறைந்து போக இப்போது அதைப்போல சினிமா வந்துவிட்டது.

மற்ருெருவித ஆட்டம் பாத்திரங்களைச் சிறுபொம்மைகளாகச் செய்து அவைகளில் கை கால்களுக்கு கயிறு கட்டி மேலே இருந்து ஆட்டுவது. இது இப்போது ஆங்கிலநாட்டில் உண்டு. "ஜூடி" என்ற பொம்மலாட்டம் புகழ்பெற்றது. சில துருக்கிய பெண்கள் இரண்டு விரல்களில் இரண்டு பொம்மைகளைச் சிக்க வைத்துக்கொண்டு வெகு சாமர்த்தியமாக பேசுவதைப்போல ஆட்டுவார்கள். பாட்டும் சொல் லுவார்கள். சின்னி சின்னுன் பாட்டு என்று அதன் பெயர். குரங்காட்டியைப்போல் ஆட்டுவார்கள். நகைச்சுவை பொருந்தியதாக இருக்கும்.

தற்கால அரங்கு.

இவ்விதம் கூத்துக்கள் எல்லாம் இக்காலத்தில் மறையத் தொடங்கின. விஞ்ஞானமும் அதன் மூலமாகச் சினிமாவும் தொடங்கிய பிறகு இந்த பழைய கூத்தாட்டங்கள் நிற்குமா. ஒவ்வொன்ருக விலகின. கிராமத்தார்களும் அடிக்கடி பெரிய நகரங்களுக்குச் சென்று காசைத் தொலைத்துவிட்டு நித்திரையைப் பங்கப்படுத்திக் கொண்டு இரவைக் கழித்துவிட்டு வீடு திரும்புவார்கள். சினிமா வரவே சாதாரணமான நகர நாடகங்களே நின்று விடும்போது கிராமத்துத் தெருக்கூத்துகள் எப்படி நடைபெறும். ஆனல் சிற்சில தொலைவான ஊர்களிலே

கிராமத்து இளைஞர்கள் நாடக வாத்தியாரை வைத்துக் கொண்டு நாடகம் கற்றுக்கொள்ளுவார்கள். பல மாதங்கள் கற்றுத் தேர்ச்சிபெற்று பிறகு ஆடுவார்கள். இவ்வித ஆட்டங்களுக்கும் மக்கள் வராமல் இருப்பதில்லை. அவ்வாட்டங்கள் நடைபெறுங் காலத்தில் அருகில் உள்ள நாட்டுப்புறத்தார்கள் எல்லாரும் கூடி திருநாளைப்போல அனுபவிப்பார்கள். இதனை அனுசரித்தே தற்காலத்திலும் மகாநாடுகள் கூட்டுங்காலங்களிலும் நாடகங்களை நடத்திவைக்கும் பழக்கம் வந்துவிட்டது. ஆனால் ஒன்று, கிராமங்களிலே சிற்சில சமயங்களில் நாடகங்களை முன்னிட்டுக் கட்சிப்பிரதி கட்சி ஏற்பட்டுக் கலகங்களும் நடைபெறுவதுண்டு. அவைகளால் வழக்குகள் உண்டாகி கிராமப்பொது உணர்ச்சி அழிவதுமுண்டு. நன்மையில் பேய்க்குணம் புகுந்து தீமை விளைத்துவிடுகிறது.

XV. எங்கள் சமயநிலை.

பொது உணர்ச்சி.

நாட்டுப்புறங்களிலே சமய உணர்ச்சி உயர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்ற ஐயம் எனக்கு வெகு நாளாக உண்டு. பாமர மக்களிடம் பேசிப் பார்த்தால் அவர்களுக்கு கடவுள் நம்பிக்கை மிகவும் உண்டு என்றே அறிவோம். ஆனால் அவர்கள் வீடுகளில் நடக்கும் நடவடிக்கைகளிலும் உடலில் தோன்றக்கூடிய சமய சின்னங்களையும் கண்டால் சமய உணர்ச்சி இல்லை என்றே தோன்றும். ஏதோ திருவிழா நாட்களில் வீடு வாசல்களை மெழுகிச் சுத்தப்படுத்துவதும் உடல் குளித்துத் திருநீறு திருமண் வைத்துக்கொள்வதும் பார்த்தால் அந்த நாட்களில்மட்டும் சமய உணர்ச்சி வந்து விடுகிறது என்று தோன்றும். ஏனைய நாட்களிலோ சமயம் என்பதும் சமயச் சடங்கு என்பதும் இருப்பதாகத் தோன்றுவதே இல்லை. சில சமயங்களில் இவைகளைப் பார்த்தால் முற்றுத்துறந்து வைதீகத்தையும் மீறினவர்களோ என எண்ணுவோம். உண்மையில் அவ்வாறு இல்லை. நாட்டுப்புறங்களிலே சரியான சமய நிலையங்களும் அவ்வித நிலையங்களை நடத்தும் ஆசிரியர்மார்களும் இல்லை. ஆகவே பொது மக்களிடை சமய ஆதிக்கம் மிகக்குறைவு என்னலாம். ஆனால் கடவுள் அன்பில் அவர்கள் குறைந்தவர்கள் அல்ல என்று எளிதல் காண முடியும். நகரங்களிலே சமயச்சபைகளும் சமய நிலையங்களில் திருவிழாக்களும் உலக ரீதியாகவும் வர்த்தக முறையிலும் விளம்பரம் ஆவதினால் சமய மேம்பாடு மிகுதியாக இருப்பதாகத் தெரியும்.

அவ்விதமான விளம்பரம் நாட்டுப்புறத்திலும் இருந்தால் இன்னும் பன்மடங்கு சமய உணர்ச்சி விளங்கும் என்றும் திண்ணமாகச் சொல்லாம். இதற்கு என்ன காரணம். மேற்கு நாடுகளில் கிராமங்களில் சமய உணர்ச்சி உண்டு. ஏனெனில் ஆலயக் குருக்கள் அங்கே வாரா வாரம் உபன்யாசங்கள் செய்கிறார்கள். வீடுதோறும் சென்று ஆறுதல் சொல்லுகிறார்கள். நமது நாட்டில் சமயம் அதற்காக இல்லை. பணம் பெற்றுப்பிழைக்கும் தொழிலாக இருக்கிறது. வெறும் சடங்குகளை நடத்தும் பூசாரிகள், புரோகிதர்கள், வசத்தில் அது இருக்கிறது. ஆகவே உண்மையான சமய ஈடுபாடு கிராமங்களில் எப்படி ஏற்படும். சரியானபடி மக்களிடை பிரசாரம் இல்லாததினால் பொதுமக்கள் இழிவான சமயச்சடங்குகளைச் சமயம் எனக் கொண்டு வழிபடுகிறார்கள். உயர்ந்த சமயக் கொள்கைகள் மக்களிடம் நிலைபெறுவதற்கு வழியே இல்லாமல் இருக்கிறது. ஆகவே நாஸ்திகம் பெருவதற்கு சந்தர்ப்பமும் மிகுதியாக இருக்கிறது அல்லவா. இதுவே பிற நாட்டாரின் ஏளனத்திற்கும் வழி கோலுகிறது.

பூசை போடுதல்.

இந்த ஆண்டு மழை இல்லை. ஆடியிலும், ஐப்பசியிலும் இல்லை. மார்கழிப் பனியும் தொடங்கிவிட்டது. குளங்களில் நீர் வற்றிவிட்டது. கிணறுகளில் பாறை தெரிகிறது. அடிவெட்டு வெட்டியும் பயனில்லை. வயல்களிலோ ஒரு முழம் முளைத்த நெல்பயிர் காய்ந்தும் வருகிறது. காடுகளில் சோளம் பூட்டு விடாமுன் ஈரம் போய்விட்டது. எரங்காடுகளில் பருத்தி வெடிக்கவில்லை. பூவும் விடவில்லை. குடியானவன் வானத்தைப் பார்க்கிறான். கண்ணில் நீர் ததும்புகிறது. உடனே ஊர் நத்தத்தில் பிள்ளை

யார் கோவில் அரசமரத்து மேடையில் கிராமத் தலைவர்கள் கூடுகிருர்கள். சாமி சாட்டிப் பூசை போட்டால் மழை வருகிறது என்கிருன் கணக்கன். பண்ணுடிகள் ஒத்துக் கொள்ளுகிருர்கள். வரிவிதிக்கப்படுகிறது. எப்படிப்பட்ட ஏழையும் அதனைத் தர மறுக்கமாட்டான். ஏன். மழை வருமல்லவா? ஆதாயம் கைக்கு வரும்போது சில்லறை கொடுக்க யார் மறுப்பார்கள். நாள் குறிக்கப்படுகிறது. சாமி சாட்டப்படுகிறது. மெரமணே பந்தல் தோரணம் ஆடு கோழி பலி இவைகள் நடைபெறும். கூத்தாண்டியில் எதுதான் நடைபெருது. மூன்று நாள் கொண்டாட்டம். பொதுவில் 100 ரூபாய் செலவு. ஆனுல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 25 ரூபாய் செலவு. கணக்கனுக்குக் கொள்ளே. என்ன முடிவு? மழை தான் இல்லே. இதுதான் தற்கால நாட்டுப்புறத்துச் சமயம். இதைக் கண்ட கிறிஸ்தவர்கள் ஏன் நம்மை ஏளனம் செய்யார்கள். இப்போது தன்மதிப்பார்கள் அதையே கூறுகிருர்கள். இன்னும் படிப்பு ஏறவில்லே. ஏறினுல் இந்த வியாபாரச் சமயக்கொள்கை போய்விடும் அல்லவா. விழாத் தொடங்குவதற்கு மழை வராத காரணம் ஒன்றுமட்டும் உண்டோ? இல்லே. வேறு பல காரணங்களும் உண்டு. ஊரில் அம்மை, பேதி, நச்சுக் காய்ச்சல் முதலிய கொடிய நோய்கள் வந்தாலும் அவைகளேப் போக்கடிக்க மருந்துகளேத் தேடுவதில்லே. அதற்கு மாருகச்சாமி சாட்டிப் பலியிட்டுக் கோலாகலம் செய்வதே நாட்டுப்புறத்து நடவடிக்கை. இது எப்போது தொலேயுமோ? சமயம் இந்த வியாபார ரீதியில் இருக்கக்கூடாது. சமயம் அதைவிடப் பன்மடங்கு மேன்மையானது. கல்பாத்தி அந்தணர்கள் செய்வதுபோல் முறை ஜெபத்திலும் இலட்சார்ச்சனேயிலும் இலட்ச தீபங்களிலுமே சமயம்

இருக்கிறதென்றால் அந்த சமயம் உன்னத நிலை காட்டுவதில்லை. சமயத்தில் உன்னத நிலை நாட்டுப்புறத்திற்கு வரவேண்டாமா?

விழா நாட்டுதல்.

மேலே சொன்ன விழா யாதாவது ஒரு நிமித்தத்தை ஒட்டி நடைபெறுவது ஆகும். ஆனால் ஆண்டுதோறும் தவறாமல் சில விழாக்கள் நடைபெறுவதுண்டு. அவைகள் ஊர்த் தேவதை விழாக்கள் ஆகும். அவை சாமி சாட்டுதல் முதற்கொண்டு மஞ்சள்நீர்வரைக்கும் ஏற்படும். இவைகளிலும் வேடிக்கைகள், சந்தைகள், தின்பண்டக் கடைகள், ஏனைய கடைகள், மெரமனை, பலி, சூறை விடுதல், பிரசாதம் வழங்குதல் முதலியன நடைபெறும். வேடம் போடுதல், அலகு குத்திக்கொண்டு தேர் இழுத்தல், காவடி எடுத்தல, இராட்டினத்தூரி முதலியவைகளும் நடைபெறும். ஆக்வே சாமி சாட்டுதல் ஒரு சமயச் சடங்கானாலும் அதில் நடை பெறுவது பெரும்பான்மையாக விளையாட்டுக்களும் வாணிபமுமே ஆகும். அதில் ஈடுபடுகிறவர்கள் சமயத்தைப்பற்றி எண்ணுவதே இல்லை. இதனைக் கண்ட கிறிஸ்துவர்கள் இதனைப் பேய் வணக்கம் என்பார்கள். படித்தவர்களுக்கும் உண்மைச் சமயிகளுக்கும் அந்தக் கொண்டாட்டம் அவ்வாறாகத்தான் தோன்றும். இதனை மாற்றி அமைக்க முடியுமா என்பதுதான் அப்போது மனதில் தோன்றும் ஐயப்பாடு. உண்மைச் சமயப் படிப்பு இருந்தால்அன்றி இந்த வேடிக்கையான உல்லாசப் போலிச்சமயம் போகாது.

மேலும் நாட்டில் வழக்கம் என்ற பேய் எல்லா மக்களையும் பிடித்து ஆட்டுகிறது. படித்தவர்களும் அதற்கு மயங்கிப் படுகுழியில் விழுகிறார்கள். ஒரு முறை ஒரு

சைவர் வீட்டில் குழந்தைக்கு நோய்வர அதற்காக நாட்டு ராயன் கோயிலில் பூசை போடுவதாகவும், முடிவாங்குவ தாகவும் அந்த வீட்டுச் சிநேகிதி ஒருத்தி வேண்டிக் கொண்டாளாம். அவ் வீட்டார் மருதமலை ஆண்டவருக் குத்தான் முடிகொடுப்பது. ஆனால் பிறர் வேண்டிக் கொண்டாலும் அதனை நிறைவேற்றவேண்டும் என்ற வழக்கம் உண்டாம். அதனை உத்தேசித்துக் குடும்பத் தார் நாட்டுராயன் கோயிலுக்கு ஒரு குறித்த நாளில் சென் ருர்கள். முடிவாங்கலும் வெறும் பூஜையும் முடிந்தது. ஆனால் பூசாரிகள் ஆடுபலி கொடுக்கவேண்டும் என்ருர் கள். குடும்பத்தார்களோ அது எங்களுக்கு ஆகாது என்ருர்கள். ஆனால் பூசாரிகள் விடவில்லை. இந்தக் கோயில் சம்பிரதாயத்திற்கு ஒத்துக்கொள்ளவேண்டும், இல்லாவிடில் விபரீதம் ஏற்படும் என்ருர்கள். சைவக் குடும்பத்திற்கு ஒரு அந்தணர் அமைச்சராக இருந்தார். அவரோ புத்திமதி புகட்டினர். ஆட்டுப்பலி நீங்கள் நேரில் கொடுக்கவேண்டாம். ஆட்டை வாங்கி பூசாரி களிடம் கொடுத்துவிடுங்கள், அவர்கள் எதுவோ செய்துகொள்ளட்டும் என்ருர். அதுபோல் குடும்பத்தார் களும் செய்தார்கள். முடிவு என்ன, பாவம் யாருடையது. வழக்கம் மேலிட்டு வென்றது.

வேண்டுதல்.

நாட்டுப்புறங்களில் வேண்டுதல் என்ற முறையில் சமயங்களில் வாணிபம் நடக்கிறது என்ருேம். இதனு டைய கொடுமை எங்கள் நாட்டில் மிகுதியாக இல்லை. இங்கே பலியிடுதல் விழா நடத்தலோடு நின்றுவிடுகிறது. விஷஜுரம் தோன்றியபிறகு அலகு குத்துதல் தேர் இழுத்தல் முதலியவைகள் வந்துவிட்டன. ஆனல் பிற

நாடுகளிலோ பலவித விபரீதங்கள் நடைபெறுகின்றன. தொண்டை நாட்டில் பெரியபாளையத்தில் வேப்பிலை கட்டிக்கொண்டு கோயில் சுற்றுவதுண்டு. திருப்பதியில் தெருவில் உருண்டுகொண்டு கோவிந்தம் போடுவதுண்டு. சுப்பிரமணியத்தில் எச்சிலை பேரில் புரளுவதுண்டு. தென்னாட்டில் வேலைக்கையில் பிடித்துக்கொண்டு குதிப்பதுண்டு. வடஆர்க்காட்டிலே பெண் வேடம் பூண்டு ஆட்டுக் குடலைக் கவ்விக்கொண்டு செல்வதுண்டு. இவை முதலான பல அர்த்தமற்ற கொடிய செயல்களைச் சமயத்தின் பேரால் செய்கிறார்கள். நமது சமயக் கொள்கைகளை உண்மையாக அறிந்தால் இவைகளில் மக்கள் ஈடுபடுவார்களா?

மற்றும் சில அசம்பாவிதமான நடவடிக்கைகள் இக்காலத்தில் தோன்றி இருக்கின்றன. தாழ்ந்த வகுப்புத் தாய்மார்கள் சிலர் தங்கள் குழவிகளுக்கு நோய் வந்தால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லாமல் பள்ளிவாசலுக்கு எடுத்துச் சென்று அதன் வாயிலில் காத்துக்கொண்டிருப்பார்கள். முஸ்லீம் மக்கள் பள்ளிவாசலில் தொழுது விட்டு வெளியே வரும்போது அக்குழந்தைகளை நீட்டுவார்கள். அப்போது அம்முஸ்லீம்கள் அக்குழந்தைகளின் மீது ‘உப்’ என்று ஊதுவார்கள். அந்த எச்சில் சுவாசம் பட்டால் குழந்தையின் நோய் போய்விடுமாம். இந்த மூடவழக்கம் நாட்டில் இப்போது உற்பத்தியாகி இருக்கிறது. இவைகள் எல்லாம் நின்றால் ஒழிய உண்மை ஞானம் நமது நாட்டு மக்களுக்கு வரப்போவதில்லை.

கோயில்கள்.

ஊர்த்தேவதைக் கோயில்கள் ஊரைச் சுற்றி மூன்று நான்கு இருக்கும். ஒவ்வொரு பெரிய வகுப்பிற்கும் ஒவ்

வொரு கோயிலும் உண்டு. சேரிகளிலேயும் ஐந்து பல கைக் கற்களைக்கொண்ட சிற்ருலயமும் உண்டு. வேறு எதைத் தொழாவிட்டாலும் காலையில் எழுந்தவுடன் முகங் கழுவிக்கொண்டு பிள்ளையாருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டுத்தான் பெரியவர்கள் தங்கள் வேலைகளுக்குச் செல் லுவார்கள். பெண்கள் நல்ல குடிநீர் மொள்ளுவதற்குக் கிணற்றங்கரைக்குச் சென்ருல் அப்போதும் மோந்து கொண்டு திரும்பும்போது பிள்ளையாரிடம் விடைபெற் றுத்தான் வீடு செல்லுவார்கள். இந்த விதத்தில் கடவுள் வழிபாடு ஊரைவிட்டு அகலவில்லை.

இந்தச் சிறு கோயில்கள் மட்டுமல்ல, எங்கள் நாட் டுப்புறங்களில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிவாலயமோ பெருமாள் கோயிலோ இருப்பது சகஜம். அக்கோயில் கள் சற்று பெரிதாக விளங்கும். காறையாலும் சில ஊர் களில் கல்லாலும் கட்டப்பட்டு உயர்ந்த கோபுரங்களைக் கொண்டனவாக இருக்கும். மண்டபமோ கருங்கற்களைக் கொண்டு மேல்தளம் பலகைக் கற்களாலே பாவப்பெற்ற தாக இருக்கும். சில கோயில்களிலே தூண்களில் கட்டி னவன் உருவமும் மூர்த்திகளின் விஷேட உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கும். மூலத்தானத்தைச் சுற்றிக் கல் வெட்டுக்கள் எழுதப் பெற்றிருக்கும். கோயிலுக்கு வெளி யே கொடிக்கம்பமும், ஒரு தீர்த்தமும் இருக்கும். தீர்த்தம் மேடான ஊர்களில் கிணருகவும், தாழ்வான ஊர்களில் திருக்குளமாகவும் அமைந்திருக்கும். ஊர் மக்களுக்கு தீர் த்தநீரே குடிநீராக இருப்பதுண்டு. பெரிய கோயில்களிலே சிற்பவேலை மிகுதி. ஒரு அழகிய தேரும், தேர் நிலையில் ஒரு தேர் மேடையும் உண்டு. இக்கோயில்களிலே நாய ஞர் திருநாட்களும் ஆழ்வார் திருநாட்களும் ஆண்டுக்

கொருமுறை பெருவிழாவும் தேரோட்டமும் நடைபெறும். எங்கள் நாட்டுப் பேரூரிலும் காரைமடையிலும் பெரிய திருவிழாக்கள் (பிரம்மோற்சவங்கள்) வெகு விமரிசையாக நடைபெறும். அவைகளுக்கு எண்ணற்ற மக்கள் செல்லுவார்கள். பேரூரில் ரிஷபவாகனக் காட்சி, பட்டித்தரிசனமும் சிறந்தவை. காரைமடையில் பந்தமெடுத்தல் சிறந்தது. எல்லா வகுப்பார்களும் செல்லுவது உண்டு இந்தக் கோயில்களின் சமயசீலமே வேறு. மிக மேம்பாடு கொண்டது.

பஜனைக்கூடம்.

நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பஜனைக் கூடமாவது உண்டு. சில ஊர்களில் இரண்டும்கூட உண்டு. ஆனல் அப்போது இரண்டிற்கும் போட்டி ஏற்படும். விபரீதங்களும் விளையும். பஜனைக்கூடத்தில் சாதாரணமாக இராமர் அல்லது கிருஷ்ணன் படம் வைத்திருக்கும். அல்லது நடராஜர் படம் வைத்திருக்கும். வெள்ளி, சனிக்கிழமைகளில் இக்கட்டடத்தில் பஜனை நடைபெறும். இக்கூடம் இருபது பேர் உட்காரக்கூடிய ஒரு அறையாக இருக்கும். அதிலே தம்பூரு, மிருதங்கம் ஆர்மோனியம் முதலிய இசைக்கருவிகள் இருக்கும் ஐந்தாறு மக்கள் பெரும்பாலும் இளைஞர்கள் இங்கே கூடி பஜனை செய்வார்கள். அவர்களுக்கு ஒரு இசை வாத்தியார் இருப்பார். வாரத்திற்கு ஒருமுறையாவது இதில் கூடி கீர்த்தனைகளைப் பாடுவார்கள். இரவு உணவு ஆனபிறகு 9 மணிக்குப் பஜனை தொடங்கும். 12 மணி வரைக்கும் பாடிவிட்டு வீடு செல்லுவார்கள். இந்தப்பஜனை ஊருக்கே ஒரு ஆறுதல் கொடுக்கக்கூடியது. வேனிற் காலங்களில் மற்ற குடியானவர்களும் அருகில் அமர்ந்து

கேட்பார்கள். இசை வாத்தியார் கற்பித்த அளவில் அது நிற்கும். பாடல்களும் அப்படியே. பொதுவாக நந்தனர் கீர்த்தனை, பண்டரிநாதர் கீர்த்தனைகளே மிகுதியாகப் பாடப்படுவன. எங்கள் ஊர் பஜனைக்கூடம் பிரசித்தி பெற்றது. ஒருமுறை ஒரு ஓதுவார் எங்கள் ஊரில் சில காலம் குடியிருந்தார். பஜனைக்கூடத்தில் தேவாரம் திருவாசகம் இவைகளை ஓதுவதுதான் முறை என்று சொல்லிச் சில திருப்பாடல்களைக் கற்பித்தார். அதுமுதல் பாட்டுத்தோரணையே மாறிவிட்டது. ஒவ்வொருவர் நெற்றியிலும் திருநீறு விளங்கிற்று. மார்கழி மாதத்தில் திருவெம்பாவை ஓதுவதும் பழக்கமாகிவிட்டது. ஆனால் மற்றொரு நாளில் ஒரு வைணவ பாகவதர் ஊரில்வந்து சிறிதுகாலம் குடியிருந்தார். அவரோ வேறொரு பஜனைக்கூடம் கட்டி அதைப் புரந்தரதாசர் பஜனைக்கூடம் என்று பெயர் கொடுத்துப் பிரபந்தப் பாசுரங்களையும், கீர்த்தனைகளையும் கற்றுக்கொடுத்தார். அந்தப் பஜனை சிறிது காலம் மும்முரமாக வேலைசெய்தது. மார்கழித் திங்களில் திருப்பாவை பாடப்பட்டது. இளைஞர் நெற்றிகளில் திருமண் கோலம் திகழ்ந்தது. இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் பாகவதர் மறைய அவைகளும் மறையத் தொடங்கின.

சமயச் சங்கம்.

தமிழ் மறுமலர்ச்சியும் சமய மறுமலர்ச்சியும் நாட்டில் தோன்றிற்று. அங்கங்கே ஒன்றிரண்டு இளைஞர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டார்கள். எங்கள் ஊரிலும் ஒரு இளைஞன் தோன்றினான். ஆலயங்களில் புதிதாகச் சமயப்பிரசாரம் தொடங்கிற்று. சில நாவலர்கள் சமயப் பிரசாரத்தையே தம் பிழைப்புத் தொழிலாகவும் கொண்

டார்கள். புராணப் பிரசங்கங்கள் செய்துவந்த குடும்பத்தாரே இப்போது சைவப்பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். அதனால் பல சிற்றூர்களிலும் சமயச் சங்கங்கள் ஏற்பட்டன. ஒரு நூற்சாலை, ஒருவாசகசாலை ஏற்பட்டன. ஆண்டு விழாக்கள் நடைபெற்றன. சில இடங்களில் நால்வர் குருபூஜைகளும் நடைபெற்றன. விழாக்களில் பெரிய சொற்பொழிவாளர்களை அழைத்துப் பேசச் சொல்லி நடத்தினார்கள். தேவாரம் ஓதும் ஓதுவார்களுக்கும் வேலை கிடைத்தது. இந்தவகையில் சமயப்பிரசாரம் விரிவாக நாடெங்கும் முளைத்தது, பேசுவதே தொழிலாக அமைந்ததும் ஒருவகைச் சிறப்பு என்க. ஆலய விழாக்களிலும் இவ்விதமாகச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சில ஊர்களில் பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்களைப்பற்றிச் சொற்பொழிவுகளும் வகுப்புகளும் நடைபெற்றன. இந்த முயற்சிகள் சிறிது சிறிதாக வளர்ந்தன. சென்னைச் சைவசித்தாந்த சமாஜமும், வைணவ சமாஜமும் எடுத்துச்செய்த சேவை நாடெங்கும் பரவிற்று. இவைகளை ஒட்டித் திருப்புகழ் சபை, திருவள்ளுவர் சபை, இராமலிங்கர் சபை முதலியவைகளும் ஏற்பட்டன. பிரசங்கியார்களுக்கு ஊதியமும் கிடைத்தது. சில சீர்திருத்தக்காரர்கள் சேரித்திருப்பணியும் செய்யலானார்கள். முன் சேரிகளில் மதம் மாறுதல் ஏற்பட்டதுபோல இப்போது ஏற்படுவதில்லை. இதற்கு இந்தப் பிரசங்கங்களும், அரசியல் சலுகையும் உதவிசெய்தன. அரிஜனங்களுக்கு அரசியல் பங்கும் வேலைத்திட்டமும் ஆலய நுழைவும் தீண்டாமை ஒழிப்பும் கிடைக்கவே அவர்களுடைய நிலைமை ஓங்கியது. அதனால் ஒருவகையில் ஆறுதல் ஏற்பட்டு பிற மதப்பிரவேசம் செய்தலை நிறுத்திக்கொண்டார்கள். எங்கள் சைவசபை ஒரு இளை

ஞுனல் தொடங்கப்பட்டாலும் மற்ற குடிகளுடைய ஒத்தாசை அதற்கு மிகவும் கிடைத்தது.

சித்தாந்த அறிவு

நாட்டுப்புறங்களிலே சமயஞானமும் சித்தாந்த அறிவும் இல்லாமல் இருண்டு கிடந்தது. சமயம் என்ருல் எதையும் வழிபடலாம். அவ்வழிபாட்டில் எதையும் செய்யலாம். எல்லாம் வழக்கத்தை ஒத்தே நடைபெற வேண்டியது என்று நெடுநாளாக இருந்தது. அதனை அறிந்து கொண்ட வெள்ளையர்களும் விவிலியர்களும் தமிழ்நாட்டு மக்களை கேலிசெல்து பல நூல்களை எழுதிவைத்தார்கள். சித்தாந்த அறிவு உலகிலே ஒரு சிறந்த அறிவு என்று போப் முதலிய அறிஞர்கள் கூறியிருந்த போதிலும் அது சிலருக்கே பயன்படும், பெரும்பான்மை மக்களுக்குத் தெரியவில்லை. அவர்களுடைய சமய அனுகரிகமான உருவவழிபாடே என்று எழுதினுர்கள். இதற்கு காரணம் வெள்ளை ஆட்சியே என்று அவர்கள் எழுதவில்லை. பண்டைக் காலத்தில் படிப்பு மிகுதியாக இருந்தபோது சிந்தாந்த ஞானம் பெரும்பான்மையோருக்குத் தெரிந்திருந்ததே. அதனைப் பண்டைய நூல்களும் கோயில்களும் நிரூபிக்கும். ஆங்கிலர் சிலருக்கே படிப்பு கொடுத்துப் பலருக்குக் கொடாமல் மறுதலித்துவிட்டதைக் கண்டால் படிப்பு சூன்யம் ஆகி எங்கும் சமயஞானம் சூனியம் ஆகி விட்டது. ஆகவே தற்போதைய இழிவுநிலை வந்தது. பிரசாரம் வலிவுபடத் தோன்றியதும் நாட்டுப்புறங்களிலும் சித்தாந்த ஞானம் பெருகிவருகிறது. சிறுவர் முதற்கொண்டு பெரியவர்கள் உட்பட சமயஞானம் அடையவழி ஏற்பட்டிருக்கிறது. இதற்குச் சமாஜமும் அதுபோன்ற சங்கங்களும் தொண்டு செய்கின்றன. இராமகிருஷ்ண

சமாஜம் இந்தத் தொடர்பில் செய்துவரும் திருத் தொண்டு அளவிடமுடியாது. அங்கங்கே ஆசிரமங்களும் பள்ளிக்கூடங்களும் வைத்து பணி செய்கிறார்கள். சிறப்பாக பெரியநாயக்கன்பாளையம் வித்தியாலயத்திலும் திருப்பராய்த்துறைத் தபோவனத்திலும் நடக்கும் சேவை மிகச் சிறந்தது. சைவ சமாஜத்தார் நடத்திய கோடைக் கால வகுப்புகளும் மிகுந்த பலனைத் தருகின்றன. இந் தப்படி பிரசாரம் மிகுதியானால் கேலிக்கிடமாகும் நிலைமை போய் போற்றக்குரிய நிலைமை ஏற்படக்கூடும்.

பகுத்தறிவு.

சமயச் சீர்திருத்தம் ஒருபுறம் சேவை செய்து கொண்டுவர உலகாயதம் மறுபுறத்தில் தோன்றி அதன் சிறப்பைக் குறைத்துக்கொண்டு வருகின்றது. பகுத் தறிவும் விஞ்ஞான அறிவுமே மக்களை நல்வழிக்குக் கொண்டு செலுத்தும் என்ற பிரசாரம் இளைஞர்களுக்குள் கிளம்பியிருக்கிறது. அதுமட்டும் சொன்னால் யாதொரு தீங்கும் ஏற்படாது. ஆனால் சமயமே கூடாது என்று சொல்வதினால் தீங்கு மும்முரமாக ஏற்படுகிறது. தன் மதிப்புக்கட்சி நாட்டில் தோன்றியதிலிருந்து எல்லாத் தீமைகளுக்கும் சமயமே காரணம், ஆகையால் அதனை ஒழிக்கவேண்டும் என்ற பிரசாரம் தீவிரமாக ஓதப்படு கிறது. சமயத்தினால் நாட்டில் விளைந்திருக்கும் நன்மை களும், நாகரீகப்போக்கும் இவர்கள் கண்ணுக்குத் தோன் றுவதில்லை. படிப்பு, மறுமலர்ச்சி, நற்கலைகள், விஞ்ஞா னம் முதலிய சீரிய நிலைகள் எல்லாம் சமயத்திலிருந்தே தோன்றின என்பதை அவர்கள் அறவே மறந்துவிடு கிறார்கள். இதனால்தான் இளைஞர்களிடை அழுக்காறு மிகுதியும் விளைந்து அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது.

சமயச்சீர்திருத்தம் சரியான வகையில் ஏற்பட்டால் இந்தப் புதிய கிளர்ச்சி தீமை செய்யாது. புதிய இயக்கத்தில் ஒருவித நன்மையும் உண்டு. முன் நாளைப்போல் மக்கள் சொன்னதெல்லாம் சரி படிப்பதெல்லாம் உண்மை என்ற எண்ணம் தொலைந்தது. எவனும் பகுத்தறிவைப் பயன் படுத்தி எது நன்மை எது தீமை என்பதனை அறியத் தொடங்குகிறான். ஆகவே இந்த இயக்கமும் நன்மை தரும் அல்லவா? குருட்டுத்தனமாக ஒன்றை நம்புவதைக் காட்டிலும் ஆராய்ந்து தெளிந்து நம்புவதே வேரூன்றி நிற்ககூடிய நன்மை தரும். நாட்டுப்புறங்களிலே இந்த இயக்கம் இன்னும் நன்றாகப் புகவில்லை. புகுமானால் அதனால் நன்மையும் விளையலாம். எங்கள் ஊரிலும் ஒரு வீட்டுத்திண்ணையில் சில நாள்களாக கருப்புகொடி தொங்கத் தொடங்கி இருக்கிறது. அதனுடைய செயல் காரியத்திலேதான் அறியமுடியும்.

ஓழிபு.

ஒரு நாட்டினுடைய பண்பாடு நகரங்களில் உள்ள மேன்மையைப் பொறுத்துமட்டும் அல்ல, நாட்டுப்புறங்களின் மேன்மையை ஒட்டியும் கணிக்கப்பெறும். நாட்டுப் புறங்களிலே அங்கு விளங்கும் நாகரீகப் போக்குகளைப் பொறுத்தே பண்பாடு அளிக்கப்படுவதில்லை. அங்கு வழங்கும் சயயக்கொள்கைகளைப் பற்றியும் பெரும்பான்மையாகக் கருதப்படும். சில மக்களிடம் வெளி நாகரீகம் பகட்டாக இருக்கலாம். ஆனால் மனதிற்கு உள்ளே கொண்டிருக்கும் எண்ணப் போக்குகள் கருப்பாக இருக்கக்கூடும். உடையணிகளில் மேல்நாட்டுக் கொள்கைகளை வெகு நுணுக்கமாக போற்றுவான் ஒருவன். அவனுடைய நம்பிக்கைகள் பேய் பிசாசு பில்லி சூனியத்தில்

இறங்கி இருக்கலாம். அப்படிப்பட்ட சமயக்கொள்கைகள் அவனை மேன்மைப்படுத்த மாட்டா. ஒரு பெண்மணி வெகு நாசூக்காக ஆடையணிகளைப் பூண்டு ஒய்யாரமாக நடக்கலாம். ஆனால் நடவடிக்கைகளிலே உண்மையான சமய ஞானமின்றி அசுரக்கொள்கைகளை ஆண்டுக்கொண்டிருக்கலாம். அவள் நாகரீகம் பெற்றவளா? இல்லவே இல்லை. மேலும் சிலர் வைதீக உடையில் தோன்றலாம். ஆனால் உள்ளே சமயமேன்மை ஆனந்த நர்த்தனம்செய்துகொண்டிருக்கலாம். காந்தியடிகள் அநாகரீகர் உருவத்தில்தான் திகழ்ந்தார். அது நாட்டினுடைய வறுமையை வெளியாருக்குத் தோற்றுவிப்பதற்காக என அறியவேண்டும். ஆனால் அவருடைய இதயத்துள்ளே புகுந்துபார்த்தால் அவரைப்போன்ற உத்தமோத்தமர் நிலவுலகில் இருந்தார்களோ? அவருடைய இதயம் அவர்கள் எழுதி வைத்த நூல்களில் பிரதிபலிக்கிறது. அதனை உணர்ந்தோர் உலகில் ஒப்பற்ற மதிப்பை அவருக்குத் தந்தார்கள். நமது நாட்டுப்புறங்களிலேயும் பொதுமக்களில் எத்துணை சமயஞானம் தூய்மையாக விளங்குகிறதோ அதனைப்பொருத்து நாட்டினுடைய மேன்மையும் இருக்கிறது. அந்தத் தூய்மையை நாம் நிலை நிறுத்துவோமாக.

XVI. எங்கள் புதிர்களும் பழமொழிகளும்.

நாடோடி இலக்கியம்.

பாடசாலைப் படிப்பு பெற்றவர்களே இலக்கியக் கர்த்தர்கள், மற்றையோர்கள் இலக்கியம் அறியாதவர்கள் என்ற எண்ணம் பண்டிதர்களுக்குள்ளே வேரூன்றி கிடக்கிறது. தற்காலப் பல்கலைக் கழகங்களிலேயே இந்தக் கருத்து இருக்குமானால் மற்ற ஆசிரியர்களிடம் இதைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? ஆனாலும் கம்பரும் காளிதாசரும் எந்தப் பாடசாலையில் படித்தார்கள் என்று கேட்டுவிட்டால், அவர்கள் தெய்வீகப் புலமை பெற்றவர்கள், அவர்களை எடுத்துக் கூறக்கூடாது என்பர். இந்த வகையில் தர்க்கம்செய்து படிப்பிலேயே பிழைக்கும் வழியைத் தேடுகின்ற கற்றோர்கள் முறையாகப் பாடம் கற்பதிலேதான் இலக்கியம் காணமுடியும் என்று வற்புறுத்திப் பேசுவார்கள். அவர்களுக்கோ ஏட்டில் வந்த பாடல்களும் உரைநடையுமேதான் இலக்கியத்தில் சேரும் என்ற உறுதி நிரம்ப உண்டு. பண்டைக்காலப் பெரும் புலவர்கள் எழுதி வைத்துவிட்டுப் போன செம்பாடல்களே ஓதத்தக்கவை, நாடோடிகள் அரைகுறையாகப் பாடுகிற பாடல்களும் பாமரமக்கள் வாய்களிலிருந்து வெளியேறுகிற சொற்களும் அருமையானவைகள் ஆனாலும் இலக்கியத்தில் சேராது என்று வாதாடுவர். ஆகவே இது நாள்வரை நாடோடிப் பாடல்களையும் உரைகளையும் எந்தப் பாடசாலை உபாத்தியாயனும் காதில் கேட்கான், கண்ணில் பாரான். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. நாடோடிப் பாடல்களைத் திரைப்படங்களும் நாட

கங்களும் செய்தி வெளியீடுகளும் போற்றத் தொடங்கின வுடனே உபாத்தியாயர்கள் அவற்றைப் புறக்கணிக்க முடியாமல் இருக்கிறது. போதாக்குறைக்கு வானொலித் தலைவர்களும் இப்பாமரப் பாடல்களை எடுத்தாளத் தொடங்கிவிட்டனர். அவைகளைத் தொகுத்து அனுப்பு கிறவர்களுக்கு ஊதியமும் கொடுக்கிறார்கள். ஆகவே என்றைக்கும் இல்லாத மதிப்பு இப்பாடல்களுக்கு ஏற் பட்டுவிட்டதல்லவா? இப்பாடல்களிலே மேல் வகுப்பு இலக்கியங்களுக்கு உள்ள இலக்கணங்கள் வேண்டிய தில்லை. வெகு சுலபமான நடையே போதுமானது. அந்த வகையில் நாட்டுப்புறங்களிலே புதிர்கள் என்ற விடுகதை களும் முதுமொழி என்ற பழமொழிகளும் உலாவுகின்றன. அவைகளே நாடோடி இலக்கியத்தில் ஒரு பெரும் பகுதி என்க.

புதிர்கள் எவை ?

குணங்களை மட்டும் கூறிக்குணியைக் கேட்பது புதிர் ஆகும், அதாவது ஒரு பொருளின் பெயரை மனதில் வைத்துக்கொண்டு அதன் குணங்களை வரிசையாகச் சொல்லி அப்பொருளின் பெயர் எது என்பதே புதிர், அல்லது விடுகதை ஆகும். மேலும் குணங்களைக் கூறும் போது வெளிப்படையாகக் கூறாமல் மறைப்பொருளாகக் கூறுதல் சிறப்புடைய புதிர் ஆகும். மறைப்பொருளா கக் கூறுவதாவது வேறு உவமானப் பொருள்களை கூறி அவைகளினால் அப்பொருளின் குணங்களை அறியச் செய்து விடை தேடச்செய்வதே ஆகும். கேள்வி விடுப் பவன் விடையை மனதில் வைத்துக்கொண்டு விடை கொடுப்பவனை திண்டாடச் செய்து அவனுடைய திண் டாட்டத்தைக் கண்டு மகிழ்ச்சி உறுதலே இதனுடைய

நோக்கம். இவ்விதம் கேள்விகள் உரைநடையிலும் இருக்கலாம், பாடல்களிலும் இருக்கலாம். அவைகள் வழங்கும் மக்களுடைய படிப்புக்குத்தக்கபடி அக்கேள்விகள் அமைந்திருக்கும். உதாரணம் கூறுவோம்.

"ஒரு நெல் குத்த வீடெல்லாம் உமி"

இது உரைநடை. மிகச்சிறிய விடுகதை. எல்லாரும் கூறுவதே. இதன் விடை 'விளக்கு' ஆகும். ஒரு சிறு விளக்கு ஏற்றினால் வீடு முழுதும் ஒளி பிறக்கிறது என்பது பொருள். இதற்கு உவமையாக நெல்குத்துதலையும் உமி எடுப்பதையும் கொண்டிருப்பது அப்புதிர். நாட்டுப்புறத்தார் நெல்குத்துதலையும் விளக்கு எரிப்பதையும் நன்றாய் அறிவார்கள் அல்லவா?

ஆனால் மிகப்படித்த துறவியோ அடியிற்கண்ட செய்யுளைக் கூறுவான்.

"நந்த வனத்திலோர் ஆண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி—மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

இது செய்யுள் நடை. சித்தர் பாடலில் ஒரு கண்ணி. நந்தவனம்—பிரபஞ்சம், ஆண்டி—ஆன்மா, நாலாறு மாதம்—10 மாதம் கருவளரும் காலம், குயவன்—நான்முகன், தோண்டி—உடல், கூத்தாடுதல்—வாழ்க்கையின் விளையாட்டு, உடைத்தல்—சாவு பெறல். ஆகவே இச்சிறு செய்யுள் சரீர நிலையாமையைக் குறிக்கிறது. இதனைப் பாமரமக்கள் அறியார்கள். இரண்டும் விடுகதைகள்தான். முதலாவது வசனம், இரண்டாவது செய்யுள்.

எவர் வழங்குகின்றனர்.

நாட்டுப்புறங்களிலே விடுகதைகளை எல்லாரும் வழங்குவார்கள். சிறுவர்கள் முதற்கொண்டு கிழவர்கள்வரையிலும், கல்லார்கள் முதற்கொண்டு கற்றோர்கள் வரையிலும், விடுகதைகளைப் பொழுதுபோக்காக வழங்குவார்கள். பள்ளி மாணவர்கள் பள்ளிப்பாடம் ஒழிந்த நேரங்களில் திண்ணைகளிலும், விளையாட்டிடங்களிலும் புதிர்களை ஒருவன் கூற மற்றவன் விடை அளிக்க ஆனந்திப்பார்கள். விடை கூறச் சமர்த்து இல்லாதவனை கேலி செய்வார்கள். வயதுவந்த பெரியார்கள் பொதுச்சாவடிகளிலும், அரசமரத்து மேடைகளிலும் உட்கார்ந்து பொழுதுபோக்கும் நேரங்களில் விடுகதைகளைச் சொல்லி மகிழ்வார்கள். பாடசாலை உபாத்தியாயர்கள் பெருத்த பண்ணுடிகளிடம் பொழுது போக்குக்காகச் சென்று பேசிக்கொண்டிருக்கையில் சில அற்புதமான புதிர்களைக் கூறி மகிழ்ச்சி விளைவிப்பார்கள். நாட்டுச்சேவை செய்ய நாட்டுப்புறங்களுக்குச் சென்று கூட்டங்கள் கூட்டிப் பெரிய பிரசங்கங்கள் செய்யும் சேவையாட்கள் தற்கால அரசியல் பெருமக்களைத் தெரியப்படுத்துவதற்காக அவர்கள்மீது கட்டிய புதுப்புதிர்களைச் சொல்லி அவைகளை விடுவித்துப் பொருள் கூறி அதிசயம் விளைவிப்பதுண்டு. சிறுமிகள் வீட்டுத்திண்ணைகளில் பல்லாங்குழி விளையாடிக்கொண்டிருந்துச் சலித்துப்போனபோது சில தெரிந்த விடுகதைகளைச் சொல்லி சந்தோஷப்படுத்துவதுண்டு, நடுத்தரப் பெண்மணிகள் தங்கள் மச்சினுமார்களும், அண்ணிகளும் உறவுமுறையாக வந்திருக்கும் காலங்களில் அவர்களைக்கேலிசெய்வதற்காக மயங்கத்தக்க விடுகதைகளைச் சொல்லிப்பரிகசிப்பதுமுண்டு. கிழவிகள் பேர்த்திமார்களிடம் தங்கள் அனுப

வத்தில் தெரிந்துகொண்ட பழைய விடுகதைகளை விளம்பிச் சிறுமிகளை திகைக்க வைப்பதுண்டு. மாப்பிள்ளைமார்கள் பண்டிகைகளுக்கு வந்த காலத்தில் அவர்களைப் பரிசோதிக்க வீட்டு இளைஞர்கள் யுக்திபூர்வமான புதிர்களை அதிர்வெடிகள்போல் கேட்பதுண்டு. மாப்பிள்ளைமார்கள் விடைகூற இயலாவிட்டால் மிகவும் வெட்கும்படியாகச் செய்வதும் உண்டு. உயர்ந்த வகுப்புகளில் வாழும் குடித்தனக்காரர்களில் மட்டும் அல்ல, தொழிலாளிகளிலும் சேரிகளில் வசிக்கும் தாழ்ந்த மக்களிடையும், இவ்வித விடுகதைகள் பழக்கத்தில் வழங்கிவருவது உண்டு. இவைகளால் மக்களுடைய யுக்தி எத்தனை மட்டும் செல்லுகிறது என்று எளிதாக அறியமுடியும்.

நோக்கம்.

விடுகதைகள் சொல்லி விடுவிக்கும்படி கேட்கும் நோக்கம் ஒருவனுடைய புத்திசாலித்தனத்தை அறிவதற்குமட்டும் அல்ல. மிகவும் வருந்திக்கொண்டிருக்கையில் அவ்வருத்தத்தைத் தீர்க்கும்பொருட்டுக் கதைகளாகச் சொல்லுவதற்கும், சிரமப்படும் காலத்தில் பொழுது போக்கி மகிழ்விப்பதற்கும், சமயம் அறிந்து கேலி செய்வதற்கும் பயன்படுத்துவதாகும். இக்கதைகள் வெகு பண்டைக்காலம் முதல் உண்டு. எல்லா நாடுகளிலும் உண்டு. நாட்டுப்புறங்களில் மட்டும் அல்ல. நகரங்களிலும், அரச சபைகளிலும் வழங்கின. நாடக மேடைகளில் சலிப்புறுமல் செய்ய நாடக ஆசிரியர்கள் இவைகளைப் புகுத்தி இணைப்பதுமுண்டு. விஜயநகர அரசர்கள் காலத்தில் இராயர், அப்பாஜிக் கதைகளும், மொகலாயர் காலத்தில் அக்பர், வீரவலன் கதைகளும்: விக்கிரமாதித்தன் காலத்தில் வேதாளக் கதைகளும், போஜன் காலத்தில்

முப்பத்திரண்டு பதுமைக் கதைகளும், தென்னாட்டுப் பாளையக்காரர் காலத்தில் புலவர் தனிப்பாடல்களும் அருமையான புதிர்களைக்கொண்டிருப்பன. ஒரு அரசிளங் குமாரன் தெருவழியாகப் போகையில் ஒரு வாணியப் பெண் எள்ளை முற்றத்தில் காயவைத்துக் கொண்டிருக்கையில் அவளை விளித்து,

> " எள்ளிலே பிறந்து எள்ளிலே வளர்ந்து
> எண்ணை எடுக்கும்
> வாணியப் பெண்ணே எள்ளிலும் சிறிய
> இலை என்ன இலை? "

என்று கேட்க, அவள் உடனே வெகு யுக்தியாக

> " பூவிலே பிறந்து பூவிலே வளர்ந்து பூமியாளும்
> பூமானே பூவிலே இருவிதப் பூ என்ன பூ? "

என்று அதே வினாவிற்குத் தானும் ஒரு விடுகதையால் விடை கூறினாள். இரண்டிற்கும் விடை ஒன்றே. 'இடைத்தராந்தழை' என்பர். அதன் இலை எள்ளிலும் சிறியது அதன் பூ இருவிதப் பூவாய் உள்ளது. இனி அரசனும் அமைச்சனும் பொழுதுபோக்கக் கேட் பதில்

> " ஒடுக்காமல் பறப்பதேது மந்திரியே "

என அரசன் கேட்க,

> " சிமிட்டாமல் விழிக்கும் அது இராசவே "

என்ற பதில் ஒரே பொருளைக் குறிக்கும். அது 'பட்டாம் பூச்சி' என்க.

மைத்துனனைக் கேலி செய்வதற்காகக் கதையிலேயே விடையும் வைத்துச் சொல்லியும் மைத்துனன்

சொல்லாமல் முளிக்கிறதைக் கண்டு அவன் அறிவின்மை எடுத்துக் காட்டுவது இது ஆகும்.

"காயோ கோணக்காய் கொள்ளு அடா மைத்துனு,
கதையை விடுவிததேன் சொல் அடா மைத்துனு"

என்பதில் கொள்ளு என்ற விடை இருக்கிறது. இதில் சிலேடையும் இருக்கக் காணலாம்,

நடை.

நாட்டுப்புறங்களில் வழங்கும் விடுகதைகள் மிக எளிதான தமிழில் ஆக்கப்பட்டுள்ளன. ஆனல் அவைகளில் சுருங்கச் சொல்லல், எதுகை மோனை முதலிய சொல் நயங்கள் ஆகிய அழகுகள் உண்டு. ஆழ்ந்த இலக்கண நுணுக்கங்களை அங்கே காணமுடியாது. சுருங்கச் சொல்லலுக்கு

"சின்ன வெண்காரம் வீடெல்லாம் சிங்காரம்"

(விளக்கு) ஒரு உதாரணமாகும். செய்யுள் நடைக்கு

"குண்டுச்சட்டியில் கோண்டை மீன்"

(நாக்கு) என்பதைக் காண்க. முழுச் செய்யுளுக்கு

"பூ முற்றிக் காய்காக்கும் போன் விளையும் நாட்டினிலே
காய் முற்றி முட்டையிடக் கண்டீரோ—காயதுவும்
மானத்தைக் காத்து வரும் வையமெலாம் தான் சிறக்கும்
கானகத்தே வாழ்கின்ற காய்"

(பருத்திக்காய்) என்பதைக் காண்க.

மேலும் விடுகதைகளிலே விடுகதை சொல்லுபவர்களுக்குப் பரிசுகள் தருவதாகக் கூறுவதும் உண்டு. 'தாம் பூலம் இனும்' 'பட்டணம் இனும்', என்று இறுதியில்

வரும். நீதிப் பாடல்களில் ஆடூஉ விளி, மகடூஉ விளி இருக்கிறாற்போல விடுகதைகளிலே மன்னனை விளித்தல் முதலியன உண்டு. அதற்கு உதாரணம் மேலே இடத் தராந்தழையில் காண்க. சில கதைகளில் சிலேடைகள் வரும். அவை எழுத்துச் சிலேடை சொற்சிலேடை ஓசைச் சிலேடைகளாக இருக்கும்.

இனி விகடக் கணக்குகள், சாதுரியக் கணக்குகள் அடங்கிய விடுகதைகளும் உண்டு. 'லீலாவதி', 'கணக்கதிகாரம்' முதலிய நூல்களில் இவை வரும். ஒரு உதாரணம் கூறுவோம்.

"ஒரு தகப்பன் தன் பசுக்களை மூன்று மக்களுக்கும் பாகித்துக் கொடுத்தான். பசுக்கள் ஒருபடி முதல் 9 படி வரை முறையே கறக்கும். பசுவும் பாலும் சமமாகப் பாகிப்பதெப்படி?"

இதற்கு விடை:—	பசு எண்		படிக்கணக்கு
முதல் மகன்	1+5+9	—	15
2-ம் மகன்	6+7+2	—	15
3-ம் மகன்	8+3+4	—	15

இனி புலவர்களின் சாதுர்யங்கள் பலவகைப்படும். அவைகள் கடினமானவைகள். ஆகவே இங்கே கூறவேண்டியதில்லை.

பொருள்.

நாட்டுப்புறங்களிலே வழங்கும் புதிர்களில் பெரும்பாலும் நாடோறும் வழங்கும் பொருள்களைப்பற்றியே இருக்கும். கொங்கு நாட்டில் வழங்கும் புதிர்கள் பள்ளி வாத்தியார்கள் மூலமாகச் சேகரிக்கப்பட்டன. அவ்வாறு சேகரித்தவைகளில் 900 புதிர்களை ஆராய்ந்து பார்க்க, அடியிற்கண்ட பாகுபாடுகள் இருந்தன.

1.	வீட்டுச்சாமான்கள்	71	8.	சிலேடைகள்	20
2.	தொழில்கள்	55	9.	பொதுச்சாமான்கள்	19
3.	மாம்பழும்முதலியவை	53	10.	அவயவங்கள்	18
4.	பிராணிகள்	38	11.	உடைமுதலியவை	17
5.	உழவுப் பொருள்கள்	28	12.	பொது விஷயங்கள்	16
6.	இயற்கைப் பொருள்கள்	20	13.	பெயர்கள்	15
			14.	ஊர்கள்	14
7.	நாட்டுப் பொருள்கள்	20	15.	குணம்	5

இப்பாகுபாடு மக்களின் வாழ்க்கைத் திறத்தைச் செவ்வனே தெரியப்படுத்துகிறது. வீட்டுச் சாமான்கள் 71-ல் விளக்கு 15 முட்டை, 7 நெருப்பு, 6 அகப்பை, 5 அம்மி, உப்பு,கதவு, சட்டி, பூட்டு, துடைப்பம் நன்னுன்கு புதிர்கள் கொண்டன.

தொழில்கள் 55-ல், சோளம் பொரித்தல் 10 பால் கறத்தல் 4

மாம்பழம் முதலியவைகள் 53-ல் தேங்காய் 13 வாழை 11 காளான் 8 பலா 6 புளி 6 பூசனி இலந்தை, எலுமிச்சை, மாதுளை 4, அத்தி பனங்கிழங்கு, கொட்டை முத்து, தென்னை 3.

பிராணிகள் 38-ல்—பேன் 9, சேவல் 8, தேனீ 6, பாம்பு, அணில், கிளி, மீன், மூட்டைப்பூச்சி நன்னுன்கு, ஈ, குர்ங்கு, தவளை, வண்டு, வெளவால், மும்மூன்று, தும்பி, நாய், ஆமை 2-விவசாயப் பெயர்கள் 28-ல் நெல் 6, பருத்தி 6, வெங்காயம் 4 புகையிலை யிளகாய், கம்பு 3, ஆமணக்கு, கரும்பு, ராகி, கொள்ளு, சோளம் 2.

இயற்கைப் பொருள்கள் 20-லே சூரியன் 10 தண்ணீர் 7, நட்சத்திரம் 7, வானம் 5, சந்திரன்-மழை 3 நிலா 2.

நாட்டுப் பொருள்கள் 19-லே துப்பாக்கி 5, ஓலை 5, சங்கு 4: ரூபாய் 3, எழுத்து 2, வெடி மருந்து 2.

அவயவங்களில் 18-லே நாக்கு 7, கண் 6, மூக்கு 4 பல் 3, உதடு, இமை மயிர், விரல் 2. என்று கண்டோம்.

இந்தப் பாகுபாட்டில் மக்களுடைய அன்றுட வாழ்க்கை எவ்வாறு புதர்களில் பிரதிபலிக்கிறது என அறியலாம்.

பொதுக் குணங்கள்.

ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட புதிர்களில் அடியிற்கண்ட பொதுக் குணங்கள் இருந்தன. முன்னமே சிலவற்றை கூறியிருந்தாலும் தெளிவுபடுத்தும் முறையில் மீண்டும் இங்கே குறிக்கப்படுகின்றன.

1. **அமைப்பு:**—அனுபவத்தில் பார்த்தவைகளையே உவமித்து கூறுதல், தெளிவான சொற்களையே பயன் படுத்துதல். ஆனால் செய்யுள் வடிவு தோன்ற எதுகை மோனைகளை அமைத்தல் (இவை ஞாபகத்திற்கு உதவும் என்க). 2. **பாவனை:**—உயிரற்ற பொருள்களை உயிருள்ள பொருள்கள்போல் பாவித்துக் குணங்களைக் கற்பித்தல் உதாரணம் இரயில்வண்டி விடுகதை. 3. **கழித்தல் வகையில் கூறுதல்**-ஒன்றின் குணத்தைக் கூறுகையில் எதிர் மறையால் கூறி அது அல்ல என்று வரையறைத் தல். இது கடவுளைத் தெரிவிக்க வேதாந்திகள் கூறும் முறை. உடன்பாட்டிலும் இதுபோல் உண்டு. உதாரணம் தேங்காய் விடுகதை. 4. **உவமை:**—சாதாரணப் பொருள்களைக் கூறுகையிலும் விபரீதப் பொருளை நுழைப்பது; மச்சினிமார்கள் கேலி செய்யும் வகையில் கூறுதல். உ-ம் தேங்காய், வளையல் முதலிய புதிர்களில் காண்க. 5. **அகப்பொருள் நுழைவு:**—சிற்றின்பப் பொருள் காணுவது போலக் கூறுவது, உண்மையில் அது இருக் காது. 6. **தொழில் ஈடுபாடு:**—தொழிலாளர்கள் தங்கள்

கருவிகள், வேலைப்பாடு முதலியவைகளைப்பற்றி கேள்விகள் கேட்பது. அவைகள் இடத்திற்கு தக்கபடி அமைந்திருக்கும. 7. உணவு:— நாட்டுப்புறங்களில் உணவு பொருந்திய விடுகதைகள் நிரம்ப உண்டு. அவைகளில் மரக்கறியே அன்றி ஊன் உணவும் உண்டு. ஆகவே ஊன் உணவைப்பற்றிய விடு கதைகள பலயிருக்கக் காண்போம உ-ம் மீன, கருவாடு, நண்டு, கோழி, வெளவால், ஆடு முதலியவைகளைபபற்றிய விடுகதைகள் உண்டு. இவைகளைபபோன்ற பல பொதுக்குணஙகள் அமைந்திருக்கக் காணகிறோம். உதாரணங்களோடு விரித்தால் பெருகும். ஆதலால் சுருக்கி எழுதப்பட்டது.

பழமொழிகள்.

புதிர்களைக்காட்டிலும பழமொழிகள் நாட்டில் மிகுதியாக வழங்கும். அவைகளின் தொடக்கம் கூறமுடியாது. பண்டைக் காலத்திலும் இருந்தன. இன்றைக்கும் இருக்கின்றன. இந்த நாட்டிலுிம உண்டு. வேறெந்த நாட்டிலும் உண்டு: மேல் நாட்டு ஆசிரியர்கள் ஒவ்வொரு நாட்டுப் பழமொழிகளையும் சேகரித்துப் பெருநூல்களாகவும தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அதனை ஆராய்ந்து பார்த்தால் மக்களுடைய அறிவு எந்த வகையில் மிளிர்ந்து கிடக்கிறது என்று அறிய முடியும். புதிர்களைப்போலவே மக்களுடைய எண்ணப் போக்கும் அறிய முடியும். பொதுவாகப் பழமொழியிலும் தாங்கள் நேரில் கண்ட உண்மைகளையே அடிப்படையாக வைத்துக் கொண்டு சுருங்கச் சொல்லல் என்ற உத்தியை வைத்து எதுகை மோனை இணைப்பித்துச் சொற்களைக் கூட்டுவதே பழமொழியாகும். இப்படிப்பட்ட பழமொழிகளைத் தமிழிலும் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். பழமொழிகளை

இடையில் வைத்துப் பாடலும் பாடியுள்ளார்கள். அது போல எங்கள் நாட்டுப்புறங்களில் வழங்கும் பழமொழி களைத் தொகுத்து வைத்ததில் ஆயிரக்கணக்காக அகப் பட்டன. அவைகளும் புதிர்களைப்போன்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறபடியால் மீண்டும் சொல்வதையே சொல் லாமல் விட்டுவிடுவோம்.

தமிழிலே சங்கத்தார் காலத்திலே ஒரு அருமையான தொகுப்பு நூல் உண்டு. அதற்குப் பழமொழி நானூறு என்று பெயர். அதனை மூன்றுறை அரையனார் பாடினார். அந்நூலில் நானூறு பழமொழிகளை வெண்பாவின் ஈற் றடியில் ஒவ்வொரு பழமொழியாக வைத்து ஆசிரியர் பாடியிருக்கிறார். 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்பது இப்போது வழங்கும் பழமொழி. அவரது செய்யு ளில் 'நாய்காணிற் கற்காணு வாறு' என்றிருத்தல் காண லாம். இதற்குப் பொருள் இருவகைப்படும். 'கடிக்க வரும் நாயைக் கண்டபோது அதனை அடிக்கக் கல் இல்லை' என்பது ஒன்று. அதாவது எந்தப் பொருளை எந்த வேளையில் விரும்புகிறோமோ அப்பொழுது அது கிடைப்பதில்லை என்பதற்கு அப்பழமொழி பயன்படும். மற்றொரு பொருள் ஒரு கல்லில் நாய்போல் உருவம் செய்து வைத்தால் அதை நாயாகக் கண்டவனுக்கு அது கல் என்று தோன்றுவதில்லை. கல் என்று எண்ணிய வனுக்கு அது உயிருள்ள நாயாகத் தோன்றுவதில்லை என்ற வேதாந்தப் பொருளும் உண்டு. இனி அப்பர் தேவாரத்தில் ஒரு பதிகம் முழுவதும் ஒரே பொருள் கொண்டபத்துப்பழமொழிகளைக் கொண்டிருக்கக் காண்கி றோம். 'விளக்கிருக்க மின்மினிக் காய்வது' 'கனியிருக்க காய் கவர்வது', 'கரும்பு இருக்க இரும்பு கடிப்பது' முத

லிய பழமொழிகளை அப்பர் ஆண்டிருக்கிறார். இனி பழமொழி விளக்கம் கோவிந்த சதகம் முதலிய பல பிற்காலத்து நூல்களும் உண்டு. இவ்வாறு தமிழ் அறிஞர்கள் பழமொழிகளைத் தொகுத்தனர். தற்போது பழமொழித் தொகை நூல்கள் பல வெளி வந்துள்ளன. அச்சிலும் வந்துள்ளன.

எண்ணப் போக்கு

"கொங்கு மலிந்தால் எங்கும் மலியும்", என்பது ஒரு பழமொழி. கொங்கு நாடு அத்தனை தாழ்ந்ததா? அது மலிந்தால் எல்லா நாடுகளும் மலியுமா? என்று கேட்டு விடாதீர்கள். அச்சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. கொங்கு என்றால் நாட்டுப் பெயர்மட்டும் அல்ல. அதற்கு மணம், பொன் என்ற பொருள்களும் உண்டு. அவைகளை வைத்துப் பொருள் கொண்டால் வேறு கருத்துக்கள் தோன்றுவதில்லையா.

கொங்கு நாட்டில் ஏனைய தொழில்களைக்காட்டிலும் உழவியலே சிறந்தது. அதுவே பெரும்பான்மையானது. சிறப்பாக நாட்டுப்புறங்களில் வேளாண்மையே மிகப் பரந்தது என்று முன்னமே கூறியிருக்கின்றோம். ஆகவே நாட்டில் வழங்கும் பழமொழிகளிலும் உழவியலைப்பற்றிய பழமொழிகளே மிகுதி. அவற்றில் சிலவற்றை உதாரணங்களாகக் கூறுவோம். குடியரசோ முடியரசோ என்ற பொருளில் 'குடித்தனமோ துரைத்தனமோ' என்ற பழமொழி வழங்குவதை அறிவோம். 'செட்டிக்கும் பயிருக்கும் சென்மப்பகை' என்ற சொல்லிலிருந்து வகுப்புக் குணம் இன்னதென அறியலாம். ஆனால் நிலம் உழுவோரே கைத்தொழிலும் கொண்டு நூல் நூற்றலை ஆலைகளின்மூலம் தற்போது கொண்டுள்ளதால் கைத்தொழில்

மட்டுமன்றி வாணிபமும் நாட்டில் சிறந்தோங்கத் தலைப் பட்டுவிட்டது. 'காடறியாதவன் கல்லாங்கட்டை உழு வான்' என்பதினால் உழவனுடைய நில அனுபவமும் தெரிகிறது. 'கார்த்திகைக்குப் பிந்தி மழையில்லை, கர்ண னுக்குப்பிந்தி கொடையில்லை' என்பதினால் பருவத்தி லேயே மழை நீரை உழவன் பயன்படுத்திக் கொள்ளு வான் என அறியலாம். 'அடைத்தவன் காட்டைப்பார் மேய்ச்சவன் மாட்டைப்பார்' என்றது வேலியின் பயனும் மேய்ச்சலின் குணமும் தெரிவிக்கிறது. 'பாயும் சலம் முழுதும் கட்டு 'பழைய எருவெடுத்துக் கொட்டு' என்பது பாய்ச்சல் சிறப்பும் எருவின் பலனும் எடுத்துக் காட்டு கிறது. இப்போது இதனை யார் கவனிக்கிறார்கள்? 'காடு வெட்டி நன்செய் பண்ணு, மாடுகட்டி வைக்கோல் போடு' என்பது நன்செயின் செழிப்பும் மாட்டுத் தீவனத்தின் கொழுப்பும் நினைவூட்டுகிறது. 'பட்டம் அறிந்து பயிரிடு, என்றது ஔவையாரின் 'பருவத்தே பயிர் செய்' என்ற நீதியைத் தெளிவாக்குகிறது. பயிர் ஆனபிறகு செய்ய வேண்டிய நேர்த்தியை 'அடர்த்தியை அப்போது பார் புளக்கத்தைப் பின்னாலே பார்' என்ற பழமொழி வற் புறுத்துகிறது. 'அறுகங்காட்டை விட்டவனும் கெட்டான்' ஆனமாட்டை விற்றவனும் கெட்டான்' என்பது சோம் பேறியினுடைய இழிவைக் காட்டுகிறது. 'மதகினடி நன் செயும் மலையினடி புன்செயும்' என்றது நிலங்களின் செழிப்பைத் தெளிவாக்குகிறது. இதனை அறிந்தே அக முடையார்கள் நன்செய்யும் ஒக்கிலியர்கள் மலையடி புன்செய் யும் முதலிலேயே தேர்ந்து கொண்டார்கள். 'கார்த்தி கைக்கு மேற்பட்டுக் கைப்பயிரை ஏறியவேண்டும்' என் பது மழை பெய்வது குறைந்து போகிறபடியால் நாற்று களால் பயனில்லை, முன்னமே பயன்படுத்திக்கொள்

என்ற பொருள் தொனிக்கிறதைக் காணலாம். 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்பதும் பருவத்தின் சிறப்பையே கூறுகிறது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கோல்கூட மிச்சமில்லை' என்ற பழமொழி உழவிற்கும் மற்ற தொழிலுக்கும் இலாப வகையில் ஒப்புவமை காட்டுகிறது. ஆனால் நன்றாக ஆராயுமிடத்து உழவுக்கோல் கூட மிச்சம் ஆகாமல் போனபோதிலும் எத்தனை குடும்பங்கள் அவனால் பிழைக்கின்றன என்பதை அறியவேண்டும். வெறும் பணக்காரராகிக் கொழுப்பேறிக் கிடக்கிறதைக்காட்டிலும், போதும் என்ற அளவிற்குப் பாடுபடுவதே சிறந்த வாழ்வு என்று தமிழ் நாட்டுப் பொறுமைக் குணத்தைக் காட்டுகிறது. போதும் என்ற பண்பைத் தாயுமானவர் 'ஆசைக்கோர் அளவில்லை' என்ற பாட்டில்

"உள்ளதே போதும் நான்நான் எனக் குளறியே
ஒன்றைவிட் டோன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல்
பரிசுத்த நிலையை அருள்வாய்"

என்று சொன்னதையே பழமொழிகள் நிரூபிக்கின்றன. விரைவை மேம்படுத்தும் மேல்நாட்டு விஞ்ஞானம் கொங்குநாட்டின் நாட்டுப்புறங்களில் ஆழ்ந்து அமரவில்லை. இவ்வாறு பழமொழிகளால் கொங்குநாட்டு மக்கள் சீர்மை வெளியாகின்றது.

ஒழிபு.

ஆகவே நாடோடி இலக்கியம் என்று தற்போது தகுதியில்லாச் சொல்லால் வழங்கும் நாட்டு உரிமை இலக்கியம் பல திறப்பட்டு நின்று நாட்டினுடைய மக்களின் உண்மையான போக்கை எடுத்துக் காட்டுகிறது என

அறிகிறோம். செவ்விய இலக்கியமாகக் கற்றோர்கள் கொண்டிருக்கும் இலக்கியம் தனித்தனிப் புலவர் பெரு மக்களின் எண்ணப் போக்கு ஆகும். அது நாட்டாரின் மனப்போக்கை எடுத்துரைத்தாலும் உரைக்கக்கூடும். இல்லாவிட்டாலும் இல்லை. ஆனால் நாட்டு உரிமை இலக் கியமோ குறித்திட ஒண்ணாத மிகப் பண்டைக் காலம் முதல் நாளது வரையில் தானே வளர்ந்து வந்த ஒப்பற்ற எழுதா இலக்கியம் என்பதாகும். முன்னமே கூறியபடி அது நாட்டுக் கதை, நாட்டுப் பாடல், நாட்டுப் புதிர், நாட்டுப் பழமொழி என்ற பல வகைகளில் விளங்கி வரு கின்றது. நமது படித்த மக்கள் இதுவரை இவைகளுக்கு மதிப்பு கொடாமல் இருந்தபோதிலும் தற்போது கொடுத்து வருகிறார்கள். நமது கொங்கு நாட்டின் நாட் டுப்புறங்களில் இவ்விலக்கியம் சீருடன் இன்னமும் வளர்ந்து வருகின்றது. இதனை நாமும் மதித்து இதற் குத் தக்க இடம் அளிப்போமாக.

முற்றிற்று.

மேற்கோள் - அகரவரிசை

அதிராச ராச மண்டலத்து 38
கல்வெட்டு)

அந்திக்குப் போறோம் 131
(நாட்டுப் பாடல்)

அருளிலார்க்கு 17
(குறள்)

ஆராரோ ஆரிரரோ 162
(தாலாட்டு)

ஆழத்துறைதனிலே 157
(நாட்டுப்பாடல்)

உண்ட வீட்டிற்கு 224
(பழமொழி)

உழவ ரோதை 131
(சிலப்பதிகாரம்)

உள்ளதே போதும் 274
(தாயுமானவர்)

உற்ற நோய் 217
(குறள்)

எள்ளிலே பிறந்து 265
(புதிர்)

ஏற்றி வைத்த 179
(கோவலன் கதை)

ஒடுக்காமல் பறப்பது 265
(விடுகதை)

ஒரு கப்பல் 155
(நாட்டுப்பா)

ஒரு நெல் குத்த 262
(விடுகதை)

ஒருவனை யுலகேத்த 23
(தேவாரம்)

ஒன்றாங்கல்லே 166
(இளைஞர் பாடல்)

ஓலைக்காள் கொண்டை 172
(நாட்டுப்பா)

கடலை பொரியவல் 169
(நாட்டுப்பா)

கண்ணாம்பூச்சி 123
(குழந்தைப்பா)

கற்றோர்க்குக் கல்வி 112
(நீதி நெறி)

காயோ கோணக்காய் 266
(விடுகதை)

கார்த்திகை விளக்கீடு 198
(தேவாரம்)

காலமே எழுந்திருந்து 130
(நாட்டுப்பா)

குஞ்சியழகும் 209
(நாலடியார்)

குண்டுச்சட்டி (விடுகதை)	266
குருவிக்குத்தகுந்த (பழமொழி)	58
குழலினிது (குறள்)	107
குழவி பிணியின்றி (இனியவை)	117
கொங்கு மலிந்தால் (பழமொழி)	272
கொல்லி மலை (குறவஞ்சி)	237
சின்ன சின்ன (இளைஞர் பா)	186
சின்ன வெண்காரம் (விடுகதை)	266
சுடுவோர் (மணிமேகலை)	220
செம்பவளக்கால் (ஒயிற்கும்மி)	169
செம்பொனடி (குமர குரு)	163
சொன்னகலையின் (நளவெண்பா)	108
டையன்ன (ஒலி-திரைப்பா)	158
தாந்திமித் திமி (ஞானக்கோவை)	158
திருவருள் அடிகள் (இளைஞர் பா)	167
தீதும் நன்றும் (புறம்)	218
தெங்கங்காய் (அணியியல்)	209
தென்னன் வாழ்க (சிலப்ப)	124
தேமாங்கனி (போரூர்சன்)	165
நந்த வனத்தில் (ஞானக்)	262
நாடா கொன்றோ (ஔவையார்)	56
நாளது குறித்து (திருமண வாழ்த்து)	176
பத்துப் பிராய (ஒப்பாரி)	184
பனியால் (அரிச்சந்திரவு)	183

பழமொழிகள்	270	பொன்னுடைய	108
(தொகுதி)	275	(நளவெண்பா)	
பழையன	72	மதுரைக்கு	175
(நன்னூல்)		(நாட்டுப்பா)	
பூ முற்றி	266	மனம் முந்தியதோ	123
(விடுகதை)		(கு. குறவஞ்சி)	
பூவிலே பிறந்து	265	மூங்கில் நுனி	154
(விடுகதை)		(நாட்டுப்பா)	
பொய்யா மொழி	165	வட்ட வட்ட	174
(பிள்ளைத் தமிழ்)		(நாட்டுப்பா)	
பொருப்பிலே	162	வன்பல் விழுந்து	182
(வில்லி-பாரதம்)		(பட்டினத்தார்)	
பொன் செய்தார்	184	விரல் சுவை	163
(கந்தபுரா)		(குமர குரு)	

வேறு நூல்கள்.

			ரூ.	அ.	பை.
1.	கடலின்கண் முத்து அல்லது யான் கண்ட இலங்கை (அரிய பயண நூல்)	...	3	8	0
2.	இதுவே எங்கள் கோவை (மாணவர்)	...	2	0	0
	(கோவை நகர் சரிதம்) உயர்ந்த பதிப்பு	...	3	0	0
3.	வாழ்க்கையோ கவலேயோ (மாணவர்)	...	1	12	0
	(ஒரு கற்பனைக் கவிதை) உயர்ந்தது	...	2	0	0
4.	சிறுகதைத் திரள் (20 சிறு கதைகளும் 5 செய்யுட்கதைகளும்)	...	1	0	0
5.	(தமிழ்நாட்டுச்) செயற்கை நலம் (அரிய பணிகள்)	...	1	8	0
6.	கோயிற் பூனைகள் 2-ம் பதிப்பு (நகைச்சுவைக் கதைகள்)	...	1	0	0
7.	சுந்தர மூர்த்தி நாயனரும் கொங்கு நாடும் (ஆராய்ச்சி நூல்)	...	0	12	0
8.	சிவக்கவிமணி வாழ்க்கைத் திறன் (C. K. S. வரலாறு)	...	0	8	0
9.	கோவை கிழார் வாழ்க்கை வரலாறு	...	0	4	0
10.	இளைஞர் பாடல்கள் (எளிய பாடல்கள்)	...	0	12	0
11.	கொங்குநாட்டுக் கட்டுரைகள் (ஒவ்வொன்றும்)	...	0	2	0
12.	கொங்கு மலர் (பழைய பிரதிகள்) ஒவ்வொரு இதழும்	...	0	2	0

கிடைக்கும் இடம் :

கோவை நிலையப் பதிப்பகம், லிமிடெட்,

4/89, திருச்சிப் பாதை, கோயமுத்தூர்.